D
V211,32 N75
N75.128
6 31 51

Issued 2—8—75]

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

## FRIDAY 21st FEBRUARY 1975

**Volume CXXVIII—No. 1**

©
GOVERNMENT OF TAMIL NADU
1975

*Legislative Council Department*
*Fort St. George, Madras-9.*

PRICE 35 *Paise*]

Pests and dis
cularly thicker on
which indicates int
insect Agrilus acu
a spiral gall is fo
tumescence.

Metasystox (2
of incidence helps
control would be un
is large.

H. Cannabinus
pathogenic fungi o
the most important

Anthracnose:
starts on young le

VB11, 32. N25
N25-1 P
63151

# Tamil Nadu Legislative Council Debates

FIFTIETH SESSION OF THE LEGISLATIVE COUNCIL

21st, 22nd and 24th to 26th February 1975.

VOLUME CXXVIII—(Nos. 1 to 5).

TABLE OF CONTENTS.


PAGES

*Friday, 21st February* 1975.

| | |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | i—v |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council ... ... ... ... ... ... | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies ... ... | ix—xi |
| 1. Obituary Reference *re* death of Thiru A. Srinivasaraghavan and Thirumathi Mary C. Clubwala Jadhav, former Members of the Council ... ... ... ... ... ... | 1—2 |
| 2. Condolence Resolution *re* death of Thiru J. Sivashanmugam Pillai, former Speaker of the Assembly ... ... ... ... ... | 2—3 |
| 3. Questions and Answers ... ... ... ... | 3—15 |

PAGES

*Friday, 21st February 1975*—cont.

4. Announcement *re*—
(1) Decision of the Business Advisory Committee ... ... ... ... ... 16
(2) Message from the Assembly ... ... 16
(3) Time-limit for receipt of amendments to Motion of Thanks for Governor's Address ... ... ... ... ... 16
5. Panel of Vice-Chairmen ... ... ... ... 16—17
6. Discussion on the Governor's Address ... 17—55
7. Papers laid on the table of the House ... ... 55—73

*Saturday, 22nd February* 1975.

1. Questions and Answers ... ... ... 85—95
2. Discussion on the Governor's Address—*cont.* 95—133
3. Papers laid on the table of the House ... ... 134—136

*Monday, 24th February* 1975

1. Questions and Answers ... ... ... ... 143—149
2. Adjournment Motion *re* unreasonable attitude of the Government of Karnataka towards the settlement of Cauvery Waters issue and reference of the matter to a Tribunal ... 149—155
3. Calling attention to threatened closure of High Schools in Madurai City owing to non-acceptance of recommendation of Madurai Corporation Council to reduce property tax ... 155—158
4. Discussion on the Governor's Address—*cont.* 158—201
5. Papers laid on the table of the House ... 201—202

*Tuesday, 25th February* 1975.

1. Questions and Answers ... ... ... ... 203—223
2. Discussion on the Governor's Address—*cont.* 224—264
3. Papers laid on the table of the House ... ... 265—266



PAGES

*Wednesday, 26th February* 1975.

1. Questions and Answers ... ... ... ... 267—284
2. Point of Information and Adjournment Motion *re*—
(1) Attack on Thiru V. Venga, M.L.C., in Legislators Hostel Compound ... 284—292
(2) Strike in C.M.C. Hospital, Vellore ... 293—300
3. Announcement *re* decision of the Business Advisory Committee ... ... ... ... 300
4. Discussion on the Governor's Address—*cont.* 300—324
5. Papers laid on the table of the House ... ... 324
INDEX ... ... ... ... ... ... 325—372

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

THIRU KODARDAS KALIDAS SHAH.

*Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI, Chief Minister in charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections, Prohibition and Excise.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister in charge of Education including Technical Education, Official Language, Legislature and Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN, Minister in charge of Public Health, Medicine and Town Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN, Minister in charge of Backward Classes, Registration, Ex-Servicemen, Bhoodan and Gramdan.

5. THE HON. THIRU P. U. SHANMUGAM, Minister in charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

6. THE HON. THIRU S. MADHAVAN, Minister in charge of Food and Co-operation, Agricultural Refinance, Textiles, Yarn, Handlooms, Law, Courts and Prisons.

7. THE HON. THIRU S. J. SADIQ PASHA, Minister in charge of Industries, Mines and Minerals, Iron and Steel Control, Companies, Electricity and Waqfs.

8. THE HON. THIRU SI. PA. ADITHANAR, Minister in charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing, Agro-Engineering and Service Co-operative Societies at the Block, District and Apex levels including the Federation.

9. THE HON. THIRU A. P. DHARMALINGAM, Minister in charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Youth Service Corps and Prosperity Brigade.

10. THE HON. THIRU MANNAI P. NARAYANASAMI, Minister in charge of Municipal Administration, Community Development and Panchayat and Panchayat Unions and Water Board.

11. THE HON. THIRU K. RAJARAM, Minister in charge of Labour, Housing, Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics, Employment and Training and Slum Clearance Board.

12. THE HON. THIRU C. V. M. ANNAMALAI, Minister in charge of Social Welfare including Women's and Children's Welfare, Fisheries, Beggars Home, Orphanages and Approved Schools and Vigilance Service.

13. THE HON. THIRU O. P. RAMAN, Minister in charge of Commercial Taxes, Forest including Cinchona, Animal Husbandry, Legislation on Money-lending, Rural Indebtedness and Legislation on Chits.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN, Minister in charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. THE HON. THIRU K. KANNAPPAN, Minister in charge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries Project, Milk, Operation Flood Project, Tamil Nadu Dairy Development Corporation, Information and Public Relations and Film Technology.

16. THE HON. THIRU N. RAJANGAM, Minister in charge of Harijan Welfare, Indians Overseas and Refugees and Evacuees, Newsprint Constrol, Passports and Cinematograph Act.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்:

### மேதகு திரு கோதர்தாஸ் காளிதாஸ் ஷா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (முதலமைச்சர்) கீழ்க் கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுத்துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ. சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவலதுறை, தேர்தல்சள், மதுவிலக்கு, ஆயத்தீர்வை.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைசளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—தொழில்நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சிமொழி, சட்டமன்றம், சுற்றுலா மற்றும் சுற்றுலா, வளர்ச்சிக் கழகம்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (நல்வாழ்வுத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுச் சுகாதாரம் மருத்துவம், நகரமைப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பிற்பட்ட தங்கிய வகுப்பினர் நலன், பத்திரப்பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான-கிராமதான இயக்கங்கள்.

5. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (பொதுப் பணித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுப்பணிகள், சிறப்புச் சிறுபாசனம் உள்ளிட்ட சிறுபாசனத் திட்ட வேலைகள், நெடுஞ் சாலைகள், துறைமுகங்கள்,.

6. மாண்புமிகு திரு. செ. மாதவன்; (உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—உணவு கூட்டுறவு, வேளாண்மை மறுநிதி உதவி, ஆலைத்துணிகள், நூல், கைத்தறி, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள்.

7. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (தொழில் அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—தொழிற்சாலைகள் சுரங்கங்கள், கனிப்பொருள்கள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, கம்பெனிகள் மின்சாரம், முஸ்லிம்மதிய அறக்கட்டளைகள்.

8. மாண்புமிகு திரு. சி. பா ஆதித்தனார் : (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்;—வேளாண்மை உணவு உற்பத்தி, வேளாண்மை பொறியியல் பிரிவு, கூட்டமைப்புகள் உள்ளிட்ட மாநில மாவட்ட வளர்ச்சி வட்டார அளவிலான வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிமுறைக் கூட்டுறவுச் சங்கங்கள்.

9. மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் : (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், இளைஞர் அணி, சீரணி.

10. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், குடிநீர் வாரியம்.

11. மாண்புமிகு திரு க. இராசாராம் : (தொழிலாளர் நல அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—தொழிலாளர் நலன், வீட்டுவசதி, இடவசதிக் கட்டுப்பாடு, எடைகள் அளவுகள் குறித்த சட்டம், புள்ளிவிவரம், வேலைவாய்ப்பும் பயிற்சி அளித்தலும், குடிசை மாற்று வாரியம்.

12. மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: (சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—மகளிர்-சிறுவர் நலன் உள்ளிட்ட சமூக நலத்துறை, மீன்வளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள் மற்றும் சீர்திருத்தப் பள்ளிகள் கண்காணிப்புப் பணிகள்.

13. மாண்புமிகு திரு ஒ. பி. ராமன் : (வணிக வரிகள் அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—வணிக வரிகள், காடுகள் மற்றும் சின்கோனா, கால்நடை வளர்ப்பு, கடன் கொடுத்தல், கிராமவாசிகள் கடன் பட்டிருத்தல் குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம்.

14. மாண்புமிகு திரு ச. ராமச்சந்திரன் : (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—போக்குவரத்த, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுது பொருள் அச்சுத்துறை மற்றும் அரசினர் அச்சகம்.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—அறக்கட்டளைகள், காதி மற்றும் கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், பால் உற்பத்தி, பால் பொருத்தத் திட்டம், தமிழ்நாடு பால் பண்ணை வளர்ச்சிக் கழகம், செய்தி-விளம்பரம், திரைப்பட நுட்பவியல்.

## தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்

**மேலவைத் தலைவர் :**

மாண்புமிகு திரு. சி. பி. சிற்றரசு

**மேலவைத் துணைத் தலைவர் :**

திரு. ம. பொ. சிவஞானம்

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. எஸ். டி. ஆதித்தன்
2. திரு. ஏ. பாலசுப்பிரமணியன்
3. திரு. கே. எஸ். கணபதி
4. திரு. எம். எம். பக்கர்

மேலவைச் செயலாளர் :

திரு கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

உதவிச் செயலாளர் :

திரு. த. பி. டெல்லிதுரை, பி. எஸ்ஸி.

விவாதப் பதிப்பாளர் :

திரு நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல். பி.எஸ்.

16. மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—அரிசன நலன், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள் பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள், மற்றும் திரைப்படச் சட்டம்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 1 அப்துல் வகாப், கே. எஸ். .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 2 அய்யணன் அம்பலம், அ... .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 3 அறிவழகன், க., எம்.ஏ. .. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர் தொகுதி. |
| 4 அறிவுடைநம்பி, புலவர் ஓ. .. | வட ஆர்க்காடு-தென் ஆர்க்காடு ஆசிரியர் தொகுதி. |
| 5 அனிபா, நாகூர், ஈ.எம். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 6 ஆதித்தன், எஸ்.டி., பி.ஏ.,பி.எல். | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 7 ஆறுமுகசாமி, எம். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 8 இளம்பரிதி .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 9 இராசகோபால், சி. வி. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 10 இராசமாணிக்கம், எஸ்.ஏ. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 11 இராஜாராம், கே. (எதிர்க் கட்சித் தலைவர்). | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 12 இராஜு, ஜி. என். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 13 இராமகிருஷ்ணத் தேவர், எஸ். .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 14 இராமநாதன், எம். .. .. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 15 இராமசுப்பையா, காரைக்குடி .. | நியமனம். |
| 16 இராமசாமி படையாச்சி, எஸ்.எஸ். | தென் ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 17 எல்லமந்தா, பி. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 18 கணபதி, கே. எஸ். .. .. | தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி ஆசிரியர்த் தொகுதி. |
| 19 குன்றக்குடி அடிகளார், தவத்திரு | நியமனம். |
| 20 கோலப்பா, சி. ஆர். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |

| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 21 சக்தி மோகன், ஆர். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 22 சங்கரலிங்கம், எம். .. | திருநெல்வேலி- கன்னியாகுமரி ஆசிரியர் தொகுதி. |
| 23 சந்தோஷம், டி., எம்.ஏ., பி.எல். | சென்னை தெற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 24 சாம்பசிவம், இரா. .. .. | தென் ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 25 செங்கோட்டு வேலப்ப கவுண்டர், எஸ். சி. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 26 சிவஞானம், ம. பொ. (துணைத் தலைவர்). | நியமனம். |
| 27 சிற்றரசு, சி.பி.(மாண்புமிகு தலைவர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 28 சுந்தரேசத் தேவர், என். .. .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 29 சுவாமிநாதன், ஜி., பி. பார்மஸி .. | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 30 தங்கப்பாண்டியன், வி., பி.ஏ.பி.டி. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 31 தங்கவேல், ஏ. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 32 தமிழரசி, சி. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 33 தாமஸ், பி. ஆர். .. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 34 தாமோதரன், ஏ. ஆர்., பி.எஸ்ஸி. (ஆனர்ஸ்). | சென்னை வடக்கு பட்டதாரிகள். தொகுதி. |
| 35 தாமோதரன், ஜி. ஆர். .. | சென்னை மேற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 36 திராவிடமணி, ஆ. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 37 டிமான்டி டென்சில் வின்சென்ட் .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 38 தென்னரசு, எஸ்.எஸ். .. .. | நியமனம். |
| 39 தேவராஜ், வி. எம். .. .. | வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 40 நடராசன், எம். கே. டி. .. .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |



| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 41 நடராசன், என். வி. (பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 42 நாராயணசாமி, மன்னை ப. (உள்ளாட்சித்துறை அமைச்சர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 43 நாராயணசாமி, எஸ். .. .. | சென்னை மாவட்ட பட்டதாரிகள். தொகுதி. |
| 44 பக்கர், எம். எம். .. .. | நியமனம். |
| 45 பலராமன், எல். .. .. .. | வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 46 பாலசுப்பிரமணியம், அ. .. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 47 பாலசுப்பிரமணியம், கு. மா. .. | நியமனம். |
| 48 பெரியண்ணன், வி. ஆர். .. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 49 மணி, கோ. சு. .. .. .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50 மாசிலாமணி, மு. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 51 முத்து, எஸ். .. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 52 முத்துகிருஷ்ணன், டி.வி. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 53 முத்துசாமி, செ. .. .. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர், நீலகிரி தொகுதி ஆசிரியர். |
| 54 முருகேசன், எச். எல். .. | நியமனம். |
| 55 ரஸ்ஸல்ராஜ், சி. .. .. .. | நியமனம். |
| 56 வசந்தபாய், ஜி. .. .. .. | சென்னை மாவட்ட பட்டதாரிகள். |
| 57 வில்வம், ஏ. கே .. | தொகுதி நியமனம். |
| 58 வில்சன் அப்போலோஸ், என். .. | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59 வெங்கா, வி. .. .. .. | செங்கல்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 வெள்ளபாண்டியன், எஸ். .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61 வெங்கடேஸ்வர தீக்ஷிதர், ஒய். .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62 ஜார்ஜ் கோமகன் .. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 63 வெறறிடம் .. .. .. | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி |

## தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சட்டமன்ற மேலவையின் ஐம்பதாவது கூட்டத்தொடர்.

### வெள்ளிக்கிழமை, 1975 பிப்ரவரி 21

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### இரங்கற் குறிப்புகள்

**மேலவை முன்னாள் உறுப்பினர்கள் திரு. அ. சீனிவாசராகவன், திருமதி மேரி சி. கிளப்வாலா ஜாதவ் ஆகியோர் மறைவு குறித்து.**

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களே, மேலவையின் உறுப்பினராக இருந்த திரு. அ. சீனிவாசராகவன் அவர்கள் ஜனவரித் திங்கள் 5-ம் தேதி இயற்கை எய்தினார் என்ற துயரச் செய்தியையும், இம் மேலவையின் முன்னாள் உறுப்பினர் திருமதி மேரி சி. கிளப்வாலா ஜாதவ் அவர்கள் இம் மாதம் 6-ம் நாள் பம்பாயில் காலமானார் என்ற செய்தியையும் ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. சீனிவாசராகவன் அவர்கள் 1964 டிசம்பர் முதல் 1966 எப்ரல் வரை இவ்வவையின் உறுப்பினராக இருந்துள்ளார். அவர் தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராகவும், கல்லூரி முதல்வராகவும் பணி புரிந்தார். பல ஆங்கிலக் கவிதைகளை தமிழிலும், அதே போன்று நூல் தமிழ்களை ஆங்கிலத்திலும் தந்து, தனிப் பெருமை பெற்று, தர்மபுரம் ஆதீனத்திடமிருந்து செந்தமிழ்ச் செம்மல் என்ற விருது பெற்றவர். அவரது மறைவால் தமிழ் உலகம் ஒரு நல்ல அறிஞரை இழந்து விட்டது.

கிளப்வாலா அம்மையார் அவர்கள் 1946 முதல் 1966 வரையும், மறுபடியும் 1967 முதல் 1972 வரையும் இந்த அவையின் உறுப்பினராக இருந்தார். இவர் 1956-57-ல் பதவி எற்ற முதல் பெண்மணி ஷெரிப் ஆவார். 1948-ல் லண்டனில் நடந்த உலக இளைஞர் மாநாட்டிற்கு இந்திய தூதுக் குழுவின் தலைவராகச் சென்றவர். இவர் பல சமூக நல இயக்கங்களை உருவாக்கி தமது வாழ்நாளின் பெரும் பகுதியை பொதுத் தொண்டிலே கழித்தவர். பெண்கள் முன்னேற்றத்திற்கும் உடல் ஊனமுற்றோருக்கான நிறுவனங்கள் பலவற்றிலும் உழைத்து நற்பெயர் பெற்றவர். தமிழ்நாடு செஞ்சிலுவைச் சங்கம், சேவா சதன், இளங்குற்றவாளிகளுக்கு வழி காட்டும் நிலையம், சாரணர் இயக்கம் ஆகியவற்றின் தலைவராக இருந்து நல்ல பணிகள் பல புரிந்து சமூகப் பணித் துறையில் முன்னோடியாக விளங்கியவர். தமது திறன்மிக்க சேவைக்காக 1955-ல் பத்மஸ்ரீ விருதையும், 1968-ல் பத்மபூஷன் விருதையும், கடைசியாக இவ்வாண்டு குடியரசு தினத்தன்று பத்மவிபூஷன் விருதையும் பெற்றவர். அவரது மறைவு குறிப்பாக தமிழகத்திற்கும், இந்தியப் பெண் குலத்திற்கும் ஈடு செய்ய இயலாத இழப்பாகும்.

அவர்களது மறைவால் துயறுற்றிருக்கும் அவர்தம் குடும்பத்திற்கு நாமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் இரண்டு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்குமாறு வேண்டுகிறேன்.

(அவையினர் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றனர்.)

## 2. இரங்கற் தீர்மானம்

### முன்னாள் சட்ட மன்றப் பேரவைத் தலைவர் திரு. ஜே. சிவஷண்முகம் பிள்ளை அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களே, சட்ட மன்றப் பேரவைத் தலைவராய் இருந்த திரு ஜே. சிவஷண்முகம் பிள்ளை அவர்கள் ஜனவரித் திங்கள் 1-ம் நாள் சென்னையில் காலமானார் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்து கீழ்க் கண்ட இரங்கற் தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"1946 முதல் 1955 வரை தொடர்ந்து இருமுறை தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் தலைவராக இருந்து, நல்ல பாராளுமன்ற நடைமுறைகளை வகுத்து, அவையின் கண்ணியத்தையும் உறுப்பினர்களின் உரிமைகளையும் பாதுகாத்து ஒரு "முன்மாதிரி பேரவைத் தலைவராக" விளங்கிய திரு. ஜே. சிவஷண்முகம் பிள்ளை அவர்கள் 1975-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ம் தேதி அன்று இயற்கை எய்தியது குறித்து இம் மேலவை தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரது மறைவால் வருந்தும் அவர்தம் குடும்பத்திற்கு தனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் வழங்குகிறது."

திரு ஜே. சிவஷண்முகம் பிள்ளை அவர்கள் 1901-ம் ஆண்டு பிறந்து சென்னை மாநிலக் கல்லூரியிலும், லயோலாக் கல்லூரியிலும் கல்வி பயின்றார். 1930 முதல் 1938 வரை சென்னை மாநகராட்சி உறுப்பினராகவும், 1937-38-ல் மேயராகவும் இருந்தார். தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவைக்கு 1937-ல் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1946 முதல் 1955 வரை பேரவைத் தலைவராக தொடர்ந்து இருமுறை பதவி வகித்து, ஒரு "முன்மாதிரி பேரவைத் தலைவராக" விளங்கினார். அந்நாட்கள் அவரது சேவையின் பொற்காலமாகும். பேரவையின் கண்ணியத்தை காப்பதிலும், உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும், இங்கிலாந்து பாராளுமன்ற நடைமுறைகளை ஒட்டி ஜனநாயகப் பண்புகளோடு அவையை நடத்திச் செல்வதிலும், அதே நேரத்தில் புதிய நடைமுறைகளை உருவாக்குவதிலும் அக கவனம் செலுத்தி, பாரபட்சமின்றி எல்லாக கட்சி உறுப்பினர்களையும் அரவணைத்துச் செல்வதில் தனித்திறமை பெற்றிருந்தார்.





அவர் யு.பி.எஸ். சி.ல் உறுப்பினராக நியமிக்கப்பட்டதன் காரணமாக பேரவைத் தலைவர் பதவியிலிருந்து விலகினார். 1955 முதல் 1961 வரை அதில் உறுப்பினராக இருந்தார். 1962 முதல் 1968 வரை அவர் மாநிலங்கள் அவையில் உறுப்பினராக இருந்தார்.

தாழ்த்தப்பட்டோர் நலனில் அதிக அக்கறை காட்டிய திரு. சிவ ஷண்முகம் பிள்ளை அவர்கள் ஆதி திராவிட சமுதாயத்தின் மேம்பாட்டிற்காக அரும்பணியாற்றினார். அன்னாரின் மறைவால் ஒரு நல்ல பண்பாளரை தமிழகம் இழந்துவிட்டது.

மறைந்தவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் இரண்டு நிமிடம் மவுனமாக எழுந்து நின்று, தீர்மானத்தை நிறைவேற்றித் தருமாறு வேண்டுகிறேன்.

(அவையினர் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றனர்) தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மறைந்த திரு ஜே. சிவஷண்முகம் பிள்ளை அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அவை 10 நிமிடங்கள் ஒத்தி வைக்கப்பட்டு மீண்டும் 4-15க்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

அவை மீண்டும் பிற்பகல் 4-15க்குக் கூடியது.

## 3. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

*First Grade Tamil Pandits.*

* 1. *Q.*—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether it is a fact that the Tamil Pandits who have taken their Vidwan Degree from the Kerala University are not given promotion as First Grade Tamil Pandits for the only reason that they graduated from that University though they possess all other qualifications ;

(*b*) if so, the number of such teachers working in (i) Government Schools and (ii) Private Schools;

(*c*) whether any representations have been received from them; and

(*d*) if so, the action taken thereon ?

## முதல் நிலைத் தமிழாசிரியர்கள்.

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கேரள பல்கலைக் கழக வித்துவான் பட்டம் பெற்றவர்கள் என்ற காரணங்காட்டி மற்ற எல்லா கல்வித் தகுதிகள் இருந்தும் முதல் நிலைத் தமிழாசிரியர் பதவி உயர்வு அவர்களுக்குக் கொடுக்கப்படாமல் இருப்பது உண்மையா?

(இ) ஆமெனில், இந்நிலையில் (1) அரசுப் பள்ளிகளில் பணிபுரிவோர் எண்ணிக்கை என்ன? (2) தனியார் பள்ளியில் பணிபுரிவோர் எண்ணிக்கை என்ன?

(உ) அவர்களிடமிருந்து முறையீடு ஏதேனும் வந்ததா?

(எ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் கேரள வித்துவான் பட்டம் பெற்ற 66 இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களில் 42 பேர் முதல் நிலைத் தமிழாசிரியர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர். அதைப் போலவே தனியார் பள்ளிகளில் பணிபுரியும் கேரள வித்துவான் பட்டம் பெற்ற 38 இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களில் 28 பேர் முதல் நிலைத் தமிழாசிரியர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

(உ) ஆம்.

(எ) அம்முறையீட்டின் மீது பள்ளிக் கல்வி இயக்குநரால் சார்நிலை அலுவலர்களிடமிருந்து சில விவரங்கள் கேட்கப்பட்டுள்ளன.

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசு பள்ளிகளில் 60-க்கு மேற்பட்ட இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள். கேரள வித்துவான் பட்டம் பெற்றவர்கள் இருக்கின்றார்கள் என்றும், அதில் சுமார் 30-க்கு மேற்பட்டவர்களுக்குத்தான் முதல் நிலைத் தமிழாசிரியர் பதவி கொடுக்கப்பட்டதென்றும், அதேபோல் தனியார் பள்ளிகளில் 38 பேருக்குப் பக்கத்தில்தான் வேலை பார்க்கிறார்கள் என்றும், அதிலே சுமார் 20 முதல் 25 பேர்களுக்குத்தான் முதல்நிலை தமிழாசிரியர் பதவி கொடுக்கப்பட்டதென்றும் அமைச்சர் அவர்கள் பதிலிலே சொன்னார்கள். மற்றவர்களுக்குக் கொடுக்கப்படாமலிருப்பதற்குக் காரணம் என்ன? மற்ற கல்வித் தகுதி எல்லாம் இருந்தும், கேரள பல்கலைக் கழக வித்துவான் என்ற ஒன்றுதான் அதை நிறுத்தியிருக்கிறதா? அரசாணை பிறப்பித்த பிறகும் அதிகாரிகள் கொடுக்காமலிருப்பதற்குக் காரணம் என்ன?





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் அரசாங்கப் பள்ளிகளில் வேலை செய்யும் 26 இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் பற்றிப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அவர்களுக்கான சில விதிமுறைகளைத் தளர்த்தும்படியாக முதல் நிலைத் தமிழாசிரியர்களாக ஆக்குவதற்குத் தடையாக இருக்கும் விதிமுறைகளைக் கேட்டிருக்கிறார்கள். அதுபோன்ற தனியார் பள்ளியில் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களைப் பொறுத்தும் பட்டியல் அனுப்பியிருக்கிறார்கள். ஆக, மேற்கொண்டும் சில விவரங்கள் கேட்கப்படவேண்டியிருக்கின்றது. அவ்விவரங்கள் கிடைத்தபிறகு, இதில் முடிவெடுக்கப்படும்.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, தெளிவாக அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. கேரளப் பல்கலைக்கழக வித்துவானை சென்னை பல்கலைக்கழக வித்துவானுக்குச் சமமாக அரசு கருதுகிறது என்று அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிறகு, ஒவ்வொரு நபருடைய பெயரும் அந்த உத்தரவின் கீழ் இணைக்கப்படவில்லை என்று சொல்லி, அந்தப் பகுதி அதிகாரிகள் விளக்கம் கேட்டு, நாட்களைக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள். அரசு இத்தகைய நல்ல திட்டங்களைக் கொண்டுவருவதன் நோக்கத்தைப் புரிந்துகொள்ளாமல் அதிகாரிகள் காலந்தாழ்த்திக்கொண்டிருக்கும் நிலை ஆங்காங்கு இருக்கிறது. எனவே, அரசு உத்தரவு அமல் நடத்தப்படாமல் இருக்கும்போது, “இத்தனை குறித்த காலத்திற்கு மேல் காலந்தாழ்த்தப்படுமானால், அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்” என்று ஒரு நிலையை உருவாக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதிலே விரைவில் முடிவு காணவேண்டுமென்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் அரசிலே பணியாற்றுபவர்களைப் பொறுத்து பரிந்துரை அனுப்பியிருக்கிறார்கள். தனியார் பள்ளிகளில் பணியாற்றுபவர்கள் குறித்தும் பரிந்துரை அனுப்புவதற்கு சில விவரங்கள் கேட்கப்பட்டிருக்கின்றன என்று கூறப்பட்டிருக்கிறது. விரைவில் இதுபற்றி முடிவு எடுக்கப்படும்.

### *Arulmigu Mariamman High School, Samayapuram*

*2. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether it is a fact that representation has been received by the Government from the staff members working in Arulmigu Mariamman High School, Samayapuram, Tiruchirappalli district, that the salary due to them for the month of May, has not been disbursed till date (8—8—1974) ; and

(*b*) if so, the action taken by the Government in the matter?

[1975 பிப்ரவரி 21

<u>அருள்மிகு மாரியம்மன் உயர்நிலைப்பள்ளி, சமயபுரம்.</u>

<u>திரு. ஜி. சுவாமிநாதன் :</u> மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் சமய புரம் அருள்மிகு மாரியம்மன் உயர்நிலைப்பள்ளில் பணிபுரியம் பணியாளர்களுக்கு மே திங்களுக்குக் கொடுக்க வேண்டிய சம்பளம் நாளது தேதி (8—8—74) வரையில் அவர்களுக்குக் கொடுக்கப்படாமல் இருப்பது குறித்து அரசுக்கு முறையீடு வந்துள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> (அ) சமயபுரம் திருமிகு மாரியம்மன் உயர்நிலைப் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களின் ஜூலை மாதம் 9-ம் தேதியே ஜூன் மாதத்திற்கான சம்பளப்பட்டி (Bill) காசாக்கப்பட்டும் அவர்களுக்கு இன்னும் சம்பளம் வழங்கப்படவில்லையெனப் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு முறையிட்டார்கள்.

(இ) இம்முறையீட்டை பரிசீலனை செய்த பள்ளிக் கல்வி இயக்குநர் ஆசிரியர்களுக்கு சம்பளத் தொகையை நேரடியாகப் பட்டுவாடா செய்ய 21—8—74 அன்று பணித்துள்ளார்.

<u>திரு. ஜி. சுவாமிநாதன் :</u> தலைவர் அவர்களே, எத்தனை மாதமாக இந்தச் சம்பளம் கொடுக்காமல் இருந்தார்கள் ? இதிலே, அரசாங்கத்திலிருந்து அவர்களுக்குக் காசோலை வந்து, அதை மாற்றி அவர்கள் பணமாக வைத்துக்கொண்டிருந்தும்கூட, அந்தப் பணத்தை ஆசிரியர்களுக்குக் கொடுக்காமல்—அவர்களது சொந்தச் செலவுக்காகவோ அல்லது சொந்த முறையிலோ—வைத்துக் கொண்டிருந்ததற்குக் காரணம் என்னவென்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> தலைவர் அவர்களே, இதுபற்றி முழு விவரங்கள் தற்போது இல்லை. ஆனால் இப்போது தலைமையாசிரியர்கள் நேரிடையாகவே சம்பளம் கொடுக்கத் தக்க ஏற்பாடு 21—8—74 அன்றுமுதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆக, பாக்கி ஏதும் அவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் நிறுத்தி வைத்ததற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை எந்த அளவில் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தனியாக ஆராயலாம்.

<u>திரு. ஜி. சுவாமிநாதன் :</u> தலைவர் அவர்களே, இது பொதுவானதொரு பிரச்சினை. இந்தப் பள்ளிகளுக்கென்று சொல்லவில்லை. இது போன்று பணம் வந்து, அவர்கள் அதை வாங்கி வைத்துக்கொண்டு, இரண்டு மாதம், மூன்று மாதம் கழித்துக் கொடுக்கிறார்கள். அரசாங்கம் கொடுக்கிற பணத்தை இவ்வாறு ஆசிரியர்களுக்குக் கொடுக்காமலிருப்பது பற்றி ஏதாவது ஒரு நடவடிக்கை எடுத்து, மற்ற பள்ளிகளிலும் இதுமாதிரி நடக்காமலிருக்கும் ஒரு முறையை அரசு கையாளுமா என்று அறிய விரும்புகிறேன்.



1975 பிப்ரவரி 21]

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்ற அந்த முறைகேட்டிற்குப் பரிகாரம் என்ன காண வேண்டும், என்ன முறையில் காணலாம் என்பது பற்றி ஆராயலாம்.

<u>திரு. கே. எஸ். கணபதி :</u> தலைவர் அவர்களே, இந்தப் பள்ளி ஆசிரியர்களுடைய ஊதியம் வழங்கப்படாமலிருந்து, மாவட்ட கல்வி அதிகாரிகளிடமும், இயக்குநரிடமும் நான் எடுத்துக்கூறி உடனடியாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்துவிட்டார்கள். ஆனால்,அந்த தாளாளரும், தலைமையாசிரியரும் சேர்ந்து கொண்டு அந்தப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் கொடுக்கக்கூடிய "இன்கிரிமென்ட்" கொடுப்பதிலும், 10 ஆண்டு முடிவில் கொடுக்கக்கூடிய தேர்வு நிலை ஊதியம் வழங்குவதிலும் தயக்கம் காட்டி வருகிறார்கள். அவர்களுடைய புத்தகங்கள் ( Service Register ) கல்வி இலாக்காவுக்கு அனுப்பப்படவேயில்லை. அவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கை அரசு எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்ற புகார்களை பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு அனுப்பி வைப்பார்களானால், அதன் மீது மேற்கொண்டு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### *Diet charges in Government Hospitals.*

* 3. *Q.*—THIRU A. R. DAMODARAN : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) the scale of diet charges allowed for patients in general wards in Government Hospitals in the City of Madras, during the year 1973-74 ; and

(*b*) whether the same scale is allowed in Government Hospitals in the mofussil also ?

<u>அரசாங்க மருத்துவ மனைகளில் உணவுக் கட்டண வீதங்கள்.</u>

<u>திரு. ஏ. ஆர். தாமோதரன் :</u> மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1973–74 ஆம் ஆண்டு, சென்னை மாநகரிலுள்ள அரசாங்க மருத்துவ மனைகளில் பொது வார்டுகளிலுள்ள நோயாளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட உணவுக் கட்டண வீதங்கள் யாவை ?

[1975 பிப்ரவரி 21

(இ) வெளியூர்களிலுள்ள அரசு மருத்துவ மனைகளிலும் அதே கட்டண வீதங்கள் அனுமதிக்கப்படுகின்றனவா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இதற்கான பல்வேறு வகையான உணவுத் தரங்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் ;

| | | ரூ. பை. |
|---|---|---|
| 1. | கடுமையான (சிறப்பு) பத்திய உணவு .. .. | 4.47 |
| 2. | பால் ரொட்டி உணவு .. .. .. .. | 2.31 |
| 3. | காசநோயாளி உணவு (அசைவம்) .. .. .. அதாவது, நான்-வெஜிட்டேரியன். | 4.26 |
| 4. | காசநோயாளி உணவு (சைவம்) .. .. .. | 3.58 |
| 5. | காசநோயாளி அரை உணவு (அசைவம்) .. .. | 2.25 |
| 6. | காசநோயாளி அரை உணவு (சைவம்) .. .. வெஜிட்டேரியன். | 1.91 |
| 7. | சர்க்கரை நோயாளி (அசைவம்) உணவு .. .. | 3.39 |
| 8. | சர்க்கரை நோயாளி (சைவம்) உணவு .. .. | 2.97 |
| 9. | சிறுர் சாதாரண உணவு (அசைவம்) .. .. | 3·00 |
| 10. | இந்திய சாதாரண உணவு (அசைவம்) .. .. | 2·26 |
| 11. | இந்திய சாதாரண உணவு (சைவம்) .. .. | 2·12 |

இவ்வாறு அதற்கான செலவுகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன.

மற்ற மருத்துவ மனைகளிலும், மொபசலிலேயும் இதே முறை மேற்கொள்ளப்படுகிறது.

THIRU A. R. DAMODARAN : Sir, regarding the information that was furnished, I heard that in the mofussil hospitals it was less than Rs. 1.25 per head for ordinary patients. The Hon. Minister has mentioned about tubercular patients, etc., for which the diet may be better. May I know, Sir, whether for ordinary patients, surgical cases, etc., the diet charges are less than Rs. 1.25 per day or whether they have been increased recently ?

(பிற்பகல் 4–20)

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, தரப்பட்டுள்ள விவரங்களில் எந்த மருத்துவ மனையிலும் சாதாரண உணவு என்பதையே ரூ. 2.12 காசு என்ற அளவுக்குத் தான் தீர்மானித்திருக்கின்றுர்கள். இது 1973–74-ஆம் ஆண்டில் நடைமுறையிலே ஏற்பட்ட செலவாகத்தான் எனக்கு வந்த குறிப்பில் இருக்கின்றது. நிர்ணயிக்கப்பட்ட அந்தத் தொகை பழைய புள்ளிவிவரமாக இருக்கவேண்டும்.



1975 பிப்ரவரி 21]

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது கூடிய நோயாளிகளுக்கு ரூ. 4.26 காசாகவும், ரூ. 3.58 காசாகவும் வழங்குவதாக கூறினுர்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நீங்கள் சொல்வது தெளிவாக இல்லை. அசைவ உணவு, சைவ உணவு என்று தெளிவாகச் சொல்லுங்கள்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, அசைவ உணவு ரூ. 4.26, சைவ உணவு ரூ. 3.58 காசு ஆகிறது என்று பதில் கூறினுர்கள். இது தற்போது குறைக்கப்பட்டிருக்கிறதா என்ற தகவல் இல்லை என்று கூறினுர்கள். குறைக்கப்பட்டிருப்பது அமைச்சர் அவர்களுக்கு தெரியுமா ? அப்படிக் குறைத்துக் கொடுப்பதை அதிகமாக்குவது பற்றி அரசாங்கம் ஏதாவது பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தப் புள்ளி விவரம் 1972–73-ம் ஆண்டு நடைமுறையில் ஆன செலவு. அதற்குப் பின்னர் குறைப்பதற்கு எந்தவிதமான காரணமும் இல்லை. ஆனுல் உள்ளபடியே இந்தத் தொகைக் குறைக்கப்படுகிறது என்ருல் சில இடங்களில், அதற்குரிய டெண்டர் கேட்டு வாங்குகின்றபோது உளவிலோ அல்லது தரத்திலோ வேறுபாடு ஏற்படுவதை, ஏற்பட்டது என்பதை ஏற்ற சிக்கல். பொதுவாக எல்லா மருத்துவமனைகளிலும், அப்படி ஏற்படுவது இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, சைவ உணவு உண்பவர்களுக்கு ஒரு ரூபாய் குறைவாக உணவு கொடுப்பதன் காரணம் என்ன என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன். அவர்களுக்கு அந்த ஒரு ரூபாய் அளவுக்கு இன்னும் கொஞ்சம் அதிகப்படியான போஷாக்கான உணவு கொடுப்பதற்கு இந்த அரசு கவனம் செலுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, சைவ உணவு என்ற காரணத்தினுலேயே அந்த உணவினுடைய சத்து அளவு குறைவு என்ற கணக்கை எந்த மருத்துவத் துறையினரும் ஏற்றுக் கொள்வதில்லை. ஆனுல் எந்தவிதமான அசைவ உணவு வாங்குகிறபோதும் அதனுடைய செலவு அதிகமாகின்ற காரணத்தினுலே தான் விலை அதிகமாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதே தவிர சைவர்களை எந்த வகையிலேயும் வஞ்சிக்கவில்லை.

### *Lady Doctor for Government Hospital, Muthupet*

*4. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether any representation has been received from the public of Muthupet, regarding the posting of a Lady Doctor for the Government Hospital, Muthupet; and

(*b*) if so, the action taken by the Government thereon ?

முத்துப்பேட்டை அரசினர் மருத்துவமனைக்கு பெண் மருத்துவர்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) முத்துப்பேட்டை அரசினர் மருத்துவமனைக்காக மருத்துவர் (பெண்) நியமனம் குறித்து முத்துப்பேட்டையைச் சேர்ந்த பொதுமக்களிட மிருந்து முறையீடு ஏதும் பெறப்பட்டதா?

(இ) ஆமெனில், அரசு அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை. இருப்பினும் அரசு ஒரு பெண் மருத்துவ அதிகாரியை நியமித்துள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, முறையீடு ஒன்று அரசுக்கு அனுப்பப்பட்டு அதன் நகல் எனக்கு வந்திருக்கின்றது. முறையீடு டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் அவர்களுக்கு நேரடியாக அனுப்பி யிருக்கின்றார்கள். இப்போது அந்தப் பெண் மருத்துவர் இருக்கின்றார்களா என்று அறிய விரும்புகிறேன். அதற்கு முக்கிய காரணம் அந்தப் பகுதியில் உள்ளவர்கள் முஸ்லீம்களாக இருக்கின்றார்கள். பிரசவம் மற்ற முக்கியமான சமயங்களில் பெண் டாக்டர் இல்லாவிட்டால், மிகவும் கஷ்டம் ஏற்படுகிறது என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஆகவே, தற்போதாவது அங்கே பெண் மருத்துவர் இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, 25—5—1974 அன்று ஆம்பூரிலே இருந்த ஒரு பெண் மருத்துவர் டாக்டர், பி. எஸ். மதுரம் என்பவர் நியமிக்கப்பட்டார். ஆனால் அவர்கள் அங்கே போய்ச் சேர வில்லை. வேறு சில காரணங்களுக்காக அவர்கள் விடுமுறை பெற்று விட்டார்கள். டாக்டர் விஜயலெட்சுமி அவர்கள் 2—8—1974-ல் நியமிக்கப் பெற்று 22—9—1974-லே அங்கு சேர்ந்தார். அதற்குப் பின்னர் ஏதாவது மாற்றம் இருந்தால், அதுபற்றித் தெரியாது.

## *Repairs to the Road from Thalakkulam to Kanyakumari (via) Kovalam*

* 5. *Q.*—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether any resolution passed by the Kovalam Panchayat Union requesting the Government to repair the road from Thalakkulam to Kanyakumari (via) Kovalam, has been received by the Government; and

(*b*) if so, the action taken thereon?



கோவளம் வழியாக தலக்குளத்திலிருந்து கன்னியாகுமரி செல்லும் சாலையைச் செப்பனிடல்

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்.

(அ) கோவளம் வழியாக தலக்குளத்திலிருந்து கன்னியாகுமரி செல் லும் சாலையைச் செப்பனிட வேண்டும் என்று கோவளம் பஞ்சாயத்து ஒன்றியத்திலிருந்து தீர்மானம் ஏதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) and (இ) ஆம். சாலை செப்பனிடும் பணி நடைபெற்று வருகிறது.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, கன்னியாகுமரி யிலிருந்து கோவளம் வழியாக தலக்குளத்திற்குச் செல்கின்ற ரோடு, மேற்குக் கடற்கரை ஓரம் உள்ள ரோடு செப்பனிடுகிற திட்டத்தில் வருவதால், அது பம்பாய் கன்னியாகுமரி ரோட்டைச் செப்பனிடுகிற திட்டத்தோடு இணைக்கப்பட்டிருக்கின்றதா, அதற்கு அதிகப் பண ஒதுக்கீடு மத்திய அரசிலிருந்து வந்திருக்கின்றதா அல்லது பண ஒதுக்கீடே வரவில்லையா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நமது நெடுஞ்சாலைத்துறையினரால் தார் போடப்படுகிற அது தலக்குளம்—கன்னியாகுமரி என்ற சாலை அல்ல . மாண்புமிகு உறுப்பினரைத் திருத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன். அந்தச் சாலை தாமரைக்குளம்—கன்னியாகுமரிச் சாலை என்று குறிப்பிலே இருக்கின்றது. கோவளம் சாலைக்கு ரூ. 93,000 செலவில் தார் போடுவதற்கு ஏற்பாடு கள் நடைபெற்று வருகின்றன.

## *Lands affected by construction of Pullambadi Canal*

* 6. *Q.*—THIRU S. T. ADITYAN (on behalf of THAVATHIRU KUNDRAKUDI ADIGALAR) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that the lands irrigated by the Pillaiyarkulam tank lying in Thirupeyar village, Ariyalur taluk, Tiruchirappalli district, have been affected by the construction of Pullambadi Canal; and

(*b*) if so, the action taken thereon?

புள்ளம்பாடிக் கால்வாய் வெட்டப்பட்டதால் பாதிக்கப்பட்ட நிலங்கள்

திரு. எஸ்.டி. ஆதித்தன் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில) : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ் கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சி மாவட்டம் அரியலூர் வட்டம், திருப்பெயர் ஊரில் அமைந்துள்ள பிள்ளையார்குளம் ஏரியால் பாசனம் பெற்றுவந்த நிலங்கள், புள்ளம்பாடி கால்வாய் வெட்டப்பட்டதால் பாதிக்கப் பெற்றுள்ளன என்பது அரசுக்கு தெரியுமா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) இப்பொருள் நீர்ப்பாசனத் தலைமைப் பொறியாளர் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள் 7-ம், 8-ம் ஒத்தி வைக்கப்படுகின்றன.

*Over-loading of Passengers in private buses*

*9. *Q*.—Thiru L. Balaraman : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether complaints have been received that accidents take place due to the over-loading of passengers in private buses; and

(*b*) if so, the total number of accidents that occurred during 1971-72 and 1972-73?

தனியார் துறை பேருந்துகளில் கொள் அளவுக்கு மேல் பிரயாணிகளை ஏற்றுதல்

திரு. எல். பலராமன் : மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தனியார் துறை பேருந்துகளில், கொள் அளவுக்கு மேல் பிரயாணிகளை ஏற்றுவதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்ற புகார்கள் வந்தனவா ?

(இ) ஆமெனில், அப்படி ஏற்பட்ட விபத்துகள் 1971-72, 1972-73-ம் ஆண்டுகளில் எத்தனை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு வே. தங்கபாண்டியன் : தலைவரவர்களே, இப்போது தனியார் பேருந்துகளில் அனுமதிக்கப்படுவதற்கு மேல் 15 பேர்கள் நின்று கொண்டு பயணம் செய்யலாம் என்ற உத்தரவு தனியார் பேருந்துகளுக்கு



வழங்கப்பட்டிருக்கின்றதா ? அப்படி கொடுக்கப்பட்டிருந்தால், அதற்குக் கூடுதலான வரி எந்த விதத்தில் வசூலிக்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பொதுவாக ஏற்பட்டிருக்கின்ற போக்குவரத்து நெரிசலையொட்டி ஓடுகின்ற பேருந்துகளில் 15 பேர்கள் நின்றுகொண்டு பயணம் செய்ய அனுமதிக்கலாம் என்ற உத்தரவு அரசினரால் பிறப்பிக்கப்பட்டது. அது உயர்நீதி மன்றத்திற்குச் சென்று, அங்கு வழக்கு முடியாமல் இருக்கின்ற காரணத்தினால், அதை அமல் படுத்த முடியாமல் இருக்கிறது.

Thiru A. R. Damodaran : Sir, may I know how many persons have been permitted to travel on top of the buses, by the sides of the buses, on the mudguards and on other portions of the buses which we are seeing in Madras City?

The Hon. Thiru S. Ramachandran : Sir, as such nobody is permitted; but, I would commend the hon. Member to go to other States and see actually how many persons travel over the buses.

திரு. அ. அய்யணன் அம்பலம் : தலைவரவர்களே, தனியார் பஸ்ஸில் மட்டுமல்லாமல் அரசாங்கம் நடத்தக் கூடிய எக்ஸ்பிரஸ் பஸ்களிலும் அதிகமாக 15 பேர்கள் பயணம் செய்ய அனுமதி கொடுக்கப்பட்டிருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, விரைவுப் பேருந்துகளில் அத்தகைய யோசனை எதுவும் இல்லை.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, அரசாங்க பஸ்ஸில் அனுபவ பூர்வமாகப் பார்க்கும்போது, அதிகப்படியான பேர்களை ஏற்றிச் செல்கிறார்கள் என்ற நிலைதான் இருக்கின்றது. பத்திரிகைச் செய்திகள் மூலம் அதிகமான பேர்களை ஏற்றிச் செல்லும்போதுதான் விபத்து ஏற்படுகிறது என்று தெரிகிறது. அது அரசின் கவனத்திற்கு வந்திருக்கின்றதா ? அதுபோன்ற நிலைமைகளை மாற்றுவதற்கு திட்டங்கள் ஏதாகிலும் அரசிடம் இருக்கின்னவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அவ்வப்போது அத்தகைய புகார்கள் வரும் போது, மோட்டார் வாகன ஆய்வு அதிகாரிகளும், காவல் துறை அதிகாரிகளும் தக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

திரு. அ. அய்யணன் அம்பலம்: தலைவரவர்களே, சேலம் செல்லும் அண்ணா பேருந்து விரைவு வண்டியிலே சென்ற வாரம் நான் பயணம் செய்த போது 15 பேர்களுக்கு அதிகமாக ஏற்றிச் சென்றார்கள். அரசாங்க ஆணையின்பேரில்தான் அவர்கள் அப்படி ஏற்றிச் செல்கின்றார்களா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u> : தலைவரவர்களே, விரைவுப் பேருந்துகள் அரசுப் போக்குவரத்துத் துறையினராலேதான் நடத்தப்பட்டு வருகின்றன. ஒரு வேளை அண்ணா போக்குவரத்து கழகத்தினுடைய பேருந்து விரைவாகச் சென்றிருக்குமே தவிர அது விரைவுப் பேருந்து என்ற விளக்கத்தின் கீழ் வராது. அப்படி ஏதேனும் குறிப்பிட்ட புகார்கள் இருக்குமானால், அது சம்பந்தமாக அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

<u>திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்</u> : தலைவரவர்களே, கலெக்ஷன் பேட்டா காரணமாக கண்டக்டர்கள் ஏராளமான பிரயாணிகளை ஏற்றுவதனால் இந்த விபத்துக்கள் ஏற்படுகின்றன.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர்</u> : "கலெக்ஷன் பேட்டா" என்றால் என்ன ?

<u>திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்</u> : தலைவரவர்களே, எவ்வளவு கலெக்ஷன் பண்ணுகிறார்களோ அந்த வசூலுக்குத் தக்கபடி போனஸ் மாதிரி பேட்டா கொடுக்கின்றார்கள்.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர்</u> : நான், தமிழும் உருதும் கலந்து பேசுகிறீர்களே என்றுதான் கேட்டேன்.

<u>திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்</u> : தலைவரவர்களே, மற்ற பாஷைகளையும் கலந்து நான் பேசினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்த மாதிரி கலெக்ஷன் பேட்டா கொடுக்கின்றோமே, அதைத் தடை செய்ய அரசு ஏதாவது உத்திரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u> : தலைவரவர்களே, ஊக்க போனஸ் திட்டத்தின் மூலம் தான் ஏற்றாமல் செல்லுகின்றார்களே என்ற குறையை நீக்கியிருக்கிறோம். அதிகமாக ஏற்றுகிறார்கள் என்பதை அதிகப் பேருந்துகளை விடுவதன் மூலம்தான் நாம் ஓரளவுக்குத் தவிர்க்க முடியும்.

*Difficulties experience by the air passengers*

* 10. Q.—THIRU G. SWAMINATHAN : will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the Government are aware of the difficulty experienced by the passengers arriving by air at Madras Airport due to the cancellation of Surface Transport by the Indian Airlines; and

(b) if so, whether there is any proposal with the Government to provide buses for their convenience?



<u>விமானம் மூலம் வந்து சேரும் பயணிகளுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகள்.</u>

<u>திரு. ஜி. சுவாமிநாதன்</u> : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனம் பேருந்து வசதியை ரத்து செய்ததன் காரணமாக, சென்னை விமான நிலையத்திற்கு விமானம் மூலம் வந்து சேரும் பயணிகளுக்கு ஏற்படும் இடர்ப்பாடு குறித்து அரசு அறியுமா ?

(இ) ஆமெனில், அவர்களுடைய வசதிக்காகப் பேருந்துகளை விடுவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u> : (அ) ஆம்.

(இ) மீனம்பாக்கம் விமான தளத்திற்கு விமானம் மூலம் வரும் பயணிகளின் பயன் கருதி பல்லவன் போக்குவரத்துக் கழகம் மீனம்பாக்கம் விமான தளத்திலிருந்து அண்ணா சாலையிலுள்ள போக்குவரத்து இல்லம் வரை சீர்வசதிப் பேருந்துகள் இரண்டினை நடத்தி வருகிறது.

THIRU G. VASANTHA PAI : Sir, will the Hon. Minister consider having this Pallavan Transport Corporation bus which leaves the Airpirt to connect important residential localities like Adayar, Mylapore, Royapettah and other places which are busy residential localities, till it reaches the destination, namely, Anna Salai, because it will be more convenient for passengers to alight at specific places in these residential localities than at the hotels where this bus stops?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, as this bus is mainly intended for the internaional tourists, it connects the important hotels in the City and it does not go to the residential areas in the City.

THIRU G. VASANTHA PAI : Sir, I am only requesting that the Hon. Minister may consider having a bus of the Pallavan Transport Corporation touching the residential localities also on the way to the hotels.

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, even now there is a feeling among the tourists that the bus touches too many hotels and that it causes delay. So, I am afraid whether I may be able to agree with the suggestion of the hon. Member.

MR. CHAIRMAN : Questions are over.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி *அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 4. அறிவிப்புகள்.

### (1) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

MR. CHAIRMAN : At a meeting of the Business Advisory Committee held at 3-30 p.m. to day, the following programme business has been decided upon :—

| | |
|---|---|
| 21—2—1975 | Discussion on the Governor's Address. |
| 22—2—1975 | |
| 23—2—1975 | Sunday—Holiday. |
| 24—2—1975 | |
| 25—2—1975 | Discussion on the Governor's Address. |
| 26—2—1975 | |
| 27—2—1975 | Reply by the Hon. the Chief Minister to the Debate on the Governor's Address. |

The Council will meet from 4 p.m. to 7 p.m. daily. Further programme of business will be decided later.

### (2) பேரவையிலிருந்து செய்தி.

MR. CHAIRMAN : I have received a message, dated 4th February 1975 from the Hon. Speaker, Legislative Assembly, stating that Hon. Thiru A. P. Dharmalingam has since resigned his membership from the Joint Select Committee on the Tamil Nadu Panchayats (Amendment and Validation) Bill, 1974 (L.A. Bill No. 39 of 1974) consequent on the change in the portfolios of the Ministers and that in accordance with rule 139 (i) of the Tamil Nadu Legislative Assembly Rules and in exercise of the powers conferred under rule 242 of the said rules, the Hon. Speaker has nominated the Minister in charge of the Department, Thiru Mannai P. Narayanaswamy as a member of the above Joint Select Committee in the vacancy caused by the resignation of the Hon. Thiru A. P. Dharmalingam.

(பிற்பகல் 4-30)

### (3) ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்களுக்குக் கடைசி நாள்

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்கள், 1975 பிப்ரவரி 22 ஆம் நாள் சனிக்கிழமை, மாலை 5 மணிக்கு முன்னதாக செயலாளருக்கு அனுப்பப்படவேண்டுமென நான் மேலவை உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

## 5. மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 6-வது விதியின் கீழ் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்



படி அமைக்கப்பட்ட மேலவையின் 50-வது கூட்டத் தொடருக்கு, கீழ்க் காணும் உறுப்பினர்களை, மேலவை மாற்றுத் தலைவர் பட்டியலில் இடம் பெறுமாறு நான் நியமித்துள்ளேன் என்பதை அவைக்கு அறிவிக்கிறேன.

1. திரு. எஸ். டி. ஆதித்தன்.
2. திரு. ஏ. பாலசுப்ரமணியம்.
3. திரு. கே. எஸ். கணபதி.
4. திரு. எம்.எம். பக்கர்

## 6. ஆளுநர் உரையின் மீது விவாதம்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : மேலவைத் தலைவரவர்களே, "1975-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20-ஆம் நாள் ஆளுநர் அவர்கள் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு, உரை@ நிகழ்த்தியதற்காக தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தங்களுடைய நன்றியை ஆளுநர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றனர்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, நான் அந்தத் தீர்மானத்தை வழிமொழிகின்றேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம் "1975-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20-ஆம் நாள் ஆளுநர் அவர்கள் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு உரை நிகழ்த்தியதற்காக, தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் தங்களுடைய நன்றியை ஆளுநர் அவர்களுக்குத் தெரிவித்துக கொள்கின்றனர்."

திரு, எஸ். எஸ். தென்னரசு : மேலவைத் தலைவரவர்களே, 1975 பிப்ரவரி 20-ஆம் நாள் கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஆளுநர் உரையில் பெரும்பகுதி தமிழகத்தைத் தற்போது ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கக்கூடிய வறட்சியைப் பற்றியே இருக்கின்ற காரணத்தினால் அந்த வறட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்ட கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்தவன் என்கின்ற முறையில் ஆளுநர் உரையை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த வறட்சியின் சிறப்புகளைப் பற்றிப் பத்திரிகையிலே கடந்த 2 மாத காலமாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்திய அரசாங்கத்தின் ஆளுகையிலே இருக்கக் கூடிய வானொலி அறிவிப்புகள் கூட கடந்த 100 ஆண்டுகாலமாக இப்படிப்பட்ட பஞ்சத்தை நாடு சந்தித்ததில்லையென்று முன்கூட்டியே தெரிவித்திருக்கின்றன. அதைவிட நம்முடைய தமிழ்க் குடும்பங்களில் "தாது வருஷப் பஞ்சம்" என்றுதான் பஞ்சத்தை வர்ணிப்பார்கள். இப்போது வந்திருக்கக்கூடிய ஆனந்த வருஷப் பஞ்சம் தாது வருஷப் பஞ்சத்தையும் தோற்கடித்துவிட்டது என்று சொல்கின்ற அளவுக்கு தமிழகத்தின் தென் பகுதியிலே, குறிப்பாக, எங்களுடைய தென பகுதியிலே கடுமையான பஞ்சம் காணப்படுகின்றது. இலக்கியத்திலேயே கூட செழிப்புக்குச் சிறப்பாகப் பெயர் பெற்றிருக்கக்கூடியது பொன்னி

---

@74-83-ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

யாற்றங்கரை. அந்தப் பகுதியிலேகூட பஞ்சம் இருப்பதாக என்னுடைய நண்பர்கள் அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் கொடிய வறட்சியிலிருந்து மக்களைக் காப்பாற்ற அரசாங்கம் செய்திருக்கக்கூடிய முயற்சிகளை மக்களுக்குக் காட்டுகின்ற வகையிலே அமைந்திருப்பதுதான் நேற்றையதினம் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையாகும். ஆளுநர் அவர்களுடைய உரையை தமிழக அரசாங்கத்தினுடைய "நற்சான்றிதழ்" என்று சொல்லத் தக்க அளவுக்கு அரசாங்கத்தின் முயற்சிகளை வெகு சிறப்பாக அந்த அறிக்கையில் நம்மால் பார்க்க முடிகின்றது. நம்முடைய கவர்னருடைய அறிக்கையின் சுவடுகள் தமிழகம் முழுவதுமுள்ள வறட்சியைப்பற்றிக் குறிப்பிடுகின்ற காரணத்தால் வறட்சி துயர் நடவடிக்கைகள்தான் தற்போது அரசாங்கத்தின் மிக முக்கிய குறிக்கோளாக இருக்கின்றது என்ற சிறப்பை நாம் என்றைக்கும் மறக்க முடியாது. முனபெல்லாம் "கவர்னர் உரை" என்பது, சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமே தெரிந்த வாக்கியங்களைக் கொண்டதாகவே அமைந்திருக்கக்கூடும். ஆனால் இந்தத் தடவை இந்த அரசாங்கம் வறட்சியை முறியடிப்பதற்கு என்னென்ன முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறது என்பதை நம்முடைய சாதாரண மக்கள் கூட எளிதிலே படித்துத் தெரிந்துகொள்ளக்கூடிய அளவுக்கு ஆளுநர் உரை அமைந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த வறட்சிக்குக் காரணம் யார் என்று வெளியிலே பலர் பல்வேறு விதமாகப் பேசினாலும் நான் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டபடி, பருவ மழை பொய்த்ததன் காரணமாகவும் பருவ மழை தவறியதன் காரணமாகவும் கடந்த 100 ஆண்டுக் காலமாக இல்லாத அளவுக்கு இந்தப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால் வெளியிலே பொறுப்பான அரசியல்வாதிகள் இந்த அரசாங்கம்தான் காரணம் என்று பொதுக்கூட்டங்களிலே பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 4-40)

இந்த அரசு 1975-லே பொறுப்பேற்கவில்லை, 1967-லேயே பொறுப்பேற்றிருக்கின்றது. பொறுப்பேற்ற பின்னர் பல்வேறு சந்தர்ப்பங்களிலே தனக்கு உபரியாக இருந்த தானியத்தை பிற மாநிலங்களுக்கு வழங்கியிருக்கின்றது. நமது கலைஞர் அவர்கள் 1969-லே பொறுப்பேற்றார் அவர் பொறுப்பேற்ற பின்னர், விவசாயத்தில், உணவு உற்பத்தியில் அதிக கவனம் செலுத்தப்பட்டு நமது குறியீட்டில் 99 சதவிகிதம் வெற்றியும் பெற்றுள்ளது நமது அரசு. அதன் காரணமாகத்தான் சென்ற ஆண்டில்கூட மேற்கு வங்கத்திற்கும் கன்னடம், மராட்டியம் போன்ற மாநிலங்களுக்கும் உணவுப் பொருட்களை அனுப்பிவைத்து தனக்கும் பெருமை தேடிக்கொண்டது. ஏதோ திராவிட முன்னேற்றக் கழக அரசு இருப்பதால்தான் இப்போது பஞ்சம் ஏற்பட்டது என்று சொல்வது தவறு என்பதை எடுத்துக்காட்டவே இதைச் சொல்கிறேன்.

பஞ்ச நிலைமைகளைச் சமாளிக்க அரசு எந்த மையப்புள்ளியை ஆதாரமாக வைத்துப் பாடுபடுகிறது என்பதை நமது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். பஞ்ச நிலை காரணமாக நிலமற்ற விவசாயக் கூலிகளுக்கு உதவ வேண்டும், அவர்களுக்கு வாங்கும் சக்தியினை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று பல்வேறு நடவடிக்கைகளை





எடுத்து வரும் அதே நேரத்தில் அவர்களுக்கு நியாயமான விலையில் உணவுப் பொருள்கள் கிடைக்க வேண்டும் என்ற முறையிலும் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றார்கள். என்னுடைய பகுதியில்தான் வறட்சியின் கோரப்பிடி அதிகமாக இருக்கின்றது. அப்படியும் அரசாங்கம் தன்னால் முடிந்த எல்லாவற்றையும் செய்துவருகிறது. இந்த அரசிடம் மாறுக் கருத்துக்களைக் கொண்டவர்கள்கூட மனமாரப் பாராட்டும் வகையில் அரசு பணிகளைச் செய்து வருகின்றது.

முதலில் பஞ்சத்தால் எந்த அளவிற்கு மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள் எனபதைக் கவனிப்பதற்காக அரசுச் செயலாளர் அவர்கள் கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில், மதுரையிலிருந்து அருப்புக் கோட்டை, கமுதி, திருவாடானை, காரைக்குடி இந்த வழியாக புதுக் கோட்டை வரையில் பரவியுள்ள பகுதிகளைப் பார்வையிட்டார்கள். பின்னர் வருவாய்த் துறை அமைச்சராக இருந்த திரு. சாதிக் அவர்களும் உணவுத் துறை அமைச்சர் திரு. மாதவன் அவர்களும் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டார்கள். பின்னர் மத்திய அமைச்சர் திரு. ஷிண்டே அவர்களும் அந்தப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்தார்கள். அவர் மக்களைச் சந்தித்து சில இடங்களிலே ஒலிபெருக்கி வைத்து பொதுக் கூட்டங்களைப் போல மக்களைச் சந்தித்து குறைகளைக் கேட்ட நேரத்திலே அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். "பஞ்சம் இங்கேதான் என்றில்லை. உங்களுக்கு இப்போதுதான் பஞ்சம். ஆனால் வடக்கே பல பகுதிகளிலே பஞ்சம் என்பது நிரந்தரமாக இருக்கின்றது. ஆகவே இதற்காகப் பயப்படாமல் மக்கள் பாடுபடவேண்டும். எல்லாவற்றுக்கும் அரசையே எதிர்பார்க்கக் கூடாது. ஓரளவிற்குத்தான் அரசு உதவி செய்ய முடியும். மக்களும் தங்களால் ஆன அளவிற்குப் பாடுபடவேண்டும்" என்ற பல ஆலோசனைகளைச் சொன்னார்கள்.

அவருக்குப் பின்னர் நமது முதலமைச்சர் அவர்களும் அந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மட்டும் அறிவித்துவிட்டு பாதிக்கப்பட்டுள்ள கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தைச் சுற்றிப் பார்த்தார்கள். முதலில் மத்திய அமைச்சர் திரு. ஷிண்டே எந்தெந்தப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்தார்களோ அதே பகுதிகளைச் சுற்றிப் பார்த்தார்கள். அங்கே பல பகுதிகளிலே பொதுவாக கண்மாய் மராமத்து வேலைகள் நடந்துகொண்டிருந்தன. அப்படி வேலை நடந்துகொண்டிருந்த இடத்தில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "உங்களுக்குச் சரியாக கூலி கிடைக்கிறதா" என்று கேட்டார்கள். அவர்கள் "மூன்று ரூபாய்தான் கிடைக்கிறது" என்றார்கள். உடனே முதல்வர் அவர்கள் "குறைந்த பட்சம் மூன்று ரூபாயாக இருக்கவேண்டும்" என்று குறிப்பிட்டு அதற்கு மேலேயும் கொடுப்பதற்கு அந்த இடத்திலேயே ஆணை பிறப்பித்தார்கள். அடுத்து கடந்த நூறாண்டு காலமாக மராமத்து செய்யப்படாமலேயே இருந்த முகவைக் கண்மாயைப் பார்வையிட்டார்கள். இதை மராமத்துச் செய்ய வேண்டும் என்று அங்குள்ள பொதுமக்கள் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டார்கள். பக்கத்திலிருந்த பொறியாளரிடம் கேட்டு உடனே முதலமைச்சர் அவர்கள் அந்தக் கண்மாயை மராமத்து செய்ய ரூ. 31 லட்சத்தை அனுமதித்து உத்தரவிட்டார்கள். அங்கேயிருந்த நாரை பறக்கா 48 கண்மாய் என்று ஆர். எஸ். மங்கலம் கண்மாயைச் சொல்லு

வார்கள். அங்கே முதலமைச்சர் வந்திருந்த நேரத்திலே அங்கே பாலம் ஒன்று வேண்டும் என்றும் கண்மாயை மராமத்து செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப்பொறுப்பினை ஏற்றால் அங்கே மிக அவசியமான பாலத்தைக் கட்டும் என்று முன்னர் கூறியிருந்தார்கள். அந்த அடிப்படையில் இராஜசிங்கமங்கலம் கண்மாயைப் பார்த்தார்கள். அது சுமார் 13 சதுர மைல் பரப்புள்ள கண்மாய் என்பார்கள். அதைப் பார்க்கவேண்டுமென்று நமது நண்பர் திரு. ராமகிருஷ்ணத் தேவர் அவர்கள்தான் நமது முதலமைச்சர் அவர்களை அழைத்தார்கள். ஆனால் அன்றைக்கு எதிர்பாராத விதமாக முதல்வர் அவர்களுக்கு நேரமில்லாது போய்விட்டது. பின்னர் அதைப் பார்த்தவுடன் பொறியாளரை அனுகி இப்போதுள்ள வறட்சி நிலைகளைப் பயன்படுத்திக்கொண்டு பாலத்தைக் கட்டி முடிக்க வேண்டுமென்று அதற்காக ரூ. 15 லட்சம் தொகையை அனுமதித்தார்கள். பாலத்திற்கு ரூ. 15 லட்சம் என்றும் அதே நேரத்தில் கண்மாய் மராமத்திற்கு ரூ. 26 லட்சம் என்றும் ஆக மொத்தம் ரூ. 41 லட்சம் தொகையை அனுமதித்தார்கள். இப்படி அனுமதித்த உத்தரவினைப் பிறப்பித்திருப்பது அந்தப் பகுதி மக்களுக்குத் தெரியாது. எனவே அவர் கண்மாயைப் பார்த்துவிட்டு வரும் வழியிலே சுமார் 10 ஆயிரம் பேர் முதல்வர் அவர்களுடைய காரை மறித்துக்கொண்டு அதைச் செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். அங்கே ஒலிபெருக்கியைக் கொண்டதொரு மேடை அமைத்து அவரைப் பேசும்படி வேண்டினார்கள். அங்கேதான் பாலத்திற்கும், கண்மாய் மராமத்திற்குமாக ரூ. 41 லட்சம் ஒதுக்கியதைக் குறிப்பிட்டார்கள். இதை எதிர்பாராத மக்கள் உணர்ச்சிப் பெருக்கால் மிட்டாய் டின்களை வாங்கிவந்து சூறையிட்டதை யாரும் மறந்திருக்க முடியாது. முதலமைச்சர் அவர்களைப் பாராட்டும் வகையில் அதைச் செய்தார்கள்.

திரு ஜி. சுவாமிநாதன் : தஞ்சை மாவட்டத்தில் சூறையிடுவது என்றால், கடைத் தேங்காயை எடுத்து தெருவில் சூறையாக உடைப்பது, அதை மற்றவர்கள் பொறுக்கிக் கொண்டு போவது என்று அர்த்தம். ஆனால்........

திரு. எஸ். எஸ். தென்னரசு: தலைவரவர்களே, வழங்கினார்கள் என்று சொல்கின்றதைவிட சூறைவிட்டார்கள் என்பது மகிழ்ச்சிப் பெருக்கினால் செய்வதுதான். கடையிலுள்ள மிட்டாயைப் பணம் கொடுத்து வாங்கித்தான் அதைச் செய்தார்கள். மேலும் கடைக்காரர்களுக்கும் நிலங்கள் அந்த ஆயக்கட்டில் இருப்பதால் கடைக்காரர்களும் இனிப்புகளை எடுத்துக் கொடுத்தார்கள்.

திரு. அ. அய்யணன் அம்பலம்: தலைவரவர்களே, பாண்டிமா நாட்டிலே ஒரு வெற்றியைக் கொண்டாடுவதற்கு மிட்டாயைச் சூறையிடுவது என்பது நீண்டகாலமாக இருந்துவருவதாகும் என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : பின்னர் தேவிப்பட்டிணத்திலிருந்து தேவகோட்டைக்கு வரும் வழியில் உறுப்பினர் திரு. ராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் முதலமைச்சர் அவர்களிடமும்





உணவுத்துறை அமைச்சர் அவர்களிடமும் கேட்டுக் கொண்டதையொட்டி அங்கே பாண்டியன் காலத்தில் கட்டப்பட்ட மூன்றுகண்மாய்கள் தூர்ந்துபோய் இருக்கின்றன, அவற்றை மராமத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டதன்பேரில், அவை பாண்டியன் காலத்தில் கட்டப்பட்டவைதானா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று அதிகாரிகளை அனுப்பி, அவற்றிலிருந்து செங்கற்களை எடுத்துவரச் செய்தார். இப்படி பொதுவாக முதலமைச்சர் அவர்கள் தமக்குள்ள சிறப்பான அதிகாரங்களை கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தின் துயரைத் துடைப்பதற்காகப் பயன்படுத்தியமை எங்களுக்கு மிக்க மகிழ்ச்சியினை அளிக்கின்றது. அதே நேரத்தில் முதலமைச்சர் அவர்கள் அங்கே வருகை தந்த நேரத்தில் கட்சி சார்பற்ற முறையில் அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. முதுகுளத்தூர் தாலுக்கா பேரையூரில் காங்கிரஸ்காரர்கள் காங்கிரஸ் மேடையை அமைத்து அதிலேயே முதல்வர் அவர்களும் பேசவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அதிலே பேசிய முதல்வர் அவர்கள், "தேர்தல் காலத்தில் மட்டுமே கட்சிகள் என்று இருக்க வேண்டும். பிற நேரங்களிலே அனைவரும் எதிலும் ஒத்துழைக்க வேண்டும். அந்த முறையில் இப்போது ஏற்பட்டுள்ள மரபு மிகச் சிறப்பானதாகும். இது நீடிக்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்கள். அங்கே கேரையூர் கண்மாய் மராமத்து செய்யப் பட வேண்டுமென்று சொன்னார்கள். அதை நிறைவேற்றுவதற்காக ஆணைகளைப் பிறப்பித்தார்கள். பொதுவாக கிழக்கு இராமநாதபுரம் பகுதி 1967-க்குப் பிறகுதான் சிறப்படைந்திருக்கின்றது. உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். அந்தப் பகுதியிலே தகுதியும் சிறப்பும் பெற்றவர்களுக்குக்கூட கடந்த 20 ஆண்டுகளிலே நான் குறிப்பிடுவது 1967 வரையில்—உத்தியோகம் கூட கிடைத்ததில்லை. நமது முதலமைச்சர் பதவியேற்ற பிறகு பிற்பட்ட வகுப்பினருக்கு உத்தியோகம் தர வேண்டுமென்று உத்திரவிட்ட பிறகு ஜில்லா ஜட்ஜ் பதவிகளுக்கும், டி.ஆர்.ஓ., ஆர்.டி.ஓ., டி.எஸ்.பி., ஏ.வி.டி.ஓ போன்ற பதவிகளெல்லாம் கடந்த ஐந்தாறு ஆண்டுகளாகத்தான் நமது பகுதியில் உள்ள பிற்பட்டோருக்குக் கொடுக்கப்பட்டு வருகின்றன. இதிலிருந்து இந்த அரசு எங்கள் மாவட்டத்திற்கு மிகவும் பின்தங்கியுள்ள இராமநாதபுரம் மாவட்டத்திற்கு தக்க சலுகைகளை தக்க நேரத்தில் கொடுத்து வருகின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. அதைப்போலவே முதுகுளத்தூர் பகுதியில் பன்னெடுங்காலமாக சீரான போக்குவரத்துச் சாலை வசதிகள் கிடையாது, பெருந் தொழிற்சாலைகள் கிடையாது, கல்வி வசதி, மருத்துவ வசதிகள் இல்லை என்ற மனக்குறை இருந்துவந்தது. அதை ஓரளவிற்கு இந்த அரசு நீக்கிவருகிறது. அந்தப் பகுதியில் நடைபெற்ற கலவரங்களிலே சிறைப்படுத்தப்பட்டிருந்த இரு சாரார்களையும் திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்தபிறகுதான் விடுவிக்க உத்தரவிட்டது. ஆனால் இன்றைக்கும் அந்தப் பகுதி மக்களிடையே தேசிய எழுச்சியினை உருவாக்கிய பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் பெயரால் ஒரு நிறுவனம் அமையவில்லை என்ற மனக்குறை அப்பகுதி மக்களுக்கு இருந்துவருகிறது. அந்த மனக்குறையை நமது முதலமைச்சர் அவர்கள் நீக்கிவைப்பார்கள் என்று திடமாக நம்புகிறேன்.

(பிற்பகல் 4-50)

சுமார் ஒரு கோடியே ஐம்பது லட்சம் ரூபாய் செலவில் முதுகுளத்தூர் தாலுக்காவில் மாரியூர் உப்பளத் தொழிற்சாலை தொடங்குவதற்கு வேலை நடந்துகொண்டிருக்கிறது. அந்தப் பகுதி நம்முடைய முதலமைச்சரவர்களுக்குப் பிடித்தமான பகுதி என்பதால், மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்தி மோகன் போன்றவர்களுடைய மனக் குறையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு இன்றைக்கு இருக்கக்கூடிய......

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அந்தப் பகுதி மாத்திரம்தான் முதலமைச்சரவர்களுக்குப் பிடிக்குமா, மற்ற பகுதிகள் பிடிக்காதா?

திரு எஸ்.எஸ். தென்னரசு. சவலைப் பிள்ளை கிழக்கு இராமநாதபுரம். அந்தப் பகுதியை உயர்த்த வேண்டுமென்று நீண்ட நாளாக முதலமைச்சரவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அந்தப் பகுதியை மற்ற மாவட்டங்களுக்குச் சமமாக ஆக்க வேண்டுமென்பதற்காக 3, 4 ஆண்டுகளாக முயற்சிகள் நடந்துகொண்டு வருகின்றன. இன்னும் சரியான நிலை ஏற்படவில்லை. அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் துவக்கத்தில் குறிப்பிட்டபடி, இந்த கவர்னர் உரை, இந்த அரசாங்கம் வறட்சியை எதிர்த்துப் போராடி வெற்றி பெறுவதற்கான சக்தியாக இருக்கிறதென்று கூறி, முடித்துக் கொள்கிறேன்.

*திரு எஸ். ராமகிருஷ்ணத் தேவர்: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டு ஆளுநர் மேதகு திரு கே. கே. ஷா அவர்கள் கொடுத்திருக்கும் அறிக்கையைப் பார்க்கும்போது, உண்மையான நிலையை அறிந்துதான் அவர் இந்த அறிக்கையைக் கொடுத்திருக்கின்றார் என்று கூற முடியும். ஆனால், அந்த அறிக்கையில் சில காரியங்கள் விட்டுப் போயிருக்கின்றன. அதனைக் கொடுத்திருக்கின்றோம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: திருத்தமாகக் கொடுத்திருக்கின்றோம் என்று சொல்லுங்கள்.

திரு எஸ். ராமகிருஷ்ணத் தேவர்: திருத்தமாகக் கொடுத்திருக்கின்றோம். இப்போது நண்பர் திரு தென்னரசு அவர்கள் பேசினார்கள். கிழக்கு இராமநாதபுரம், மேற்கு இராமநாதபுரம் எல்லாம் வறட்சியில்தான் இருக்கின்றன. ஆனால் அதிகமான வறட்சி கிழக்கு இராமநாதபுரத்தில்தான். கடற்கரை ஓரத்தில் இருக்கிற பகுதியாக இருப்பதால் அந்தப் பகுதி மக்கள் அதிகமான கஷ்டத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். இந்த நிலையிலே அவர்கள் சொன்ன காரியங்களெல்லாம் நடைபெற்றுக்கொண்டுதான் வருகின்றன.

ஓர் மாண்புமிகு உறுப்பினர்: ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள்.

திரு எஸ். ராமகிருஷ்ணத் தேவர்: "என்ன கஷ்டப்படுகிறார்கள்" சொல்லுவதற்குக் கஷ்டமா? ஒன்றும் புரியவில்லை. மழை குறைவாக உள்ள நேரங்களிலே அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்குக் கஷ்டம்





ஏற்படுவது வழக்கம். எனக்கு 72 வயதாகிறது. இந்த மாதிரி ஒரு வறட்சியை என்னுடைய அனுபவத்தில் பார்க்கவில்லை. எங்கள் பூமி ஒரு வருஷம் விளைந்தால் இரண்டு வருஷங்கள் தாங்கும் சக்தியுடையவை. இந்த மாதிரி மூன்று நான்கு வருஷங்களுக்கு ஒரு முறை வறட்சி ஏற்பட்டு, மக்கள் கஷ்டப்பட்டு, அந்த நேரத்தில் தஞ்சை மாவட்டத்தை நாடிப்போவது வழக்கம். ஆனால் இவ்வளவு பெரிய வறட்சி இதுவரை ஏற்பட்டதில்லை. ரொம்ப ஊர்களிலே ஜனங்களே இல்லை. நான் முதன் முதலாகப் பேசும்போது இந்தப் பகுதியை வந்து பார்க்கவேண்டுமென்று மாண்புமிகு கலைஞர் அவர்களைக் கேட்டுக்கொண்டேன். வரிசையாகச் சொன்னேன். ரெவின்யூ அமைச்சர் வர வேண்டும், உணவு அமைச்சர் வரவேண்டுமென்று சொன்னேன். அப்போதிருந்த உணவு அமைச்சரவர்கள் எங்களுடைய கஷ்டத்தைப் பார்ப்பதற்கு இடமில்லாமல் போய் விட்டது. அடுத்த உணவு அமைச்சர் அவர்கள் வந்து பார்த்தார்கள். முதன் முதல் நல்ல பெயர் உள்ள சாதிக்கிற தன்மையுடைய "பாட்சா" வந்தார்கள். அந்தப் பாதிப்புக்கு என்ன செய்யலாம் என்பதற்கான ஒரு திட்டத்தை, அவர்கள் சக்திக்கு ஏற்ற வகையில் சொல்லிவிட்டு, எங்களுக்கும் ஆறுதல் சொல்லிவிட்டு வந்தார்கள். அவர்களுக்கு எங்களுடைய நன்றி உரித்ததாகும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: "சாதிக் பாட்சா" என்றால் "உண்மைக்கு அரசன்" என்று பொருள்.

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்: என் அளவுக்கு அது புரியவில்லை. நமது மாண்புமிகு தலைவரவர்கள் தமிழில் பாண்டித்தியம் உள்ளவர்கள். ஆதலால் அவர்களுக்கு அது தெரிகிறது. நான் ஒன்றும் குறைவாகச் சொல்லவில்லை. சாதிப்பதில் பெருந்தன்மையுடையவர் என்றுதான் நான் சொன்னேன்.

அடுத்தபடியாக நான் மாண்புமிகு அமைச்சர் திரு மன்னை நாராயணசாமியைத்தான் விரும்பிக்கூப்பிட்டேன். அவருக்கு, அதைப்பார்க்கிலும் கடுமையான வேலை வந்துவிட்டது. அதுவும் எங்களுக்குச் சம்பந்தப்பட்ட வேலைதான். இப்போது வறட்சிப் பிரதேசத்திலுள்ள ஓர் அமைச்சரையே எங்களுக்குப் போட்டிருக்கிறார்கள். அது பற்றி நாங்கள் சந்தோஷப்படுகிறோம். அந்த வேலையை அவர்கள் திறம்படச் செய்வார்கள். வேலைகளைச் செய்வதிலே, நாங்கள் குறுக்கிட மாட்டோம். ஒத்துழைப்புதான் கொடுப்போம். இந்த அக்டோபர் வரை அந்த வறட்சி நிலை இருக்குமென்று சொல்லுகிறார்கள். அந்த நிலையை எல்லோரும் சேர்ந்துபோக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய நோக்கம். ஆனால், இதிலே ஊடே ஊடே சில குறுக்கீடுகள் இருக்கின்றன. அது இல்லையென்றால் இன்னும் சௌகரியமாக இருக்கும். நமது கலைஞரவர்கள்தான் இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். அதை நேரிடையாகச் சொன்னால், வேறு கட்சிக்காரன் என்ற முறையிலே குறை சொல்வதாக எண்ண வேண்டாம். நான் அப்படி சொல்ல மாட்டேன். யார் தவறு செய்தாலும சொல்வேன். இன்னொரு முறை இந்த கவுன்சில் முடிந்தவுடன், கலைஞர் அவர்கள் ராஜசிங்கமங்கலத்தில் கால் வைத்தால்தான் பூரண விமோசனம் கிடைக்குமென்று நான் நம்புகிறேன். அவர் வந்துபார்த்த பிறகு "நீங்கள் வந்துபார்த்ததனால் விமோசனம் கிடைத்திருக்கிறது" என்று சொல்

வதற்காக சென்னைக்கு வந்தேன். அவர் வேறு மீட்டிங்கில் கலந்து கொண்டிருந்ததால், ரொம்ப நேரம் காத்திருந்தும் பார்க்க முடியாமல் போய்விட்டது. அவர் மறுமுறையும் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ரேஷன், சொசைட்டி மூலமாக கொடுத்துக் கொண்டிருந்தார்கள் உணவு அமைச்சர் அவர்கள் நல்ல நோக்கத்தோடு ஒரு கருத்தைச் சொன்னார்கள். தொலைவிலுள்ள சொசைடிகாரர்கள் வாங்குவதற்குக் கஷ்டப்படுவதால், ஒரு சங்கமாகச் சேர்ந்து வாங்கிக் கொள்ளலாமென்று சொன்னார்கள். தனிப்பட்டவர்கள் தலையிட்டால் அது வியாபாரமாகிவிடும்; முதல் போட்டவர்கள் ஆதாயம் எதிர்பார்ப்பார்களென்று சொன்னேன். முடிந்தால் செய்யட்டுமென்று சொன்னார்கள். அது நடக்காதா, சரியாக நடக்குமா என்பது கொஞ்ச நாளைக்குப் பின்னால் தெரியும். சர்க்கரைக்கான ரேஷன் கார்டை வைத்துக்கொண்டு அரிசி வாங்குகிறார்கள். 10 பேருக்கும் 2 கிலோ தான்; தனி நபராக இருந்தாலும் இரண்டு கிலோதான். இந்த முறையில் இப்போது கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் கொஞ்ச நாளில் அந்த கார்டுகளை கண்டு பிடித்து, வேறு கார்டுகள் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். அப்படிச் செய்ய வேண்டும்.

(பிற்பகல் 5-00)

முதலிலே மாண்புமிகு அமைச்சர் திரு சாதிக் பாட்சா அவர்கள் வந்தார்கள். இரண்டாவதாக உணவு அமைச்சர் அவர்கள் வந்தார்கள். மூன்றாவதாக மத்திய அமைச்சர் திரு ஷிண்டே வந்தார்கள். அவருடைய வார்த்தைகள், அவர் மிகவும் நுட்பமான விவசாய சம்பந்தமான அனுபவசாலியாக இருந்ததைக் காட்டின. "நீங்கள் மாத்திரம் இந்த வறட்சியால் பாதிக்கப்பட்டிருப்பதாக எண்ண வேண்டாம்; மொத்தம் இந்தியாவிலே 54 ஜில்லாக்கள் இந்தமாதிரி வறட்சியாக இருக்கின்றன; அதிலே ஒரு ஜில்லாவாக இராமநாதபுரத்தைச் சொல்லலாம் நீங்கள் மாத்திரம் தனியாக இல்லை; இருந்தாலும் நீங்கள் பாதிக்கப்பட்டவர்கள்தான்; இந்தப் பெரிய கண்மாயை நீங்கள் ஏன் தரிசாக வைத்துக் கொண்டிருக்க வேண்டும் இதெல்லாம் 'மாஸ்டர்' பிளானிலே செய்திருக்க வேண்டிய வேலை. ஒரு ஆயிரம் கேணிகள் வெட்டி, ஆளுக்கு ஒரு ஏக்கர் இரண்டு ஏக்கராக அளந்து கொடுத்து இந்தப் பஞ்ச நேரத்திலே விவசாயம் செய்யச்சொல்லலாம். அப்புறம் கண்மாயில் தண்ணீர் வந்துவிட்டபின்பு வெளியில் உள்ள விவசாயத்தைச் செய்ய ஒரு வாய்ப்பு இருக்கும். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலேதான் அதை நிரந்தரமாகச் செய்து வைக்க முடியும். அதை நிரந்தரமாக செய்து வைத்தால், பின்பு இப்படி ஒரு வறட்சி வருகிற நேரத்தில், தாங்கும் என்று சொன்னார். இன்னும் நல்ல படியாக மற்ற காரியங்களையெல்லாம் செய்வதற்கு உதவி செய்கிறோம்." என்றும் சொன்னார்கள். அவர் வருவதற்கு நான்கு நாட்களுக்கு முன்னால் அங்கேயிருந்து ஒரு நிபுணர் கோஷ்டி வந்தது. அவர்கள் வந்து பார்த்துக் கொண்டு போய் நல்லதொரு ரிப்போர்ட்டைக் கொடுக்கவில்லை. சுமாரான வறட்சி என்றுதான் கொடுத்திருக்கிறார்கள். ஒரு கடுமையான வறட்சி என்று சொல்ல வில்லை. அதிகாரிகள் காட்டிக் கொடுத்த இடம் இருக்கிறதே, மிக்க வசதியான இடம். அப்படிப்பட்ட இடத்தைத்தான் அதிகாரிகள் காட்டிக் கொடுத்திருக்கிறார்கள். என்பது என்னுடைய அபிப்பிராயம். எப்படியோ எல்லோரும் சேர்ந்து முயற்சித்து 58-வது வருஷத்திலிருந்து ஆரம்பமானது இந்த ராஜசிங்கமங்கலம் கண்மாய்த் திட்டம் அதற்கு, அப்போதே இராஜசிங்கமங்கலம் பிராசெக்ட் என்று பெயர் கொடுத்து, அதனுடைய கருவெல்லாம் அறுத்து வைத்திருக்கிறார்கள். அதனுடைய உருவங்கள் எல்லாம் செய்து, இந்தமாதிரிச் செய்யவேண்டுமென்று சொல்லி அப்போதே ஆரம்பித்து வைத்தார்கள். அது இன்றைய தேதிவரையில் நடைபெறாமல் ரொம்ப சீர் கெட்டுப்போய் இருந்தது. ஏதோ கலைஞரவர்கள் வந்துபார்த்து அதற்கு ஒரு பெரிய விமோசனம் செய்திருப்பது நாங்கள் என்றென்றும் மறக்க முடியாத ஒரு காரியம் தான். அதை யாரும் மறுக்க முடியாது இந்த நிலையில் இந்த சில்லரைக் காரியங்கள் எல்லாம் ரொம்ப சீர்க்கெட்டுப்போய் நிவர்த்தியானதாகவே இல்லை. என்றைக்கும் மாதிரியே அந்த மாமூல் எல்லாம் நடந்துகொண்டுதான் இருக்கிறது. அந்த மாமூலைக் கண்டுபிடித்து, கடுமையான முறையிலே நடந்தால்தான் அது நிவர்த்தியாகும். சாதாரண முறையிலே ஃபைல் முறையிலே அது நடந்தால் மனித சுபாவத்திலே அதை மாற்ற முடியாது என்பதுதான் என்னுடைய எண்ணம்.



இப்பொழுதெல்லாம் ஆயக்கட்டுதாரர்களுக்குத்தான் அங்கேயுள்ள வேலைகளெல்லாம் கொடுக்க வேண்டுமென்று சொல்வது அரசாங்கத்தினுடைய நோக்கம், அதிகாரிகளுடைய நோக்கம், அமைச்சர்களுடைய நோக்கம். இதுமாதிரி சந்தர்ப்பங்களிலே சில டிபார்ட்மெண்ட்களிலே ரூரல் டெவலப்மெண்ட் ஒர்க் என்று எடுத்துச் செய்கிறார்கள். அதில் பழைய காண்டிராக்டர்களைக்கொண்டு வருகிறார்கள். அவன் நாலு பேரைப் பிடித்து இவர்களிடம் கொடுத்தால் நல்லது என்று சொல்லுவதுபோலப் பண்ணி அந்த வருமானத்தை அவன் அடைய நினைக்கிறான். வெளியூர்களிலிருந்து ஆட்களைக்கொண்டு வந்து வேலையைச் செய்கிறான். இந்த ஊர்க்காரன் தஞ்சாவூரில் பிழைக்கிறான். அவர்கள், எங்கிருந்தாவது அவர்களுக்குச் சௌகரியமாக ஆட்களைக் கொண்டு வருகிறார்கள். இந்தமாதிரி ஒரு சீர்கேடு இருக்கிறது. இந்த சந்தர்ப்பத்திலே அந்தந்த ஊர்களிலேயுள்ள ஆயக்கட்டுதாரர்களுக்கு அந்தந்த வேலைகளைக் கொடுத்து அவர்களை ஆதரிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, இந்தப் பாண்டியன் கிணறுப் பற்றிச் சொன்னார்கள். ஒருகாலத்திலே இதுமாதிரி ஒரு வறட்சி ஏற்பட்டு, அந்த வறட்சிக் காலத்திலே—அங்கேதான் என்றல்ல, எல்லா இடங்களிலும் இருக்கிறது—மண் வந்து மேலேமேலே விழுந்து அது மறைந்துபோய் விட்டது. இம்மாதிரி பல இடங்களில் இன்னும் இருக்கிறது. மனிதர்களை ஜாடியில் வைத்துப்புதைத்தார்கள் அல்லவா, அந்தக்காலம் முதுமக்கள் தாழிக்காலம் என்று சொல்லுவது, அந்தமாதிரி இந்தக்கேணிகளையும் மண்ணால் கூட சுட்டு, நாம் இப்போது இந்த சிமெண்ட் உபயோகிப்பதுபோல வைத்திருக்கலாம் என்று தோன்றுகிறது. அந்தமாதிரி கேணிகள் மறைந்துள்ள இடங்கள் பல இருக்கின்றன. எங்களிடம் ஒரு பத்து கேணிகள் இம்மாதிரித் தென்பட்டு அவர்களுடைய நல்லெண்ணத்திலே அந்த மராமத்தெல்லாம் நல்லபடியாக நடந்து வருகிறது. இதையெல்லாம் நாங்கள் செப்பனிட முடியும். செப்பனிட்டு முடிந்தவுடனே அதை குடி நீர் வாரியத்திடம் கொடுத்துவிட வேண்டும். அவர்களிடம் கொடுத்தால்தான் பல ஊர்

களுக்கு அந்தத் தண்ணீரை உபயோகப்படுத்த ஒரு வாய்ப்பு ஏற்படும் அந்தமாதிரிச் செய்து கொடுக்க வேண்டும்.

மேலும் இந்தக் கூலி பததாத கூலி. அங்கே அமைச்சர்கள் எல்லாம் வருகிறபோது, இந்த காண்டிராக்டர்கள், என்ன கூலி கொடுக்கிறார்கள் என்று கேட்டால் கொஞ்சம் கூடுதலாகக் கொடுப்பதாகச் சொல்லுங்கள் என்று தயார் பண்ணி விட்டிருக்கிறார்கள். எல்லோரிடமும் சொல்லி வைத்திருக்க முடியாதல்லவா, காண்டிராக்டர் சொல்லி வைத்திருப்பவன் கொஞ்சங்கூட கிடைப்பதாகச் சொல்லுவான். மற்றவர்கள் குறைத்துச் சொல்லி விடுவார்கள். இந்தமாதிரித்தான் நடக்கிறது. இப்போது கவர்னர் அவர்கள் கேட்டபோது கூட சில பேர் 5 ரூபாய் என்றார்கள், இன்னும் சில பேர் 6 ரூபாய் என்றார்கள். 6 ரூபாய்க்குக் குறைந்து அரிசி வாங்க முடியாது. அந்த அரிசியை வாங்கி ஜீவிக்கவும் முடியாது.

இரண்டாவது ஏற்கெனவே நாங்கள் சொசைட்டியில் கடன் பட்டிருக்கிறோம். எல்லாவற்றையும் தள்ளி வைக்க சொல்லியிருக்கிறீர்கள். தள்ளிவைக்க வேண்டியதையெல்லாம் தள்ளிவைத்தாகி விட்டது. ரெவின்யூ வரி, போக்குவரத்து வரி எல்லாம் தள்ளுப்படி பண்ணப்பட்டது. சொசைட்டியினுடைய வட்டியையும் கண்டிப்பாகத் தள்ளுபடி செய்ய வேண்டும். அதுவும் பேங்கில் பண்ண முடியாதாம். ரிசர்வ் பாங்க் பார்த்துத்தான் அதைச் செய்ய வேண்டுமாம் உணவு அமைச்சர் அவர்கள் கூட அதை எடுத்துச்சொன்னபோது, கவனிக்கிறோம் என்று சொன்னார்கள். கவனிப்பார்கள் என்று நினைக்கிறேன். அதை ரிசர்வ் பேங்க் மூலமாக, அந்த பாக்கி இப்போது வசூல் பண்ண வேண்டிய நேரம், நான்கூட ஒரு சொசைட்டி பிரசிடண்ட் தான் எனக்கு உத்தரவு போட்டால் நான் கூட வசூல் பண்ணத்தான் ஆரம்பிப்பேன். அந்தமாதிரி ஒரு சூழ்நிலை இந்த சந்தர்ப்பத்திலே ஏற்பட்டுவிடாமல் அரசு தடுக்க வேண்டும். ரிசர்வ் பாங்கிடம் சொல்லி அந்த வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டும். அடுத்த வருடம் எங்களுக்கு.. இப்பொழுது மழைபெய்து விட்டால்கூட... ..

(மாண்புமிகு தலைவர் மணியை அடித்தார்)

முடித்து விடுகிறேன். ஒரு மூன்றுமாதத்திற்குள் சமாளித்துவிடுவோம். ஒருவனிடம் 2 ஏக்கர் நிலம் இருந்தால், அதற்கான விதையை இனாமாக நீங்கள் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 500 ரூபாய் மேனியில் கடனாக நீங்கள் கொடுக்க வேண்டும். இரண்டாண்டு சென்று நீங்கள் அதை வாங்க வேண்டும். அதாவது அடுத்த வருடம் விளைந்துவிட்டால்கூட நீங்கள் வாங்கக்கூடாது. இப்பொழுது முதல் விதை இனாமாக எல்லோருக்கும் கிடைக்கும்படியான ஒரு ஏற்பாட்டைச் செய்து தர வேண்டும். கஷ்டப்படுகிற நேரத்தில் இந்த உதவியை நீங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். தற்போதுள்ள விலைவாசியையெல்லாம் அனுசரித்து கூலியைக் கண்டிப்பாக கூட்டிக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்தால்தான் வேலை நடக்கும் அரே அரைக்கால் வாசி ஜனங்கள் தஞ்சாவூருக்குப் போய் விட்டார்கள். அங்கே இல்லை. தஞ்சாவூரில் கூட இன்னும் ஒரு பத்து அல்லது 15 நாட்களில் கருதறுப்பு முடிந்து போகும். அங்கே இவர்கள் போனதால் அங்குள்ளவர்களுக்குப்



பெரிய கஷ்டமாக இருக்கிறது. இவர்கள் போய் சொற்பக் கூலிக்கு வேலை செய்கிறார்கள். அதனால், அங்குள்ளவர்கள் இவர்களைக் கஷ்டப் படுத்துகிறார்கள். இந்த நிலைமைகளையெல்லாம் அரசு பார்த்து சரி செய்ய வேண்டும். அரசு வேலையை நிறைய கொடுத்திருக்கிறது. ஆனால் அந்த வேலையைச் செய்ய ஆள் இல்லாமல் தத்தளித்துக்கொண்டிருக்கிறோம். கூலி போதாது என்பது ஒன்று, தஞ்சாவூருக்குப் போனவர்கள் அந்த வேலை முடிந்துதான் இங்கே வருவார்கள் என்பது இரண்டு. ஏக்கரேஜ் மேனியில் கணக்குப்பார்த்து அவர்களுக்கு எவ்வளவு ரூபாய் கொடுக்க வேண்டுமோ அதைக் கொடுக்க வேண்டும். யுத்தகால அடிப்படையில் செய்வதுபோல அதற்கு எப்படி ஏராளமான டேங்குகளையும் மருந்துகளையும் இயந்திரங்களையும் தருவிக்கிறீர்களோ, அந்தமாதிரி இந்த ஓராண்டுக்குச் செய்ய வேண்டும். இப்பொழுது மழை பெய்தால் கூட மூன்றாவது மாதம் விவசாயம் பண்ணிவிடுவோம். அதை நிச்சயம் செய்வோம். அதுவரைக்கும் எங்களை விட்டுவிடாதீர்கள். இல்லை யெனில் அதலபாதாளத்தில் போய் சேர வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். தஞ்சாவூருக்குப் போனவர்கள் திரும்புவார்களா அல்லது அங்கேயே போய் விடுவார்களா என்ற நிலையில் இருக்கிறோம்.

எனக்கு டிரைவர் ஒருவர் இருக்கிறார். அவர் என்னுடைய டிராக்டர் டிரைவர். 15 நாட்களுக்கு முன்னால், அவர் என்னிடம் வந்து நானும் வருகிறவர்கள் 10 பேருக்குச் சாப்பாடு போட வேண்டிய குடும்பத்தைச் சேர்ந்தவன் அரிசி வாங்கி வியாபாரம் செய்கிறேன் என்று சொன்னார். எனக்குப் பொறுக்கவில்லை. அந்த இடத்தில் அவனுக்கு 50 ரூபாய் கொடுத்து வாங்க வேண்டாம் போ, ஊரில் வந்து பார்க்கிறேன், என்று சொன்னேன். உண்மையிலே அந்தமாதிரி இருக்கிறது இந்த ராமநாதபுரம் மாவட்டத்தினுடைய நிலை. அரசு இதையெல்லாம் பார்த்துத்தான் செய்யவேண்டும். அதுதான் என்னுடைய கோரிக்கை. கூலியையும் கொஞ்சம் கூட்டிக்கொடுத்து அதுவும் ஒழுங்காக சப்ளையாகும்படி நீங்கள் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். ரேஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. சொசைட்டிகளில் எல்லாம் கூட விற்கிறான். நீங்கள் 1.90 ரூபாய்க்கு போடச்சொன்னதை அவன் ரூ. 2.10, ரூ. 2.20, ரூ. 2.25 என்று விற்கிறான். இவற்றையெல்லாம் பார்த்து, இன்னும் நல்ல காரியங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த கவர்னருடைய உரையிலே படித்தவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று சொல்லப்படவில்லை. விலைவாசியைப்பற்றி அவரும் ஒன்றும் சொல்லவில்லை. இதைப்பற்றியெல்லாம் நாங்கள் திருத்தம் கொடுத்திருக்கிறோம். அந்தத் திருத்தம் வருகிறபோது எல்லோரும் அதை ஆதரித்து விலைவாசியைக் குறைப்பதற்கான ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு இதுவரை பேச வாய்ப்பு அளித்தமைக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

(பிற்பகல் 5-10)

*__திரு ஆ. திராவிடமணி :__ மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே மேதகு கவர்னர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது ஒருசில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த

தலைவரவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றுள்ள நெருக்கடியான சூழ்நிலையை நம்முடைய கவர்னர் அவர்கள் மிக தெளிவாகப் படம் பிடித்துக்காட்டியிருக்கின்றார்கள்.

தமிழகத்தில் மக்களைக் காப்பாற்றுவதற்காக 1967-லே பொறுப்பேற்ற நம்முடைய கழக அரசு, பசுமைப் புரட்சியின் மூலம் உணவு உற்பத்தியை அதிகப்படுத்த முறையான முயற்சிகளையெல்லாம் மேற்கொண்டு, உணவு உற்பத்தியை மேலும் அதிகப்படுத்திக்கொண்டு வந்த நேரத்தில் எதிர்பாராத விதமாக இயற்கை நம்மை ஏமாற்றி விட்ட காரணத்தினுல், 100 ஆண்டுக்காலமாக இல்லாத பஞ்சம் இப்போது ஏற்பட்டிருக்கிறது என்ற கவலையில்தான் நம்முடைய அரசு அதற்கான அவசர நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. அதை நமது கவர்னர் அவர்களும் தம்முடைய உரையிலே மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறுர்கள்.

1969-ம் ஆண்டில் வட ஆற்காடு மாவட்டத்தில், செங்கற்பட்டு மாவட்டத்தில் வறட்சி ஏற்பட்ட காலத்தில், நம் முதலமைச்சர் அவர்கள் உடனடியாக அந்தப் பகுதிக்குச் சென்றுப் பார்வையிட்டு மத்திய சர்க்காருக்கும் பிரதமர் அவர்களுக்கும் தகவல் கொடுத்தார்கள். நூறுண்டு காலமாக வற்றுத மாமண்டூர், மதுராந்தகம் ஏரிகள் வற்றிவிட்டன. பிரதமர் அவர்கள் உடனடியாகப் பார்வையிட வேண்டும், அப்பகுதி மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக டெல்லிக்குச் சென்று பிரதமர் அவர்களிடத்திலே கேட்டுக்கொண்டார்கள். பிரதமர் அவர்களும் மாமண்டூர், மதுராந்தகம் ஏரிகளைப் பார்வையிட்டு, அங்கு வறட்சிப் பணிகளுக்கு என்ன செலவாகுமோ அதை ஏற்றுக்கொள்ளுகிறேும் என்றுர்கள். அதற்காக ரூ. 20 கோடி உதவித் தொகை கேட்டார்கள். அதில் 14 கோடி ரூபாய் உதவி பெற்று, 1969-ல் ஏற்பட்ட அந்த வறட்சியிலிருந்து மக்களைக் காப்பாற்ற வடஆற்காடு மாவட்டம், செங்கற்பட்டு மாவட்டம், இன்னும் மற்ற மாவட்டங்களிலும் வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொண்டு நிறைவேற்றியதின் மூலம் அன்று பிரச்சினையைச் சமாளித்தோம்.

1972-ம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும் நாம் சென்று பார்வையிட்டோம். நாம் பயிர்கள் அழிந்து விட்ட நேரத்தில், பயிர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நேரத்தில், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவிகள் செய்தோம். உதவி செய்ய வேண்டுமென்ற உணர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு எப்போதும் உண்டு. ஆளும் கட்சியாகப் பொறுப்பேற்றிருப்பதால் ஏதோ செய்ய வேண்டுமென்ற எண்ணத்தால் மட்டுமல்ல. 1962-ம் ஆண்டில் மதுரை மாவட்டத்தில் திருப்பரங்குன்றத்தில் கழக மாநில மகாநாடு நடந்து கொண்டிருந்த நேரத்தில், அப்போது தஞ்சை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் வேதனையுற்ற நேரத்தில், பேரறிஞர் அண்ணு அவர்கள் அங்கே உண்டியல் வசூல் செய்து, தஞ்சை மாவட்ட மக்களுக்கு உதவிட நாம் அப்போதே ஆர்வத்தோடு இருந்தோம். விவசாயிகள் பாதிக்கப்பட்ட நேரத்தில், அவர்களுக்கு உதவிட உடனடியாக முயற்சிகள் மேற்கொண்டோம். "உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" என்ற உணர்வில் பாசத்தோடு, எதிர்க்கட்சியாக இருந்த



நேரத்திலும் செயல்பட்டிருக்கிறேும். இதை இந்த மன்றத்தில் இருக்கிற அறிவாளிகள் எல்லாம் நன்கு அறிந்திருக்கின்றுர்கள். தஞ்சையிலும், திருச்சியிலும் புயலால் வறட்சி ஏற்பட்டபோது, நாங்கள் அப்போதே உதவிகள் செய்திருக்கிறேும். இன்றைக்கு முதல்வராக இருக்கின்ற கலைஞர் அவர்கள் அன்றைய தினம் நாடகம் நடத்தி, ஏறத்தாழ ரூ, 37,000 வசூலித்துக் கொடுத்து உதவியிருக்கின்றுர்கள். இன்றைக்கு பொறுப்பு ஏற்றிருக்கின்றுர்கள். இப்போதுள்ள நெருக்கடியில், இயற்கை பொய்த்துவிட்டது, நாங்கள் என்ன செய்வோம் என்று இல்லாமல் அதை எதிர் நீச்சல் போட்டு சமாளித்துக் கொண்டிருக்கின்றேம். இன்றைக்கு முதலமைச்சர் பொறுப்பேற்றிருக்கின்ற நேரத்தில் ஊட்டியில் மலர்க் காட்சியைப் பார்ப்பதற்காக அந்த விழாவிலே கலந்து கொண்ட நேரத்திலே, சீமான்கள் குடியிருக்கின்ற ஊட்டியிலே, தமிழகத்தின் சுவிட்சர்லாந்து என்கின்ற ஊட்டியிலே பேசுகின்ற நேரத்தில் "எனக்கு இராமநாதபுரம் தான் மனக்கண் முன் தெரிகிறது. இங்கு ஊட்டியைப் பார்க்கிறேன். ஆனுல் இராமநாதபுரம் தான் தெரிகிறது. இந்த ஊட்டியின் பசுமைக் காட்சியை இராமநாதபுரத்தில் எப்போது காண்கின்றேனே அப்போதுதான் நான் பொறுப்பேற்ற காரியத்தை முடித்ததாக எண்ணுவேன்" என்று அந்த நேரத்தில் அறிவித்தார்கள். கிரம்லின் மாளிகையிலிருந்து லெனின் குடிமக்களைப் பார்த்தான் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே, நம்முடைய அறிஞர் அண்ணு அவர்கள் வளர்த்த இன்றைய நம்முடைய முதல்வர் அவர்கள் இராமநாதபுரம் ஊட்டியைப் போன்று செழுமை அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் அக்கறையோடு செயல்பட்டு வருகிறுர்கள். அவசர கால நடவடிக்கை என்ற பெயரால் இந்த வறட்சி ஏற்பட்ட உடனே உடனடியாகத் தகவல் தெரிவித்து, குறுவை உற்பத்தியிலேயாவது தமிழக மக்களைக் காப்பாற்ற முடியாதா என்பதற்காக திட்டமிடப்பட்டது. அதன் பிறகு திட்டமிட்டபடி அந்தக் குறுவை எதிர்பார்த்த அளவு இல்லை என்று உணர்ந்து சம்பா உற்பத்தியிலாவது காப்பாற்றிவிட முடியும் என்ற நம்பிக்கை வைத்திருந்தோம். அந்த சம்பாவுக்கும் போதிய அளவு தண்ணீர், இல்லை என்ற நிலை வந்தவுடன், உடனடியாக நம்முடைய மாண்புமிகு. திரு. ப. உ. சண்முகம் அவர்களை மைசூருக்கு அனுப்பி வைத்தார்கள் அவர்கள் மைசூர் முதலமைச்சர் அவர்களிடத்திலே பேச்சு வார்த்தை நடத்தி தண்ணீர் பெற்று வந்தார்கள். அப்படி போதுமான தண்ணீர் கொண்டு வந்து, அந்தச் சம்பாவை வைத்துத்தான் இன்று நாம் தமிழக மக்களுக்கு அரை வயிற்றுக்காவது சோறு கிடைக்க வற்பாடு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தின் மூலம் ஏற்பாடு செய்தது மட்டுமல்லாமல் மத்திய சர்க்காருக்கும் தகவல் கொடுத்திருக்கின்றுர்கள். மத்திய சர்க்கார் விவசாய நிபுணர்கள் எப்போது வருகிறுர்கள் என்ற தகவல் தெரிந்து வைத்துக்கொண்டு, அந்த நிபுணர்கள் மட்டுமல்லாமல், நம் மாநில ரெவின்யூ போர்டு அதிகாரிகளையும் சுற்றிவரச் செய்து, அவர்கள் கொடுத்த அறிக்கையின் மீது ஏறத்தாழ ரூ. 50 கோடி இருந்தால்தான் இந்த மாநில மக்களைக் காப்பாற்ற முடியும் என்ற புள்ளி விபரத்தையும் திரட்டி வைத்து அதை மத்திய சர்க்காருக்கு தெரிவிக்க வேண்டிய நேரத்தில் தெரிவித்து, அவர்களிடம் ரூ. 25 கோடி அளவுக்கு உதவி வேண்டும் என்று கேட்டார்கள். அவர்கள் தருவார்கள் என்ற அடிப்

படையில் நாம் 3 கட்டங்களாக ரூ. 10 கோடி அளவுக்குச் செலவழித்து இந்த மாநில மக்களுக்கு ஓரளவுக்கு ஆறுதல் அளித்திருக்கிறோம்.

[மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை]

இந்தப் பத்து மாத காலத்தில், 67 லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கான ஏற்பாடுகளை தேவையான அளவிற்கு மேற்கொண்டது மட்டுமல்லாமல், நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் உணவுத் துறை அமைச்சர் அவர்களும், இராமநாதபுரம் சென்றார்கள். நமது மாற்றுக் கட்சி உறுப்பினர்கள் வரவேற்றதன் பேரில் இராமநாதபுரத்திற்கு முதலமைச்சர் அவர்களே நேரடியாகச் சென்று அந்தக் காரியங்களைப் பார்வையிட்டார்கள். அது மட்டுமல்லாமல், மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. ஷிண்டே அவர்கள் வந்த நேரத்தில் "எங்களுக்கு கணிசமான அளவுக்கு உடனடியாக உணவு கிடைக்க உதவி செய்ய வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்கள். அவர் 50 ஆயிரம் டன் கோதுமை கிடைக்க அனுமதிக்கிறோம் என்று சொல்லிச் சென்றது நமக்கெல்லாம் ஒரு ஆறுதலாக இருந்தது. அதை எல்லாம் எண்ணத்தில் கொண்டு கவர்னர் அவர்கள் அவருடைய உரையில் நம்பிக்கை தெரிவித்திருக்கின்றார்கள்.

கவர்னர் அவர்களை "கண்காணிப்பாளர்" என்று சொல்லுவார்கள். ஆனால் நம் மாநிலத்தைப் பொறுத்தவரையிலே கவர்னர் அவர்கள் இந்த மாநில அரசினுடைய தூதுவராக இருந்து செயல்படுகின்றார்கள். அதை அவர்களும் பெருமையாக நினைத்துக்கொண்டிருக்கின்றார்கள். அவருடைய உரையில் மிகத் தெளிவாக 67 லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்போகிறோம் என்று ஒரு உத்தரவாதத்தையும் கொடுத்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, நம் மாநிலத்திலும் வறட்சி, பஞ்சம் என்ற காரணத்தைக்காட்டி அபிவிருத்தி வேலைகள் தடைப்படப் போகிறதா என்றால், இல்லை என்ற தைரியத்தையும் தம் உரையில் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். 1974-75-ல் 30 ஆயிரம் பம்பு செட்டுகளும் 1975-76-ல் 60 ஆயிரம் பம்பு செட்டுகளும் போடப்படும் என்றும் சொல்லியிருக்கின்றார்கள். அந்த பம்பு செட்டுகள் மூலம் இயற்கை பொய்த்துவிட்டாலும் கிணற்றுத் தண்ணீரை வெளிக் கொணர்ந்து விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கின்ற தண்ணீர் பஞ்சத்தைச் சமாளிக்க முடியும். பம்பு செட்டுகளுக்கான மின்சாரத்தை நாம் இனி மேல் நீர் மின்சாரம் மூலம் பெறலாம் என்று நம்ப முடியாது. ஆகவே நீண்ட காலமாகச் சொல்லப்பட்டு வருகின்ற நெய்வேலி இரண்டாவது சுரங்கமும், எண்ணூரிலே அனு மின் நிலையமும் மத்திய சர்க்காரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கின்றன. தூத்துக்குடி திட்டமும் மிக விரைவிலேயே அமுலாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அவருடைய உரையிலே மிக வற்புறுத்திக் கேட்டிருக்கின்றார்கள். ஆகவே ஏற்பட்டிருக்கின்ற வறட்சியைத் தணிக்கும் பொறுப்பைத் தட்டிக் கழிக்காமல், நமக்கு என்ன என்று இல்லாமல், ஏழைகளோடு ஏழையாய், மக்களோடு ஒன்றிப் பழகுகின்ற தி.மு. கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கின்ற இந்த சூழ்நிலையில் கவர்னர் அவர்கள் மிகத் தெளிவான முறையில், "வருங்காலத்தில் நம்பிக்கை வைத்து எல்லாக் கட்சிகளும் ஒத்துழைத்து





இப்போது ஏற்பட்டிருக்கின்ற கஷ்டத்தைச் சமாளிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அவருடைய இந்த உரை மிகச் சிறந்த உரை. இந்த உரை நாட்டினுடைய இன்றுள்ள சூழ்நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது. இந்தச் சிறந்த உரையை ஆதரித்து என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். **வணக்கம்.**

[பிற்பகல் 5-20]

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே நேற்றையதினம் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் தமிழ் நாடு சட்டமன்றத்தில் உரையாற்றுகிற போது, அந்த உரையை நாங்களெல்லாம் அங்கு கேட்ட நேரத்திலே, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு தென்னரசு அவர்கள் சொன்னது போல், ஆளுநர் உரை முழுவதும் இந்த வறட்சியைப் பற்றியதாகவேதான் இருந்தது என்பதை நாங்களெல்லாம் பார்த்தோம். வறட்சியைத் தவிர இன்னும் ஏதாவது ஓரிரு விஷயங்களைப் பற்றியும் அவர்கள் உரையிலே கூறியிருக்கின்றார்கள். அந்த விஷயங்களைப் பார்க்கின்றபோது அவைகளும் இந்த வறட்சியுடன் தொடர்புடைய மற்ற காரியங்களாகவே தான் இருக்கின்றன. உணவுப் பற்றுக்குறை பற்றிக் கூறியிருப்பது வறட்சியுடன் தொடர்புடையது, மின்சார உற்பத்தி என்பது வறட்சியுடன் தொடர்புடையது, "பம்ப் செட்டுகள்" போட வேண்டுமென்பது வறட்சியுடன் தொடர்புடைய விஷயம். இப்படி அநேகமாக அவர்கள் பேசிய எல்லா விஷயங்களும் தமிழ் நாட்டிலுள்ள வறட்சி தொடர்பான விஷயங்களாகவே இருந்தன. சாதாரணமாக ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவித்து ஆளும் கட்சியிலுள்ளவர்கள் தீர்மானத்தை முன்மொழிந்த உடனேயே ஒரு திருத்தம் கொடுப்பது வழக்கம். அதாவது மேதகு ஆளுநர் அவர்கள் திரு. கே. கே. ஷா இன்னின்ன விஷயங்கள் பற்றி, இன்னின்ன பிரச்சினைகள் பற்றி ஒன்றும் பேசவில்லை என்ற ஒரு திருத்தம் கொடுப்பது வழக்கம். நம்முடைய துணைத் தலைவரவர்கள் அங்கே அமர்ந்திருந்தார்கள். என்ன திருத்தம் கொடுக்கலாமென்று நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள் ஆலோசனை செய்து படித்த பட்டதாரிகளுக்கு வேலையில்லாத நிலைமை குறித்து ஆளுநர் அவர்கள் பேசாதது குறித்து வருத்தப்படுகிறோம் என்று ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறோம், நீங்களும் ஏதாவது ஒரு திருத்தம் கொடுக்கலாமென்று அவர்கள் என்னிடம் சொன்னார்கள். நம்முடைய துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள், அவர்கள் வறட்சி பற்றித்தான் முழுக்க முழுக்க பேசியிருக்கிறார்கள். இன்னும் பேசவில்லையென்று நீங்கள் பார்ப்பீர்களானால், உலகத்திலேயுள்ள அவ்வளவு விஷயங்கள் பற்றியும் திருத்தம் கொடுக்கலாமென்ற அளவுக்கு இருக்கிறது என்று சொன்னார்கள். இதில் முடிவாக என்ன பார்க்கிறோம் என்று சொன்னால் தமிழ்நாட்டிலே இன்றைய வறட்சி நிலைமை என்ன என்பதை முழுமையாக நாம் புரிந்துகொள்கிறோம் என்பதுதான். தமிழ் நாடு அரசு மக்களுக்காக என்னென்ன செய்ய வேண்டுமென்று கொண்டுள்ள அவாவையும் பார்க்கிறோம். எனக்கு முன்னாலே பேசிய இராமநாதபுரத்தைச் சேர்ந்த நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னரசு அவர்களும் திரு. ராமகிருஷ்ணத் தேவர் அவர்களும் சென்ற முறை இங்கே பேசுகின்றபொழுது, சற்றுக் கடுமையாகக்கூட

விமர்சித்தார்கள். "அமைச்சர்கள் எல்லாம் எங்கள் மாவட்டத்துக்கு; தவறாமல் வரவேண்டும்" என்று அவர்கள் கிட்டத்தட்ட 10,15 நிமிட நேரம் இங்கே பேசியதை நாம் எல்லோரும் கேட்டோம். இப்போது திரு. ராமகிருஷ்ணத்தேவர் வந்தவுடன் நான் அவர்களைப் பார்த்து, "முதலமைச்சர் உங்கள் மாவட்டத்துக்கு வந்ததாக நான் பத்திரிகைகளிலே பார்த்தேன், முதலமைச்சர் வந்த நேரத்தில் நீங்கள் அங்கு இருந்தீர்களா என்று கேட்டேன். அவர் "நான் இருக்க முடியவில்லை, மதிப்பிற்குரிய சிவாஜி கணேசன் அவர்கள் வந்தார்கள், அவருடன் சென்றுவிட்டேன்" என்று சொன்னார். அப்புறம் வறட்சி பற்றி நான் அவரிடம் கேட்டேன் அவர் எதிர்க் கட்சியில் அமர்ந்திருப்பவர் சில சமயங்களிலே சூடாகவும் விமர்சிப்பவர். அவரைக் கேட்டவுடன் 'நான் எதிர்பார்த்ததைவிட ரொம்ப நன்றாக வறட்சி நிவாரணப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன" என்று சொன்னார். மறுபடி நான் "குறைபாடு ஏதாவது இல்லாமல் இருக்காதே" என்று கேட்டேன். அவர் "குறைபாடு இருக்கிறது, சில இடங்களிலே லஞ்சம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்" என்று சொன்னார். அதை எப்படித் தீர்ப்பது என்ற பிரச்சினை பற்றி நான் அவருடன் பேசினேன். "மனிதனுடைய ஆயுள் உள்ளவரை லஞ்சம் வாங்கிக் கொண்டு தான் இருப்பான். அந்தப் பிரச்சினை ஒன்றும் தீர்க்கக்கூடிய பிரச்சினையாக எனக்குத் தெரியவில்லை" என்று சொன்னார். இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் "வறட்சிப் பணிகள் எல்லாம் நல்ல முறையில் நடந்து கொண்டிருக்கின்றன" என்ற அவர்களுடைய கருத்தைச் சொன்னார்கள். ஆனால் ஒன்றை அவர்களுடைய பேச்சின் போது சொன்னார்கள். "எங்கள் பகுதியிலேயிருந்து கிட்டத் தட்ட அரையே அரைக்கால் பேர் தஞ்சைக்குச் சென்றுவிட்டார்கள்" என்று சொன்னார்கள். ஆகவே அந்த மாவட்டத்திலே உள்ளவர்கள் எத்தனை பேர், எத்தனை அரையே அரைக்கால், அந்த அரையே அரைக்காலிலே எத்தனை லட்சம் என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் கிட்டத்தட்ட அவர்கள் 30 லட்சம் பேர் இருப்பார்கள் என நினைக்கிறேன். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே எனக்குத் தெரிந்தவரையிலே, பத்திரிகையாளர்கள் கிட்டத்தட்ட 2 லட்சம் பேர் தஞ்சாவூர் மாவட்டத்துக்கு வந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். தஞ்சையிலே கிட்டத்தட்ட ஆயிரக்கணக்கான பேர்கள் அங்கே இருக்கக்கூடிய சதுக்கங்களிலே வந்திருக்கிறார்கள். புதுக்கோட்டைப் பகுதிகளிலேயிருந்து வந்திருக்கிறார்கள், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி போன்ற பகுதிகளிலிருந்து லட்சக்கணக்கான பேர்கள் தஞ்சைக்கு வந்திருக்கிறார்கள். முக்கியமாக அவர்கள் இவ்வாறு வந்து கொண்டிருப்பதற்குக் காரணம், அங்கு அரிசி விலை அதிகமாகப் போய் விட்டது, படி அரிசி ரூ 8, 10-க்கு விற்கிறது என்று அறிகிறேன். இந்த விலையில், "நாங்கள் அரிசி வாங்கிச் சாப்பிடக்கூடிய நிலைமையில் இல்லை, தவிர அரிசியும் வருவதில்லை எங்கள் மாவட்டத்துக்கு ஆகவே அரிசி எங்கு கிடைக்கிறதோ அங்கே நாங்கள் வந்துவிட்டோம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது என்று சொன்னால் தஞ்சையிலிருந்து அரிசியை மற்ற மாவட்டங்களுக்கு அனுப்பாமல் நாம் தடை செய்ய முடியும். ஆனால் மற்ற மாவட்டங்களிலிருந்து அரிசியைத் தேடிக்கொண்டு தஞ்சாவூருக்கு வந்தால் நம்முடைய அரசியல் சட்டப்படி நாம் அதைத் தடை செய்யக்கூட இடமில்லையென்ற காட்சியை நாம் பார்க்கிறோம். இந்த



2 லட்சம் பேரும் மிகவும் சிரமப்படுகிறார்கள் என்று அவர்கள் சொன்னார்கள். உள்ளபடியே அவர்களுக்கு இருப்பதற்கு இடமில்லை, சில இடங்களிலே ஓரளவு வசதி உள்ளவர்களும் கூட அங்கே வந்திருந்து மிகவும் கஷ்டமான துயரமான நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். சென்ற முறை தஞ்சையிலே நடந்த டி.டி.சி. (டிஸ்ட்டிரிக் டெவலப்மெண்ட் கவுன்சில்) கூட்டத்திலேகூட நாங்களெல்லாம் பேசும்போது அவர்களுக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் செய்து கொடுக்கவேண்டுமென்று சொன்னோம். அப்போது வேறு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் எல்லாம் "ரொம்ப வசதிகளைச் செய்து கொடுத்தால், திரும்பவும் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்துக்குப் போக மாட்டார்கள், ஆகவே ரொம்ப வசதிகள் செய்து கொடுக்க வேண்டாம், கூடுமானவரை கொஞ்சம் வசதிகளை, அவர்கள் இருக்கக்கூடிய அளவுக்குச் செய்தால் போதும்" என்று பேசினார்கள். எல்லோரும் இராமநாதபுரம் மாவட்டத்தில் கஷ்டப்படக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அது அரசாங்கத்துக்குத் தெரியும். ஆனால் இப்படி அவர்கள் தொடர்ந்து தஞ்சையில் இருக்கக்கூடிய நிலைமை இருக்காது. தஞ்சையிலேகூட வறட்சி ஆரம்பமாகிவிட்டது. வறட்சி ஆரம்பமாகிவிட்ட காட்சியை நாங்களெல்லாம் தஞ்சையில் பாாத்தோம். நாங்கள் இருக்கக்கூடிய பகுதியிலே கூட கிணறுகள் எல்லாம் வறண்டு, இரண்டு மூன்று மாதங்கள் ஆகிவிட்டால் தண்ணீரே கிடைக்காது என்ற நிலைமைக்கு வரும் அளவுக்கு இருக்கிறது. அவ்வாறு ஒரு நிலைமை ஏற்பட்டால் தஞ்சையிலே இருக்கிறவர்கள் வேறு எங்கு செல்வது? தஞ்சையிலே இருப்பவர்கள் வேறு ஏதாவது மாநிலங்களுக்குப் போக வேண்டியிருக்கும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: சென்னைக்கு வரலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: சென்னையினுடைய நிலைமை மிகவும் துர்பாக்கியமான நிலைமையாக இருக்கிறது. தஞ்சையிலேயிருந்து வந்திருக்கக்கூடிய சில நண்பர்கள் சில "ஹோட்டல்" களிலே தங்கி "2 நாட்களாகக் குளிக்காமலே திரும்பி வந்து விட்டோம்" என்று சொன்னார்கள் அப்படிப்பட்ட நிலைமை இன்று சென்னையிலே இருக்கிறது. மேலும், 2 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் விடுகிறோமென்று நம்முடைய கார்ப்பரேஷன் ஆணையர் அவர்கள் சொல்லுகிறார்கள். சில இடங்களிலே "இரண்டு நாளைக்கு ஒரு முறை தண்ணீர் விடுவதால் நாங்கள் என்ன செய்வது, பாத்திரம் வைத்து, இரண்டு நாளைக்குத் தேவைப்படும் தண்ணீரைப் பிடித்து வைக்குமளவுக்கு பாத்திரம் வாங்கக்கூட வசதியில்லாத நிலைமையில் இருக்கிறோம்" என்று சொல்லுகிறார்கள். பத்திரிக்கைகளிலே வருவதையெல்லாம் பார்க்கிறோம். "புரசவாக்கம்" பகுதியிலே இருக்கக்கூடியவர்கள் சொல்கிற நிலைமையைப் பார்க்கிற போது தஞ்சையிலிருந்து சென்னைக்கு வந்தால் இங்கு இருக்கக்கூடியவர்கள் நிலைமையும் கொஞ்சம் பாதகமாகும் என்பதைத்தான் நாம் பார்க்கிறோம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: வரட்டுமா என்று சொன்னால் வர வேண்டாம் என்று சொல்வதாகத்தான் அர்த்தம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: ஆளுநர் அவர்களுடைய உரையைப் பொறுத்தவரையிலே, பொதுவாகப் பல கருத்துக்களைத் அவர்கள் நல்ல முறையிலே தெரிவித்திருக்கிறார்கள். உணவுப் பிரச்சினையைப் பொறுத்த வரையிலே, இதை ஒரு கட்சிப் பிரச்சினையாக வைக்காமல் இந்த மாநிலத்திலுள்ள எல்லோருடைய பிரச்சினையாகவும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். அது மிகவும் முழுமையான கருத்து, உண்மையான கருத்து என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் இந்த சந்தர்ப்பத்திலே ஒன்றை அரசுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்வேன். சென்ற முறை இந்த அவையிலே நடைபெற்ற உணவு விவாதத்தில் நான் பேசுகிறபோது மாநில அளவிலே ஒரு உணவு கவுன்சில், "ஸ்டேட் புட் கவுன்சில்" என்ற ஒன்றை அமைக்கலாம் என்ற ஒரு ஆலோசனையை நான் சொன்னேன். நான் முக்கியமாக இதைப்பற்றிச் சொல்வதற்குக் காரணம் "ஸ்டேட் புட் கவுன்சில்" என்று வைத்தால், அதிலே, அப்பிரச்சினையைப் பற்றி நன்கு தெரிந்த விவசாயிகள், வியாபாரிகள், வாங்கிச் சாப்பிடுபவர்கள் நுகர்வோர்கள், ஆகியோரை நியமித்து, அவர்கள் ஆலோசனைகளைக் கேட்டு அதன்படி ஒரு முடிவுக்கு வந்தால் அது ஒரு கடைசி முடிவுக்கு வரக்கூடிய நிலைமையாக இருக்கும். அரசியலுக்கு அப்பாற்பட்டதாக அதை அமைக்கலாமென்ற ஒரு கருத்தை அப்போது நான் சொன்னேன். அந்தக் கருத்தை என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் திரு. தாமோதரன் அவர்களும், திரு வசந்த பாய் அவர்களும் இங்கே இருக்கக்கூடிய மற்றும் பல அங்கத்தினர்களும் ஆதரித்தார்கள். ஆனால் அந்தக் கருத்தை அரசாங்கம் ஆராய்ந்ததா இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை. நான் அந்தக் கருத்தைச் சொல்வதற்குக் காரணம், அரசாங்கத் தரப்பிலே பல உத்தரவுகள் போடப்படுகின்றன, உத்தரவுகள் போடப்பட்டு ஒரு 10, 15 தினங்கள் கழித்து மறுபடியும் மாற்றப்படுகின்றன. அதுவும் அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் வெளியிலே அடிக்கடி சொல்லப்படுகிற ஒரு குறைபாடு "அரசாங்கம் போடுகிற உத்தரவுகளை அடிக்கடி மாற்றுகிறார்கள்" என்பதுதான். இந்த எண்ணம் வந்ததற்குக் காரணம் உணவைப் பொறுத்த வரையிலேதான் இந்த உத்தரவுகள் அடிக்கடி மாற்றப்படுகின்றன. அந்தக் காரணத்தாலே அரசுக்கும் கெட்ட பெயர் ஏற்பட்டு விட்டது என்பது என்னுடைய கருத்து. இதைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் தீர ஆலோசனை செய்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஒரு உதாரணத்தைக் கூட ரொம்ப அழகாகச் சொன்னார்கள். நாதத்தைப் பற்றியும் இசையைப் பற்றியும் சொன்னார்கள். நாதங்களெல்லாம் ஒருமித்து ஒரே இசை உண்டாகுமென்றும், இசையிலே பலவிதமான நாதங்கள் ஏற்படுமென்றும் ஒரு கருத்தை அவர்கள் சொன்னார்கள். என்ன பொருட்படச் சொன்னார்கள் என்பதை நான் அறிவேன். ஆனால் நல்ல முறையில் ஒரு உதாரணத்தைக் கண்டு பிடித்திருக்கிறார்கள் என்பதால் நான் மிகவும் பாராட்டினேன். ஆனால் அவர்கள் அப்படிச் சொல்லுகிறபோது, எதிர்க்கட்சிக்காரர்களாகிய நாங்கள் என்ன சொல்லுவோம் என்று சொன்னால் "நாதம் வருகிறது என்பது வாஸ்தவம் தான், அது மிகவும் அபஸ்வரமாக இருக்கிறது" என்று நான் என்னுடைய கட்சியிலிருந்து பேசக்கூடிய நிலைமை தான் ஏற்படும். காரணம் என்னவென்றால் அவ்வப்போது அவர்களைக் கூட்டி வைத்துப் பேசவேண்டும். "The wearer knows where the shoo prinches"





என்று சொல்லுவார்கள். யார் பூட்ஸ் அணிகிறார்களோ அவர்களுக்குத் தான் எங்கே கடிக்கிறது என்பது தெரியும் என்று சொல்லுவார்கள். அரசாங்கத்திலே இருக்கக்கூடியவர்கள், உயர் மட்ட அதிகாரிகளாக இருக்கக்கூடியவர்கள் புத்தகத்தைப் படித்து விட்டதாலே ஏதோ எல்லோருடைய பிரச்சினைகளையும் அவர்களே தீர்த்து விடுவார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. எல்லாப் பிரச்சினைகளும் எல்லோருக்கும் தெரிந்துவிடும் என்று எதிர்பார்க்கவும் முடியாது. இந்தக் காரணங்களை எல்லாம் பார்க்கிறபோது, அவரவர்களுடைய ஆலோசனைகளைக் கேட்டுச் செய்வது மிகவும் அவசியம் என்ற ஒரு கருத்தை நான் சொல்வேன். எல்லோரும் அவரவர்களுடைய மாவட்டத்தைப் பற்றிப் பேசினார்கள். எங்களுடைய மாவட்டம் தஞ்சை மாவட்டம். உபரி மாவட்டம் என்பது தஞ்சை மாவட்டம்.

(பிற்பகல் 5-30)

இராமநாதபுரம் மாவட்டம் பற்றிச் சொன்னார்கள். தஞ்சையைப் பற்றிச் சொல்லப் போனால் தஞ்சை மாவட்டம் உபரி மாவட்டம். ஆனாலும் இன்று அங்கே சிறு விவசாயிகள் படும் தொல்லை கொஞ்ச நஞ்சமல்ல. லெவி இருக்கிறது என்றும் இல்லை என்றும் அடிக்கடி உத்தரவுகள் மாற்றப்பட்டு வருகின்றன. அங்குள்ள முக்கிய பிரச்சினை, லெவி 12 அல்லது 13 மூட்டை என்று போடுகின்றார்கள். நாங்கள் பிற மாவட்டங்களுக்குக் கொடுத்து உதவுவதில் ஆட்சேபணை ஒன்றும் சொல்லவில்லை. இதை முதலமைச்சர் அவர்களிடமே தெரிவித்தோம். பின்னர் அவர்கள் பூம்புகாருக்கு வந்த போதுகூட, காலையிலிருந்து மாலைவரையில் அவரைச் சந்திக்க முயற்சித்து அடுத்த நாள் உணவுத் துறை காரியதரிசி திரு. திரவியம் அவர்களைப் பார்த்து, அங்குள்ள விவசாயிகள் தங்கள் குறைகளை எடுத்துச் சொன்னார்கள். "13 மூட்டை லெவி என்று போட்டால், விளைவதே 15 மூட்டை என்றால் இப்படி மொத்தத்தையும் லெவிக்காகக் கொடுத்து விட்டால் பிறகு விதைக்காகக்கூட எதையும் வைத்துக் கொள்ள முடியாத நிலை ஏற்படுகிறது. அக்ரிகல்சுரல் ஆபரேஷன் என்று சொல்லும் போது விதை வேண்டும். அவர்களுக்குச் சாப்பாட்டுக்கு நெல் வேண்டும். 15 மூட்டை நெல் விளைகிறதென்றால் 15 மூட்டையையும் லெவிக்கு என்று கொடுத்துவிட்டால் அடுத்த வருஷம் தஞ்சையில் விவசாயம் இல்லை என்ற நிலை ஏற்படும். அந்த நிலைமையை எப்படி சமாளிக்க முடியும் என்று சொல்லியிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, உயர் மட்டத்தில் உள்ள அதிகாரிகள் "நாங்கள் யாரையும் கஷ்டப் படுத்த மாட்டோம், கெடுபிடி செய்ய மாட்டோம்" என்று சொல்லுகிறார்கள். ஆனால் கிராமங்களிலே நடைபெறுவது வேறு விதமாக இருக்கிறது. அடி மட்டத்திலுள்ள அதிகாரிகள், கிராம மக்கள் 2 மூட்டை, 4 மூட்டை என்று எதையாவது எடுத்துச் சென்றால், அவர்களை மடக்கி தாலுக்கா அலுவலகங்களிலே இம்சை செய்கின்றார்கள். இந்த நிலைமைகள் எல்லாம் இருக்கக் கூடாது. மேலும் விலையைப் பொறுத்தமட்டிலே, அரசாங்கத்திலே "ட்யூயல் பாலிஸி" என்று வைத்திருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுத்தால், ரூ. 58 கொடுக்கப்படும் என்கிறார்கள். ஆனால் அப்படி ஒன்றும் கொடுக்கப்படுவதில்லை

என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. கூட்டுறவாக இருந்தாலும், எஃப்.ஸி.ஐ.-ஆக இருந்தாலும், சிவில் சப்ளைஸ் இலாகாவாக இருந்தாலும் எல்லாவற்றுக்கும் 54 என்றுதான் கொடுக்கிறார்கள்.

நமது முதலமைச்சர் அவர்களை மதிப்பிற்குரிய திரு. சுந்தரேசத்தேவர் அவர்களும் மாவட்ட காங்கிரஸ் தலைவரவர்களும் சந்தித்து இதைப் பற்றிக் கேட்டுக்கொண்ட நேரத்தில், கூட்டுறவுத் துறையில் 58 என்று கொடுக்கும்போது, இந்த லெவி நெல்லுக்கும் 58 என்று கொடுக்கலாம் என்று கேட்டுக்கொண்ட நேரத்தில், "லெவிநெல்லுக்கும் கூடுதலாகக் 4 ரூபாய் கொடுக்கலாம்" என்று திரு. தேவர் அவர்களிடத்தில் முதலமைச்சர் அவர்கள் உறுதியளித்தார் என்று அறிந்து மகிழ்ச்சியடைந்தோம். அடுத்தாற்போல திரு. திரவியம் அவர்களைப் பார்த்தபோது அவரும் அப்படியே உறுதியளித்தார் என்று அறிந்தோம். ஆனால் அரசாங்கத்தில் என்ன காரணத்தினாலோ இதுவரையில் உத்தரவினைப் பிறப்பிக்காமல் இருக்கிறார்கள். திருச்சியிலே 120 என்ற அளவுக்குககூட விற்கின்றது. ஆனால் தஞ்சை மாவட்டக் காரர்களுக்கு மட்டும் எப்போதும் 54-க்கு மேலே கிடைக்கக்கூடாது என்ற நிலை இருந்து வருகிறது. இதை நமது முதலமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு இந்த நான்கு ரூபாயையாவது கொடுக்க உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து அரசாங்கம் இதுவரையில் எவ்வளவு தூரம் லெவி முறையை மாற்றியிருக்கின்றார் என்று பார்க்கும்போது, ஒன்றைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. லெவி ப்ரொக்யூர்மெண்டு என்று கொண்டு வந்த பிறகு, ஓப்பன் மார்க்கெட் இல்லையென்று சொல்லிவிட்டார்கள். ஆனால் லெவி மூலம் அரசாங்கம் இதுவரையில் கொள்முதல் செய்திருப்பதைப் பார்க்கும்போது, அதிலே அரசாங்கம் வெற்றியடையவில்லையென்றே சொல்ல வேண்டியிருக்கிறது. நாம் இதுவரையில் கிட்டத்தட்ட 80 ஆயிரம் டன் தான் கொள்முதல் செய்திருக்கிறோம் என்று நினைக்கிறேன். அரசாங்கத்தின் கொள்முதலின் குறியீடு, நான்கு லட்சம் டன் நெல் அல்லது கிட்டத்தட்ட மூன்று லட்சம் டன் அரிசி சம்பா தாளடியில் கொள்முதல் செய்ய வேண்டுமென்பது குறிக்கோள். ஆனால் இதுவரையில் அதிலே 50 சதவீதம்கூட கிடைத்ததாகத் தெரியவில்லை. இதுவரையில் "லெவி" "நான்-லெவி" எல்லாவற்றையும் சேர்த்துப்பார்த்தால், 80 ஆயிரம் டன்னிலிருந்து ஒரு லட்சம் டன் வரையில்தான் கிடைத்திருக்கிறது. 50 சதவீதத்தை எட்டவேண்டும் என்றால், இன்னும் ஒன்னரை லட்சம் டன்னாவது கொள்முதல் செய்ய வேண்டும். ஆனால் இது இனி முடியுமா என்று பார்க்க வேண்டும். சென்ற ஆண்டு இதே நேரத்தில் எந்த விதமான பிரச்சினையும் இல்லாமல் கிட்டத்தட்ட 1.25 லட்சம் டன் கிடைத்தது. அதிலே அரசாங்கத்திற்கு எந்தவிதமான கெட்ட பெயரும் இல்லை. அதிகாரிகளுடைய கெடுபிடியும் இல்லை. ஆனால் இப்போது அந்த மாதிரி கிடையாது. எல்லா அதிகாரிகளும் யோக்கியமாக இருக்கின்றார்கள் என்று இல்லை. சிறு, சிறு நிலச்சுவான்தாரர்களை, விவசாயிகளை பல இடங்களில் கொடுமைப்படுத்துகின்றார்கள் என்ற செய்தி அடிக்கடி வருகிறது. இதனால் அரசாங்கத்திற்குத்தான் கெட்ட பெயர் ஏற்படுகிறது





எனவே, லெவி முறையால் அரசாங்கத்திற்கு எந்தப் பலனும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இனியும் ஏற்படும் என்று தெரியவில்லை. இதையெல்லாம் அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வேண்டும். நான்கு ரூபாயை அதிகமாகக் கொடுக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

இப்போது எங்கே பார்த்தாலும் பஞ்ச நிலைமை இருக்கிறது. இந்தப் பஞ்ச நிலைமையை "ஆர்ட்டிஃபிஷலாக" அரசாங்கமே உருவாக்கியிருக்கிறது என்று அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டுகிறேன். காரணம் உபரி மாவட்டங்களிலிருந்து பிற மாவட்டங்களுக்கு அரிசி போகக்கூடாது என்று தடை விதித்தால், மதுரையில் என் படி எட்டு ரூபாய் என்று விற்காது! ஒன்று, வியாபாரிகளிடமே விட்டுவிட வழிமுறை செய்யுங்கள். மக்கள் வாங்கிக் கொள்ளுவார்கள். அல்லது நீங்களாவது எல்லா இடங்களிலும் ரேஷன் கடைகளைத் திறந்து வைத்து மக்களுக்கு வேண்டியதைத் தருவதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளுங்கள். அதற்கும் அரசாங்கம் தயாராக இல்லை. நியாய விலைக்கடைகளைத் திறந்து நடத்துவதற்கே அரசாங்கம் தயாராக இல்லை. வியாபாரிகளும் கூடாது, நாங்களும் பொறுப்பேற்றுக்கொள்ள மாட்டோம் என்று சொன்னால், என்ன அர்த்தம்? புதுக்கோட்டை மாவட்டத்திற்குப் போயிருந்தேன். அங்கே எட்டு ரூபாய். அதற்குப் பக்கத்தில் ரிப்பேட்ரியேஷன் கேம்பில் பட்டினியால் 20 பேர் செத்துப்போய்விட்டார்கள் என்று சொன்னார்கள். கலெக்டரிடமே அதைப் பற்றி முறையிட்டிருக்கின்றார்கள் என்று கேள்விப்பட்டேன். அதற்கு மேலே என்ன செய்திருக்கின்றார்கள் என்று தெரியவில்லை. எட்டு ரூபாய்க்கு விற்கின்றது என்று புதுக்கோட்டையில் 300 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் உள்ளவர்களுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் ஏதோ ஓர் அளவிற்கு அரிசி கொடுக்கின்றார்கள் என்றால், அதற்கு மேலே உள்ளவர்கள் என்ன செய்வார்கள்? வியாபாரிகளும் வாங்கி விற்க முடியாத நிலை என்றால், அவர்கள் எங்கே போவார்கள்? சென்னையில்கூட ரூ. 500-க்குக் குறைவாக வருமானம் உள்ளவர்களுக்கு நியாய விலைக் கடைகளில் அரிசி போடுகின்றார்கள். அவர்களுக்கும் மாதத்தில் 15 நாட்களுக்கான அரிசிதான் கொடுகின்றார்கள். மிச்சமுள்ள 15 நாளும் என்ன செய்வார்கள்? மதுரையைப் பொறுத்த வரையில், இப்போது அரசாங்கம் என்ன உத்தரவிட்டிருக்கிறது என்றால் அங்கே பக்கத்திலுள்ள கிராமங்களிலிருந்த அரிசியை மதுரைக்கு தாராளமாகக் கொண்டு வரலாம் என்று உத்தரவிட்டிருக்கின்றார்கள். இதை தஞ்சாவூரில் செய்தால் என்ன? இப்போது தஞ்சாவூரிலுள்ள மக்கள் அவர்களுக்கே அரிசி இல்லாது கஷ்டப்படுகின்றார்கள். அங்கே உள்ள தனியார் வியாபாரிகள் பல பேர் அரிசி கிடைக்கவில்லை என்று கடையையே மூடி விட்டார்கள். 15, 16 வியாபாரிகள் அப்படி மூடிவிட்டு போய்விட்டார்கள். இப்போது டி.சி.சி.எஸ். தான் கிளைகளை வைத்திருக்கின்றார்கள்.

<u>மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் :</u> திறந்து விட்டார்?

<u>திரு ஜி. சுவாமிநாதன் :</u> திறந்துவிடுங்கள் என்று கேட்டுக் கொண்ட நேரத்தில், கணக்கில்லாத அளவிற்குத் திறந்துவிட்டு, அதெல்லாம் எங்கே போய்விட்டது என்று அரசாங்கத்தில் சொல்லவில்லை. நாங்

கள் சொல்லுகிறோம், கேரளாவிற்குப் போயிருக்கிறது என்று. போக வில்லை என்று உணவு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் மத்திய உணவுத் துறை அமைச்சர் திரு. கே. சி. ஜார்ஜ் அவர்களே திருச்சியிலே சொல்லிவிட்டுச் சென்றார்கள். "கேரளாவில் யார் ரொம்ப பாப்புலர் என்று சொன்னால் இங்கே உள்ள முதலமைச்சர் திரு கருணாநிதி அவர்கள்தான் கேரளா நாட்டிலே......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திரு ஜார்ஜ் அவர்கள் பேசியது மிகவும் பொறுப்பற்ற பேச்சு என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு ஜி. சுவாமிநாதன் : திரு ஜார்ஜ் அவர்கள் மத்திய உணவுத் துறையில் அமைச்சராக உள்ளவர். அவர் திருச்சியில் உட்கார்ந்து கொண்டு....

மாண்புமிகு திரு செ. மாதவன் : அவரிடம் சிவில் சப்ளைஸ் இலாகா இருக்கிறதே தவிர உணவுத் துறை அவரிடம் இல்லை.

திரு ஜி. சுவாமிநாதன் : சிவில் சப்ளைஸ் என்ற அளவில் அவர் உணவுத் துறையையும் அறிந்தவராக இருக்கலாம். மத்திய உணவுத் துறையில் அவர் அமைச்சர். இங்கே நண்பர் திரு ஆறுமுகசாமி அவர்களைக் காணோம். ஆக மத்திய அமைச்சர் அவர்கள் இங்கே வந்து சொல்லுகின்றார், "உங்கள் முதலமைச்சர் எங்கள் கேரளா நாட்டிலே மிகச் செல்வாக்கானவர். அவர் கேரளத்தில் எங்கே தேர் தலுக்கு நின்றாலும் ஜெயித்துவிடுவார். ஏனென்றால் உங்கள் அரிசி கேரளத்திற்கு வந்து விட்டது" என்று........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சென்ற முறை கேரளா கஷ்டப்படும்போது நாம் பெருமளவிற்கு உணவினை அனுப்பிவைத்து உதவினோம். அதை நினைவில் வைத்துக்கொண்டும் சொல்லியிருக்க லாம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : நமது முதலமைச்சர் அவர்கள் அதை நல்ல முறையில் சொல்லப் பார்க்கிறார்கள். ஆனால் அவர் சொன்னது "உங்கள் அரிசியெல்லாம் கேரளத்திற்கு வருகிறது. அது வரவில்லை யென்றால்....

மாண்புமிகு திரு செ. மாதவன் : இப்படியும் இருக்கலாம். "தமிழ் நாட்டிலிருந்து மறைமுகமாக இப்படியெல்லாம் அரிசியைக் கடத்திக்கொண்டு வந்தால்தான் அவரது கட்சி ஆட்சி செலுத்தும் கேரள நாட்டிலே மக்கள் பிழைக்க முடியும். அவ்வளவு மோசமான ஆட்சியை கேரளாவில் நடத்திக்கொண்டு இருக்கிறோம்" என்றே அவர் குறிப்பிட்டிருக்கின்றார் என்று நினைக்கிறேன்.

(பிற்பகல் 5-40)





திரு ஜி. சுவாமிநாதன் : நான் அதைப்பற்றி வாக்குவாதத்திற்குப் போக விரும்பவில்லை. அந்த அமைச்சர் ஒன்றைச் சொல்லி, இப்போது நமது அமைச்சர், அதை மோசமான ஆட்சி என்று சொல்லி, அதை நாளைக்கு பத்திரிகையாளர்கள் எப்படிப்போடுவார்களோ தெரியாது. மத் திய அரசு செய்யக்கூடிய குறைபாடுகளை, இன்னும் கொஞ்சம் கடுமை யாக நீங்கள் விமர்சிக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய அவா.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, திரு ஜார்ஜ் அவர்களுடைய பேச்சைக் கண்டிப்பதற்காக, திரு, சுவாமி நாதன் அடி எடுத்துக் கொடுத்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கி றேன்.

திரு ஜி. சுவாமிநாதன் : பிரச்சினைகளைச் சொல்லும்போது, கொஞ்சம் கடுமையாக விமர்சிப்பதிலே தவறு ஒன்றும் இல்லை. அவர்கள் நம்மைக் கெடுத்து விடுவார்களோ என்று அஞ்சிக் கொண்டிருந்தால், அவர்கள் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவும் இல்லாமல் அரசியல் ரீதியாக கடைசி வரையில் ஒரு முடிவும் எடுக்காத நிலையைத்தான் வைத்திருப்பார் களென்பதை நம்முடைய அரசியல் தெரிந்த முதல்வர் அவர்கள் நன்றாகப் புரிந்து கொண்டிருப்பார்கள். நம்முடைய ஆளுநர் அவர்களு டைய உரையைப் பார்க்கும்போது, ஒருவிதத்திலே மத்திய அரசை கண்டிப்பது போலவும், ஒருவிதத்திலே மத்திய அரசை வாழ்த்துவது போலவும் இருக்கிறது. திறந்து விடுவது என்று சொல்லும்போது அதற்குக் கணக்கு வைத்துக் கொண்டு செய்தால், இந்தப் பிரச்சினை கள் வராது. இதற்கு முன்னாலே மூன்று ஆண்டுக் காலத்திற்கு ஒழுங் கான நடைமுறையில் இருந்ததென்பதைச் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும், இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். அங்கே அரவை மில்கள் இருக்கின்றன. ஆனால் இந்த ஆண்டு என்ன செய்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். தஞ்சையிலே நெல்லை வாங்குகிறார்கள். அதை திருநெல்வேலிக்கும், கோயம்புத்தூருக்கும் கொண்டுபோய் அரைக்கிறார்கள். அங்கே அரைத்து அங்கேயிருந்து சென்னைக்கு லாரிகளில் வருகின்றன. இப்படி ஏன் செய்கிறார்களென்பது புரியவில்லை. லாரிகளுக்கு, பெட்ரோல் மற்றும் டீசலுக்கான செலவு அதிகமாகிறது. தஞ்சையிலே இருக்கக்கூடிய நெல்லை தஞ்சையிலேயே உள்ள அரவை மில்களில் அரைக்காமல், அதை கோவைக் கும், திருநெல்வேலிக்கும் எடுத்துக்கொண்டு போய் அரைப்பதால் வீண் செலவாகிறது. இரண்டு பவுண்ட் நெல் என்று சொன்னால், ஒரு பவுண்ட் அரிசி எடுத்துக்கொண்டு போனால் போதும். ஆக இரண்டு பங்கு டிரான்ஸ் போர்ட் செலவாகிறது. தஞ்சையிலிருந்து 200 மைலுக்குள் வர வேண்டியது, 400 மைல்களுக்கு அப்பால் எடுத்துச் செல்ல வேண்டி யதன் அவசியமென்ன என்பது தெரியவில்லை. இதை அமைச்சரவர்கள் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி ஏராளமான பிரச்சினைகள் இருக்கின்றன.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எப். சி. ஐ. இருக்கிறவர் கள் 1 ரூபாய் 50 பைசா வரையில் கூடக் கொடுத்து வாங்கத் தயாராக

இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அவர்கள் 2½ ரூபாய் கூடத் தர முடியுமென்று சொல்லும்போது, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனால் ஏன் கொடுக்கமுடியாது என்று புரியவில்லை. தஞ்சையைப் பொறுத்த வரையில், உங்களுக்கு ஓர் ஆலோசனை கூற விரும்புகிறேன். நீங்கள், தஞ்சையிலிருந்து இன்னும் அதிகமான நெல் வரவேண்டுமென்று நினைக்கிறார்கள். மனிதர்களுடைய சுபாவம் லாபம் வருமென்று சொன்னால், நெல்லைக் கொண்டு வந்து தானாகவே கொடுப்பார்கள். மதிப்பிற்குரிய போக்குவரத்துத் துறை அமைச்சரவகள் "இன்சென்டிவ் போனஸ்" என்று சொன்னார்கள். இதற்கு முன்னால், பேருந்துகளில் ஏற்றிக்கொண்டு போக மாட்டேனென்று சொன்னார்கள். இப்போது கலெக்ஷனுக்குத் தகுந்தபடி போனஸ் என்று சொன்னவுடன், தெருவிலே போகிறவர்கள், வராதவர்கள் எல்லோரையும் அழைத்துக்கொண்டுபோவதைப் பார்க்கிறோம். அதைத்தான் சுதந்திரக் கட்சி சொல்லிற்று. லாபம் கிடைத்தால், அவர்களாகவே உங்களுடைய உதவிக்கு வருவார்கள் என்பது என்னுடைய கருத்து. தஞ்சை மாவட்டத்தில் உங்களுக்கு அதிகமாக வரவேண்டும். இப்போது 20,000 டன் ஷார்ட்டேஜ்—ஆக இருக்கிறது. மிகவும் பயங்கரமான நிலையில் இருககிறோம் நமக்கு மத்திய அரசின் உதவி கிடைக்குமா என்பது தெரியவில்லை. அதுவும் தேர்தல் நெருங்க, நெருங்க எதுவும் சொல்ல முடியாது. அதுவும் எதிர்க் கட்சி ஆட்சி நடக்கும் ஒரு மாநிலத்திற்கு தொல்லைகளைக் கொடுக்கக்கூடிய சக்திகளை அவர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் காவிரிப் பிரச்சினையில்கூட பார்த்துக் கொண்டு வருகிறோம். இன்றையதினம் கருநாடகத்தைச் சேர்ந்த, திரு. சென்னபசவப்பா அவர்கள்—அவர் முதலமைச்சர் கூட இல்லை—பொறுப்பில்லாத முறையிலே பேசியிருப்பதைப் பார்க்கிறோம். அவர், **"Ground water potential"** இவ்வளவு இருக்கிறது என்பதையெல்லாம் கணக்கு வைத்துக் கொண்டு, அதற்குத் தகுந்தாற்போல் எங்களிடமிருந்து வாங்கிக்கொள்ள வேண்டும்; **"Tamil Nadu is enjoing a lion's chare"** என்று சொல்லியிருப் பதைப்பார்க்கிறோம். ஒரு பொறுப்புள்ள அமைச்சர், முதலமைச்சராகக்கூட இல்லாத நிலையிலே, ஓர் அசெம்பிளியிலே இப்படிப் பேசியிருக்கிறார்கள். நாம், "நடுவர் தீர்ப்பு"க்குப் போக வேண்டுமென்று சொன்னோம். அதைக்கூட முதலமைச்சரவர்கள் சொல்லவில்லை. பேச்சு வார்த்தை முடிந்துவிட்டதென்று பத்திரிகைக் காரர்கள்தான் போட்டிருக்கிறார்கள். தீர்மானத்தை எழுதும்போதுகூட நளினமான முறையில்தான் முதலமைச்சரவர்கள் எழுதினார்கள். எதிர்க்கட்சிக்காரர்கள்தான், கொஞ்சம் கடுமையாக எழுதுங்கள்; நம்முடைய உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கும்படியாக எழுதுங்கள் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு ஒரு தீர்மானத்தை எழுதி, இந்தப் பிரச்சினையை டிரிப்யூனலுக்கு அனுப்ப வேண்டுமென்று சொன்னார்கள். மத்திய அரசிலே இருக்கக்கூடிய "இன்டர் ரிவர் வாட்டர் டிஸ்பியூட் போர்ட்" லே பேசக்கூடிய பேச்சு வார்த்தைகள் முடியாவிட்டால் டிரிப்யூனலுக்குப் போக வேண்டுமென்று அவர்களே வைத்திருக்கிறார்கள் எனவே அதைக் கேட்பதிலே என்ன தவறு? அவர்கள் பேசக்கூடிய வார்த்தைகளைப் பார்க்கிறபோது, உண்மையாகவே இந்தப் பிரச்சினையிலே தீர்வுகாண வேண்டுமென்று இல்லாமல், தொல்லைகொடுக்க வேண்டுமென்ற நிலையில் இருப்பதாகத்தான் இருக்கிறது. இந்தப் பிரச்சினையை வைத்துக் கொண்டு தமிழ் நாட்டை மிரட்டிவிடலாமென்று அவர்கள்





நினைத்துக்கொண்டுதான் நடந்து கொணடிருக்கிறார்கள். இருக்கின்ற இந்த நிலைமைகளைப் பார்க்கும்போது, நமது உணவுப் பஞ்ச நிலையிலே மத்திய அரசு நம்முடைய உதவிக்கு வருமா என்பது சந்தேகமாக இருக்கிறது. இதற்கு முன்னாலே, 1969-லே பஞ்சம் என்று கேட்டபோது 12 கோடி ரூபாய் கொடுத்தார்கள். எதிர்க் கட்சிக்காரர்கள்கூட, பெரிய மேஜிக் போல் வந்ததென்று சொன்னார்கள். காரணம் அப்போது அவர்களுக்கு ஆதரவு தேவையாக இருந்தது. இப்போது 30 கோடி ரூபாய் கேட்டோம். 3 கோடி கொடுப்போம், 7 கோடி ரூபாய் கொடுப்போம், அதுவும் இன்ஸ்டால்மென்டில்தான் என்று சொல்லுகிறார்கள். காலம் ரொம்ப மாறிக்கொண்டிருக்கிறது. அதையும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். தஞ்சையிலே அதிக நெல் வேண்டுமென்று உண்மையாக நினைத்தால் அதிக அளவு பணம் கொடுத்தால், தானாகக் கொண்டு வந்து நெல்லைக் கொடுப்பார்கள். அப்போதுதான் ஓரளவுக்கு உங்களால் சமாளிக்க முடியும் என்று சொல்லிக்கொண்டு, இப்படிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். வறட்சியைப் பொறுத்தவரையில், ஆற்றியிருக்கும் நற்பணிக்காக என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*<u>திரு. எம். சங்கரலிங்கம் :</u> மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் நேற்று ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னரசு அவர்கள் முன்மொழிந்தார்கள். அதை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

நமது அரசு எடுத்துக்கொண்ட நல்ல முயற்சிகளை ஆளுநர் உரையிலே கோடிட்டுக்காட்டி, வறட்சி நிவாரணப் பணி எவ்வளவு சிறப்பாக நடைபெறுகிறதென்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மையில் இந்தத் தீர்மானத்தை முனமொழிந்தவரும், அதையொட்டிப் பேசிய மாண்புமிகு உறுப்பினர், பெரியவர் திரு. ராமகிருஷ்ணத் தேவர் அவர்களும், வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்ட ஒரு பகுதியிலிருந்து—குறிப்பாக கிழக்கு இராமநாதபுரம் பகுதியிலிருந்து—வந்தவர்கள். அங்குள்ள மக்களுடைய கருத்துக்களை கட்சி வேறுபாடின்றி இருவருமே ஒருமித்த கருத்தைக் குறிப்பிட்டார்கள். வறட்சியைப்பற்றி நாம் இலக்கியத்திலேகூடப் படித்திருக்கிறோம். இறையனார் களவியல் உரையிலே,

"பாண்டிய நாடு பன்னீராண்டு வற்கடம் சென்றது செலவே
அரசன் சிட்டரையெல்லாம் வம்மின் என அழைத்து
யாம் உமைப் புறந்தரகிலோம்
நீவீர் அறிந்தவாறு புக்கு
நாடு நாடாயின ஞான்று வம்மின்"

என்று கூறினதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. "பாண்டிய நாடு பன்னீராண்டு வற்கடம் சென்றது" வற்கடம் என்றால் பஞ்சத்தில் அழிந்தது எனப் பொருள்படும். "அரசன் சிட்டரையெல்லாம் வம்மின் என அழைத்து"—அறிஞர்களையும், மற்றவர்களையும் அழைத்து, "யாம் உமைப் புறந்தரகிலோம்" என்றான். அதாவது என்னால் உங்களைப் பாதுகாக்க முடியாது; ஆகவே நீங்கள் உங்களுக்குத் தெரிந்தவாறு எங்காவது சென்று பிழைத்துக்கொள்ளுங்

கள் என்றான். "நாடு நாடாயின ஞான்று வம்மின்"—நாடு நாடான பின்பு திரும்பிவாருங்கள் என்று சொன்னதாக இலக்கியத்தில் பார்க்கிறோம்.

ஆனால், இன்று இராமநாதபுரத்தைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்களும், பஞ்சம் என்று பேசியதைவிட, இராமநாதபுரம் பாதுகாக்கப்பட்டுவிட்டது, பாதுகாக்கப்பட்டுவிட்டது என்று குரல் எழுப்பியதை நாம் கேட்கிறபோது, பஞ்சம் என்பதையும் மறந்து, வறட்சி என்பதையும் மறந்து, அந்த வறட்சித் துன்பத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் பாதுகாக்கப்பட்டுவிட்டார்கள் நம்முடைய வறட்சி நிவாரணப் பணியினுடைய சிறப்பால் என்று சொல்லுகின்ற சொல்லைக் கேட்கின்றபோது, பாண்டியனுடைய செங்கோல் வளைந்தது என்ற சொல் பரவுவதற்கு முன்னால், அவன் உயிர் நீத்து, அந்தச் செங்கோல் நிமிர்ந்தது என்ற செய்திதான் முதலில் சென்றதென்று சிலப்பதிகார ஆசிரியர் கூறுவது நினைவுக்கு வருகிறது. பாண்டியனுடைய செங்கோல் வளைந்தது என்ற செய்தி போவதற்கு முன்னால் பாண்டியன் நெடுஞ்செழியன் உயிர் நீத்து, வளைந்த செங்கோலை நிலைநாட்டினான் என்ற செய்தி முன்னால் சென்றது என்று நாம் அறிவதுபோல, பஞ்சம் வந்தது, வறட்சி வந்தது என்று சொல்வதைவிட வறட்சிக்கு உட்பட்ட பகுதிகளெல்லாம் பாதுகாக்கப்பட்டுவிட்டன என்றும், வறட்சியால் ஆட்கொண்ட பகுதி இந்த ஆட்சியினுடைய நற்பணியால், இந்த ஆட்சியின் அக்கறையால், இந்த ஆட்சி மக்கள் மீது கொண்டிருக்கிற நல்லெண்ணத்தால், நற்பணி செய்கிற ஆக்கத் திறனால், அந்தப் பகுதி மக்கள் துன்பத்திலேயிருந்து துடைக்கப்பட்டுவிட்டார்கள் அல்லது துடைக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியை நாம் உலகுக்கு அறிவித்திருப்பது, இந்தத் தமிழக அரசினுடைய சாதனையின் உச்ச கட்டமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 5-50]

வேதனையிலும் சாதனையா என்றுகூட வெளியிலே, கூட்டங்களிலே பேசலாம். இருந்தாலும்கூட எனது மதிப்பிற்குரிய பெரியவர் அவர்கள் சொன்னதுபோல் 1958-வது ஆண்டிலிருந்து எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற ஒரு கண்மாய்த் திட்டத்தை இப்போதுதான், அதுவும் கலைஞர் வந்த பிறகுதான், நிறைவேற்ற எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் முற்றுப்பெறுவதற்கு, இந்த மன்ற நிகழ்ச்சிகள் முடிந்த பிறகு அவர் இன்னும் ஒருமுறை காலடி எடுத்து வைக்கவேண்டுமென்று 72 வயது பெரியவர் அவர்கள் எல்லாவிதமான உணர்வுக்கும் அப்பாற்பட்ட நல்ல உணர்வுகளோடு சொல்லுகின்ற ஒரு சூழ்நிலையை இந்த அரசு ஏற்படுத்தியிருப்பது உண்மையில் எந்த நெருக்கடியையும் இந்த அரசு ஏற்றுக்கொண்டு சமாளிக்க முடியும் என்பதை உலகுக்குக் காட்டுவதாகும். இம்மாதிரி நேர்வுகளில், இன்னும் வெற்றிபெறுவோம் என்பதைத்தான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த மாதிரி துன்பங்களையெல்லாம், ஆங்கிலத்தில் சொல்வதுபோல "Blessing in disguise" ஆகத்தான் ஏற்றுக்கொள்ளவேண்டும். வந்த இத்துன்பம் ஒரு நன்மைக்காக என்று கருதி, இராமநாதபுரம் மாவட்டத்தில் நடக்கவேண்டிய எல்லாத் திட்டங்களும் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று சொன்னார்கள். இன்னும் மற்ற





மாவட்ட நண்பர்களும் பேசுவதானால் ஆங்காங்குள்ள பகுதிகளில் இருக்கக்கூடிய நல்ல திட்டங்களை எடுத்துச் சொல்வார்கள். தமிழக அரசும், தமிழக மக்களும், தமிழகத்திலுள்ள அத்தனை கட்சிகளும் ஒன்று சேர்ந்து நிரந்தரமான நல்ல அமைப்பு முறைகளையும், உணவு உற்பத்தியில் ஒரு நிலையான வெற்றியையும் நாம் காண்பதற்கு இதை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இதை இன்னொரு பாஷையில் சொல்வதானால், போர்க்கால நடவடிக்கையாகக் கருதி ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டுமென்ற உணர்வை நாம் அனைவரும் பெற்றிருக்கிறோம். அது தமிழகத்தினுடைய பேறு என்றுதான் நான் கருதுகிறேன். அதோடு தமிழகத்தினுடைய வரலாற்று மரபு என்றுங்கூட நான் கருதிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த நேரத்தில் எனது மாவட்டத்தையும் பற்றிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நமது மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் "எங்கு செல்வது" என்று சொல்கின்றபொழுது, தலைவர் அவர்கள் தான் இருக்கின்ற சென்னைக்கு அழைத்தார்கள். நான் கன்னியாகுமரிக்கே அழைக்கலாம் என்று நினைத்தேன். அங்கு அவ்வளவு செழிப்பல்ல. ஆனால் இதை ஒப்பிட்டுப்பார்க்கிறபோது—ஓர் இரண்டு மாதத்திற்குக்கூட தஞ்சாவூரில் இருக்கலாம் என்று சொன்னார்கள்—கூட இரண்டு மாதத்திற்கு கன்னியாகுமரிக்குக் கூப்பிடலாம் என்று நினைத்துக்கொள்கின்ற அளவுக்குத்தான் இருக்கின்றது. அங்கு 60 ஆயிரம் ஏக்கர் நிலத்திலே 20 ஆயிரம் ஏக்கர் பாதிக்கப்பட்டிருக்கிறது. 40 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் விளைந்துவிட்டது. 20 ஆயிரம் ஏக்கரில் 10 ஆயிரம் ஏக்கரில் பயிர் தண்ணீர் தட்டுப்பாட்டினால் மரித்துவிட்டது. 10 ஆயிரம் ஏக்கர் தண்ணீர் இல்லாமல் பாதிக்கப்பட்டு, நிலைகுலைந்திருப்பதையும் நாம் இந்த சந்தர்ப்பத்தில் மறந்துவிட முடியாது. அந்தப் பகுதியையும் ரெவின்யூ போர்டு மெம்பர் அவர்கள் சுற்றிப்பார்த்துவிட்டு வந்தார்கள். அமைச்சர் பெருமக்களும் இந்த சந்தர்ப்பத்தில் வந்து, 20 ஆயிரம் ஏக்கரிலும் தண்ணீர் இன்றி வாடி வதங்கிவிட்ட, கரிந்துபோன பயிரைப் பார்த்து அதற்கு நிரந்தரமான நல்ல திட்டங்களை உருவாக்கி அந்தப் பகுதியில் எப்போதும் வளம் கொழிக்கின்ற ஒரு நிலையை உருவாக்க வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் பேசுகிறபோது, கேரளத்திற்கு அரிசி அதிகமாகச் செல்கிறதென்று ஒரு மத்திய அமைச்சர் சொன்ன குற்றச்சாட்டையும்—அவர் கிண்டலாகப் பேசியதோ என்னவோ—குறிப்பிட்டார்கள். அந்தக் கேரளத்தை ஒட்டியிருக்கிற பகுதியில் எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டமும் உண்டு. அந்தப் பகுதியில் இப்பொழுதல்ல, இதற்கு முன்னாலேயும் கேரளாவையொட்டி இருக்கக்கூடிய இரண்டு தாலூக்காக்களுக்கு முழு ரேஷன் அளித்து அந்தப் பகுதியிலிருந்து அரிசிப் போக்குவரத்தை நாம் தடை செய்திருக்கிறோம். கன்னியாகுமரி மாவட்டம் 4 தாலூக்காக்களைக் கொண்டது. அகஸ்தீஸ்வரம், தோவாளை ஆகிய தாலூக்காக்களில்தான், 60 ஆயிரம், 50 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அங்கு இதுவரை ரேஷன் கொடுக்கப்படவில்லை. இப்பொழுது முழு அளவு லெவி போட்டுவிட்டதனால் எல்லா விவசாயிகளிடமும் இருக்கக்கூடிய நெல்லை

ஒன்றுசேர்ந்து, பஞ்சத்தால் வாடுகிற பகுதிக்கு மாத்திரமல்ல, மகாராஷ்டிரத்துக்கும், கேரளத்திற்கும் நாம் அரிசி அனுப்பினோம். கேரளத்தில் வாழ்ந்த மக்கள் பட்டினியால் வாடினார்கள் என்றபோது தமிழகத்திலிருந்து நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் அரிசி அனுப்பி வைத்தார்கள். இந்தியாவினுடைய எல்லா மாநிலங்களுக்கும் உணவு அனுப்பினோம், தமிழகத்திலேயே இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து இரண்டு லட்சம் பேர் தஞ்சாவூர் மாவட்டத்திற்குச் சென்றிருக்கும்போதும் தஞ்சை மாவட்டத்துக்காரர்கள் இரண்டு மாதங்களுக்குப் பிறகு எந்த மாவட்டத்துக்குப்போவது என்ற ஒரு சஞ்சல உணர்வோடு இருக்கும் போதும், இப்படிப்பட்ட கொடுமையான வறட்சியில், இலாப ஆசை காட்டி உணவுப் பொருளைப் பெறவேண்டுமென்ற எண்ணம் இருக்கக்கூடாது. அந்த எண்ணம் ஒருவேளை சுதந்திரா கட்சிக்கு இருக்கலாம். அந்தக் கட்சியே வட இந்தியாவில் பிறந்தது. தமிழக மண்ணில் அந்த உணர்வு இருக்கக்கூடாது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை, அகஸ்தீஸ்வரம் என்ற இரண்டு தாலூக்காக்களுக்கும் உடனடியாக முழு அளவு ரேஷன் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகின்றேன், வணக்கம்.

[பிற்பகல் 6–00]

* THIRU A. R. DAMODARAN : Hon. Deputy Chairman, Sir, the Governor's Address this year, as anticipated, is a document which present very sorrowful and sad picture of conditions in Tamil Nadu. In fact, even during the last session, some of us had anticipated that, with the failure of the North-East monsoon in 1974, the situation in Tamil Nadu would develop to such a critical state that drinking water would not be available not only in the City of Madras but in all the outlying areas and particularly so in the rural areas and some of us pointed out the necessity of building up adequate buffer stocks of foodgrains to tide over the very difficullt situation that was bound to come about, if not in February, at least in April-May of this year.

This year's Address, Sir, is devoted entirely to the drought situation in Tamil Nadu and it is not surprising indeed because the entire Plan-effort, the entire development activity which all of us were hopefully thinking of in the first year of the Five-Year Plan will receive an undoubted set-back due to the seriousness of the situation that has developed in Tamil Nadu. My hon. Friends have referred to the fact that this is probably one of the worst droughts experienced in living memory and my hon. Friend, my elderly Friend Thiru Ramakrishna Thevar from Ramanathapuram district said that in his lifetime of 70 and odd years this was probably the worst drought that he had experienced in his own district. Statistics have been given, Sir, of the amount of rainfall in Tamil Nadu and I think, unless one happens to be terribly politically-inclined intending to use the difficult situation that the Tamil Nadu Government are faced with





as a lever to bring about unpopularity within the State, unless one has political motivations, one cannot but accept the fact the conditions that have been created today have been largely brought about by the failure of rains and the caprice of Mother Nature.

I was amused to read a statement made by a very important leader of a political party in our State. In the last two sessions, we have heard—even my hon. Friend Thiru Swaminathan referred to it today—a charge that has been frequently made in the Houses of the Legislature that the difficult food situation in Tamil Nadu has been brought about because of the large exodus of foodgrains from Tamil Nadu to Kerala. I would like the Government to come out with a categorical statement because they must have figures of the lorries that transported the foodgrains into Kerala State. I refuse to believe that by headloads alone, hundreds of thousands of tonnes of foodgrains would have disappeared from the State of Tamil Nadu to Kerala. If at all the amount of foodgrains that could have been smuggled into Kerala would be of a magnitude to bring about a situation in Tamil Nadu of shortages, then certainly that grain must have deen carried by lorries on our highways and by road and I think, Sir, the Government would have enough statistics to prove that the quantity of such foodgrains would be less than one lakh tonnes. This, in itself, would not make any material difference to the situation in Tamil Nadu.

Perhaps realising that there might be some comment If we in Tamil Nadu atleast those in the opposition said that grain had been transported to Kerala, a new argument has been brought forth by a leader of an all-India party and a claim is now being made that foodgrains from Tamil Nadu have been exported to foreign countries. Sir, in my opinion, this is a ridiculous charge. The only paddy that has been exported from India, perhaps by clandestine sources from the Sourashtra ports and from Bombay, is 'Basumati' rice which is not grown in Tamil Nadu. I think they are deliberately trying to mislead our people and make political capital out of the fact that the disastrous food situation in Tamil Nadu is not man-made . Although some criticism may be levelled, as my hon. Friend Thiru Swaminathan did, regarding certain Government policies which might have been changed from time to time with the best of intentions to meet a difficult situation in one or a few districts. I refuse to believe that we in this State have not done the utmost for agriculture which we have been stressing right from the year 1967. Public memory may be short, Sir, but I remember that even in the first Budget Speech made by the late Dr. C. N. Annadurai he stressed-Hand this was a factor that was taken into account even

while preparing the Fourth Five-Year Plan and said in unequivocal terms that the preponderance we had given to the heavy machine tool industry and projects which took a long time to yield results was responsible for the difficult situation in our country. He said that the time had come for us to devote a larger portion of our resources to planning in agriculture and in that he pledged his Government's full co-operation and support to seeing that the farmers in our State received that degree of support from the Government which they, perhaps, had not received from the planners in the past. Sir, I am frank and honest enough to confess that the record of the help that has been rendered is nothing of which this Government need be ashamed. Therefore, when criticism is levelled with such unfairness, some of us felt that it was necessary to clarify the issues because if we are to have all-round political support in the difficult situation that we are going to face in two or three months, at least the people must be educated as to what the situation really is and how we are going to surmount it. I was very happy to find that mention had been made in the Governor's Address of the undoutedly quick acceptance of the Government of India of the demand of the Tamil Nadu Government that a monthly quota of one lakh tonnes of foodgrains would be required till October, 1975 when we hope the North-East Monsoon will break out with good success. Although the Government of India have not been able to accede to the request of Tamil Nadu for rice, they have agreed to give wheat. I think we should be grateful to them for that because one unfortunate trait that is developing in our country is the habit of political ingratitude and when we cannot accept with gratitude foodgrains that are given by foreign countries, I do not wish to repeat that criminal mistake and try to find fault with the Government of India who have come forward to give 50,000 tonnes of wheat per month. My hon. Friend Thiru Swaminathan did express some misgivings whether politics might not play a part in food. Sir, politics will play a part in everything in our country but fortunately we have a very able and experienced Minister, Thiru Jagjivan Ram, who is not an enemy of Tamil Nadu and who is capable of deciding all issues with that degree of impartiality with which we expect all Union Ministers to deal with their subjects. I am sure that as long as he is in charge of that portfolio, Tamil Nadu need not be frightened of losing the foodgrains, which have been promised and as far as rice is concerned, I fully support the plea that some attempt must be made by the Government of India to import paddy or rice-equivalent because it is available in some South-East Asian countries.





(பிற்பகல் 6-10)

Perhaps my friends in Tamil Nadu may not be aware of the fact that in the year 1974-75, 4.2 million tonnes of wheat have already been imported from abroad, of which 3.5 million tonnes have been purchased with free foreign exchange from the United States of America, not to mention the 300 thousand tonnes of wheat the price for which has to be given on a 50-year loan basis with a 10-year grace period with 2 per cent interest. We have received a great deal of wheat from abroad and we are thankful to these nations which have considered the hunger of my own countrymen more important than international politics, and I see no reason why we should not—why the Government of India should not—at least as a temporary measure import 500 to 700 thousand tonnes of rice from Thailand and from some of the East Asian countries where hybrid cultivation has progressed to such an extent that some of them at least are surplus in these products. Is it because nobody in the North eats rice, Sir? Is it because they are going to discriminate against the people of Bengal, Orissa and Tamil Nadu who are the predominant eaters of rice? I would feel that at least to avoid this criticism of discrimination, the Government of India should think of importing rice, because all these pleas and petitions that we are making show the urgency and unless a prompt decision is taken immediately by the Government of India, there would be no point at all in arriving at a late decision some time in April or May when there will be the problem of arranging for shipping transport and the possibility of moving foodgrains. The foodgrains may arrive, as fertilisers arrived, some time in December when we may already be in the first Kuruvai harvest. I would, therefore, plead that in such matters the Government of India should not delay, as it delayed in the case of the second Mine Cut at Neyveli, as it delayed in the case of the expansion of the Kalpakkam Atomic Power Factory, and as it has delayed in giving us permission for certain essential power projects. This is a matter that concerns millions of our countrymen and I am sure that the Government of India, in spite of whatever political differences they may have with this Government, will also consider the fact that Tamil Nadu is not peopled only by members of the D.M.K. but it is also peopled by persons belonging to every shade of opinion and perhaps even some who belong to the Congress (R).

Sir, having mentioned this, may I come to certain suggestions which I would like to make in addition to what has been so elaborately stated by the Governor in this Address? Reference has been made to the fact that steps will be taken to see that bore-wells are sunk in the rural areas and that drinking water

would be sought to be found especially in some of the villages where even to-day they are going two or three miles to river-beds to dig in the open sands and to take out small pails of water which are being transported to two or three miles. A Government, especially a Government which professes that it will look after the welfare of the people and will attend to the essentials must realise that no amount of Five-Year Plans will ever have any impact on the poor men of our country, unless we are able to give them the three or four essential things which are considered basic amenities in any well-ordered civilised country. Drinking water is absolutely essential and the various steps this Government are going to take have been mentioned. I would like to mention one difficulty that the Government might experience and I would seek clarification from the Hon. Minister regarding this. They have mentioned that provision is made for drilling equipment for borewells. Sir, I have been given the impression that if you place an order today, you may receive the drilling equipment exactly three or four months later. This is a very important aspect which must be studied by the Government because these are all details which are likely to crop up at a later date. I would like the Government of Tamil Nadu to find out from the manufacturers of drilling equipment whether they will be able to supply them very early, because of the necessity to make available sufficient number of drilling equipments. It is not one drill that is going to operate in one district but we may require a thousand or two thousand drills which will have to operate at the same time.

The other suggestion which I would like to make is one which has always struck me as possible; but perhaps, there are difficulties and I would like to know from the Hon. Minister—from the Government what the difficulties are. A few years ago when I visited Neyveli, I was informed that to depress the pressure of the water on the lignite pit, there was a continuous pumping of water in the Neyveli Lignite Corporation. At the time when I visited there were 50 pumps operating and each pump was discharging something like one thousand gallons per minute. It means 50,000 gallons per minute, and somewhere about 30 lakh gallons of water is being pumped out every hour. I do not know if the information is factually correct. It may be 20 lakhs or it may be 15 lakhs gallons. But the fact remains that in an eight-hour day, the amount of water that is being pumped out from the underground water level in Neyveli would be about 20 to 24 million gallons. But the water is let out into the rivulets, very little water is used in agriculture and then it goes waste into the Bay of Bengal. Though it contains





a small amount of hydrogen sulphide, if allowed for aeration, it will evaporate within 2 to 3 hours. I am sure that when we are thinking of a 25 crore project for bringing water from Veeranam to Madras City, when we are asking for linking up of Krishna and Godavari rivers with rivers in our own State,—the possibility is that it will never come about with all the inter-State disputes that we are having,—when we have the technological development necessary for a chemical treatment plant which does not require any foreign technical knowhow or collaboration, the Government should consider whether it is going to be very difficult for us to spend 10 or 15 lakhs of rupees to encourage a little bit of research on chemical treatment that would be required to treat the Neyveli water. The Neyveli water is only 10 miles away from the main pipe line that is bringing water from Veeranam. I would like the Hon. Minister to investigate whether this water can be pumped into the pipe line and whether it can be brought to Madras City. In case it is found that this water is not good for drinking purposes, then I would suggest that the Neyveli water be pumped into the Wellington Reservoir in Thittagudi or any Reservoir in South Arcot district so that it could be used for irrigation purposes and we could cultivate more than 15 to 20 thousand acres in two or three taluks and bring about the much needed paddy production. I do not have all the technical details with me, Sir, but this is a suggestion which I would like the Government to study and attend to urgently because if we spend 25 lakhs of rupees in working out chemical processing by which this water could be cleaned of its impurity, we can use it not merely for drinking purposes but even for irrigation purposes. There is no point in allowing good water which is not brackish to go waste. I myself had a bath in the Neyveli springs and except for the fact that eyes burn a little due to the sulphur content, there is no salt in the water at all and it will be excellent water for both irrigation and non-irrigation purposes.

The other suggestion has been made before and I would like the Government to tell us about the economics of desalination of sea water. I know, Sir, the suggestion has been put forward that along with Kalpakkam Atomic Power Factory, we should have a plant that will convert sea-water into pure water. It is not an impossible problem because all the steamers have this plant. The only point is that they say that it is extremely expensive. Now, Sir, in Madras City, with the population growing at such a pace, with the industrial application of water registering an enormous increase, a time might come five years later or even 10 years later, when we may have to divide the water-supply lines into two—one for drink-

ing purposes and the other for non-drinking purposes. The amount of water that is being wasted to-day in houses in the utilisation of sanitary conveniences, showers and for other non-drinking purposes is phenomenal and we cannot continue to waste water which has now become as scarce as petroleum, gold and other articles. In a few years' time it will be very difficult for us and, therefore, I would like the Government to investigate the possibility of having a desalination plant which has been suggested. In Chicago in the United States of America, Lake Michigan is a salty lake and they have a desalination plant for conversion of salty water into pure water. The economics of this project also should be considered by the Government. for it is not merely the water that is utilised but the chemicals that are brought about as a result of the desalination process are themselves by-products in various chemical industries and in fact, could be profitably used to bring down the cost of water that would be available in such projects.

[பிற்பகல் 6–20]

I was rather alarmed—although I agree that emergency situations must have emergency solutions, I was rather alarmed—to find a very casual report in the newspaper that Palar water is likely to be brought to Madras City. I do not know where Palar water exists—obviously it must be very much underground—but there is a danger in our thinking that Madras City is the only City that has to be protected with water-supply, because the underground water of Palar is being used for a variety of purposes, especially for irrigation. If at all, the Tamil Nadu Government want to bring Palar water, I would like a categorical assurance that the riparian rights of ryots in Chingleput district would not be affected by the flow of Palar water into Madras City. Madras City people are very vocal—newspapers will say that every alternate day water is being given and photographs will be produced—but the poor villager in Chingleput district has neither a newspaper nor a photographer at his disposal and he will suffer in isolation and misery. Therefore, I would strongly suggest that in the utilisation of Palar water, due care should be taken. As we are now trying to protect our rights in the Cauvery waters, I think in all fairness to the ryots of Chingleput district we should ensure that diversion of water from Palar will not result in desert conditions being created in Chingleput district.

The other important point is that a great deal is being said of unpopularity. My hon. Friend Thiru Swaminathan said, "by procurement you are making yourself unpopular; by stopping small farmers from transporting in bullock-carts you are making yourself unpopular". Sir, we cannot escape unpopularity in this difficult stage, because we are caught in a cleft. Perhaps, this is a form of



fatalism. Whatever it is, we are having a very difficult situation and the Government have to take steps to meet a state of deficit of one million tonnes, a fantastic deficit of 30 per cent. Either they may meet it by import from other States and other nations or they will have to see that all of us who are accustomed to keep three or four months' stocks reduce it to 1½ months' or 2 months' stocks. Distress has to be shared by all and it cannot be said, "I must have eight months' stock in my village because I will require it for seeds and other things". It can be said but, at the same time, we must remember that when persons are dying of hunger, we cannot insist on the ordinary process which we were doing in the past. Therefore, I would only say that hard decisions have to be taken and one of the hard decisions that this Government will have to take is to see whether we should not ban rice preparations in hotels. I know I am going to get a flood of protests and there will be strong criticism. But hotels have high purchasing power. While an ordinary middle-class man who may go to the market and purchase rice at Rs. 4.25 per measure will find it extremely difficult, a hotel-keeper is prepared to buy rice at Rs. 5 or Rs. 5.50 per measure because somehow he will add it to the price of his product and he will be able to sell it. Therefore, at least during a period of six months, although it may be an unpopular decision, even if Government are not able to ban the use of rice completely, I would strongly urge that there should be some days when rice or rice preparations should not be served in hotels. We are going to get 50,000 tonnes of wheat. I have no statistics of what the normal consumption of wheat in Tamil Nadu is, but I remember that 7 or 8 months ago when we wanted wheat desparately for diabetic patients the quota that had been given was of the order of 14,000 or 15,000 tonnes. As regards this 50,000 tonnes of wheat which Government are receiving, I wish to warn the Government even at this stage that unless efforts are taken to see that the wheat is consumed in such centres as hostels and even by private individuals, a time may come when Government may not be able to uplift the second consignment of 50,000 tonnes of wheat. we must insist that in urban areas greater consumption of wheat should take place and the rice should be made available to areas where wheat cannot be taken, especially in the rural areas.

Another suggestion that I would like to make is that accepting for a moment that we have made a request to the Government of India for rice. I have my own doubt whether they are going to import rice. Secondly, the decision has been delayed to such an extent that we will not get rice for 5 or 6 more months. Therefore, we have to think of other measures especially when we are going

to face a deficit of 1 million or 1½ million tonnes in spite of the wheat that is being given by the Government of India. One of the suggestions that I would like to make to the Hon. the Minister for Food and Civil Supplies—although this again is a hard and unpopular decision—is that the Civil Supplies Corporation must obtain millets from other States and must distribute millets like ragi, which is popular in the rural areas in fair price shops, especially in drought-prone areas like Ramanathapuram district, Dharmapuri district and parts of Coimbatore district and in fact, in every taluk which is drought-prone in every district. In my own district which is supposed to be a very good district for agriculture, we have the taluks of Gingee, Tindivanam, Thirukoilur and portions of Kallakurichi which are drought-prone. In such areas it is necessary for the Civil Supplies Department to take up distribution of millets and the Hon. Minister can do it because, at present, there is no control over the movement of millets. What we were protesting against last year now turn in our favour and we may be able to procure at least 5 to 6 lakhs tonnes of ragi or other millets which are popular in our areas and we may try to distribute it in fair price shops. It is my earnest feeling that if we are going to waste time hoping to get rice from other States or from Burma, Singapore or Malaysia, we will have to wait for the entire North-East monsoon of 1975.

One more word, Sir, and I have done. Some mention has been made of the fact that the fertiliser allocation to our State which was anticipated to be 3.25 lakh tonnes of nitrogen has been reduced to some figure of 2.56 lakh tonnes and the actual arrivals have only been 1.70 lakh tonnes. I would like to bring to the attention of the Government that in a drought situation I fully anticipate that the demand for fertiliser will fall by more than 50 per cent. In fact, the situation now is that many of the major fertiliser factories are not uplifting Urea from the Neyveli Lignite Corporation because of the drop in sales of fertilisers. Where can people use fertiliser, Sir? Where is the crop and where is the water? Therefore, I would plead with the Tamil Nadu Government not to unduly exercise itself over the fertiliser quota. My own impression is that during the next six months we will not be requiring much fertiliser and, therefore, we need not waste time in making this an issue with the Government of India. It is far better if we try to get foodgrains or millets.

Sir, another point is about third crop of paddy. I have been trying to understand this but have not been able to do so. I am also a farmer and I also have borewells. With the help of bore-



wells, we do grow what is called in Chingleput district the "Swarnavari" crop in April as a third crop of paddy. My advice to my people this year has been not to grow any paddy during the third crop and I have a very good reason for that. If I grow paddy on one acre, I anticipate that the existing water resources are going to be exhausted by May or June. If I can substitute it by 7 acres of ragi or groundnut or other forms of millets, the existing water would continue to serve till August or September. Therefore, some of us in Chingleput district will definitely not be able to cultivate paddy not because we do not want to give the paddy to the Government of Tamil Nadu which they have said they will not procure under the levy system. My own feeling is that this is something which requires a little more study by the Agricultural Department of our State—whether we really want to encourage farmers with scarce resources of water to cultivate paddy or whether we prefer them to cultivate dry crops like ragi, cumbu, cholam and maize which require less water but which have a water spread effect and which may give us better results. This is what I wanted to suggest and I would like to thank you for the time given.

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:</u> இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை பிற்பகல் 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 6-30)

## 7. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

* 1. Notification issued with G.O. Ps. No. 74, Commercial Taxes and Religious Endowments, dated the 31st July 1974 exempting from the tax payable under the Tamil Nadu General Sales Tax Act, the sales of products of milk by the Madurai Milk Project, all dairy units of the Dairy Development Department, Co-operative Milk Supply Socities|Unions and other dealers to the Tamil Nadu Dairy Development Corporation Limited, Madras. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

* 2. Notification issued with G.O. Ms. No. 1551, Rural Development and Local Administration, dated the 27th June 1974 relating to declaration of Kancheepuram as Local Planning Area under section 10 (1) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971.

[Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

* 3. Notification issued with G.O. Ms. No. 1085, Rural Development and Local Administration, dated the 23rd April 1974, relating to declaration of Cuddalore as Local Planning Area under section 10 (1) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

* 4. Notification issued with G.O. Ms. No. 1961, Rural Development and Local Administration, dated the 4th September 1974 in regard to an amendment to the Rules in Part II of Schedule IV to the Tamil Nadu District Municipalities Act, 1920. [Laid on the table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

* 5. Notification issued with G.O. Ms. No. 1648, Rural Development and Local Administration, dated the 10th July 1974 in regard to an amendment to the Rural Development and Local Administration Notification II-2 No. 297 of 1961, dated the 12th April 1961 published at pages 44-49 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 13th April 1961. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958.]

* 6. Notification issued with G.O. Ms. No. 1844, Rural Development and Local Administration, dated the 16th August 1974, relating to declaration of Nagercoil as Local Planning Area under section 10 (4) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

*7. Notification issued with G.O. Ms. No. 1027, Rural Development and Local Administration, dated the 16th April 1974, relating to declaration of Erode as Local Planning Area under section 10(1) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [Laid on the table of the House under section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

* 8. Notification issued with G.O. Ms. No. 2487, Rural Development and Local Administration, dated the 25th November 1974, in regard to amendments to the Conduct of Election of Madurai Corporation Councillors Rules, 1972. [Laid on the table of the House under section 432(2) of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971).]



*9. Notification issued with G.O. Ms. No. 1059, Rural Development and Local Adiministration, dated the 19th April 1974, in regard to exclusion of villages of Usilampatti, Kannudaiyanpatti and Kalingapatti from the limits of Manapparai Municipality. [Laid on the table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

* 10. Notification issued with G.O. Ms. No. 587, Agriculture, dated the 2nd April 1974, relating to the regulation of trade in paddy in Coimbatore district. [Laid on the table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

* 11. Notification issued with G.O. Ms. No. 1915, Rural Development and Local Administration, dated the 27th August 1974 making the Madurai Corporation Services Pension Rules, 1971. [Laid on the table of the House under section 432(2) of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971).]

*12. Notification issued with G.O. Ms. No. 1929, Rural Development and Local Administration, dated the 29th August 1974 in regard to an amendment to the Tamil Nadu Service Rules 1970. [Laid on the table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920) ].

*13. Notification issued with G.O. Ms. No. 1670, Rural Development and Local Administration, dated the 16th July 1974, in regard to amendments to the Tamil Nadu Municipal Service Rules, 1970. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920). ]

*14. Notification issued with G.O. Ms. No. 2208, Rural Development and Local Administration, dated the 14th October 1974, in regard to amendments to the Tamil Nadu Municipal General Service Rules, 1970 (in Part III—Special Rules—Section 1 of the Tamil Nadu Municipal Service Rules, 1970). [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

* 15. Notification issued with G.O. Ms. No. 586, Agriculture, dated the 2nd April 1974, relating to regulation of trade in chillies in Coimbatore district. [Laid on the table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

12. Agricultural production has to be intensified in the future months in view of the drought situation and several steps have been taken in this regard. A number of concessions and facilities have been provided to encourage farmers to grow a third crop during the summer months. They have been assured adequate quantities of fertilisers and pesticides along with credit facilities from the Co-operatives. They will also be provided with an assured supply of power. The third crop will be exempted from levy procurement. I trust that these concessions and facilities will result in a large number of farmers coming forward to harvest a third crop wherever it is possible to do so.

13. We are taking a number of specific steps to ensure that agricultural production in the coming season is safeguarded. Rs. 60 lakhs have been provided for the procurement of seeds which will be required by farmers for the next season. We are providing Rupees one-crore for the purchase of drilling equipment and explosives for ground-water programmes throughout the State. In addition, an emergency scheme has been sanctioned for supple-



menting the availability of water in the Grand Anicut Canal from groundwater sources to benefit areas at the tail end.

14. The drought has also cast its shadow on the drinking water position in urban areas. As far as Madras City is concerned, additional financial assistance of Rs. 1,05.5 lakhs has been made available to the Corporation for sinking 4,000 masonry wells and 5,000 tube-wells and for increasing the fleet of lorries to 50 and the number of tanks to 800. The Tamil Nadu Water-Supply and Drainage Board has implemented a number of Water-Supply Schemes both for urban and rural areas. In the Fourth Plan a total expenditure of Rs. 46 crores was incurred for the purpose. After the formation of TWAD in 1971, an expenditure of Rs. 19.8 crores has been incurred. There is now protected water-supply in the two Corporations, 8 Town Municipalities, 5 Municipal Townships, 8 Panchayat Townships and 81 Town Panchayats serving about 65 per cent of the urban population in Tamil Nadu. In the current year, 25 Urban Water-Supply Schemes are expected to be completed and schemes in 112 towns in the State are in various stages of execution. As far as rural areas are concerned, TWAD will be providing water-supply to 634 scarcity villages and 1,041 endemic villages in 1974-75. An allocation of Rs. 4.5 crores has been made for this purpose. In addition, 1,500 bore-wells at a total cost of Rs. 50 lakhs will be constructed with the help of the UNICEF. Measures have also been taken to expenditure the Veeranam Water Supply Scheme by increasing the rate at which pipes are manufactured and laid. This project is in an advanced stage and it is hoped that its benefits will be available in the first half of 1976.

15. The drought has once again drawn attention to the vulnerability of the power situation in Tamil Nadu which is still heavily dependent on hydel power. Out of the total installed capacity of 2,254 MW in the State, 1,224 mega watts are based on hydel sources. We have almost fully utilised our water resources in Tamil Nadu. We are far away from the sources of coal. It is, therefore, clear that future expansion in power generation has to be based on nuclear sources and lignite which is available within the State. It is in this context that we are pressing the Government of India to expedite the commissioning of the Kalpakkam Nuclear Project. The expansion of this plant with the addition of a third unit with a capacity of 500 MW should also be initiated without further delay. We have also proposed a second nuclear power station around Tuticorin with an installed capacity of 1,000 MW. I trust that the Government of India will expedite decisions in this regard.

16. It is also necessary for the Centre to go ahead without further delay with the second mine cut at Neyveli which can feed a second thermal station with a capacity of 1,000 MW. This will be a long gestation project which might take 7 to 8 years for completion. It is, therefore, all the more necessary that there should be no further delay in initiating the preparatory work. The continued postponement by the Government of India of major projects which are needed for the long term viability of the industrial and agricultural future of the State is a matter which cannot but cause deep concern. In the face of short-term difficulties, we should not lose sight of the horizon of long-term development and growth. It may appear that a particular project is too massive and the benefits expected from it are too distant in the future for the initial decision to be made now. However, experience throughout the country in the last two decades of Planning has amply demonstrated that in crucial sectors such as power, generation and supply should be constantly ahead of demand. A bold approach in this core sector of development is, therefore, necessary. I trust, that such a decision will be taken without further delay in initiating work on the second mine cut in Neyveli so that we are not found wanting, ten years from now, in not having made adequate provision for the development and growth of Tamil Nadu.

17. I would now like to refer to some of the areas in which we need sympathetic understanding and urgent assistance from the Union Government. Foremost among our requirements is the need for supplementing our own vigorous procurement programme with timely and adequate allocations of foodgrains in order to maintain an adequate public distribution system. Again at expected deficit of 2 million tonnes in internal production, our request for one million tonnes of foodgrains for the next ten months cannot by any means be considered to be too high a demand. In past years, whenever it has been favoured with a good crop, Tamil Nadu has voluntarily come forward to share its surplus with other States in India. Similarly when we are faced with a deficit situation today neighbouring States such as Andhra Pradesh which have a surplus are willing in principle to give us assistance provided that the necessary clearance is forthcoming from the Centre. According to present indications, the crop is likely to be very satisfactory in most other parts of India. The Government of India also have a large import programme with which they should be able to supplement internal availability of foodgrains. We are, therefore, confident that Government of India can assist Tamil Nadu and surely find a way to ensure that the minimum needs of this State are fully met in the months to come. We have been assured by



the Centre that they fully share our concern in this matter and I hope that this assurance will be translated into an increased allocation of foodgrains and of rice, to the maximum extent possible, to our State.

18. I had referred earlier to the fact that we have approached the Centre for an assistance of Rs. 30 crores for undertaking drought relief works. We hope that the Centre will follow up their assistance of Rs. 7.5 crores in the current year with the balance in 1975-76. According to the arrangements introduced as a result of the report of the Sixth Finance Commission, the special assistance programme for taking care of natural calamities has been discontinued. Instead, each State is expected to make an annual contribution to a fund for the relief of natural calamities and to use this fund to meet unforeseen natural calamities. Accordingly, as recommended by the Finance Commission, we have made a contribution of Rs. 1.52 crores to the Fund in the current year. Unfortunately, droughts, floods and other natural calamities do not respect the niceties of financial formulate and do not wait for such funds to be built up in an orderly manner before they make their presence felt. An extraordinary development of this kind will, therefore, necessarily have to be met by special measures. We hope that the Centre will take a practical approach to this problem and provide us with assistance which can be rapid over a period of years so that the development and welfare programmes in our State do not have to be cut because of the drought. Indeed, the needs of drought relief would themselves require an enhancement in the Plan provisions for a number of rural development schemes. It would, therefore, amount to a double punishment if normal development receives a set-back because of the drought.

19. In the present situation, we have also to take up a number of emergency production programmes which will increase the availability of water for agriculture. The enlargement of the normal programme for electrification of pumpsets from 30,000 pumps per annum to 60,000 in the coming year is the most important of these. This programme will need an additional allocation of Rs. 10 crores for the power sector and we hope that such programmes would also qualify for special assistance from the Centre.

20. It has been a matter of the greatest satisfaction that total prohibition has been reintroduced throughout the State with effect from 1st September 1974. Prohibition is also a Directive Principle of State Policy enshrined in the Constitution of India. Unfortunately for purely technical reasons, the Sixth Finance Commission did not

take into account the loss to the State revenues that would arise from the introduction of prohibition. We have estimated that this loss will amount to Rs. 234 crores in the Fifth Plan period, i.e., before the award of the next Finance Commission could come into force the Government of India had a scheme between 1969 and 1974 under which they used to compensate 50 per cent of the loss to States which introduced prohibition. We have moved them to revive this scheme and to at least partially compensate Tamil Nadu which has embarked on this bold measure. It is necessary for the Centre to come to the assistance of States at least for a limited period before the States can redress their ways and means position through their own efforts.

21. It is an anomaly that despite rising expectations and rapidly rising costs, Central assistance for Plan Schemes has remained constant in the last two years. We also understand that there is likely to be no increase in Central assistance to States in the coming year. This has led to a situation where the entire tempo of development has to be kept up through the internal effort of State Governments whose resources and fiscal powers are severely limited. The responsibilities of State Governments are rapidly increasing from day to day and it is unrealistic to have a system of devolution of development assistance which is belonging totally inelastic. I would appeal to the Centre to take serious and urgent notice of this anomaly and to suitably increase Plan assistance to all the States in the coming year.

22. One other aspect in which Tamil Nadu has a special burden to carry arises from the fact that Madras City is one of the major metropolitan centres of India. It serves not only our State but a large hinterland for which it is the shipping and commercial centre. The needs of this City should, therefore, legitimately be met as a co-operative enterprise by the Centre and the State. Assistance from Metropolitan Development Funds available with the Centre is being given to other major cities such as Calcutta and Bombay. The requirements of water supply, housing slum clearance, communications and transportation in the city are of such a stupendous magnitude, that massive and urgent attention should be given to them in time. Here again, we hope that the Centre would take an imaginative and sympathetic approach and come to our assistance in tackling what are after all national problems.

23. If I have touched at some length on the areas in which the co-operation and assistance of the Centre is required, it is not because I wish in any manner to minimise the many ways in which



we should carefully conserve and increase our own resources for development and drought relief. It is in fact in the context of our own prudent financial approach that we feel we have a special claim for consideration by the Centre in times of need. The Government has initiated a number of measures for achieving economies in administration. We have also had an excellent record in the additional mobilisation of resources both through taxation and by way of mobilising private savings. Our State has once again been a pioneer in this field by introducing the Tamil Nadu Social Security Scheme, 1974 which is designed to mobilise individual savings from large numbers of people to provide them with social security while, at the same time, promoting social investments. I would appeal to all Members of the Legislature to popularise this scheme which aims at benefiting the investor and the State alike.

24. We are now passing through difficult times both in the national sphere and in our own State. We, however, face the situation with the firm confidence that we shall overcome the present difficulties and emerge from them with full success and added strength. In 1969, we had the experience of facing a drought and three years later in 1972, we faced a serious flood. We have tackled these situations successfully and we shall do so again.

25. The paramount needs of the hour are unity and understanding among all sections of the people. Although the coming year is a pre-election year, I am sure that Members of all political persuasions will agree that food is beyond politics and will come forward with their full co-operation in meeting this challenge. We are a proud and ancient people with great traditions. I am sure that everyone of us will wholeheartedly cooperate with the Government in its efforts to meet the various needs of the people throughout the State in the months ahead. I would add a special word of appeal to the employees of the State Government, at all levels, to work with total dedication in this hour of need.

26. I look forward to your deliberations in the ensuing session. I have no doubt they will be conducted with a high sense of duty and responsibility and in our customary spirit of cordiality and mutual tolerance for which we have the admiration of our countrymen. Sobriety and an anxiety to give and take have been the cornerstone of our public life. This is an asset for any developing society. I hope and pray Tamil Nadu will continue to give a lead in making democracy a mode of living.

Vanakkam.

## தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

---

**சனிக்கிழமை, 1975 பிப்ரவரி 22.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள் 11-ம், 12-ம் ஒத்திவைக்கப்படுகின்றன.

### *Conversion of lands around Mettu Channel in Musiri taluk, Tiruchirappalli district into double crop lands*

*13 Q.—Thiru Y. VENKATESWARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(a) whether the Government have taken any action to convert the lands at Mettu Voikal area, Musiri taluk, Tiruchirappalli district into double crop lands; and

(b) the fasli year from which such action will be taken?

### திருச்சி மாவட்டம், முசிறி வட்டத்தில், மேட்டு வாய்க்கால் பகுதியில் உள்ள நிலங்களை இருபோக சாகுபடிக்கு ஏற்ப மாற்றல்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சி மாவட்டம், முசிறி வட்டத்தில், மேட்டு வாய்க்கால் பகுதியில் உள்ள நிலங்களை இருபோக சாகுபடிக்கு மாற்ற அரசு நடவடிக்கை எடுக்க இருக்கிறதா?

(இ) ஆமெனில், எந்த பசலியில் இருந்து எடுக்கப்படும்?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) இல்லை.

(இ) இவ்வினாவுக்கு இடமில்லை.

[1975 பிப்ரவரி 22

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** மாண்புமிகு தலைவரவர்களே, முசிறி வட்டத்தில், மேட்டு வாய்க்கால் பகுதிகளில், தற்போது ஆயக்கட்டு உள்ள நிலங்களிலும் சாகுபடியாகிக்கொண்டிருக்கிறது. அங்கே இருபோக சாகுபடியாகிக்கொண்டிருக்கிறது. அது முறைப்படுத்தப்படாமல், 'கம்பவுன்ட்' செய்யப்படாமல் இருக்கிறது. எனவே இரு போகத் தீர்வை வசூலிக்கப்படாமல் இருக்கிறது. விவசாயிகளெல்லாம் தண்டத் தீர்வைக்கு உட்படுவதால், அந்த நிலங்களைச் சீக்கிரமாக இரு போக நிலங்களாக மாற்றி, அதற்கான தீர்வை விதிக்க அரசு ஆவன செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, தண்டத் தீர்வை பற்றிய வினா வருவாய்த் துறை அமைச்சரிடம் கேட்க வேண்டிய வினாவாகும். இந்தக் கேள்வியில் மேட்டு வாய்க்கால் பகுதியைப்பற்றி மட்டும் கேட்டிருக்கிறார்கள். முசிறி வட்டம் பூராவும் பற்றிக் கேட்கப்படவில்லை. மேட்டு வாய்க்கால் பகுதி என்பது முள்ளிபாளையம்—294 ஏக்கர் ; முசிறி 421 ஏக்கர் அடங்கியதாகும். இவைகள் ஒரு போக நிலங்களாக இருக்கின்றன. அவைகளை இரண்டு போக நிலங்களாக ஆக்குவதற்கில்லை. அப்படி ஆக்குவதற்கான திட்டமும் இல்லை. முசிறி தாலுகாவில் வேறு இடங்கள் இருக்கின்றன. கேள்வி மேட்டு வாய்க்கால் பற்றியதாகையால், இல்லையென்று சொன்னேன்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவரவர்களே, மேட்டு வாய்க்கால் பகுதியில் இரண்டு போகம் பயிராகின்றது. ஏற்கெனவே ஒரு போகம் பயிர் செய்து கொண்டிருந்தார்கள். அதை 'கம்பவுன்ட்' செய்துவிட்டால், விவசாயிகளுக்குத் தண்டத் தீர்வை இருக்காது. அதைச் சீக்கிரம் அரசு செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, இதுபோல தமிழ்நாட்டில் பல இடங்களில், ஒரு போக சாகுபடி இருக்கும் இடங்களில் இரண்டு போக சாகுபடிக்குத் தண்ணீரைப் பயன்படுத்துகிறார்கள். இதையெல்லாம் முறைப்படுத்த வேண்டுமென்று பொதுப்பணித் துறையிலே நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். தண்டத் தீர்வை என்று விதித்து, அங்கிருக்கும் விவசாயிகள் கோரிக்கைகளை அரசாங்கத்திடம் வைத்து, பிறகு அரசு தண்டத் தீர்வையை ரத்து செய்கிறது. அரசு இதுவரை தண்டத் தீர்வை வசூலிப்பதாக இல்லை ; வசூலித்ததும் இல்லை. தண்டத் தீர்வை விதித்தாலும், அவர்கள் 'ஸ்டே' வாங்குவதுதான் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பல ஆண்டுகளாக அவர்கள் தண்ணீரை உபயோகித்துக்கொண்டு வருகிறார்கள். அதை எப்படி ரெகுலரைஸ் செய்வது என்று பொதுப் பணித் துறையினர் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். விரைவில் அதுபற்றி முடிவெடுக்கப்படுமென்று, தங்கள் மூலமாக அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1975 பிப்ரவரி 22]

**திரு. கே. ராஜாராம் :** தலைவரவர்களே, கேள்வி முசிறியைப் பொறுத்த மட்டும் இருந்தபோதிலும், பதில் மாநிலம் தழுவியதாக இருக்கிறது. மற்ற ஜில்லாக்களிலும் இதுமாதிரி புஞ்சை சாகுபடி செய்யப்படுகிறது. கண்மாய் நிறைந்துவிட்டால், அந்த நிலங்களில் தண்ணீர் 'பெர்கொலேட்' ஆகிறது. ஆகவே நஞ்சை சாகுபடி செய்ய வேண்டிய அவசியத்தின் பேரில் பல தாலுக்காக்களில் நஞ்சைப் பயிர் செய்கிறார்கள். எனவே இவைகளை ஒட்டு மொத்தமாகப் பரிசீலனை செய்து முடிவெடுக்க வேண்டும். அவர்கள் நஞ்சை பயிர் செய்கிறார்கள் ; தண்டத் தீர்வை விதிக்கப்படுகிறது ; அவர்கள் அரசுக்கு மனு கொடுக்கிறார்கள். ஒவ்வொரு வருஷமும் தண்டத் தீர்வையை ரத்து செய்கிறார்கள். இந்த மாதிரி இருப்பதைவிட, அவை பூராவையும் 'கம்பவுன்ட்' செய்து நஞ்சைத் தீர்வை விதித்து, ஒழுங்கு செய்ய அரசு முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, நான் அதைத்தான் சொன்னேன். ஓரிடத்திற்கு மட்டுமல்ல, முசிறியைப் பொறுத்த மட்டுமல்ல என்று சொன்னேன். தமிழ் நாட்டில் பொள்ளாச்சி பி.ஏ.பி. பகுதிகளில் நாம் புஞ்சைக்குத் தண்ணீர் கொடுக்கிறோம். அவர்கள் நஞ்சைப் பயிர் வைக்கிறார்கள். அப்படி வைப்பதற்கான அவசியமும் ஏற்படுகிறது. ஏனென்றால் எப்போதும் நீர் ஓடிக்கொண்டிருப்பதால், புஞ்சை வைக்க முடியாது. அதை எப்படி ரெகுலரைஸ் செய்யலாம் ; எப்படி ஒழுங்குபடுத்தலாமென்பது பரிசீலனையில் இருக்கிறது. அவர்கள் இருபோகச் சாகுபடிக்குத் தண்ணீர் எடுத்துக்கொள்வதை முறையாக்கிவிட்டு, வரியை மட்டும் விதிக்கலாமா ; அதை ஒழுங்குபடுத்தினால் சரியாக இருக்குமாவென்று பொதுப்பணித் துறையினரை ஆராயும்படி சொல்லியிருக்கிறேன். அதற்கு வருவாய்த் துறையும் இணக்கம் தெரிவிக்குமென்ற நம்பிக்கை இருக்கிறது. முதலமைச்சரவர்களிடமும் சொல்லியிருக்கிறேன். அவர்களும் செய்து விடலாமென்று தெரிவித்திருக்கிறார்கள். இந்தத் தொடர் கூட்டத்திலேயே அதைப்பற்றி ஒரு முடிவு வருமென்று நம்புகிறேன். சேலம் மாவட்டத்தில் இப்படி தண்ணீரை பல ஆண்டுகளாக உபயோகித்துக்கொண்டு வருகிறார்கள். லிப்ட் இர்ரிகேஷன் சொசைட்டிகளாக மாற்றி, அதை 'பைப்பின்' யூனிட்டாக்குவது நல்லதென்ற கருத்தும் இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை மற்ற பகுதிகளிலும் செய்ய அரசு ஏற்பாடு செய்திருக்கிறது.

**திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் :** தலைவரவர்களே, இப்போது பேசியது ஆற்றுப் பாசனத்தைப் பொறுத்தா அல்லது இது ஏரிப் பாசனத்திற்கும் பொருந்துமா என்று அறிய விரும்புகிறேன். ஏரிப் பாசனத்திற்கு ஆயக்கட்டு இருக்கிறது. ஒரு ஏரியை எடுத்துக்கொண்டால், அதற்கு 100 அல்லது 200

ஏக்கர்கள் ஆயக்கட்டு இருக்கிறது. அந்த ஆயக்கட்டு அளவுக்குப் பாயும் தண்ணீர்தான் ஏரியில் நிற்கும். அங்கே நஞ்சை 200 ஏக்கரும், புஞ்சை 500 ஏக்கரும் இருக்கும். நஞ்சைக்குப் பாய வேண்டிய தண்ணீரை புஞ்சைக்குப் பாய்ச்சினால், நஞ்சையும் வளராமல் போகிறது. புஞ்சைக்கும் பயன்படாமல் இருக்கிறது. நான் ஏரிப் பாசனம் உள்ள இடத்தைப்பற்றிச் சொல்கிறேன். ஆற்றுப் பாசனத்தைப் பற்றிச் சொல்லவில்லை. ஆயக்கட்டு உள்ள பகுதிக்குத் தான் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். அதை மீறி புஞ்சைக்குத் தண்ணீர் பாய்ச்சினால் நஞ்சையும் கெட்டுவிடும். எனவே அதன் முழு விவரத்தையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** துணை வினாக்கள் சுருக்கமாக இருக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, நான் சொல்லியது, ஆற்றுப் பாசனத்தைப்பற்றித்தான்.

**திரு. கே. எஸ். கணபதி:** தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கூறியதுபோல, புஞ்சையாக உள்ள நிலங்கள் நஞ்சையாக மாற்றப்படுமானால், அந்த நிலச்சுவாந்தார்களுக்கு உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் அவர்களுடைய உடைமைகள் அதிகரிக்கும். அது எப்படி பாதுகாக்கப்படும் அல்லது பாதிக்கப்படும் என்பதை அமைச்சரவர்கள் கூறுவார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, வருகிற சிக்கலே அங்குதான். தண்ணீரையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்; அது புஞ்சையாகவும் இருக்க வேண்டும். புஞ்சையாக இருந்தால் 60 ஏக்கர் வைத்துக் கொள்ளலாமென்று உச்ச வரம்புச் சட்டத்தில் இருக்கிறது. எனவே புஞ்சையாக இருக்க வேண்டும். ஆனால் தண்டத் தீர்வை கட்டாமல் இருக்க வேண்டுமென்று சிலர் இருக்கிறார்கள். எப்போது அவற்றை நஞ்சையாக மாற்ற வேண்டுமென்ற உறுதியோடு இருக்கிறோமோ அப்போது அவற்றை நில உச்ச வரம்புச் சட்டம் பாதிக்கும்.

### *Ban on Inter-State movement of fertilizers*

* 14 *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(*a*) whether there is any ban on Inter-State movement **of fertilizers**;



(*b*) if so, whether there is any smuggling of fertilizers from our State to other States; and

(*c*) if so, the action taken by the Government to prevent such smuggling?

### மாநிலங்களுக்கிடையே உரத்தைக் கொண்டு செல்வதற்குத் தடை

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) மாநிலங்களுக்கிடையே உரத்தைக் கொண்டு செல்வதற்குத் தடை ஏதேனும் இருக்கிறதா?

(இ) ஆமெனில், நமது மாநிலத்திலிருந்து ஏனைய மாநிலங்களுக்கு உரம் கடத்தப்படுகிறதா?

(உ) ஆமெனில், அவ்வாறு கடத்தல் செய்யப்படுவதைத் தடுக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது?

THE HON. THIRU SI. PA. ADITANAR:—Mr. Chairman, Sir, the answer is placed before the House in the form of a statement. @.

### *'Ponni' variety of paddy*

* 15 *Q.*—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(*a*) whether the Government are aware that the yield of 'Ponni' variety of paddy grown in Tiruchirappalli and Thanjavur districts during the 1973–74 Samba season was poor; and

(*b*) if so, the reasons therefor?

### பொன்னி நெல் ரகம்.

**திரு. கே. எஸ். கணபதி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1973-74 ஆம் ஆண்டில் சம்பாப் பயிர் சாகுபடியின்போது, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் பயிரிடப்பட்ட 'பொன்னி' நெல் ரகம் குறைந்த மகசூலையே தந்துள்ளது என்பதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், அதன் காரணங்கள் யாவை?

---

@ 137–140 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) & (இ) விவர அறிக்கை @ ஒன்று இம் மாமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.

*Special concessions for Children of Members of Prosperity Brigade*

* 16 Q.—THIRU M. MASILAMANI: Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal with the Government to absorb in Government service, the children of the members of the Prosperity Brigade, by showing special concessions?

**சீரணியில் பணியாற்றுகின்றவர்களின் பிள்ளைகளுக்கு விசேஷச் சலுகைகள்**

**திரு. மு. மாசிலாமணி :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சீரணியில் பணியாற்றுகின்றவர்களின் பிள்ளைகளுக்கு விசேஷச் சலுகை மூலம் அரசுத் துறையில் பணியாற்றுவதற்கான திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இல்லை.

*Waiting room in the Collector's offices for the public*

* 17 Q.—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether there are waiting rooms in the Collector's offices for the public; and

(b) if not, whether there is any proposal to provide such waiting rooms in all the Collectorates ?

**மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அலுவலகங்களில் பொதுமக்கள் தங்குவதற்கான அறைகள்.**

**திரு. டி. சந்தோஷம் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அலுவலகங்களில் பார்வையாளர்கள் காத்திருப்பதற்கான அறைகள் உண்டா ?

(இ) இல்லையெனில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அலுவலகங்கள் அனைத்திலும் அதுபோன்ற அறைகள் அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

@ 140-141 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.





**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) சென்னை, காஞ்சீபுரம், மதுரை ஆகிய நகரங்களிலுள்ள மாவட்ட ஆட்சியரின் அலுவலகங்களில் மட்டும் பொது மக்கள் தங்குவதற்கான அறைகள் உள்ளன. மற்ற மாவட்ட ஆட்சியரின் அலுவலகங்களில் பொதுமக்கள் தங்குவதற்காக தனிப்பட்ட அறைகள் இல்லை. ஆனால், அம் மாவட்ட ஆட்சியின் அலுவலகங்களில் காலியாகவுள்ள இடங்களை மரப் பலகைகளால் தடுத்தும், அமர்வதற்குத் தேவையான நாற்காலிகள் போட்டும், பொதுமக்கள் தங்குவதற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

(இ) இதற்கு இடமில்லை.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** தலைவரவர்களே, குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத் தலைநகர் மதுரையில் இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு மக்கள் பிரதிநிதிகள் சென்றால், அவரைச் சந்திப்பதற்கு முன்னால் வாசலிலோ அல்லது மரத்தடியிலோ தங்க வேண்டிய நிலை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அப்படிச் செய்திருந்தால், இங்கேயும் அந்த ஏற்பாடுகளை உடனடியாகச் செய்ய அரசு முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, அந்த மாவட்டத்திலே மாத்திரமல்ல, எல்லா மாவட்டங்களிலும் அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறதென்பதை நான் அறிவேன். அதற்காக வருவாய்த் துறையிலே ஏறத்தாழ 50 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, பல்வேறு சிறப்புப் பணிகளைச் செய்யுமாறு அரசு ஆணையிட்டிருக்கிறது.

*Seizure of unaccounted diesel oil*

* 18 Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the Revenue Divisional Officer, Sivakasi, has seized the unaccounted diesel oil from Messrs. Thiagarajan Automobile Company, Arupukkottai, during May 1974;

(b) if so, the estimated value of the oil so seized; and

(c) the action taken against the company by the Government?

**கணக்கில் காட்டப்படாத டீசல் எண்ணெயைக் கைப்பற்றல்**

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சிவகாசி கோட்டாட்சித் தலைவர், 1974-ஆம் ஆண்டு, மே மாதத்தில் அருப்புக் கோட்டையில் உள்ள தியாகராசன் ஆட்டோ மொபைல்ஸ் கம்பெனியில் இருந்து கணக்கில் காட்டப்படாத டீசல் எண்ணெயைக் கைப்பற்றினரா ?

(இ) ஆமெனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

(ஈ) அக்கம்பெனி மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) ஆம்.

(இ) 5,400 லிட்டர்கள்.

(ஈ) இதைப்பற்றிப் புலன் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது.

(பிற்பகல் 4-10)

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** தலைவர் அவர்களே, இந்தப் பதுக்கல் கடுமையான முறையில் இந்த அரசால் தடுக்கப்பட்டிருக்கிற நேரத்தில் இந்த தனிப்பட்ட கம்பெனி விவசாயிகளுக்கு ஒரு லிட்டர் கூட கொடுக்காமல் இப்படி மிகப் பெரிய மோசடியில் ஈடுபட்டது. ஆகவே, விசாரணை முடிந்த பின்பு அது நிரூபிக்கப்பட்டால் இதுபோன்ற நிறுவனங்களுக்கு அரசு கடுமையான தண்டனை பிறப்பிக்க முன்வருமா என்றும், அவர்களுடைய லைசென்ஸ் ரத்து செய்யப்படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்றும், உணவு தானியங்களைப் பதுக்கிவிட்டால் லைசென்சை ரத்து செய்கிற அதிகாரத்தை இதுபோன்ற காரியங்களுக்கும் பிரயோகிக்க அரசு முன்வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, நெருக்கடியான காலத்தில் இது போன்று டீசல் எண்ணெயைப் பதுக்கி வைத்து ஒழுங்குமுறை விதிகளை மீறி அவர்கள் செயல்படுகிறார்கள். இது சம்பந்தமாக தீவிரமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று நம்முடைய அரசு ஏற்கெனவே மத்திய அரசிடம் தெரிவித்திருக்கிறது. ஏனென்றால், இப்பொழுதுள்ள சட்டத்தின்படி 5,000 ரூபாய்க்குமேல் அபராதம் போட முடியாதென்று இருக்கிறது. நாம் இந்த அபராதத் தொகையினை அதிகப்படுத்த வேண்டுமென்றும் அதே நேரத்தில் லைசென்சையும் ரத்து செய்வதற்குரிய வகையிலே திருத்த வேண்டுமென்றும் மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம்.

THIRU D. SANTOSHAM: Mr. Chairman, Sir, I would like to know whether the matter is not *sub judice;* and if so, whether this matter is not being pre-judged.

MR. CHAIRMAN: It is not *sub judice.* The Central Government are approached for the enhancement of the punishments.

THIRU D. SANTOSHAM: Sir, this particular matter is *sub judice.*





THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir, we have requested the Government of India to make a strong penal provision to prevent such malpractices. As such it is not *sub judice.*

*Self-appointed brokers at the Egmore Railway Station*

*19 *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the Government are aware that self-appointed brokers at the Egmore Railway Station are engaging taxis for passengers without their consent at exorbitant rates; and

(*b*) if so, the action proposed to be taken by the Government in the matter?

**எழும்பூர் இரயில் நிலையத்தில் வலுவில் வரும் தரகர்கள்**

*திரு. ஜி. சுவாமிநாதன் :* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) எழும்பூர் இரயில் நிலையத்தில் வலுவில் வரும் தரகர்கள், பயணிகளின் இசைவின்றியே மட்டுமீறிய கட்டண வீதங்களில் அவர்களுக்காக வாடகைக் கார்களை அமர்த்துவதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், இது தொடர்பாக அரசு எடுக்கக் கருதியுள்ள ...க்கை யாது?

**...ண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) & (இ) இதைப்பற்றி அறிந்...ற இரயில்வே காவற் படையினர் இத்தொல்லையினைத் தடுக்க, தேவை ...டவடிக்கை எடுத்துள்ளனர்.

*'Hazardous Bussing'*

... Q.—THIRU D. SANTOSHAM (on behalf of THIRU D. V. ...TE): Will the Hon. the Minister for Transport be ... to state—

...) whether the attention of the Government has been ...o the Editorial, which appeared in "The Hindu", dated ...gust 1974, under the caption 'Hazardous Bussing';

... whether the Government have issued any instructions ...nt such unfortunate accidents in the future;

... the steps, the Government propose to take to prevent ...ding and footboard travel in buses; and

[1975 பிப்ரவரி 22

(d) whether there are any instructions to Bus Drivers regarding the speed limit to be observed while plying the houses in City limits?

## ஆபத்தான பேருந்துப் பயணம்

**திரு. டி. சந்தோஷம் (திரு. டி. வி. டி'மான்டி சார்பில்):** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) "Hazardous Bussing" என்ற தலைப்பில் 19—8—1974 நாளிட்ட 'இந்து' நாளிதழில் வெளியான தலையங்கம் அரசின் நாட்டத்திற்குக் கொண்டு வரப்பட்டதா?

(இ) வருங்காலத்தில், அத்தகைய விபத்துக்களைத் தடுக்க அரசு ஏதேனும் கட்டளைகளைப் பிறப்பித்துள்ளதா?

(உ) பேருந்துகளின் படிகளில் நின்று கொண்டு பயணம் செய்வதையும், அதிக நெரிசலையும் தடுக்க அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைகள் யாவை?

(எ) மாநகர எல்லைக்குள் பேருந்துகளை ஓட்டும் போது அனுசரிக்க வேண்டிய வேகக் கட்டுப்பாட்டைப்பற்றி ஏதேனும் கட்டளைகள் பேருந்து வலவர்களுக்குப் பிறப்பிக்கப்பட்டுள்ளனவா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) ஆம்.

(இ) படிகளில் நின்று செல்லும் பேருந்துப் பயணிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு காவல் துறைக்கு 1974 மார்ச்சிலேயே கட்டளைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன.

(உ) போக்குவரத்து நெரிசலைக் குறைக்கச் சென்னை மாநகரில் 200 புதிய பேருந்துகளை போக்குவரத்துப் பணியில் விட பல்லவன் போக்குவரத்துக் கழகம் கருதியுள்ளது.

(எ) நெரிசல் மிகுந்த பகுதிகளில் அல்லது கட்டிடங்கள் நிறைந்த பகுதிகளில் உள்ள சாலைகளில் மணிக்கு 35 கிலோ மீட்டர் வேகத்திலும் ஏனைய பகுதிகளில் உள்ள சாலைகளில் மணிக்கு 60 கிலோ மீட்டர் வேகத்திலும் செல்ல வேண்டுமென்று பேருந்துகளுக்கு உயர் அளவு வேக வரையறையை அரசு முன்னரே முடிவு செய்துள்ளது.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** தலைவர் அவர்களே, சென்னை நகரில் மட்டும் பஸ்களிலே படிக்கட்டுகளில் நின்று பயணம் செய்பவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுகிற விதிமுறைகள் உருவாக்கப்பட்டிருப்பதுபோல் மதுரை நகரத்திலும் இதே முறையில் நகரப் பேருந்து பஸ்களிலே படிக்கட்டுகளிலே



1975 பிப்ரவரி 22]

பிரயாணம் செய்பவர்களுக்கு ஏதாவது அபராதம் விதிப்பதற்கு அரசு முன் வருமா என்றும், அதற்குரிய அரசாணை பிறப்பிக்குமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, சட்டத்தைப் பொறுத்தவரையில், எல்லா இடமும் ஒன்றுதான். மதுரையில் அப்படி நிகழ்ச்சிகள் இருக்குமேயானால், அதையும் காவல் துறை கவனித்து நடவடிக்கை எடுக்கும்.

MR. CHAIRMAN : Questions are over.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

MR. CHAIRMAN : Thiru D. Santosham.

(Thiru D. Santosham did not rise.)

MR. CHAIRMAN : Has the hon. Member not given his name for speaking today?

THIRU D. SANTOSHAM : I have not given my name for today, Sir. I have given my name for 24th.

MR. CHAIRMAN : Thiru Y. Venkateswara Dikshidar.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் பேரில் நானும் சில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன். ஆளுநர் அவர்களின் உரையானது எப்போதும் போல் பழைய நிலைமையிலேயே இருக்கின்றதே தவிர, தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் பஞ்ச நிலவரத்திற்கு ஆறுதல் அளிக்கக்கூடிய வகையிலே எந்தவிதமான ஊக்கமும் ஆக்கமும் அளிக்கக்கூடியதாக இல்லை. காரணம், தற்காலத்தில் இந்த வறட்சியானது தமிழ் நாட்டிலே கொடூரமாக மக்களை பாதித்திருக்கிறது. இந்தக் கொடூரத்துக்குத் தகுந்தபடி நிவாரண வேலை வேகமாக இல்லாமல், மெதுவாக நடந்து கொண்டிருக்கிறது. ஜனங்கள் எவ்வளவு கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிறார்களோ அதற்குத் தக்கபடி இல்லாமல், நிவாரண வேலை மிகவும் தாமதமாக நடந்துகொண்டிருக்கிறது. இந்த மாதிரி வறட்சி சரித்திர காலத்திலேயே இருந்திருக்கிறது. பாண்டிய அரசர் காலத்திலேயே 12 வருஷம் இந்த மாதிரி வறட்சி மக்களைப் பாதித்திருக்கிறது. அந்த 12 வருஷப் பஞ்சத்தை அந்தக் காலத்திலே எப்படியோ சமாளித்

இருக்கிறார்கள். போக்குவரத்து வசதி கிடையாது, வேறு எந்தவிதமான வசதியும் கிடையாது. அப்படிப்பட்ட காலத்திலேயே சமாளிக்கும்போது, இந்தக் காலத்தில் தமிழ்நாட்டிலே எல்லா வசதிகளும், அதாவது, போக்குவரத்து வசதி, ரயில் வசதி, பஸ் வசதி, லாரி வசதி இத்தனை வசதிகளும் இருக்கும்போது சரியான முறையிலே இந்த வறட்சியை சமாளிக்க முடியும். சமாளிப்பார்கள் என்றுதான் நினைத்தோம். ஆனால் கவர்னர் அவர்களுடைய உரையைப் பார்க்கும்போது, ஏமாற்றமாகத்தான் இருக்கிறது

இனிமேல் சமாளிப்பார்களோ, முடியாதோ. அப்படி சமாளித்தாலும் ரொம்ப மெதுவாகப் போனால், போய்க்கொண்டிருக்கிற உயிரைத் தடுத்து நிறுத்துவது ரொம்பக் கஷ்டம். இந்த 'குளோரோசின்' ஏதாவது கொடுத்தால்தான் சீக்கிரம் சமாளிக்க முடியும். மாத்திரை கொடுத்தால் ஏதாவது 'ஹார்ட் அட்டாக்' வந்துவிடும். நல்ல மருந்து கொடுத்தால்தான் போகிற உயிரை சீக்கிரம் தடுத்து நிறுத்த முடியும். மாத்திரை கொடுத்தால் அது ஜீரணமாகி இரத்தத்துடன் கலப்பதற்கு முன்னால் போகிற உயிர் போய்விடும். அந்த அளவிலே இன்றைக்கு ஆளுநர் அவர்களுடைய உரை அமைந்திருக்கிறது.

**ஒரு மாண்புமிகு உறுப்பினர் :** 'குளோரோசின்' என்றால் என்ன?

**திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** 'குளோரோமைசின்' இன்ஜெக்ஷன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** விஷ ஊசியா என்ன (பலத்த சிரிப்பு).

**திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** இந்த வறட்சியானது நாம் கண்ணாலே பார்க்க முடியாத வறட்சியாக இருக்கிறது. பருவமழை தவறிவிட்டது. திரு. ராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் தமக்கு 72 வயதாகிறது என்று சொன்னார்கள். எனக்கு 57 வயதாகிறது. இதுமாதிரி மழையில்லாமல் வறட்சியால் பாதிக்கப்பட்டதை நான் கண்ணாலே பார்த்ததே இல்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** எனக்கும் 69 வயதாகிறது. நான் கூட பார்க்கவில்லை.

**திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** ஏற்கெனவே, தாது வருஷத்திலே பஞ்சம் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். பஞ்சம் என்பது தாது வருஷத்திலே ஏற்பட்டிருக்கிறது. எங்கள் ஊரிலே பஞ்சக்கரை என்ற ஓர் ஊர் இருக்கிறது. பஞ்சத்தினால் பாதிக்கப்பட்ட ஒரு காலத்தில் அந்தக் கரையைப் போட்டார்களாம். ஆட்களுக்கு வேலை கொடுக்க, அவர்களுக்கு தானியம் விநியோகம் செய்ய ஒரு காரணம். வெறுமெனவே கொடுக்க முடியாதே. ஏதாவது கொடுக்க வேண்டும், உதவி செய்ய வேண்டும் என்பதற்காக, இம்மாதிரி கரைகள்



கட்டியிருக்கிறார்கள். இதுமாதிரி எல்லா ஊர்களிலும் இருந்திருக்கின்றது. பஞ்சம் ஏற்படும்போது, ஏழைகளுக்குத் துணி கொடுப்பது, தானியம் கொடுப்பது எல்லாம் ஆதிகாலத்திலும் இருந்திருக்கிறது.

தற்போது இந்த விவசாயம் ரொம்பவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. தாய்ப்பால் இல்லையென்றால் எப்படியோ, அதுபோல மழையில்லாமல் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கிறது. பம்புசெட்டுக்கள் மூலமாகவும், காவேரி நதி தீரத்திலிருந்தும் கிடைக்கிற தண்ணீரைப் பாய்ச்சினாலும், அது தாய்ப்பால் இழந்த அந்தக் குழந்தை மாதிரித்தான் இருக்கிறது. இவ்வாறு, அந்த விவசாயம் பாதித்ததனால், அதனுடைய சொந்தக்காரர்களான விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நம் நாட்டிலே, 100-க்கு 75 பேருக்கு விவசாயத்தைத் தவிர வேறு ஒன்றும் தெரியாது. இந்த நாட்டிலே 30-க்கு மேல் படித்தவர்கள் இல்லை. அதிலும் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது. இந்த விலைவாசி ஏற்றத்திலே, அதுவும் இந்த மொத்த மக்களில் 80 சதவீதத்தினர் விவசாயம் செய்பவர்களாய் இருப்பதனால், அவர்கள் ரொம்பவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படி பாதிக்கப்பட்டிருக்கிற வேளையிலே, இந்த விலைவாசி ஏற்றத்தைப்பற்றி ஒன்றுமே சரியான முறைப்படி கவர்னர் அவர்களுடைய உரையிலே சொல்லப்படவில்லை. விலைவாசி உயரவில்லை, பறந்துகொண்டுதான் இருக்கிறது என்றும் சொல்ல முடியவில்லை. இன்னும் இரண்டு மாதம் போனால்தான் இந்தப் பஞ்சத்தினுடைய சாராம்சம் தெரியப் போகிறது. ஏற்கெனவே இருந்த நெல், அரிசியை வைத்து நாம் கொஞ்சம் சமாளித்து விட்டோம். இந்த வறட்சி, மழையில்லை என்பது புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, இந்த 5 மாதங்கள்தான். அதற்குமுன் இந்த கார் அறுப்பு. ஜனங்கள் ஒன்றுக்குப் பாதி என்று ஒரு நிலைக்கு இந்த சம்பா அறுவடையிலே கொண்டுவந்திருக்கிறார்கள். விவசாயி படுகிற பாடு கொஞ்சநஞ்சமல்ல. இது நன்றாகத் தெரியும். மேலும் வறட்சிப் பகுதிகளைத் தேர்ந்தெடுப்பதிலே சிரமங்கள் இருக்கின்றன. தஞ்சாவூரிலே காவேரி டெல்டா இருக்கிறது. திருச்சிராப்பள்ளியில் ஒரு தொகுதி, முசிறி குளித்தலை தாலூக்காவில் ஒரு பகுதி, திருச்சி தாலூக்காவில் ஒரு பகுதி, ஆகிய இவைகளில் வறட்சி இல்லை. வறட்சிப் பகுதியிலேயாவது, தண்ணீர் இல்லை என்று சொல்லி கையில் விதைகள் எல்லாம் வைத்திருந்திருக்கலாம். விவசாயத்தை நம்பியிருக்கிற மக்கள் கையிலிருந்த விதையையும் கொண்டுபோய்ப் போட்டுவிட்டார்கள். கையிலிருந்த பணத்தைக் கொண்டும் அரைகுறையாகக் கடனும் வாங்கிக்கொண்டுபோய் போட்டுவிட்டார்கள். நிலைமை இன்றைக்கு இப்படியிருக்கிறது. அவ்வாறு அவர்கள் கொண்டுபோய்ப் போட்டு பயிர் செய்தது, சரியான முறையில் கருது வெளியில் வந்திருக்குமா, நீட்டின கருது ஒழுங்காக இருக்கின்றதா, அடித்தால் நெல் ஒழுங்காகச் சேரும் என்று அச்சப்

படுகின்ற அளவிலே இருக்கின்றது. மதிப்பிற்குரிய அமைச்சர்கள், உள்ளூர் அமைச்சர் அவர்கள் போய்ப் பார்த்துவிட்டு வந்திருக்கிருர்கள். மாண்புமிகு அமைச்சர் திரு. தர்மலிங்கம் அவர்களும் போய்ப் பார்த்துவிட்டு வந்தார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உள்ளூர் அமைச்சர் என்று சொன்னால் வெளியூர் அமைச்சர் என்று ஒருவர் வந்து விடுவார் போல் இருக்கின்றது.

(பிற்பகல் 4-20)

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** எங்கள் மாவட்ட அமைச்சர் என்ற அளவில் சொல்கின்றேன். திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலே ஆண்டி மடம், ஜெயங்கொண்டான், அரியலூர், பெரம்பலூர், துறையூர் பகுதிகளையெல்லாம் போய்ப் பார்த்துவிட்டு, விட்டுப்போன கிராமங்களிலே சிலவற்றை, நான் எடுத்துச் சொன்னதையெல்லாம் வறட்சிப் பகுதியாகச் சேர்த்திருக்கின்றார்கள். அதைப்பற்றி நான் சந்தோஷப்படுகிறேன். பல கிராமங்களினை விட்டிருந் தார்கள். கிட்டத்தட்ட 20, 28 கிராமங்கள் வரையில் இருந்தன. அவைகளையும் சேர்த்துவிடுவார்கள். அந்த வறட்சிப் பணிகளிலே ஈடுபடுவதற்குரிய வாய்ப்பை இப்போது கொடுத்திருக்கின்றார்கள். விவசாய ஜனங்கள் பாதிக்கப்பட்டத ஞலே தொழிலாளர்கள் வேலை கிடைக்காமல் இருக்கின்றார்கள். சரியான முறையில் விளையும் என்று நம்பியிருந்ததன் காரணமாக சில பகுதிகளை வறட்சிப் பகுதியிலே சேர்க்கவில்லை. தஞ்சைப் பகுதியும், திருச்சிப் பகுதியிலே ஸ்ரீரங்கமும் சேர்க்கப்படவில்லை. இதை கலெக்டரிடத்தில் போய்க் கேட்டால், ' உங்கள் பகுதியைச் சேர்க்கவில்லை. ஏனென்றால் இந்தப் பக்கம் காவிரி ஓடு கிறது, அந்தப் பக்கம் கொள்ளிடம் ஓடுகிறது " என்கிருர்கள். தண்ணீர் ஓட வில்லை, மணல்தான் ஓடுகிறது. மழை பெய்தால்தானே ! ஜலத்தையே காண வில்லை. இருக்கின்ற மணல்தான் கண்ணுக்கு ஜலம் ஓடுவதைப் போலத் தோன்று கிறது. ஏகமாக வெயில் அடித்தால், அது தண்ணீர் ஓடுகிறமாதிரித் தெரியும். புது ஜலம் வருகிறது என்றால், 3 நாளைக்கு வருகிறது. அதுவும் கடைமடை போவதற்குள்ளாகவே நின்று விடுகிறது. அப்படி விவசாயிகளுடைய கஷ்டம் இருந்துகொண்டிருக்கின்றது. இன்னும் விளைச்சல் கைக்கு வரவில்லை. இன்றுள்ள லெவி முறையைப்பற்றி உங்கள் எல்லோருக்கும் தெரியும். விளைச்சல் கைக்கு வருமோ வராதோ என்று கஷ்டப்பட்டுக்கொண்டு விவசாயிகள் பயந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு லெவி முறையைப் போட்டிருக் கிருர்கள். கலெக்டர் அவர்களிடம் போய்ச் சொன்ன பிறகு, ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள், தாசில்தார்கள் மூலம் வறட்சிப் பகுதிகளிலே நெல் விளைந் திருக்கின்றதா என்று கணக்கிட்டுப் பார்த்த பிறகுதான் தெரிந்தது. வறட்சி யால் சரியான முறையிலே, தண்ணீர் பாயாமல் 50 பெர்சென்ட் நிலம் வெடித்துப் போயிருக்கின்றது. உப்புப் போட்டால் உள்ளே போய்ப் புகுந்துகொள்ளும்.





ளைவிட்டால் புகுந்துகொள்ளும். நிலம் அப்படியிருக்கிறது. நஞ்சை நிலத்தில் ரூ. 400, ரூ. 500 என்று செலவு செய்து பயிரிட்டிருக்கின்றார்கள். 45 பெர்சென்ட் நிலம் அடியோடு போய்விட்டது. பாக்கியிருக்கும் 55 பர்சென்ட் நிலத்தில்தான் விளையும். இந்த நேரத்தில் விவசாயிகளுக்கு லெவி முறையைப் போட்டிருக்கின்றார்கள். அவர்கள் அறுவடை செய்துகொண்டு வந்தால் எவ்வளவு கைக்கு வரும் என்று தெரியாமல் இருக்கும்போதே, லெவியை அதிகமாகப் போட்டிருக்கின்றார்கள். இது ஓரளவுக்கு விவசாயிகளைப் பாதிக்கத்தான் செய்யும். இவ்வளவுதான் வரும் என்று நிர்ணயிக்க முடியாமலி ருக்கும்போது, நிறைய லெவியைப் போட்டிருக்கின்றார்கள். அந்த அளவுக் காவது கைக்கு வருமா என்று பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். கல்யாணம் பண்ணுவதற்கு முன்னாலேயே குழந்தை பிறக்கும் என்று எப்படி நிர்ணயிக்க முடியும்? அந்த அளவுக்கு இன்றைய விவசாயிகளின் நிலைமை இருக்கின்றது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கல்யாணம் ஆகிறதற்கு முன்னால் ஒருவன் சொல்லியிருக்கிருன். ராஜாவுக்கு பிள்ளை, ராணிக்கு பெண் பிறக்கும் என்று சொன்னான். அப்புறம் ஏதோ பிறந்தது, அதையே சொல்லிவிட்டான்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவரவர்களே, இன்னும் அறுத்து கைக்கு நெல் வரவில்லை. அந்த நிலைமையிலே லெவி முறை வந்திருக்கின்றது. இன்று ஜனங்கள் வேலையில்லாமல் இருக்கின்றார்கள். மிகவும் கஷ்டத்தில் இருக்கின்றார்கள். விலைவாசிபற்றி உங்களுக்கு நன்ருகத் தெரியும். ஒரு நாளைக்கு ரூ. 6-75 இல்லாமல் காலட்சேபம் பண்ண முடியாது. புள்ளிவிவரம் கூட இன்றுள்ள நிலவரத்திற்குக் குறித்து வைத்திருக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** காலட்சேபமே பண்ணலாம். அரிசி எதற்கு வாங்க வேண்டும்?

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவரவர்களே, அரிசி பட்டணம் படி ரூ. 5.10. அதற்குத் தேவையான மிளகாய் 25 பைசா, புளி 40 பைசா, மிளகு 40 பைசா, காய் 75 பைசா, விறகு ஒரு ரூபாய். அதுவும் இப்போது கொடுக்கின்ற ரேஷன் அரிசியை வேகவைக்க ஒரு ரூபாய் விறகு போதாது. 5 ரூபாய்க்காவது விறகு வைக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, ஒரு படி அரிசியை ஒருவரே சாப்பிடுவதில்லையே.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவரவர்களே, ஒரு குடும்பத்திற்கு இவ்வளவு என்று ஒரு கணக்குக்காகச் சொல்கிறேன். அந்த அளவுக்கு விலை வாசி ஏறியிருக்கின்ற காலத்திலே, விவசாயிகள் வேலையில்லாமல் கஷ்டப்படு

கின்ற காலத்திலே என்ன செய்ய முடியும்? படித்தவர்கள் என்று எடுத்துக் கொள்ளுங்கள். கவர்னர் உரையிலே வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. 100-க்கு 30 பேர்கள் படித்தவர்கள் வேலையில்லாமல் இருக்கின்றார்கள். நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றி நன்றாகத் தெரியும். இங்கே அமைச்சர்கள், படித்தவர்கள் எல்லாம் இருக்கின்றார்கள். தேசிய அளவிலே 80 லட்சம் பேர்கள் இருக்கின்றார்கள். 100-க்கு 30 பேர்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். நம் மாநிலத்திலேயே கிட்டத்தட்ட 4 லட்சம் பேர்கள் இருக்கின்றார்கள். சரீரக் கஷ்டம் பட்டு வேலை செய்பவர்கள் மட்டுமல்ல, படித்தவர்களும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். காலையில் எழுந்து போய் ஹிண்டு பேப்பர், மெயில் பேப்பர் என்று கேட்டால் கிடைக்கவில்லை. படித்தவர்கள் என்ன பண்ணுகிறார்கள்? வேலை இருக்கின்றதா என்று பார்ப்பதற்கு எல்லோரும் வாங்குகிறார்கள். 'சிட்சுவேஷன் வேகண்ட்' என்று இருக்கின்றதே, அதற்காக வாங்குகின்றார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வேலையில்லாதவர்கள் வாங்குகின்றார்கள். வேலையிருக்கின்றவர்கள் ஏன் வாங்குகின்றார்கள்?

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவரவர்களே, அந்த அளவுக்கு வேலையில்லாதவர்கள் இருக்கின்றார்கள், பேப்பரே கிடைக்க மாட்டேன் என்கின்றது என்றுதான் சொல்ல வருகின்றேன். அந்த அளவிலே நாடு இருக்கின்றது. அதைப்பற்றி கவர்னர் அவர்கள் உரையிலே இல்லை. அதனாலே நாம் கவர்னர் அவர்களுடைய உரையை வரவேற்க முடியாது. கவர்னர் உரையிலே விலைவாசிகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் திட்டம் இல்லை. நல்ல குடிநீர் கிடைக்கவில்லை. சாம்பார் மாதிரி கெட்டியாக இருக்கிறது. கீழே போகப் போக சேர் வந்துவிடுகிறது. இதனால் பலவிதமான தொத்து நோய்கள் வந்துவிடுகின்றன. அதுமாதிரி அரிசி சரியான முறையிலே சப்ளை பண்ணவில்லை. நான் புதுக்கோட்டை, குளித்தலை பகுதிகளுக்கெல்லாம் சென்று சுற்றிப்பார்த்துவிட்டுதான் வந்திருக்கின்றேன். அந்த அரிசியை இங்கு காட்டினால் சண்டைபிடிப்பார்கள் என்று எண்ணுகின்றேன். பஞ்சவர்ண கலரில் அரிசி இருக்கின்றது. அதை இங்கே காட்ட . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இங்கு காட்டக்கூடாது. தனியாக உணவு அமைச்சர் அவர்களுடைய அறையிலே பார்த்துச் சொல்ல வேண்டும். இங்கே எல்லாம் காட்டக்கூடாது. அதுதான் முறை.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவரவர்களே, காட்டவில்லை. இதைச் சாப்பிட்டு நாட்டிலே பட்டினிச் சாவு ஏற்படுகிறது. பட்டினிச் சாவு நிறைய ஏற்பட்டிருக்கின்றது





63151

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, சாப்பிட்டதற்குப் பின்னர் பட்டினிச் சாவு எப்படி வருகிறது?

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** [illegible]லைவரவர்களே, தொத்துநோய் வருகிறது இந்த மாதிரியான அரிசியைச் சாப்பிட்டால் என்று சொல்[illegible]. பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லாமல் அவர்களுக்கு [illegible] நோய் ஏற்படுகிறது. அரிசியோ கிடைக்காமல், எந்தவிதமா[illegible] கிடைக்காமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இப்போது அரிசியோ கிடைக்கவில்லை என்று சொல்கிறீர்கள்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவரவர்களே, புதுக்கோட்டையிலே திருவரங்குளம் வம்பன் காலனியிலே 25 பேர்கள் செத்துப்போயிருப்பதாகத் தகவல் வந்திருக்கின்றது.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, இது ரொம்ப மிகைப்படுத்திச் சொல்லப்படுகிறது. நான் நேரிலே போய்ப்பார்த்தேன். இந்த 4 வருட காலத்தில் அங்கே இறந்திருப்பவர்கள்பற்றிக் கணக்குப் பார்த்தபோது மொத்தம் 42 பேர் என்று கணக்குப் பதிவாகியிருக்கின்றது. சமீபத்திலே இறந்த 2 பேர்கள் பசியாலே சாகவில்லை. நானே நேரில் பார்த்துவிட்டு வந்தேன். அதைப்பயன்படுத்தி அதிக ரேஷன் கேட்கிறார்கள். அதையும் 'கன்சிடர்' பண்ணிக்கொள்ளுங்கள் என்று கலெக்டர் அவர்களிடன் சொல்லியிருக்கின்றேன்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவரவர்களே, நானும் அந்த திருவரங்குளம் வம்பன் காலனியிலே சென்று பார்த்தேன். அது பர்மா அகதிகள் பகுதி. அந்த வம்பன் காலனியிலே வம்பு பண்ணினேன். "எப்படியப்பா, அந்த 25 பேர்கள் இறந்தார்கள்?" என்று நானே அங்கே இருந்தவர்களைக் கேட்டேன். (சிரிப்பு) அந்தச் செய்தி தினமணி பத்திரிகையிலே வந்திருக்கின்றதே. அந்தக் கட்சிச் சார்பற்ற பத்திரிகையிலே வந்திருக்கின்றதே என்று கேட்டேன். 4 மாதங்களிலே 25 பேர்கள் பட்டினிச் சாவு என்று இருக்கின்றதே என்றுதான் கேட்டேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வம்பு நீங்கள் பண்ணியதை இனி அவர்கள் பார்த்தார்கள். இது எதுடா வம்பு, எதையாவது சொல்லிவிடுவோம் என்று எண்ணிச் சொல்லியிருக்கின்றார்கள்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** பேச்சுக்குச் சொல்கின்ற வார்த்தையே தவிர வேறில்லை. பதில் கிடைப்பதற்காகப் பேசிக் கேட்டேன். வம்பு என்றால் பேச்சு. வம்பு என்றால் பலவிதமான அர்த்தம் சொல்லலாம். சண்டை என்றும்

நினைக்கலாம். நீங்கள் வம்பு என்று நினைத்திருக்கின்றீர்கள். அந்த காலனிக்குப் பேரே வம்பன்' காலனி என்பது. திருவரங்குளம் வம்பன் காலனி என்பது பெயர். அதில் 25 பேர்கள் இறந்ததாக அந்தக் காலனியின் தலைவரே அறிக்கை விட்டிருக்கின்றார்கள்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, சூறையாடுதல் என்பது பற்றி தஞ்சாவூரிலே உள்ள மொழிக்கும், இராமநாதபுரத்திலுள்ள மொழிக்கும் அர்த்த மாறுதல்பற்றிச் சொன்னார்கள். ஒருவேளை திருச்சியிலே வம்பு செய்திருந்தால், பேச விரும்புவது என்று அதற்கு அர்த்தமாகுமா என்பதை அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** மேலவைத் தலைவரவர்களே, அது மாதிரிக் கிடையாது. வம்புக்கே அங்கே வழியில்லை. ஆனால் வம்பன் என்பது அந்தக் காலனிக்குப் பெயர் அல்ல. நடேச அம்பலவாளர் இருந்த ஊருக்குப் பெயர் வம்பன் என்பது. அது வம்பன் காலனி இல்லை. அது இப்போது திருவரங்குளம் பிளாக்கிலே இருக்கிறது. ஆகையால் வம்பன் என்பது ஊரே தவிர, வம்பைப் புதிதாக ஏற்படுத்தவில்லை. வம்புக்காரர்களுடைய காலனி அல்ல அது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, பேசுவது என்பதற்கு வம்பு என்ற வார்த்தையை திருச்சியிலே உபயோகப்படுத்துகின்றார்களா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தரமலிங்கம் :** எங்கேயும் கிடையாது. எந்த மாவட்டத்திலேயும் வம்பன் என்ற வார்த்தைக்கு 'பேசுவது' என்று அர்த்தம் சொல்வது கிடையாது. ஆனால் நெல்லை மாவட்டத்திலே நொம்பன் என்று இருக்கிறது என்று நினைக்கிறேன்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவரவர்களே, வம்பு என்பது பற்றி ஒரு தனி அகராதியே எழுதிவிடலாம். அதற்கு ஒரு கமிட்டிகூட போட்டு விடலாம். அது பற்றித் தனியாக ஆரம்பித்துக் கொள்ளலாம். அதைப்பற்றி இப்போது கவலையில்லை. எதற்காகச் சொல்கின்றேன் என்றால், நூறு வருடங்களாக ஏற்படாத வறட்சியினை நாம் இப்போது பார்க்கிறோம். நம் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அதற்கு இப்போது நிவாரணம் பண்ண வேண்டும். இப்போதுள்ள வேகம் போதாது. அதுவும் திருச்சிபோல, தஞ்சைபோல ஊர்களில் விவசாயிகள் எப்படி பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத்தான் நான் இங்கே கொண்டு வருகின்றேன். நீர்ப்பாசனம் நல்ல முறையிலே இல்லாத பகுதிகளில் வறட்சி இல்லை என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அது சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கின்றேன். குடிநீர் முதற்கொண்டு இல்லை. ஸ்ரீரங்கம் வந்தீர்களானால், அங்கு 9 அரிஜன காலனிகள் இருக்கின்றன. பம்பு இறக்கினால் கூட ஜலம் கிடைக்கவில்லை. கலெக்டர் அவர்களுக்குத் தெரிவித்தேன்





ஏதாவது அரிஜன வெல்பேர் பண்டிலிருந்து பணம் ஒதுக்குகிறேன் என்று சொல்கின்றார்களே தவிர, வறட்சி என்று சொல்ல முடியாது என்கிறார். இரண்டு பக்கமும் காவிரி ஓடுகிறது என்கிறார்கள். ஜலம் அங்கே எப்படி ஓடுகிறது என்று நீங்கள் நேரடியாக வந்து பாருங்கள். எவ்வளவு கீழே ஜலம் இறங்கியிருக்கிறது என்று பாருங்கள். 100-க்கு 35, 40 ஏக்கர் பாயவேண்டும். ஒழுங்கான வாய்க்கால்கூட இல்லை. கோரம்பு தேய்ப்பதற்கு இன்ஜினியரிடம் போய்ச் சொன்னேன். அவர் கோரம்பு தேய்ப்பதற்கு ஆர்டர் போட்டிருக்கின்றார். அது காய்ந்து போவதற்குள் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இனியும் தாமதித்தால் அமைச்சரிடம் சென்று போனில் சொல்கிறேன் என்று சொன்னேன். கபினி தண்ணீரைத் திறந்து விடுவதற்கான ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். கருநாடக மாநிலத்திலிருந்து அதற்கான உறுதியைக் கொடுத்து அது வருவதற்குள் மாசி மாதம் போய் விடும். ஊற்றுத் தண்ணீரை அடைத்தால் போதும். நம்முடைய 'இரிகேசன் மினிஸ்டர்' அவர்கள்கூட இங்கே முறைப்படுத்தும் விஷயம்பற்றி எடுத்துச் சொன்னார்கள். ஈரோட்டு தாலுகாவில் ஏராளமான பம்ப்செட்டுகள் வைத்து ஆயிரக்கணக்கான ஏக்கர் முறைப்படுத்தப்பட வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் இப்போது எனக்கு ஏராளமான புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. மோகனூர் தாலுகாவில் கிட்டத்தட்ட 4 ஆயிரம், 5 ஆயிரம் ஏக்கர்களுக்கு ஸ்கீம் போட்டு, வீராணம் திட்டத்திற்காகப் போடுகிற குழாய்கள் மாதிரி குழாய்கள் போட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 4-30)

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அந்த அமைச்சர் அவர்கள் சொன்னார்களே தவிர, ஏற்கெனவே போடப்பட்டிருப்பதை என்ன செய்யலாம்? மோகனூர் ஏரியா, காவிரி, அகண்ட காவிரி வருகிற சில பகுதிகளிலே எல்லாம் ஏற்கெனவே போடப்பட்டிருக்கிறது. நம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது போல, அந்த இடங்களைப் போய் பார்வையிட்டோம். ஏறத்தாழ 4 ஆயிரம் ஏக்கர்களுக்கு ஸ்கீம் போட்டிருக்கிறார்கள். அதோடு மாத்திரமல்ல. அதிலிருந்து பல பேர் தண்ணீர் எடுத்து வியாபாரம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அதையெல்லாம் இப்பொழுது 'ரெகுலேட்' பண்ண பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** 4 ஆயிரம் ஏக்கர்களுக்கு இப்பொழுது தான் கொண்டு வந்து போட்டிருக்கிறார்கள். இன்னும் ஆரம்பிக்கவில்லை. 'பம்ப் செட்டுகள்' எல்லாம் கொண்டு வந்து இறக்கியிருக்கிறார்கள். 'ஹைவேஸ்' துறையினர் எந்தவிதமான பெர்மிஷனும் இல்லாமல் இப்பொழுது எடுப்பதற்கு தயாராக இருக்கிறார்கள் என்பதைச் சொல்கிறேன். நான் குறிப்பிடும் இடம் மோகனூர்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நான் திடமாக சொல்கிறேன். ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டது தவிர வேறு புதிதாகப் போடுவதற்கு எங்கும் அனுமதிக்கப்படவில்லை.

**திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** இதுமாதிரி அந்த ஏரியாவில் நடைபெற்றுக்கொண்டிருப்பது அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** 'லிப்ட் இரிகேஷன் சொசைட்டி' என்றால் அரசாங்கத்தினுடைய அனுமதியைப் பெற்றுத்தான் செய்ய முடியும். ஆனால் ஒருசில தனியார் அதுமாதிரி வந்து செய்துகொண்டிருக்கிறார்கள், அதை என்ன செய்யலாமென்பதைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம்.

**திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** நான் எதற்காக இதை இங்கு சொல்கிறேன் என்றால், எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து போராடினால் தான் நல்ல விதமாக முடியும், பிற மாநிலத்திலிருந்து நமக்குத் தண்ணீர் கிடைக்கும் நிலைமையும் உண்டாகும். இப்பொழுது நம்முடைய மாநிலத்திலேயே 'லிப்ட் இரிகேஷனிலே' ஏராளமான பேர் அனுமதியில்லாமல் தண்ணீர் கொண்டு போனால் தஞ்சாவூர், திருச்சி எல்லாம் மிகவும் பாதிக்கப்படலாம். 'ராட்சச பம்ப்செட்டுகளை' உபயோகித்து இம்மாதிரி தண்ணீர் எடுத்தால் கிட்டத்தட்ட 4 ஆயிரம் க்யூசெக்ஸ் ஒரு நாளையில் எடுக்கலாம். ஆகையினால் இம்மாதிரி நாட்டிலே கொடூரமான வறட்சி நிலவும் வேளையிலே அதைப் பாதுகாக்க வேண்டும். பட்டினிச் சாவுகள் ஏராளமாக இருக்கின்றன. இதற்கெல்லாம் அரசாங்கம் பாதுகாப்பு கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் எங்கே பட்டினிச் சாவு இருக்கிறது என்று சொல்லவில்லை. எங்கே என்று குறிப்பாகச் சொன்னால்தான் உடனே நடவடிக்கை எடுக்க முடியும். சாப்பிட்டியா என்று கேட்டால், நான் செத்துக்கொண்டிருக்கிறேன், ஆகையினாலே சாப்பிடவில்லையென்று சொல்லுவான்.

**திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவரவர்களே, அதைப்பற்றி நான் ஏற்கெனவே இந்தப் பகுதியிலே, இந்தக் காலனியிலே, இந்தத் தாலுகாவிலே, இந்த யூனியனிலே, இந்த ஜில்லாவிலே என்று விளக்கமாகச் சொல்லிவிட்டேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்வது மாதிரி நிலைமை ஒரே ஒரு காலனியில் இருக்கிறது. வம்பன் காலனி பகுதியிலே அவ்வாறு இருக்கிறது. ஆனால் அந்தக் காலனியில் ஸ்ரீலங்கா அகதிகள் இருக்கிறார்கள். அங்கே தொத்து நோய் பரவி அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகையினால் அந்த நிலைமை அங்கே ஏற்பட்டிருக்கிறது. மற்றப்படி சும்மா இருக்கிறவனைக்கூட எப்படியிருக்கிறாய் என்று





கேட்டால் 'ஏதோ சொல்கிறோம், இன்றைக்கோ நாளைக்கோ' என்றுதான் சொல்லுகிறான். அவனைப்பற்றி அவனுக்கே கூட நம்பிக்கையில்லை. எங்கே என்று குறிப்பிட்டுச் சொன்னால், உடனடியாகக் கவனிக்கப்படும்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இதைப்போல் மத்திய அமைச்சர் அவர்கள் வந்தபோது கூடச் சொன்னார்கள். 'ஸ்பெசிபிக்' ஆகக் குறிப்பிட்டுச் சொன்னால் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும். ஆதாரத்தோடு சொல்லவேண்டும். பரவலாக என்று சொல்லாமல், குறிப்பாக எந்த இடத்தில் என்று சொன்னால், நிச்சயமாக கவனிக்கப்படும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, பட்டினிச்சாவு என்று பத்திரிகைகளிலே நிறைய செய்திகள் வந்துகொண்டேயிருக்கின்றன. நானும் அதே மாதிரியான கருத்தை அதாவது, 'இறந்து விட்டார்கள்' என்று சொல்லவில்லை. பிரச்சினைகள் பல அவர்களுக்கு இருக்கின்றன. ஒன்றாவது அவர்களுக்கு வேலையில்லை, இரண்டாவது சம்பாதிக்க முடியவில்லை, மூன்றாவது அரிசி வாங்க முடியவில்லை. இப்படி அவர்களுக்குப் பலவிதமான பிரச்சினைகள் இருக்கின்றன. இந்தப் பிரச்சினையிலே அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று யாருக்கும் இதுவரை தெரியவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லிவிட்டு வந்தேன் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதுவரை அரசால் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதை அமைச்சர் அவர்கள் சொன்னால் நலமாக இருக்கும். பத்திரிகைகளிலே பட்டினிச் சாவுகள் என்று செய்திகள் வந்து கொண்டேயிருக்கின்றன. மக்கள் வேறு ஊர்வலமாக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் போய்க்கொண்டிருக்கிறார்கள். இதுவரை நடவடிக்கை அரசால் எடுக்கப்படாதிருந்தால், உடனேயே நடவடிக்கை எடுத்தால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவரவர்களே, இந்தப் பட்டினிச் சாவு பற்றி பர்மா அகதிகளின் தலைவரே அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அது முதலாவது அறிக்கை. இப்போது இரண்டாவது முறையாக சர்க்காருடைய அறிக்கையை மறுத்து ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். இதை அமைச்சரின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். அடுத்தபடியாக ரேஷன் முறையில் கொடுக்கப்படும் அரிசி ஆங்காங்கே பற்றவில்லை. இரண்டு, மூன்று வாரங்களுக்கு ஒரு முறை தான் அரிசி வருகிறது. வருகிற அரிசியும் தரம் குன்றி மிகவும் மோசமாக இருக்கிறது. கொடுக்கிற ரேஷனையும் சரியான முறையில் காலா காலத்தில் கொடுப்பதில்லை. கொடுக்கிறதையாகிலும் காலா காலத்தில் சரியான முறையில், நல்ல முறையில் கொடுக்க வேண்டும். புதுக்கோட்டை மாவட்டத்திலும் அரிசி தரமாகக் கொடுப்பதில்லை அறந்தாங்கியில்

அரிசி தரமில்லாமல் கொடுத்திருக்கிறார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த தலைவர் ஒருவரே இதைப்பற்றி அறிக்கை விட்டிருக்கிறார்கள். அவருடைய அறிக்கை தினமணியில் வெளி வந்திருக்கிறது. (பத்திரிகையைப் பார்த்து உறுப்பினர் அவர்கள் அறிக்கையைப் படித்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** பத்திரிகையைப் பார்த்துப் படிக்கக் கூடாது.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** அறந்தாங்கி பஞ்சாயத்துத் தலைவரே, தி.மு.க. தலைவரே, இப்படிப் போடப்படும் அரிசி தரமாக இல்லையென்று குறிப்பிட்டிருக்கிறார்கள் . . . என்று திரு. தங்கராஜ் குறிப்பிட்டிருக்கிறார். நான் பொய் சொல்லவில்லை. அவர் அறிக்கை விட்டிருக்கிறார். ஆகவே தரமான அரிசியை இனிமேலாவது கொடுக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதுமாதிரி வித்தியாசம் வைத்து அரிசி கொடுக்கப்படுகிறது. இத்தனை ரூபாய்க்கு மேல், 500 ரூபாய்க்கு மேல் ஊதியம் வாங்குபவர்களுக்கு ரேஷன் கொடுக்கப்படாதென்று சொல்லும்பொழுது, அவன் 'பிளாக் மார்க்கெட்'டில் உணவுப் பொருள்களை வாங்குகிறான். அவன் அப்போது வெளியில் உள்ள விலையைக் கொடுக்கிறான். ஆகவே அப்படியே கடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறான். சர்க்கார் நேரடியாக உடனே ஒரு உத்தரவு போட்டு இந்த வித்தியாசத்தை எல்லாம் ஒழித்து, ஜனங்களுக்கு நல்லபடியாக சேவை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு 'யுத்த கால பணி' போல் இதைக் கருதி, தீவிரமாக ஈடுபட்டு, அனைவரும் ஒத்துழைத்தால்தான் இந்தக் கொடூரமான வறட்சியிலிருந்து மக்களைக் காப்பாற்ற முடியும் என்று தெரிவித்துக்கொண்டு இந்த கவர்னருடைய உரையின் மீது பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக நன்றி தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

(மாண்புமிகு மேலவைத்துணைத் தலைவர் தலைமை)

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற கூட்டுக் கூட்டத்தில் ஆற்றிய உரைக்கு மேலவை உறுப்பினர் மாண்புமிகு திரு தென்னரசு அவர்கள் கொண்டு வந்த நன்றி அறிவிப்புத் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூறுவதிலே நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். மேதகு ஆளுநர் அவர்கள் அந்த உரையை ஆற்றுவதற்கு 2 தினங்களுக்கு முன்னாலேதான் இராமநாதபுரம் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தார்கள். அவருடைய சுற்றுப்பயணத்தின்போது அவர் நேரிலே கண்டு வந்த காட்சிகள், பொது மக்களைச் சந்தித்துச் சேகரித்த விவரங்கள், மக்கள் நேரில் கூறிய கோரிக்கைகள் இவை அனைத்தையும் ஒன்றாக அமைத்துத்தான் தம்முடைய உரையிலே ஆரம்பம் முதல் கடைசி வரை பரவவிட்டிருக்கிறார்கள் என்பதை நம்மாலே நன்றாக உணர முடிகிறது.



ஆளுநர் அவர்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது, இடையிடையே அரசியல் கட்சிக்காரர்கள் இந்த வறட்சிப் பிரச்சினையை அரசியல் பிரச்சினையாக்கலாமென்று ஊடாடியபொழுதெல்லாம், நேரிலே சந்தித்த அந்த அரசியல் வாதிகளிடமெல்லாம் அவர் தம்முடைய புத்தி கூர்மையுடன் திட்சண்ய முறையில் அவர்கள் இந்தப் பிரச்னையை அணுகின முறையே தப்பு என்று அங்கேயே அப்போதே பதில் கூறினார். காரியாபட்டி ஒன்றியத்திற்கு ஆளுநர் அவர்கள் வருகை தந்தபொழுது நெடுஞ்சாலையிலே சென்று கொண்டிருந்த காரை நிறுத்தி, வேலை நடந்துகொண்டிருந்த இடத்துக்கு 2 பர்லாங் தூரம் நடந்து வந்து வேலை நடைபெறுகிற காட்சியைப் பார்த்தார். அங்கே வறட்சி நிவாரண வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கூலியாட்களிடம் நிலைமையை நேரிலே கேட்டறிந்தார். "கூலி எவ்வளவு கிடைக்கிறது? உணவு உங்களுக்கு எப்படி கொடுக்கப்படுகிறது?" என்றெல்லாம் அவர்கள் கேட்டார்கள். பிரச்சினையை அவர்கள் மிகைப் படுத்தியபொழுது, 'இது போன்ற காரியங்களில் ஒரு அரசு நியாயமாக எதைச் செய்ய வேண்டுமோ, அதை இந்த அரசாங்கம் செய்துகொண்டிருக்கிறது, நீங்கள் எதைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அதை நான் முதல்வரிடம் சொல்கிறேன்' என்று அவர் அங்கே தெரிவித்தார். இந்த அறிக்கையைப் பார்த்து அத்தனை மாற்றுக் கட்சித் தலைவர்களும் நிறைவு பெற்றிருக்கிறார்கள் என்பதை எங்களால் உணர முடிகிறது. இது ஒரு காலத்தின் கண்ணாடி போல் இருக்கிறது. தமிழ்நாட்டிலே எங்கெல்லாம் வறட்சி பரவியிருக்கிறதோ அதையெல்லாம் ஒரு படப் பிடிப்பாகப் பிடித்து ஆளுநர் அவர்கள் தம்முடைய உரையிலே கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இந்த வறட்சியிலும், வறட்சிப் பணியிலும் தங்களுடைய தலையாய பிரச்சினை அரசியல் லாபம்தான் என்பதை சில எதிர்க் கட்சிகள் இன்றைக்கு மறக்கவில்லை. இந்திய தேசம் பூராவுக்கும் ஏற்பட்டிருக்கிற ஒரு பொருளாதார சூழ்நிலையை நினைத்து, தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கிற இந்தக் கொடிய வறட்சி நிலைமையை ஒரு மாநில அரசாங்கம் எவ்வளவு திறமையாகச் சமாளித்திருக்கிறது, எவ்வளவு திறமையாக இதைச் சமாளிப்பதற்கு திட்டங்கள் வகுத்திருக்கிறது, தன்னுடைய சக்தி முழுவதையும் தனக்கிருக்கிற நிதி வருவாய் அத்தனையையும் ஒன்று திரட்டி இந்தப் பிரச்சினைக்கு எப்படி பரிகாரம் காணலாம் என்று முயற்சித்திருக்கிறது என்பதையெல்லாம் இன்றைக்கு நடுநிலையாளர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். வட மாநிலங்களிலே வறட்சி அல்லது பெரு வெள்ளம் வந்த போதெல்லாம் மத்திய அரசு எவ்வளவு வேகமாக நிவாரணப் பணியில் ஈடுபட்டது என்பது நமக்கெல்லாம் தெரியும். மத்திய அரசாங்கம் என்று ஒன்று இருக்கிறது. அந்த அரசினிடம் ஏராளமான அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருக்கின்றன. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி. குஜராத் மாநிலமாக இந்தாலும், பீகார் மாநிலமாக இருந்தாலும், மராட்டிய மாநிலமாக இருந்தாலும், வெள்ளத்தால் அடிக்கடி பாதிக்

கப்படும் அஸ்ஸாம் மாநிலமாக இருந்தாலும், அங்கே கோடிக்கணக்கான பணத்தைக் கொட்டிக் குவித்திருக்கிறது. அத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழ் மாநிலம் கடந்த 3, 4 வருடங்களாக வறட்சியிலே, கொடூரமான வறட்சியிலே சிக்கியிருக்கிறபொழுது, வறட்சியின் கோரப் பிடியிலே தமிழகம் ஆள்பட்டிருக்கிறபொழுது, நமக்கு அதுமாதிரி கோடிக்கணக்கில் பணம் கொட்டிக் குவிக்கப்பட்டதா? இன்றைக்கு 'நான் தூது அனுப்புகிறேன், நான் கமிட்டி அனுப்புகிறேன், அந்தக் கமிட்டி பார்த்து கொடுக்கிற தகவலை வைத்துக்கொண்டு பண ஒதுக்கீடு செய்கிறேன்' என்று சொல்லுகிறார்கள். அந்த ஒதுக்கீடும் என்னுடைய நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னதுபோல் 'இன்ஸ்டால்மென்ட் பேசிஸ்' இல் இருக்கிறது.

(பிற்பகல் 4-40)

நமது மாநில அரசு, ஒரு மாநில அரசு தன் சக்தியை எந்த அளவிற்குப் பயன்படுத்தி இந்தப் பிரச்சினையில் ஈடுபட முடியுமோ, அந்த அளவிற்கு இன்று ஈடுபட்டிருக்கின்றது. இப்பிரச்சினைக்காக நமது மாநில அரசு ஒதுக்கியுள்ள தொகை பெருமைப்படத்தக்க அளவிற்கு இருக்கின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. இராமநாதபுரம் மாவட்டத்தை முன்னாள் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சுற்றிப் பார்த்த பிறகு, மத்திய அமைச்சர் திரு. ஷிண்டே அவர்களும் பின்னர் நமது முதல்வர் அவர்களும் அதற்குப் பின்னர் நமது மேதகு ஆளுநர் அவர்களும் சுற்றிப் பார்த்திருக்கின்றார்கள். அதன் பிறகு அங்கே பல்வேறு வேலைத் திட்டங்கள் உருவாகியிருக்கின்றன. ஆனாலும் ஒன்றை இந்த நேரத்தில் நாம் நினைவு கொள்ள வேண்டியது. அந்த மாவட்டத்தில் வறட்சி, பஞ்சம் என்பது சினிமாவில் 'அவள் ஒரு தொடர்கதை)' என்பதைப்போல தொடர்ந்து வந்திருக்கின்றது. எனவே எதிர்காலத்தில் அந்த மாவட்டத்தைக் காப்பாற்ற வேண்டுமானால், அந்த மாவட்டத்திற்காக ஒரு 'காம்ப்ரஹென்சிவ் ஸ்கீம்' ஒருங்கிணைந்த ஒரு திட்டத்தினைத் தீட்டிச் செயல்படுத்த வேண்டும். 'பஞ்சம்' என்று வரும்போது மட்டும் ஏராளமான பணத்தைத் தேக்கிவைத்துச் செலவிடுவதைக் காட்டிலும், அங்குள்ள மக்களுக்கு எப்போதும் நல்வாழ்வினை அளிக்கத்தக்க அளவில் நிரந்தரமான திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். சொல்லப்போனால் முதுகுளத்தூர் தாலுக்காவில் கடந்த 27 ஆண்டுக் காலமாக இன்னும் தொழிற்சாலை என்று ஏதும் உருவாகவில்லை. அண்மையில் நூற்பு ஆலை ஒன்றும், சமீபத்தில் கடற்கரையோரத்தில் உள்ள மாரியூரில் ஒரு கோடி ரூபாய் செலவில் உப்பளத் தொழிற்சாலை ஒன்றும் துவங்கப்பட வேண்டும் என்று ஒரு செயற்குறிப்பு இருக்கிறது. இது போன்ற பல்வேறு திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்துவதன் மூலம் உண்மையிலேயே அந்த மாவட்டத்திற்கு நிரந்தரமான, நிலையான பரிகாரம் காண முடியும். மிகப் பிற்பட்ட கிழக்கு இராமநாதபுரம் பகுதிகளிலே, குறிப்பாக முதுகுளத்தூர்





பகுதியிலே, குடிநீர்ப் பிரச்சினையே பெரும் பிரச்சினையாக இருக்கிறது. அதற்கெல்லாம் நிரந்தரமான பரிகாரம் காணவேண்டும். அப்போதுதான் அந்தப் பிராந்தியத்திற்கு நியாயம் செய்தோம் என்ற உண்மை நிலை உருவாகும்.

நேற்று திரு. சுவாமிநாதன் அவர்கள் ஒரு பிரச்சினைபற்றிக் குறிப்பிட்டார்கள். காவிரி நீர் பிரச்சினை பற்றியும் தஞ்சையில் பாசனத்திற்கு நீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலை பற்றியும் அவர்கள் குறிப்பிட்டார்கள். காவிரி நீர் பிரச்சினை சம்பந்தமாக நமது மாநில அரசு மத்திய அரசுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களிலே ஏராளமான விண்ணப்பங்களை அனுப்பியிருக்கிறது. ஆனாலும் அந்தப் பிரச்சினையில் மத்திய அரசு இன்னும் செலுத்தவேண்டிய கவனத்தைச் செலுத்தாமலேயே இருந்து வருகிறது. தமிழ் நாட்டிலே மின்சாரத் தட்டுப்பாடு, நீர்த் தட்டுப்பாடு என்று ஏற்படுவதால்தான் உணவுப் பிரச்சினையும் ஏற்படுகிறது. இதிலே முக்கியமாக நதி நீர் பிரச்சினையில் நிரந்தரப் பரிகாரம் காண்பதற்கு மத்திய அரசு ஏன் இன்னும் தயக்கம் காட்டுகிறது என்று புரியவில்லை. தமிழகத்தின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டால், இந்திய நாட்டின் பொருளாதாரமே பாதிக்கப்பட்டுவிடும் என்ற உண்மையை மத்திய அரசு அரசியல் காரணமாகவே ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. இந்த நேரத்தில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்று நமது முதலமைச்சர் அவர்கள் கோரும் மாநில சுயாட்சிக் கோரிக்கைக்கு வெற்றிச் சின்னமாக உள்ள திரு. ஷேக் அப்துல்லா அவர்கள் தமிழகத்திற்கு வருகை தந்திருந்தார்கள். 25 ஆண்டுக்காலம் அவர் காராக்கிருகத்தில் அடைபட்டிருந்தாலும் அவரது உணர்வு, உணர்ச்சி சிறிதும் மங்கவில்லை, மறையவில்லை என்பதைப் பார்த்தோம். அவர் குறிப்பிட்டார், மாநில சுயாட்சி என்பது காஷ்மீரத்திற்கு மட்டுமல்ல, தமிழகத்திற்கும் பொருந்தும் என்று சொல்லியிருக்கிறார். அந்த உணர்வு இன்று பரவியிருக்கிறது. நமது மாநிலத்திற்கு நாம் சுயாட்சி கோருவதற்குக் காரணம் நமது நில அமைப்பு அப்படியிருப்பதேயாகும். தமிழகத்திலே பாய்ந்து செல்லும் நதிகளின் உற்பத்தி அண்டை மாநிலங்களான கேரளத்திலும் கர்நாடகத்திலுமே இருக்கின்றது. எங்கள் மாநிலத்தில் உற்பத்தியாகிறது, எனவே எங்களுக்கு வேண்டியதை எடுத்துக்கொள்ளுவோம். இன்னும் தேவைக்காக தேக்கி வைத்துக்கொள்ளுவோம் என்று சொல்லக்கூடிய அளவில் இன்று கருநாடக மாநிலம் அறிக்கை விட்டுக்கொண்டிருக்கிறது. அதை மத்திய அரசும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது. இதேபோன்ற பிரச்சினையில், உதாரணத்திற்குச் சொல்லுகிறேன், காஷ்மீரத்தில், இமயத்தில் உற்பத்தியாகும் கங்கை நதியின் உற்பத்தி எங்கள் பகுதியில்தான் இருக்கிறது என்று திரு. ஷேக் அப்துல்லா அவர்கள் அது எங்களுக்கே உரித்தானது என்று சொல்லி தடுத்து நிறுத்தினால், உத்திரப் பிரதேசத்திலும் பீகாரிலும் அந்த வாதத்தை ஏற்றுக்கொள்ளுவார்களா, அல்லது மத்திய அரசுதான் பார்த்துக்

கொண்டிருக்குமா என்று கேட்க விரும்புகிறேன். அதே நிலையில் அந்தந்த மாநிலங்களிலே உற்பத்தியாகும் பொருள்களெல்லாம் அந்தந்த மாநிலங்களுக்கே உரித்தானவை—தமிழகத்தில், இங்கேதான் சிமெண்டு உற்பத்தியாகிறது, இங்கேதான் ஏராளமான சர்க்கரை உற்பத்தியாகிறது, ஆகவே அவை அனைத்தும் எங்களுக்கே உரித்தானவை, எங்களுக்கு வேண்டியதை எடுத்துக்கொண்டு மிச்சமுள்ளதை நாங்கள் எப்படி வேண்டுமானாலும் செலவழித்துக்கொள்ளுவோம் என்று சொல்லும் நிலை உருவானால், அகில இந்திய கண்ணோட்டம் அடிபட்டுப்போய்விடும். ஆகவே நதி நீர் பற்றிய பிரச்சினையிலும் மத்திய அரசு அகில இந்திய கண்ணோட்டத்தோடு பார்க்க வேண்டும். எங்கள் மாநிலத்தில் உற்பத்தியாகிறது, ஆகவே அது எங்களுக்கே உரித்தானவை என்ற எண்ணத்திற்கு முடிவு கட்டியாக வேண்டும். ஏதோ இப்போது இந்தப் பிரச்சினையிலே பாராமுகமாக இருப்பதால் தமிழகத்திலே புதிய சிக்கலை உருவாக்க முடியும், அதன் மூலம் வறுமையை, வறட்சியை அதிகப்படுத்தலாம், அப்போது தமிழக அரசுக்கு சிரமம் ஏற்படும், அதை வரும் தேர்தலிலே உபயோகித்துக்கொள்ளலாம் என்று இருந்தால், அவர்களுடைய எதிர்காலம் வருங்காலத்தில் சூனியமாக ஆகிவிடும் என்பதைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. ஆகவே இதிலே கட்சி மாச்சரியங்களை மறந்து செயல்பட வேண்டும். நேற்றுப் பேசிய திரு. ராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் இதை கட்சிக்கு அப்பாற்பட்ட பிரச்சினையாக எடுத்துப் பேசியது எல்லோரும் வரவேற்கத்தக்கதாக அமைந்தது. நாட்டின் உணவுப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் நாம் அனைவரும் ஒன்றாக நின்று நமக்குத் தேவையானவற்றை நாம் நிச்சயமாகப் பெற்றாக வேண்டும். உபரியாக இருந்த நேரத்திலே குஜராத் போன்று பல்வேறு மாநிலங்களுக்குக் கொடுத்தோம். இப்போது பஞ்சமும் வறட்சியும் நம்மிடையே இருக்கும் நேரத்தில் அப்படிப்பட்ட மாநில முதலமைச்சர் அவர்களைக் கண்டு பேசி, மத்திய அரசின் துணைகொண்டு நமக்குத் தேவையான உணவுப் பொருள்களைப் பெறுவதற்கு நாம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். இந்திய அரசியல் சட்டப்படி மத்திய அரசுடன் நமது மாநிலம் இணைந்திருக்கும் இந்த நேரத்திலே, பாராளுமன்றத்திலே தமிழகத்தின் சார்பிலே உறுப்பினர்கள் அமர்ந்திருக்கும் உரிமையை நாம் பெற்றிருக்கும்போது, அந்த உரிமையின் பெயரால் கேட்கிறேன், மத்திய அரசு நமது மாநில அரசின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குத் தயாராக இருக்க வேண்டும். அப்படிப்பட்டதொரு சூழ்நிலையை இங்கே உள்ள எதிர்க் கட்சியினர் உருவாக்கித்தர வேண்டும். அப்படிப்பட்ட குரலை இன்றைக்கு ஸ்தாபன காங்கிரஸ்காரர்கள் எழுப்புகின்றார்கள். இது அரசியல் இல்லை, இது அரிசிப் பிரச்சினை என்பதை அவர்கள் அழகாக எடுத்துக்காட்டி வருகின்றார்கள். அப்படிப்பட்டதொரு உணர்வினை நாட்டிலே அவர்கள் ஏற்படுத்தி வருகிறார்கள் என்றால், அது வரவேற்கத்தக்கது. பொலிடிகல் க்ளைமேட், அரசியல் சூழ்நிலையில் நல்லதொரு மாற்றம் உருவாகி வருகிறது. அதற்கு இந்தியாவில் ஜெயப்பிரகாஷ் அவர்கள் வழி



காட்டியாக இருக்கின்றார்கள். அதே உணர்வினை எல்லாக் கட்சியினரும் தமிழகத்திலே ஏற்படுத்த வேண்டும் என்று, துணைத் தலைவரவர்களே, தங்கள் மூலமாக இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதன் தொடர்பாக எங்கள் மாவட்டத்தில் தோன்றியுள்ள சில பிரச்சினைகளையும் இந்த நேரத்திலே சுட்டிகாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகள் என்ற அளவில் ஏராளமாகத் தொடங்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும் அவை துரிதமாகச் செயல்படுவதற்குச் சில சட்ட திட்டங்கள், சில ஃபார்மாலிடீஸ், ப்ரொஸீஜர்ஸ் என்று சொல்லும் சில வழிமுறைகள் குறுக்கே நிற்கின்றன. நிதியினை ஏராளமாக ஒதுக்கியிருந்தாலும், நடைமுறையில் செயல்படுவதற்கு தடங்கல்கள் ஏராளமாக இருக்கின்றன. மாவட்ட அதிகாரிகள், இந்த இந்த வேலைத் திட்டங்களைத்தான் எடுத்துக்கொள்ள முடியும் என்று சொல்லியிருக்கின்றார்கள். அவற்றைத் தவிர வேறு வேலைத் திட்டங்களை ஏற்படுத்திக்கொள்ள முடியாத நிலை இருக்கிறது. ஏற்கெனவே ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் பல திட்டங்களின் அடிப்படையில் ஏராளமான சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. மத்திய அரசின் உதவி கொண்டு 2 கோடி ரூபாய் திட்டங்களின் மூலம், க்ராஷ் ப்ரோக்ராம் மூலம், ரூரல் மேன் பவர் ப்ரோக்ராம் மூலம், ஏராளமான சாலைகளைப் போட்டிருக்கிறோம். ஆனால் போட்ட சாலைகள் இன்னும் செப்பனிட்டு மேலும் 'இம்ப்ரூவ்' பண்ணப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றன. அவற்றையெல்லாம் இப்போது எடுத்துக்கொண்டு செயல்படுத்தலாம் என்றால், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், குதிரைக்கு இருபுறமும் கண்களுக்குப் பக்கத்தில் பட்டைகட்டி நேராகவே போக வேண்டும் என்பதைப்போல வேறு எந்தச் செயல் திட்டத்தையும் எடுத்துக்கொள்ளக்கூடாது என்று உத்தரவிட்டிருக்கின்றார்கள். எல்லாத் திட்டங்களையும் எடுத்துக்கொண்டால், எல்லோருக்கும் பரவலாக வேலை வாய்ப்புகள் கிடைக்கும். பண ஒதுக்கீடு இருந்தும், சில திட்டங்களை ப்ளாக் லெவலில் எடுத்துச் செய்ய முடியாத நிலை இருக்கின்றது. மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு இன்னும் எஞ்சினியர்களைப் போடவில்லை. திட்டங்களுக்கான மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கும் செய்த வேலைகளுக்குப் பணப் பட்டுவாடா செய்யவும் எஞ்சினியர்கள் போடப்படாமல் இருக்கின்றார்கள். இதை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 4-50)

இன்னும் ஒன்று. இன்றைக்கு 50 கோடி ரூபாய் அளவில் பல்லாயிரக் கணக்கான ஏழைகளுக்குப் பரிகாரம் தேடுகின்ற வகையில் பல்வேறுவிதமான வறட்சிப் பணிகளை உருவாக்கியிருக்கிறோம். ஆனால் இந்த நேரத்தில் ஒரு முக்கியமான காரியத்தை நாம் மறந்துவிடுகிறோம். இதன்மூலம் விவசாயத் தொழிலாளர்களுக்குத்தான் வருவாய் கிடைக்கிறதேயொழிய, விவசாயத்தில்

நேரடியாக ஈடுபட்டுள்ளவர்களுக்கு, 5 ஏக்கர் அல்லது 10 ஏக்கர் வைத்துக்கொண்டு கிணற்றுப் பாசனம் மூலம் சாகுபடி செய்கின்றவர்களுக்குப் பரிகாரம் ஏற்படவில்லை. இன்று விவசாயி கிணற்றை ஆழப்படுத்தவேண்டும் அல்லது வெட்ட வேண்டுமென்பதற்காகக் கடன் கேட்டால், அதற்கு அவன் சொத்து மதிப்பீடு சர்ட்டிபிகேட், வில்லங்க சர்ட்டிபிகேட் போன்ற பல்வேறுவிதமான சர்ட்டிபிகேட்டுகளைக் கொண்டுவர வேண்டுமென்று பல்வேறு சட்டங்கள் இருப்பதனால், உடனடியாகக் கிணற்றை ஆழப்படுத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. விவசாயிகளுக்கு இன்று கிணறு வெட்ட அல்லது கிணற்றை ஆழப்படுத்த நில வள வங்கி ஒன்றுதான் கடன் கொடுக்கிறது. அவர்களும் அப்படிப்பட்ட கடன்களைக் கொடுக்க ஏராளமான விதிமுறைகளைப் புகுத்தியிருக்கிறார்கள். ரிசர்வ் பாங்க் மற்றும் விவசாய மறுநிதி காப்பீட்டுக் கழகம் போன்றவை பல்வேறு சட்டங்களைப் போட்டிருப்பதால், விவசாயிகளுக்குக் கடன் வசதி உடனடியாகக் கிடைப்பதில்லை. மாநில அரசு விவசாயிகளின் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக ஒதுக்கும் பணத்தை, இம்மாதிரியான விதி முறைகள் இல்லாமல், கிணற்றை ஆழப்படுத்த வேண்டுமென்று சொல்லுகின்ற விவசாயியின் தகுதிக்கேற்றவாறு 2,000 ரூபாய் முதல் 5,000 ரூபாய்வரை கொடுத்தால், அவர்கள் அந்தக் கடனை 10 ஆண்டுக் காலத்தில் திருப்பிக் கொடுப்பார்கள். இந்தப் பிரச்சினையை உடனடியாகக் கவனிக்க வேண்டும். அவர்கள் கிணற்றை வெட்டுகின்ற நேரத்தில், இரண்டு அல்லது மூன்று மாதப் பயிர்கள் ஏதாவது வைக்கவும் வழி ஏற்படும். இப்போது விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்குமென்ற ஒரு நோக்கத்தில் காரியங்களைச் செய்கிறோம். நான் சொன்ன அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் மூன்று நன்மைகளை ஒரே நேரத்தில் பெற முடியும். அந்த முறையில் விவசாயியும் கடன் பெற வழி ஏற்படுகிறது; அதனால் விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டுகிறது; மூன்றாவதாக உற்பத்தியும் பெருகுகிறது. எனவே அந்த முறையில் நம்முடைய திட்டம் வகுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் வெளியே ஒரு யோசனையைச் சொன்னார்கள். அரசாங்கம் தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கும் முழுக் கவனத்தை விவசாயத்திற்கும் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். புதிய தொழில் துவங்க ஏராளமான மானியம், கடன் வசதி போன்றவற்றைக் கொடுக்கிறோம். ஆனால் விவசாயத்தைப் பொறுத்தவரையில், இன்றைக்கு அந்த நிலைமை இல்லை. அவர்கள் நில வள வங்கிகளில் கடன் வாங்கலாம். அது தவிர தனியார்களிடம் தான் பெற வேண்டும். அவர்கள் மற்ற ஸ்தாபனங்கள் மூலம் கடன் வாங்க முடியாது. அவர்களுக்கு வட்டி இல்லாத கடன் கொடுக்க வேண்டும். ஏற்கெனவே தக்காவிக் கடன் கொடுத்தார்கள். அந்த முறையைப் பின்பற்ற வேண்டும். இந்த மாதிரி விஷயங்களை மாநில அரசு நேரடியாகக் கண்காணிக்க





வேண்டும். தொழில்களுக்கு எப்படி எல்லாச் சலுகைகளும், முன்னுரிமைகளும் கொடுக்கிறோமோ அது போன்று விவசாயத்திற்கும் என்னென்ன சலுகைகள் கொடுக்கப்பட வேண்டுமோ அவற்றைக் கொடுக்க அரசு முன்வர வேண்டும். அப்படி அரசு முன்வந்தால்தான், தமிழ் நாடு விவசாய வளர்ச்சியில் நல்ல நிலைமையைப் பெற முடியும்.

இன்னொரு முக்கியமான பிரச்சினையைக் கூற விரும்புகிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தில், அருப்புக்கோட்டை தாலுகாவில் மையப் பகுதியில் சென்னப்பட்டி கால்வாய்த் திட்டம் என்பது கடந்த 15 ஆண்டுகளாகச் சொல்லப்படுகின்ற திட்டமாகும். அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். அதுவும் நிறைவேற்றப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே போன்று மேற்குப் பகுதியில் அழகர் அணைக்கட்டுத் திட்டம் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. இன்றைக்குப் பெரிய கண்மாய்களெல்லாம்—ஆர்.எஸ். மங்கலம் கண்மாய்—சீர்படுத்தப்படுகின்றன. அவற்றோடு இந்தத் திட்டங்களையும் சேர்த்து, எல்லாவற்றையும் ஒருங்கிணைத்துக் காரியங்களைச் செய்தால், நல்ல பயன் ஏற்படும்.

இப்போது சென்னையில் எப்படி குடிநீர் பிரச்சினை வந்திருக்கிறதோ அதே போன்று மதுரையிலும் குடிநீர்ப் பிரச்சினை வந்திருக்கிறது. எனவே மதுரை நகரத்திற்கு, வைகையிலிருந்து குடி தண்ணீர் கிடைக்க தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்கு மணி மண்டபம் கட்ட வேண்டும். இந்த அரசு எத்தனையோ தியாகிகளுக்கு மரியாதை செலுத்தி, நினைவுச் சின்னங்களை எழுப்பியிருக்கிறது. எல்லோருடைய ஆற்றலையும், எல்லோருடைய தியாகத்தையும் மதிக்கிற அரசு, தேவர் பிறந்த பூமியில் அவருக்கு மணி மண்டபம் கட்ட வேண்டும். அதை அரசு ஒத்துக்கொண்டுள்ளதால், அந்தத் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நேரத்தில் அதைத் துவக்கினால் பல பேர்களுக்கு வேலை கிடைக்குமென்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டங்களையெல்லாம் உடனடியாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மேதகு கவர்னர் அவர்களுடைய உரை நம் மாநிலத்தின் பிரச்சினைகளை மத்திய அரசுக்குச் சுட்டிக்காட்ட பல்வேறு பிரச்சினைகளை விளக்கிக் காட்டியிருக்கிறதென்று கூறி, அதை ஆதரித்து முடித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

* திரு. என். சுந்தரேசத் தேவர் : மாண்புமிகு தலைவரவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற முன்வருகின்றேன். அவர்களுடைய உரையில் வறட்சியைப் பற்றிக் கூறியிருந்ததே தவிர, மற்ற முக்கியமான பிரச்சினைகளாகிய வேலையில்லாத் திண்டாட்டம், காவிரிப் பிரச்சினை போன்றவை பற்றிய அரசின் புதிய கொள்கைகள், அறிவிப்புகள் எதுவும் காணவில்லை. அது ஒரு குறையாக இருந்தாலும், வறட்சி பற்றி வெகு விரிவாகக் கூறியிருக்கிறார்கள். இந்த வறட்சி நிலைமையைப் பரிசீலனை செய்து பார்க்கும்போது, மிகவும் பயங்கரமான நிலைமை தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிறதென்பதை நாம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். பாண்டிய நாட்டுச் சீமையிலிருந்தும், சேர நாட்டுச் சீமையிலிருந்தும் பல்லாயிரக் கணக்கான மக்கள் தங்களுடைய வீடு வாசல்களை விட்டு, அங்குள்ள ஆடு, மாடுகள், கோழிகள் போன்றவற்றை எடுத்துக்கொண்டு பிற மாவட்டங்களுக்குச் செல்லும் ஒரு கோரக் காட்சியைக் காணும்போது, நம்மால் அதைச் சகித்துக்கொள்ள முடியவில்லை. அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கவில்லை. நல்ல உணவும் இல்லை. குடிக்கத் தண்ணீர் இல்லை. எனவே உணவு கிடைக்கும் இடங்களை நாடி அவர்கள் செல்லுகிறார்கள். சோழ நாட்டில் உணவு கிடைக்குமென்று நம்பிச் சென்றால், அங்கே அவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. கையில் காசும் இல்லை. கொண்டுவந்த ஆடு, மாடுகளை விற்கலாமென்றால், அவற்றைப் படிக்குப் பாதியாகக் கேட்கிறார்கள். மிகவும் வேதனைப்படக்கூடிய காரியங்கள் நடப்பதைப் பார்க்கிறோம். அந்தக் கடுமையான காட்சியைப் பார்க்கும்போது, இன்றையதினம் இந்தச் சபை என்ன பேசுகின்றது, என்ன செய்யக் கடமைப்பட்டிருக்கின்றது என்பதையெல்லாம் அறிவதற்கு நாடு ஆவலோடு காத்துக்கொண்டிருக்கிறது. இந்த நிலைமையில் நாம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம் என்ற உணர்வைப் பேசுவதால் மட்டும் காட்டிக் கொள்ளாமல், செயலாற்றுவதன் மூலம் காட்டிக் கொள்ள இது ஒரு சந்தர்ப்பமாக இருக்குமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். பொதுவாக வறட்சி நிலை பற்றி அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளைக் குறை கூறிப் பேசினாலும் சரி, ஆலோசனை கூறினாலும் சரி அல்லது ஆதரித்துப் பேசினாலும் சரி—அந்த உணர்ச்சிகளுக்கு அரசு செவி சாய்க்காமல், குறை கூறுவதில் தவறு இருந்தால் அதை விடுத்து, உண்மையாக இருந்தால் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வறட்சி நிலைமையை அரசியலுக்குப் பயன்படுத்த வேண்டாமென்று பெருமதிப்பிற்குரிய எங்கள் பெருந்தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். என்னுடைய ஸ்தாபனக் காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் இந்த வறட்சி நிலைமையை அரசியலுக்குப் பயன்படுத்திக்கொள்ளத் தயாராக இல்லையென்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த வறட்சி நிலைமைகள்பற்றிச் சற்று ஆராய்ந்து





பார்க்கின்ற நோக்கில், மத்திய அரசின் பேரிலும், மாநில அரசின் பேரிலும் சில தவறுகள் இருக்கின்றன என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த வருஷம் பருவ மழை பொய்த்ததால் அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் மழை பொய்த்துவிட்டது. இதன் காரணமாக எங்கு பார்த்தாலும் ஏற்பட்ட வறட்சியின் காரணமாகப் பயிர்கள் காய்ந்தன. எல்லாப் பயிர்களும் காய்ந்து போய்விட்டன. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், மூன்று பகுதிகளாக விவசாயத்தைப் பிரிக்கலாம். பருவ மழை காரணமாக—வட கிழக்குப் பருவ மழை காரணமாகப் பாசனத்திற்கு வேண்டிய நீரைப் பெறும் பாண்டிய நாடு, சேர நாடு ஆகியவற்றில் மலைகளிலிருந்து வழிந்தோடும் தண்ணீர் மூலம் ஏரிகள் நிரம்பி விடும். அடுத்தபடியாக உணவு உற்பத்தி செய்யக்கூடிய வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒரு பகுதி ஆகியவற்றை எடுத்துக்கொண்டால், பூமிக்கு அடியில் உள்ள தண்ணீரைக் கொண்டு, குழாய்க் கிணற்றுப் பாசனம் செய்வதாகவும், கிணற்றுப் பாசனம் செய்வதாகவும் இருக்கிறது. அடுத்தபடியாக, இந்த

(பிற்பகல் 5-00)

இரண்டு பகுதிகளையும் தவிர காவிரியைப் பயன்படுத்திக்கொண்டு பாசனம் செய்யக்கூடிய சோழ நாடும் பொய்த்தது என்ன காரணம் என்றுதான் நாம் ஆராயவேண்டியவர்களாக இருக்கிறோம். பருவமழை தவறிய காரணத்தினாலே, பாண்டிய நாட்டிலும் சரி, சேர நாட்டிலும் சரி, விளையவில்லை என்ற நிலைமையை நாம் ஒப்புக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம். அதனால் சற்று புரளி ஏற்பட்டிருக்கிறது என்றும் சொல்வார்கள். வட ஆற்காடு மாவட்டத்திலும், தென்னாற்காடு மாவட்டத்திலும் புரளி ஏற்பட்டது என்பதை நாம் ஒப்புக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம். ஆனால் சோழ நாட்டிலே காவிரி ஆறு மூலமாகப் பாசன வசதியுடைய தஞ்சையும், திருச்சியும், தென்னாற்காடு மாவட்டத்திலே சிதம்பரம் தாலூக்கா போன்ற பகுதியும் சரியான விளைவு உடையனவாக இருக்கவில்லை. ஏன் அங்கு சரியாக விளைவு ஏற்படவில்லை? அதனுடைய காரணம் என்ன? பருவமழை இல்லாத காரணத்தினாலே, ஓரளவு மேல்மழை இல்லாத காரணத்தினாலே சற்றுக் குறைவான விளைவு ஏற்பட்டிருந்தாலும்கூட, இந்தக் காவிரியாற்றுப் பிரச்சினையால்தான் அந்த விளைவு அதிக தூரம் பாதிக்கப்பட்டது என்பதை நாம் உணரக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இந்த நிலையில் அரசு எடுத்த நடவடிக்கைகளைப்பற்றிப் பரிசீலனை செய்வதற்கு, ஆய்வு செய்வதற்கு இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு பேச நான் ஆசைப்படுகிறேன். காவிரியாற்றுப் பிரச்சினை ஏற்பட்டபோது, தஞ்சை மாவட்டத்திலே கொண்டைக்கதிராக இருந்த பயிர்களுக்கு அன்றையதினம்

திடீரென்று தண்ணீர் வரவில்லை. காவிரியாற்றிலே தண்ணீர் இல்லையென்று சொன்னார்கள். அப்போது எங்கு பார்த்தாலும் கொண்டைக்கதிராக இருந்தது. பயிர்கள் காய்கின்றன, வாடுகின்றன என்று பல தந்திகள் கொடுக்கப்பட்டன. அமைச்சர்கள் எல்லாம் டெல்லிக்குச் சென்றார்கள். என்ன பயன்! காவிரியாற்றுக்கு கபினியிலிருந்து தண்ணீர் திறந்து கொடுக்க முடியாதென்று கருநாடக அரசு திடமாகக் கூறியது. இந்த நிலையை நாம் சற்று கவனிக்கும்போது, கொடிய பஞ்சம் ஏற்படும் ஒரு சூழ்நிலை ஏற்பட்டும் கூட, வடகிழக்குப் பருவக்காற்று தவறிய காரணத்தினாலே தமிழகம் பெரிய பஞ்சத்திற்கு ஆளாகியிருக்கிறது என்ற ஒரு நிலையை உணர்ந்தும்கூட, ஒரே ஆற்றுப் பாசனத்தை, காவிரியாற்றுப் பாசனத்தைக் கொண்டுதான் தமிழகத்தில் சற்று விளைய வேண்டும் என்ற ஒரு நிலை ஏற்பட்டிருந்தும்கூட, இதையெல்லாம் கணக்கில்கொண்டு இந்த அரசு சாமர்த்தியமாக செயல்பட்டும்கூட காவிரியாற்று நீரைக் கொண்டுவர முடியவில்லை. இந்த அரசு மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லியும்கூட, அதை மத்திய அரசு காதில் கேட்காத ஒரு நிலைமையைப் பார்க்கும்போது மிக்க வேதனையாக இருக்கின்றது. இந்த அரசினுடைய செயல் இதில் குறைவோ, கூடுதலோ என்று பார்ப்பதைவிட, இந்த அரசு அதிலே செயல்பட்ட விதத்திற்கு ஏற்றவாறு மத்திய அரசு கவனம் செலுத்தவில்லை என்பதுதான் அதிகமாகக் குறிப்பிடவேண்டியதாக இருக்கின்றது என்று நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். அதன் காரணமாக தஞ்சை மாவட்டம் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவு பாதிக்கப்படவில்லை என்று சொன்னால், அதிலிருந்து உற்பத்தியாகிற உணவு தமிழகம் பூராவும் போதுமானதாக இருக்குமா இல்லையா என்று ஆராய்வதைவிட, ஓரளவு பலன் தரக்கூடிய வகையிலே இருந்திருக்கும் என்று நான் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

இந்த நிலையில் மத்திய அரசின் மீது நான் குறைகூறும்போது, ஏதோ அரசியல் காழ்ப்புணர்ச்சி ஸ்தாபன காங்கிரஸ்காரர்களுக்கு ஏற்பட்டுவிட்டது, ஆகையினால்தான் மத்திய அரசின் மீது குறைகூறுகின்றார்கள் என்ற ஒரு குற்றச்சாட்டும் சொல்லப்பட்டு வருகின்றது. அதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. நாங்கள் மத்திய அரசின் மேல் குறைகூறவேண்டுமென்பதற்காக, இந்தப் பஞ்சத்தை வைத்துக்கொண்டு திசை திருப்புகின்றோம் என்று சொல்வார்களேயானால் அது சுத்த அப்பட்டமான தவறாகும் என்பதையும் நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மத்திய அரசினுடைய கவனக் குறைவு என்று சொல்லும்போது, மாநில அரசு இதைச் செயல்படுத்துவதற்கு, காவிரியாற்றுத் தண்ணீரைக் கொண்டு வருவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளைச் சுட்டிக் காட்டும்போது, இந்த அரசினுடைய ஊக்க நடவடிக்கைகளுக்குக்கூட மத்திய அரசு ஊக்கம் கொடுக்காத வகையில் தடுத்து நிறுத்தியிருக்கின்றது



என்ற காரணத்தினாலேதான் நாங்கள் அதிகப்படியாக மத்திய அரசை இந்த விஷயத்திலே தாக்குவதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதையும் நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, தமிழகத்திலுள்ள பஞ்சத்தைச் சமாளிக்கவேண்டிய ஒரு பெரிய பிரச்சினையில் நாம் இருக்கிறோம். காவிரியாற்றுப் பிரச்சினை ஒரு பக்கம் போனாலும்கூட, அதனால் தமிழகத்தின் உணவு நிலை பெருமளவு பாதிக்கப் பட்டிருந்தாலும்கூட, இன்றைய நிலையில் தமிழகத்திற்குப் போதுமான அளவு உணவு உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றதா என்று பார்க்கின்றபோது, அஞ்ச வேண்டிய அளவுக்கு—வங்காளத்தைப்போல—அவ்வளவு பலஹீனமாக நாம் இல்லை. ஓரளவு உற்பத்தி செய்திருக்கிறோம். அது போதுமானதாக இல்லை.

இந்த நாட்டிலே ஒருமைப்பாடுபற்றிப் பேசுகிறோம். இன்றையதினம் நமக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பற்றாக்குறை 20 லட்சம் டன் என்று அரசாங்கம் கணிக்கின்றது. ஆனால் நாம் உற்றுநோக்கிப் பார்ப்போமானால்—இதை ஏதோ வாங்க வேண்டுமென்று அரசாங்கம் சொல்கிறது என்று சொல்பவர்கள் இருந்தாலும்கூட, ஏறத்தாழ 8 அல்லது 10 லட்சம் டன் அரிசியும், 4 அல்லது 5 லட்சம் டன் தினைப் பொருள்களும் இருக்குமேயானால், தமிழகத்தினுடைய பஞ்சத்தைப் பெரிதுபடுத்தவேண்டிய அவசியமில்லாத ஒரு நிலை இருக்கின்றது. இந்த நிலையை இன்று ஏற்படுத்த முடியுமா, முடியாதா என்ற ஒரு பிரச்சினைதான் நமக்கு முக்கியமாக இருக்கின்றது. தமிழ் நாட்டிலே பல கோடிக்கணக்கான மக்கள் பஞ்சத்திலே வாடுகிறார்கள். பல மாவட்டங்களிலே உள்ள மக்கள் வேறு பல இடங்களுக்குச் செல்கின்றார்கள். ஏழையெளிய மக்கள் சேமித்து வைத்திருந்த பொருள்களையெல்லாம் விட்டுவிட்டுச் செல்கிறார்கள். கால்நடைகளையெல்லாம் விட்டுச் செல்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையிலே ஒரு தாக்குறைவு ஏற்படுகின்றது. ஒரு நாடுவிட்டு இன்னொரு நாடு செல்லும்போது பல்வற்றை அவர்கள் இழக்கின்றார்கள். அவர்களுடைய ஆஸ்தியை இழக்கின்றார்கள். இப்படிப்பட்ட ஒரு கோர தாண்டவமாடக் கூடிய நிலையில் தமிழகம் காட்சியளிக்கின்றபோது, இங்கே ஏற்பட்டிருக்கக் கூடிய பஞ்சத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால், ஒரு 15 லட்சம் டன் உணவுப் பொருள்கள் இருக்குமேயானால், இந்தப் பஞ்சத்தைப் பற்றித் தமிழக மக்கள் பீதியடையவேண்டிய அவசியம் இருக்காது.

இன்றையதினம் இருக்கின்ற பற்றாக்குறை 15 லட்சம் டன் என்று சொன்னால், இந்த நாட்டில் ஒருமைப்பாடு ஏற்பட வேண்டுமென்று கருதுகின்ற மத்திய அரசாங்கம் உடனடியாக இங்கு வந்து 15 லட்சம் உணவுப் பொருட்கள் நாங்கள் தருகிறோம் என்று ஆறுதல் கூறுமேயானால், அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்து தென் பாண்டிய நாடுகளுக்கும், சேர நாட்டுக்கும் அனுப்பியிருக்குமே

யானல், அங்குள்ள மக்கள் உணவு வருமா, வராதா என்ற பீதியினுல் அச்சப்
பட்டு வெளியேறக்கூடிய ஒரு கட்டாயம் இருந்திருக்க முடியாது என்பதை
தான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஏதோ பஞ்சத்தை ஒரு அரசியல் சாக்காக வைத்துப் பேச வேண்டா
மென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் கேட்டுக்
கொண்டார்கள். நான் இதை வைத்து மத்திய அரசாங்கத்தைத் தாக்குவதாக
யாரும் கருத வேண்டாம். இன்று இருக்கக்கூடிய உணவுப் பிரச்சினையில்
இதை யார் சமாளிக்கவேண்டியிருக்கிறது என்று பரிசீலித்துப் பார்க்க
வேண்டும். நம்முடைய தமிழகத்திலே உற்பத்தியாகிற உணவை நாம் சரியான
படி விநியோகம் செய்யவில்லை, விநியோகம் செய்வதில் தவறுதல்கள் ஏற்பட்டு
விட்டன என்று சொன்னுல் நாம் மாநில அரசைக் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்
கிறேம். ஆனுல் மாநில அரசுக்குத் தேவையான உணவு உற்பத்தியாகவில்லை,
கோரப் பஞ்சம் ஏற்பட்டுவிட்டது என்ற நிலை வரும்போது இங்கு உதவ
வேண்டியது நியாயமாக மத்திய அரசே தவிர வேறு யாரையும் கூற முடியாது
என்று இருக்கின்ற காரணத்தினுலேதான் மத்திய அரசு உடனடியாக 15 லட்சம்
டன் அரிசியோ கோதுமையோ அளிக்க வேண்டும். அவ்வாறு தருகிறேன்
என்று வாக்களிக்குமேயானுல், இப்போது இந்தப் பஞ்சத்தைக் கண்டு மக்கள்
பீதியடைய மாட்டார்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறேன். ஆனுல், தற்போது
நாம் பார்ப்போமானுல், பஞ்சம் ஏற்பட்டுவிட்டது என்று மக்கள் பீதியடை
கின்றுர்கள். இந்தப் பஞ்சத்தை லாபமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டு
மென்று கொள்ளை லாபம் அடிக்கிறவர்களும் இருக்கிறுர்கள். அவர்கள் உணவு
தானியங்களை அதிகமான விலைக்கு விற்க வேண்டுமென்ற ஒரு ஆசையினுலே
உந்தப்பட்டு, அவற்றை வாங்கிப் பதுக்குகின்றுர்கள். இவ்வாறு பதுக்கக்
கூடிய தன்மையும், மக்களின் பீதியும் குறைய வேண்டுமானுல், மத்திய அரசு
உடனடியாக நம்முடைய தமிழகத்திற்கு 15 லட்சம் டன் அளிப்பதாக வாக்
குறுதி அளித்து அதை 'டிக்ளேர்' செய்ய வேண்டுமென்று மீண்டும்
வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சென்ற ஆண்டு நடவடிக்கையைப் பொறுத்த வரையில், நான் மாநில அரசின்
மீது சற்றுக் குறைகூறவேண்டியவனுக இருக்கிறேன். ஏனென்று கேட்டால்,
நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலும், சென்ற ஆண்டு உபரியாக
நாம் உணவு உற்பத்தி செய்தோம். அந்த உபரி அரிசியை பல மாநிலங்
களுக்கும் ஏற்றியதை மிகவும் அவசரப்பட்டு ஏற்றியதாக நான் கருதுகிறேன்.
நம்முடைய தமிழகத்திற்குத் தேவையான அரிசியை போதுமான காலத்திற்கு
வைத்துக்கொண்டு அனுப்பாமல் இருந்திருப்பார்களேயானுல், நாம் நவம்பர்,
டிசம்பர், அக்டோபர் மாதங்களிலே இந்தப் பஞ்சத்தை எதிர்பார்க்கவேண்டிய



வர்களாக இருந்திருக்க முடியாது. இன்றைய தினம் வறட்சி ஏற்பட்டிருக்
கின்றது என்று சொன்னுல், ஜனவரி, பிப்ரவரியில் வறட்சி ஏற்பட்டிருக்கின்றது
என்று சொன்னுல், பருவமழை தவறிய காரணத்தினுல் ஏற்பட்டது என்பதை
ஒப்புக்கொள்ள முடியும். ஆனுல் அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்
களிலே வறட்சி வந்து பஞ்சம் ஏற்பட்டது என்று சொன்னுல், அதற்குக்
காரணம் இந்த அரசாங்கம் தவருக தன் கைவசம் இருந்த அரிசியை எல்லாம்
வெளி மாநிலங்களுக்குக் கொடுத்து கையிருப்பு குறைந்தது, இந்த அரசாங்கம்
இந்தப் பெரிய தவறைச் செய்திருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்ட நான்
கடமைப்பட்டிருக்கிறேன். கைவசம் இருந்த அரிசியை எல்லாம் வெளியே
அனுப்பியது பெரிய தவறு.

அது மட்டுமல்லாமல், கள்ள மார்க்கெட்காரர்கள் இந்த மாநிலத்திலுள்ள
அரிசியையும், உணவுப் பொருட்களையும் வெளி மாநிலங்களுக்குக் கொண்டு
சென்றுர்கள் என்று நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமி
நாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள். நம்முடைய முதல்வர் அவர்கள் அதை
ஆட்சேபித்துக்கூடப் பேசினுர்கள். அது பொய் அல்ல. நம்முடைய
மாநிலத்தைப் பொறுத்தவரையில், சட்டங்கள் கடுமையாகப் போடுகிறேம்.
அதைக் கொடூரமாகச் செயல்படுத்துவதற்கு வேண்டிய வசதி வாய்ப்புக்களையும்
நாம் செய்தாலும்கூட, இந்தக் கள்ளக்கடத்தல் நடைபெறுகிறது. நான்
தஞ்சாவூர் மாவட்டத்திலேயிருந்து வருகிறவனுக இருக்கின்ற காரணத்தினுலே,
அதிகமாக உணவு உற்பத்தி செய்யும் மாவட்டத்திலேயிருந்து வருபவனுக இருக்
கின்ற காரணத்தினுலே சொல்லுகின்றேன். இன்று இருக்கக்கூடிய நிலைமை
யிலே நாம் லெவிக்கு வாங்குகிறேம். அதிகாரிகளையெல்லாம் அனுப்பி, கண்டிப்
பாக லெவிக்கு அளக்க வேண்டுமென்று வீடுவீடாக ஆள் போட்டு வாங்கு
கிறேம். இப்படிப்பட்ட நேரத்தில்கூட கள்ளமார்க்கெட்காரர்கள், அதிக
லாபம் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கமுடையவர்கள் இருக்கின்றுர்கள்.
இன்றைக்குக்கூட இரகசியமாக தஞ்சாவூர் மாவட்டத்திலே இரண்டு விலை இருக்
கின்றது. பகலிலே 56, 58 ரூபாய்க்கு அரசாங்கம் வாங்குகிறது. இரவிலே
98 ரூபாய், 100 ரூபாய்க்கு கள்ளமார்க்கெட்காரர்கள் எங்கு பார்த்தாலும்
வாங்குகிறுர்கள். யாரிடமாவது நெல் இருக்குமானுல், விற்பதற்குப் பஞ்சம்
கிடையாது, தயக்கம் கிடையாது. எந்த நிமிஷம் வேண்டுமானுலும் அதிக
லாபத்திற்கு விற்கலாம் என்ற ஒரு நிலை இருக்கின்றது. இது எப்படிச் செல்
கிறது என்ற நிலைமையை நாம் பார்க்க வேண்டும். கள்ள மார்க்கெட்காரர்கள்
வாங்கி வெளி மாநிலங்களுக்குக் கொண்டு செல்கிறுர்கள் என்று சொன்னுல்,
அதை அரசாங்கம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கக் கூடாதென்பதற்காகக்
கூறுகிறேன். அதிகமான அளவு அரிசி நம்முடைய மாநிலத்திலிருந்து
இன்றும் வெளியே சென்றுகொண்டிருக்கிறது. தஞ்சை, பட்டுக்கோட்டைப்

பகுதியிலே 105 ரூபாய், 110 ரூபாய்க்கு ஒரு மூட்டை நெல் விற்கிறது. அடுத்து, 1 ஃபர்லாங்கிலே தஞ்சை மாவட்டத்தைக் கடந்த ஊரிலே இன்னும் அதிகம், அடுத்த ஊரிலே 135 ரூபாய், 140 ரூபாய்க்கு விற்கப்படுகின்றது. இதை யடுத்து 4 மைலுக்கு அப்பால் போய்விட்டால், 150 முதல் 160 ரூபாய்க்கு விற்கின்றது. அதைத் தாண்டி இராமநாதபுரம் மாவட்டத்திற்குப் போய் விட்டால் 175 ரூபாய்க்கு ஒரு மூட்டை விற்கின்றது. கேரளாவுக்குச் செல்கிறதா, செல்லவில்லையா என்பதுபற்றி எனக்குத் தெரியாது. ஆனால் இப்படிப் பட்ட ஒரு கொடுர நிலை தினசரி மார்க்கெட்டிலே ஏற்பட்டுக்கொண்டு வருகிறது. லாரி லாரியாகப் போய்க்கொண்டிருக்கின்றது. மூட்டை மூட்டையாகத் தூக்கிக்கொண்டு போகிறார்கள். சைக்கிளிலே கொண்டு போகிறார்கள். பல ஆயிரக்கணக்கான மூட்டைகள் ஒவ்வொரு நாளும் செல்கின்றன. நம்முடைய

(பிற்பகல் 5-10)

சேமிப்பைச் சரியானபடி செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். சேமிப்பதிலே நம்முடைய அரசு ஒரு பெரிய தவறு செய்திருக் கின்றது என்று கருதுகின்றேன். இதுவரையில் ஒரு லட்சம் டன்தான் தஞ்சை மாவட்டத்திலே கொள்முதல் செய்யப்பட்டதாக அரசு கணக்கு கூறுகின்றது. இந்த நிலை ஏன்? சென்ற ஆண்டு வியாபாரிகள் அரசாங்கத்திற்கு 25 சதம் அவர்களுடைய கொள்முதலில் கொடுக்க வேண்டும் என்று விதித்தபோது, ஏறத்தாழ இந்த மாதத்திலே 1½ லட்சம் டன்னுக்கு மேல் அரசாங்கத்துக்குக் குவிந்தது. ஆனால் நெல் பூராவையுமே அரசாங்கமே வாங்குகிறது என்று சட்டம் போட்டு, பெரிய வியாபாரிகள் வாங்க தடை விதித்தும்கூட, இன்றுள்ள நிலையில் ஒரு லட்சம் டன்தான் கொள்முதல் செய்யப்பட்டிருக்கின்றது என்று சொன்னால், அதிலே அரசு ஏதோ ஒரு பெரிய தவறு செய்திருக்கிறது என்பதை நாம் கவனத்தில் கொண்டு பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். எனக்கு ஒன்று தோன்றுகிறது. இந்த நெல் விலையைப் பொறுத்தவரையில், அரசாங்கம் குறைவான விலை கொடுப்பதுதான் தக்க காரணமாக இருக்க வேண்டும். சாதாரணமாக இன்றையதினம் மூட்டைக்கு ரூ. 54 கொடுக்கின் றார்கள். ரூபாய் 58 என்று ஓபன் மார்க்கெட்டிலே கொடுக்கின்றார்கள். இந்த விலை போதுமானதாக இல்லை. நாங்களும் முதலமைச்சர் அவர்களிடம் தூது சென்றுகூட கூறினோம். குவிண்டாலுக்கு ஓரளவுக்கு 120 ரூபாயாவது கூட்டிக் கொடுங்கள் என்று சொன்னோம். அதை ஒப்புக்கொள்ளவில்லை. மத்திய அரசாங்கம் நெல்லுக்கு அதிகமாக விலை கொடுக்க மாட்டேன் என்கிறது என்கிறார்கள். அது மட்டுமல்லாமல், கோதுமைக்கு மத்திய அரசாங்கம் விலையை மூன்று முறை மாற்றியமைத்தது. ஒரு முறை குவிண்டாலுக்கு ரூ. 110 என்றும், பிறகு ரூ. 130 என்றும், இப்போது குவிண்டாலுக்கு ரூ. 150



என்றும் விற்கப்படுகிறது. ஒரு குவிண்டாலுக்கு கோதுமைத் தவிட்டுக்கு விலை ரூ. 90 என்று வருகிறது. ஆனால் ஒரு குவிண்டால் நெல் ரூ. 74-க்கு விற்கிறது என்று சொன்னால், இந்தக் கொடுமையைவிட வேறு கொடுமை என்ன இருக்க முடியும்? ஏறத்தாழ கோதுமைச் சாகுபடிச் செலவும் நெல் சாகுபடிச் செலவும் ஒரே நிலையில் இருக்கக் கூடியது. அதைப் பார்க்கும் போது அதே சாகுபடி விலைக்குத்தான் நெல்லை விற்க வேண்டும்.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, நெல்லுக்குத்தான் அதிகச் செல வாகும்.

திரு. என். சுந்தரேசத் தேவர்: தலைவரவர்களே, ரூபாய் 150 கோதுமை விலை எங்கே, ரூபாய் 74 நெல் விலை எங்கே? இதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். மத்திய அரசு இதைப் பிடிவாதமாகச் செய்கிறது என்று மாநில அரசு சொல்வது சரியல்ல. அதையும் மீறிச் செயல்பட்டிருக்க வேண்டிய நிலையில் மாநில அரசு இருக்க வேண்டும் என்று கூறினேன். மத்திய அரசு சொல்வதை முதலமைச்சர் அவர்கள் ஒப்புக்கொள்வது சரியல்ல, நியாயமும் அல்ல. ரூபாய் 74 விலைக்குக் கேட்டால் உங்களுக்குப் போது மான நெல் கிடைக்காது என்று கூறினேன். அப்போது அவர்கள், "நம்முடைய மதிப்பிற்குரிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள்தான் இதை ஆட்சேபிக்கின்றார்கள்; நாடு பூராவும் ஒரே சீராக விலை இருக்க வேண்டு மென்று அவர்கள் சொல்கின்றார்கள். ஆனால் திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் மட்டும்தான் நமக்கு உதவியாக, ஆதரவாக இருக்கின்றார்கள்" என்று கூறி னார்கள். யார் உதவியாக இருக்கின்றார்கள் அல்லது யார் ஆட்சேபிக்கின் றார்கள் என்ற நிலைமையைப்பற்றி நான் சொல்லவில்லை. நான் சொல்வது, இன்றையதினம் அவர்கள் சொன்னதையெல்லாம் கேட்டு நாம் பெற்ற பயன் என்ன? நாம் கேட்டதில் என்ன என்ன கொடுத்துவிட்டார்கள்? இன்று தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், காவிரி ஆற்றுப் பிரச்சினைக்கு அவர் களால் தீர்வு காண முடியவில்லை. பஞ்ச காலத்தில் தேவையான அரிசியோ கோதுமையோ கொடுக்க முடியவில்லை. மின்சார சக்தி போதுமான அளவுக்கு உற்பத்தி செய்ய அனுமதி வழங்கி விரிவுபடுத்த முடியவில்லை. இப்படியாக நம் நிதி நிலைமையிலும் கோளாறுகள் வளர்ந்துகொண்டிருக்கின்றன. இந்த நிலை வளர்ந்தால், தமிழ் நாட்டினுடைய நிலைமை வருங்காலத்தில் பயங்கரமான தாகத் தான் இருக்கும். நான் ஒன்று இந்த அரசுக்குக் கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன். ஒன்று வாங்க முடிந்தால் எந்த விதத்திலாவது வாங்குங்கள், இல்லாவிட்டால் ராஜிநாமா செய்யவேண்டும். எல்லாக் கட்சிகளும் சேர்ந்தே வெளியேறிச் செல்வோம் என்றுதான் நான் கூறுவேன். தமிழகத்திலே ஒரு சூனியப் பிரதேசத்தை உருவாக்கி, அரசியல் பிரச்சினையாக அதை ஆக்கி

பாழாக்காதீர்கள் என்றுதான் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நான் இப்படிப் பேசுவதால் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் எங்களுக்கு ஏதோ ஒட்டோ உறவோ என்று யாரும் எண்ண வேண்டாம். எங்களுக்கு ஒட்டும் கிடையாது, உறவும் கிடையாது. அதற்காக நான் பேசவில்லை. தமிழ் நாடு வாழவேண்டும், தமிழ் நாட்டிலுள்ள மக்கள் வாழவேண்டும் என்பதற்காகத்தான் இதைக் கூறுகின்றேனேயொழிய, வேறு எதற்காகவும் கூறவில்லை. இந்தத் தமிழ் நாடு வாழ இடையூறு இருக்குமானால், எதையும் நிறைவேற்ற முடியவில்லை என்றால், திராவிட முன்னேற்றக் கழக அரசு உடனடியாக ராஜினாமா செய்துவிட்டு வெளியேற வேண்டுமே தவிர, இதைப்பற்றிப் பேசிக் கொண்டிருப்பது அவ்வளவு பொருத்தமானது அல்ல என்பதைக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, வறட்சி நிவாரண வேலையைப் பற்றியது. நான் ஏதோ உணர்ச்சி வசப்பட்டுப் பேசிவிட்டதாகக் கருதுகிறேன். மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் அந்த வறட்சி நிவாரண வேலைகள்பற்றிச் சில வார்த்தைகள் கூறுவதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். வறட்சி நிவாரண வேலைத் திட்டத்தைப்பற்றி நான் சில வார்த்தைகள் கூறும்போது, ஆண்டுத் திட்டத்திற்காக என்று ரூ. 25 கோடி ஒதுக்கியதை வறட்சிப் பணிக்கு என்று மாற்றியமைத்திருக்கின்றார்கள். கிராம ஆண்டுத் திட்டத்திற்கு ரூ. 25 கோடி திட்டம் என்றால் என்ன? ஆண்டுத் திட்டம் என்றால் கூட்டு மன்றங்களிலே கிணறு வெட்டுவது, பள்ளிக்கூடம் கட்டுவது, ரோடு போடுவது போன்ற கிராம வேலைத் திட்டங்கள். இது ஆண்டுக்காண்டு பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்கள் மூலமாகச் செயல்படக்கூடிய திட்டம். இதற்காக ஒவ்வொரு கூட்டு மன்றத்திற்கும் இத்தனை லட்சம் ரூபாய், இத்தனை ஆயிரம் ரூபாய் என்று கணக்கிட்டு ஒதுக்கப்பட்டுச் செலவிடப்படுகிறது. ஒட்டு மொத்தமாக ஒவ்வொரு ஆண்டும் பள்ளிக்கூடங்கள் இத்தனை கட்டி முடிக்க வேண்டும் என்று கணக்கிடப்பட்டுச் செலவிடப்படுகிறது. இத்தனை கிணறுகள் வெட்டுவது, இத்தனை ரோடுகள் போடுவது என்று கணக்கிட்டுத் திட்டங்கள் செயல்படுகின்றன. இது கிராம வேலைத் திட்டம்தானே, நாம் ஏன் இந்தப் பணத்தை வறட்சிப் பணிகளுக்காகச் சேர்த்துவிடக்கூடாது என்று எண்ணி, அந்த ரூ. 25 கோடி ஆண்டுத் திட்டத்தை மாற்றியமைத்திருப்பது சரியல்ல என்பதை இந்த அரசுக்குக் குறிப்பிட்டுக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்று கேட்டால், வறட்சி ஏற்பட்டிருக்கின்ற....

திரு. கே. ராஜாராம்: அதுவும் மத்திய சர்க்கார் செயல்தான் என்று சொல்கின்றார்கள்.



திரு. என். சுந்தரேசத் தேவர்: இந்த மாதிரி வறட்சி ஏற்பட்டிருக்கின்ற நிலைமையிலே, அதைப் போக்குவதற்காக மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் விசேஷ நிதி வசதிகள் இருக்கின்றன. பலவிதமான சோர்ஸ்கள் இருக்கின்றன. அதிலிருந்து நிதி ஒதுக்க நாம் யோசிக்கலாம். ஆனால் கிராமத்தினுடைய சௌகர்யம் ரொம்பக் குறைவாக இருக்கின்றது. ஆண்டுத் திட்டத்திற்கு ரூ. 80 கோடி, ரூ. 60 கோடி என்று செலவு செய்திருக்கிறோம். இப்போது ரூ. 25 கோடி என்று குறைத்திருக்கின்றோம். கிராமத் திட்டத்திற்கு நாம் அதிகப்படுத்தவில்லை. மத்திய அரசும் தன்னுடைய திட்டத்திலே குறைத்திருக்கின்றது, மாநில அரசும் குறைத்திருக்கின்றது. இப்படியே நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக கிராம ஆண்டு திட்டங்களின் அளவு குறைந்துகொண்டிருக்கின்றது. கிட்டத்தட்ட கடந்த எட்டு வருடகால நிலையை நாம் எடுத்துப் பார்க்கும்போது, எந்தவிதமான முன்னேற்றமும் அடையாத நிலையில் இருக்கின்றோம். இந்த நிலைமையில் ரூ. 25 கோடியை வறட்சிப் பணிகளுக்காக என்று மாற்றியமைப்பது பெரும் தவறு. அதிலே கை வைக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக, வறட்சி நிவாரணத்திற்கு மாநில அரசு மத்திய அரசை ரூ. 30 கோடி வேண்டிக் கேட்டிருக்கின்றார்கள். அவர்கள் அதற்கு ரூ. 7½ கோடி கொடுத்திருக்கின்றார்கள். அதற்கு கவர்னர் அவர்கள் உரையில் நன்றி தெரிவித்திருக்கின்றார்கள். நான் நன்றி தெரிவித்துக்கொள்வதுபற்றிக் குறை கூறவில்லை. ஆனால் அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசினுடைய தயவும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தயவும் மத்திய அரசுக்குத் தேவைப்பட்ட காரணத்தினாலேயே, எங்கே எவ்வளவு தேவை என்று பாராமல்கூட அள்ளி அள்ளிக் கொடுத்தார்கள். ரூபாய் 17 கோடி, ரூ. 18 கோடி என்று அள்ளிக் கொடுத்தார்கள். ஆனால் இன்று பஞ்சத்தில் தவிக்கும்போது, தமிழகத்திற்குப் பணம் வேண்டுமென்று கேட்டால், நீங்கள் சரியான முறையில் செலவு செய்யவில்லை என்று கூறுகின்றார்கள். அதற்கு யார் பொறுப்பு? வெள்ளம் வரும்போது ரூ. 17 கோடி, ரூ. 18 கோடி என்று அள்ளித் தந்துவிட்டு, அதைச் சரியானபடி கண்காணிக்காமல்விட்டது தவறு. அதற்காக இந்த நாட்டினுடைய மக்கள் இப்போது பஞ்சத்தில் அவதிப்பட வேண்டுமா? இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கம் கொடுப்பதைச் சரியாகச் செலவழிக்காததைக் கண்காணித்திருக்க வேண்டும். அதைக் காரணம் காட்டுவது அவ்வளவு பொருத்தமானது அல்ல. இன்று பஞ்ச, வறட்சி நிவாரணப் பணிகளுக்காக என்று உடனடியாக மத்திய அரசு ரூ. 30 கோடியையும் கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இந்த வறட்சி வேலைத் திட்டத்தைப் பொறுத்தவரையிலும், நம் மாநில அரசு ஒரு சர்வகட்சிக் குழு மூலம் இந்தப் பஞ்ச நிவாரண பணிகளை

எப்படிச் செய்யலாம் என்று ஆலோசிக்கலாம். அதைச் செய்யாதது ஒரு பெரும் தவறு என்று நான் கருதுகிறேன். ஏனென்று கேட்டால், இன்றையதினம் பஞ்ச நிவாரணத்திற்குச் செலவு செய்யக்கூடிய தொகை ஏறத்தாழ ரூ. 55 கோடி என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இந்த ரூ. 55 கோடியைக் கொண்டு ஏரிகளை வெட்டுகிறோம், ரோடுகளைப் போடுகிறோம், கிணறுகளை வெட்டுகிறோம். இந்தப் பணிகளைப் பொறுத்து நான் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லித் தெரிய வேண்டும் என்பதில்லை. இது துரிதகால வேலையாகவும், அவசரமாகச் செய்கின்ற வேலையாகவும் இருப்பதால், பல தவறுகள் ஏற்படும் நிலைமை இருக்கின்றது. இந்தப் பணிகளை ஒப்பந்தக்காரர்களிடம் விட்டு, இந்த ரூ. 55 கோடியையும் நன்றாகச் செலவழித்துச் செய்துவிட்டார்களோ, செய்யவிடவில்லையோ என்ற அளவுக்குப் போய்விடாமல், கண்காணிக்க வேண்டிய பொறுப்பு மிக முக்கியமாக நமக்கு இருக்கின்றது. கூடுமான வரையில் இந்த வறட்சிப் பணிகளைப் பொறுத்தவரையில், ஒப்பந்தக்காரர்களிடத்தில் விடுவதே தவறு. அது அரசாங்க அதிகாரிகள் மூலமாகச் செய்யப்பட்டாலும் சரி அல்லது அதிகாரம் இல்லாதவர்கள் மூலமாகச் செய்யப்பட்டாலும் சரி, தவறு ஏற்படுவது இந்த நாட்டிலே சகஜமாக வந்துவிட்ட காரணத்தினாலே, அதிகாரிகள் கொண்ட கமிட்டியும், அதிகாரப் பற்றற்றவர்கள் கொண்ட கமிட்டியும் அங்கங்கே போட்டு அதைக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். ஒவ்வொரு கிராமந்தோறும் செய்யப்படுகின்ற ஏரி மராமத்தாக இருந்தாலும் சரி, வாய்க்கால் வெட்டுவதாக இருந்தாலும் சரி, அங்குள்ள மக்களைக் கொண்டுதான் செயல்பட வேண்டும். அந்த மக்கள் சரியானபடி செய்து வருகிறார்களா என்பதைக் கண்காணிப்பதற்கு கிராம அளவில் ஒரு கமிட்டி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதைப் போல வட்டார அளவிலும் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். முக்கியமாக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வறட்சி நிவாரணத்திற்காக என்று பணம் ஒதுக்கப்படுகின்றது. அதைக் கொடுக்கிறோம். அதை எந்தெந்த வேலைகளுக்குச் செலவு செய்ய வேண்டும் என்பதைத் திட்டமிடும் போது, அங்கே சர்வ கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இருந்தால் மிக உதவியாக இருக்கமுடியும். பஞ்சத்திற்காக ஒதுக்கப்படுகின்ற தொகையை, வறட்சி நிவாரணத்திற்காக உள்ள தொகையை வேறு இடங்களிலே செலவு செய்ய வேண்டாமென்று கேட்டுக்கொள்கின்றேன். கூடுமானவரையில் உணவு உற்பத்தி செய்வதற்காக, இணையான வேலைகளான ஏரிகள் வெட்டுவது, வாய்க்கால் கட்டுவது, ஆழ் குழாய்க் கிணறுகள் போடுவது போன்ற வேலைகளை எடுத்துக்கொண்டால் மிக உதவியாக இருக்கும் என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அப்படிப்பட்ட திட்டங்களுக்கு எவ்வளவு தொகை ஒதுக்குவதாக இருந்தாலும்,



அதை ஒரு சர்வ கட்சிக் குழுவின் மூலமாகச் செயல்படுத்துவோமானால், எவ்விதக் குறைபாடும் இல்லாத வகையிலே நடப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக, தஞ்சையைப் பொறுத்துச் சில வார்த்தைகள் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நம்முடைய தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையிலே, ஆழ் குழாய்க் கிணறுகள் போட வேண்டியது மிக அவசியமாக இருக்கின்றது. ஆழ் குழாய்க் கிணறு என்று சொன்னால், ஆயிரம் அடி ஆழத்திற்குப் போட்டுவிட்டால், ஏறத்தாழ 300, 400 ஏக்கருக்குப் பாயக்கூடிய அளவுக்கு ஸ்பிரிங் வாட்டர், தானே வரக்கூடிய தண்ணீர் வரும். அது எங்கு பார்த்தாலும் இருக்கின்றது. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக காவேரி பாய்ந்துகொண்டிருந்த காரணத்தினாலே, பூமிக்கு அடியில் நீர் வளம் இருக்கிற காரணத்தினாலே, மேலும் வருகின்ற ஆண்டிலே காவேரி தண்ணீர் கொடுப்பார்களோ மாட்டார்களோ என்ற அச்சம் இருக்கின்றதாலே, தஞ்சை மாவட்டத்திலே பஞ்சப் பகுதிகளில் உடனே ஆழ்குழாய்க் கிணறுகளைப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் கல்லணைப் பகுதியிலே, கடைமடைப் பகுதியிலே போதுமான தண்ணீர் இல்லாமல் எங்கு பார்த்தாலும் வறட்சி நிலைமை ஏற்பட்டு இந்த வருடம் மக்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். அப்படிப்பட்ட வறட்சி நிலைமையைப் போக்குவதற்காக கல்லணை, கடைமடைப் பகுதிகளில் உண்டான ஏரிகள் பூராவிலும் ஆழ் குழாய்க் கிணறு போடுவார்களேயானால், அதன் மூலம் நீர்ப்பாசன வசதிகளையும், வாய்ப்புகளையும் பெருக்குவதற்கு ஏது இருக்கின்றது என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன். தஞ்சை மாவட்டத்திலே காட்

(பிற்பகல் 5-20)

டாறுகள் அதிகமாக ஓடுகின்றன. அவைகள் பூராவும் கடலில் போய் கலந்து வீணாகின்றன. இதுவரையில் காவிரித் தண்ணீர் வந்தது. அதைப்பற்றி நாம் கவலைப்படவில்லை. இனிமேல் ஒரு சொட்டு நாம் வீணாக்கினால் அதற்கான பிராயச்சித்தம் எதுவுமே கிடையாது என்பதை நான் இங்கு குறிப்பிட ஆசைப்படுகிறேன். சிறுசிறு அணைகள் கட்டி எங்கெங்கெல்லாம் ஏரிகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் காட்டாற்று நீரைக் கொண்டு போய் நிரப்பி அதன் மூலமாக 400, 500 ஏக்கருக்கு சிறு சிறு பாசன வசதிகளை எல்லாம் செய்து கொடுப்பீர்களானால், 'சோழ நாடு சோறுடைத்து' என்ற வாக்குக்கொப்ப ஏதோ கருநாடக அரசு தவறு செய்து விடுகின்ற காரணத்தாலே காவிரி ஆறு பொய்த்து விடும் என்று எண்ண வேண்டி வராது. அதற்கு வேண்டிய வசதிகளையும் வாய்ப்புகளையும் செய்ய வேண்டுமென்றும், வேண்டிய வசதியும் வாய்ப்பும் அங்கே நிறைய இருக்கின்ற காரணத்தால், இந்தச் சிறிய திட்டங்களை நீங்கள் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

பொதுவாக கள்ளமார்க்கெட்காரர்களைப் பிடிப்பதற்கு 'மிசா' என்ற ஒரு சட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. யார் யாரையோ பிடித்து உள்ளே தள்ளுகிறார்கள். கள்ளமார்க்கெட்டில் நெல் வாங்குபவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும். கள்ளமார்க்கெட்டில் யார் யார் எல்லாம் நெல் வாங்குகிறார்களோ அவர்களையெல்லாம் ஒரு சி.ஐ.டி.-யைப் போட்டுப் பிடித்து உள்ளே போடுங்கள். இன்னும் ஒவ்வொரு ஊருக்கும் இரண்டு மூன்று வியாபாரிகள் நெல்லை கள்ள மார்க்கெட்டில் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். தயவுசெய்து இந்த வறட்சி, பஞ்சம் தீருகிற வரைக்கும் அவர்களைப் பிடித்து உள்ளே போடுங்கள். நீங்கள் அவர்கள்மேல் கடுமையான நடவடிக்கை எடுக்கா விட்டால், மீண்டும் இந்த நெல் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் வேறு எங்காவது போய்விடும். பிறகு தானியமும் உங்களிடம் இருக்காத நிலைமை ஏற்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கள்ள மார்க்கெட்டில் நெல் வாங்கும் சிறு வியாபாரிகளானாலும் சரி, அவர்களையும் இந்த அரசு உடனடியாகச் சிறைக்கு அனுப்பி, தமிழகத்தை இந்தக் கொடிய பஞ்சத்திலிருந்து மீட்க வேண்டும். இதற்கு வேண்டிய உருப்படியான, விரைவான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கின்றேன்.

**திரு. சி. வி. ராஜகோபால்:** தலைவரவர்களே, ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீது பேசுவதற்கு தாங்கள் வாய்ப்புத் தந்தமைக்கு என் நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கின்றேன். ஏறக்குறைய கவர்னர் பெருமான் அவர்கள் நாட்டினுடைய நிலையை, மக்கள் படுகின்ற துயரம், இப்பொழுது ஏற்பட்டுள்ள மழை இல்லாக் காரணத்தால், இயற்கை பொய்த்துவிட்ட காரணத்தால் நமக்கு ஏற்பட்டுள்ள ஆபத்துக்கள் இவ்வளவையும் நேரில் சுற்றி அலைந்து பார்த்த பிறகுதான் தம்முடைய உரையை ஆற்றியிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கிற இந்த நிலைமையைப் போக்குவதற்காக நம்முடைய முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியாளர்கள் ஆலாய்ப் பறந்து, ஆங்காங்கு உணவு இல்லாமல் அவஸ்தைப் படுகின்ற மக்களுக்கு என்னென்ன நிவாரணம் அளிக்க வேண்டுமோ அதையெல்லாம் செய்வதற்கு இரவு பகல் என்று பாராமல், கண் விழித்து உத்தரவுகளை உடனுக்குடன் போடுகிறார்கள் என்ற செய்திகள் ஏராளமாக பத்திரிகைகளில் வருகின்றன. அதை நாமெல்லாம் படிக்கிறபோது, துயரத்திலும் ஒரு பக்கத்தில் மகிழ்ச்சி ஏற்படத்தான் செய்கிறது. எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் பல விஷயங்களைப் பற்றிப் பேசினார்கள். இங்கே இருக்கும் உங்கள் யாருக்கும், எங்களுக்கும் அவர்களுக்கும் உறவு இருக்கிறதோ என்று சந்தேகம் வேண்டாம். அப்படி உங்கள் யாருக்காவது ஐயப்பாடு இருக்குமானால், நான் சொல்கிறேன், எங்களுக்குள்





ஒரு கூட்டும் இல்லை, உறவும் இல்லை. அவர்கள் பேசுகிறபடி உறவு இருக்கிறதோ இல்லையோ அது வேறு விஷயம். ஆனால், இது பெரும் ஆபத்தான நேரம். மக்கள் வறுமையால் கஷ்டப்படுகிறார்கள். துயரப்படுகிறார்கள். மழை பொய்த்து விட்டது, உணவோ இல்லை என்கிறார்கள், இராமநாதபுரம் ஜில்லாவில் கடுமையான வறட்சி என்கின்றார்கள். ஆனால், இந்தக் கஷ்டமான நேரத்தில் மக்கள் படுகின்ற துயருக்காகவாவது நாமெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து அந்தப் பணியிலே ஈடுபடலாம் என்று அவர்கள் சொல்லியிருந்திருப்பார்களானால் . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவர்கள் பேசும்போது அப்படிச் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. கே. ராஜாராம்:** சொல்லியிருக்கிறார். உறுப்பினர் அவர்கள் அதை கவனிக்கவில்லையென்று நினைக்கிறேன்.

**திரு. சி. வி. ராஜகோபால்:** சொன்னதற்கு நன்றி. அவர் அப்படிச் சொன்னதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நிச்சயமாக ஒரு வீடு தீப்பற்றிக்கொண்டு எரிகிறபோது அந்த வீட்டுக்குப் பக்கத்திலே இருக்கின்றவர்கள், ஊரிலே இருக்கின்றவர்கள் அனைவரும் கட்சிமாச்சரியம் அல்லது மனமாச்சரியம் இல்லாமல் போய் தீயை அணைக்க வேண்டும். அவ்வளவு பெரிய ஆபத்தான நிலைமை. வீடு பற்றிக்கொண்டு எரிகிறது. எரிகிற நேரத்திலே அதை விட்டுவிட்டு, நாங்களும் அணைக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு அதிலே கிருஷ்ணாயிலை விட்டு வேடிக்கை பார்ப்போம் என்று இருக்கின்ற உள்ளம் படைத்தோர் தமிழ் நாட்டிலே இருக்க மாட்டார்கள் என்று எண்ணுகிறேன். தப்பித்தவறி ஓரிருவர் அப்படி இருப்பார்களானால், நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பெருந்தன்மை, மன்னிப்பு, அவர்களுடைய மனத்தை மாற்றி, இந்தமாதிரி நேரங்களில் நல்ல காரியங்களில் உதவி செய்யத் தூண்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு என ஒரு தனிப் பண்பு இருக்கிறது என்று நான் உணர்கிறேன். இந்த நாட்டு மக்களைக் காப்பாற்றுவதற்காக அப்படி ஒரு தனிப் பண்பு இருக்கிறது என்று உணர்கிறேன். இதற்கு முன்னாலேயே இதை நாம் பார்த்திருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகம் 1967-லே இந்த அரசை ஏற்றுக்கொண்டது. அப்பொழுதுதான் திராவிட முன்னேற்றக் கழகம் முதன் முதலாக ஆட்சியில் அமர்ந்தது என்று எண்ணுகிறேன். அது ஆட்சியில் அமர்ந்தபொழுது, அரிசித் தட்டுப்பாடு மிக அதிகமாக இருந்தது. அரிசி இல்லாமல் மக்கள் வேதனைப்பட்டுக்கொண்டிருந்த நேரம் அது. சோற்றுக்கு மக்கள் அங்கும் இங்கும் அங்கலாய்த்துக்கொண்டிருந்த நேரம் அது என்று எண்ணுகிறேன். அப்போது இந்தக் கட்சி ஆட்சிப் பொறுப்பை

ஏற்றுக்கொண்டது பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில். அண்ணா முதலமைச்சரானார்கள். அண்ணா ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவப் பெருந்தகை குறளில் நாடு எப்படி இருக்க வேண்டுமென்று கூறியதற்கு இணங்க ஆட்சி நடத்தி ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினார்கள். குறளில் கூறியபடி, நாடு பஞ்சத்தில் அடிபடுமானால், பிணியும் நலிவும் இருக்குமானால், அது நாடாக அல்ல காடாக இருக்கும் என்பதற்கேற்ப அண்ணா அவர்கள் குறிக்கோளைக் கொண்டிருந்தார். மனிதன் மனிதனாக வாழ, முதலிலே அவனுக்கு வயிறாறச் சோறு போட வேண்டுமென்ற அடிப்படைக் கொள்கையைக் கொண்டே ஆட்சி அமைத்தார். அதற்கு அடிப்படையாக உள்ள கொள்கை விவசாயிக்கு முக்கியத்துவம். அதற்கேற்ப விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஏராளமான நிலங்களை வாரி வழங்கினர். அந்த மக்களுக்கு நிலம் மட்டும் வழங்கிவிட்டால் போதாது என்று, கிணறு தோண்ட வேண்டிய பணம், உழவுக்கு வேண்டிய விதைகள், உரங்கள், மற்ற எல்லா சாமான்களையும் தந்து பெருமளவு உதவிய காரணத்தால்தான், இந்த திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு ஒரு தனிப் பாரம்பரியமும் பெருமையும் மட்டுமல்ல, ஒரு அனுபவமும் இருக்கிறது. போன வருஷம் என்று எண்ணுகிறேன், 1973-74-ல், 73 லட்சம் டன் உணவு தானிய உற்பத்தி அளவை ஏற்படுத்திக் காட்டிய பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு இருக்கிறது. இதற்கு முன்னாலே மொத்த உற்பத்தி 30 லட்சம் டன் என்பார்கள், 35 லட்சம் டன் என்பார்கள், 28 லட்சம் டன் என்பார்கள். ஆனால், இவர்கள் வந்த பிறகு தனி முயற்சி எடுத்து உற்பத்தியைப் பெருக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டார்களே, அதற்காகத்தான் நான் அவ்வளவு தூரம் வலியுறுத்திக் கூறியிருக்கிறேன். வேறு காரணத்திற்காக அல்ல. நிறையச் செய்திருக்கிறார்கள். செய்யவில்லையென்று மறுத்துச் சொல்வதற்கில்லை. இருந்தாலும் எதிர்பாராத அளவுக்கு இயற்கை நம்மைக் கெடுத்திருக்கிறது. நமக்கு இப்படிப்பட்ட நிலைமை வருமென்று தெரியுமா? இயற்கை பற்றி திட்டவட்டமாக யாரும் எந்த ஜோசியனும் எதையும் சொல்ல முடியாது. இப்படி மழை இல்லாமல் பொய்த்துவிடப் போகிறது என்பது போன வருஷம் தெரியுமா? நிச்சயமாக ஒருவருக்கும் தெரியாது. ஏதோ திராவிட முன்னேற்றக் கழக அரசு இங்கே விளைந்த ஏராளமான நெல்லை, அரிசியை அண்டை மாநிலங்களுக்கெல்லாம் தந்துவிட்ட காரணத்தால்தான் இப்படிப்பட்ட நிலைமை என்று எனக்கு முன்னாலே பேசிய அருமை நண்பர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் பக்கத்திலே இருப்பவர்கள். அவர்களுக்கு வேண்டுமானால் 'ஆந்திராவிலோ அல்லது குஜராத்திலோ பட்டினி கிடக்கிறார்கள், கடுமையான வறட்சி, பஞ்சம், அங்கே இறந்து சாகிறார்கள்' என்று இருக்கலாம். ஆனால், தமிழ் நாட்டுக்கு, எனத் தனிப் பண்பாடு இருக்கிறது, இரக்கத்தன்மை இருக்கிறது. இரக்கம் இருக்கிற காரணத்தால்தான், அவர்களும்





இந்தியாவில் பிறந்தவர்கள், நாமும் இந்தியாவில் பிறந்தவர்கள், நம்மோடு பிறந்தவர்கள் என்ற நல்லெண்ணத்தோடு, நமக்கு இருப்பதில் கொஞ்சம் குறைத்துக் கொண்டாலும் அங்கே தருவோம் என்ற எண்ணத்தோடு தந்தோமே தவிர, ஏதோ இங்கே ஏராளமாகக் கொட்டிக் கிடக்கிறது, ஆகவே, கொட்டி வாரி வாரி அனுப்பிவிடுவோம் என்ற ஒரு கெட்ட எண்ணத்தோடு, 'அல்ட்டீரியர் மோட்டிவ்'ஓடு செய்யவில்லை. நம்மோடு பிறந்தவனாயிற்றே, அவனைக் காப்பாற்ற வேண்டுமே, அது முதல் கடமையாயிற்றே, நாம் மட்டும் வயிறாற மூன்று வேளை சாப்பிட்டு விட்டு மற்றவர்கள் அங்கே பட்டினியால் இறந்து விடாமலிருக்க, நம்மிடம் இருப்பதில்—தேவைக்கு அதிகமாக இருந்ததை அல்ல—கொஞ்சம் கொடுத்தோம். அப்படிக்கூட நாம் கொடுக்கவில்லையென்றால், அப்படிக் கொடுப்பதற்கு இடம் செய்யவில்லையென்றால், மனித உலகத்தில், மனித சமுதாயத்தில் அப்படிப்பட்டவனை ஒரு முழு மனிதனாகக் கூட ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆகவேதான் சிற்சில நேரங்களில் ஒருசில நன்மைகள் செய்ய வேண்டியிருக்கிறது. அதுமாதிரிச் செய்வதை யாரும் தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது. என்னைப் பொறுத்தவரையில், நான் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்தவன். என்னுடைய செங்கற்பட்டு மாவட்டத்தில் பஞ்சம் இருக்கிறது அல்லது இல்லையென்று நான் சொல்லக்கூட இல்லை. ஆனால், 22 லட்சத்திலிருந்து 24 லட்சம் வரையில் மக்கள் இருக்கிறார்கள். இது செங்கற்பட்டு டிஸ்ட்ரிக்டிலே உள்ள மக்கள் தொகை. செங்கற்பட்டு ஜில்லாவில் இதுவரையில் படி ஆறு ரூபாய், ஏழு ரூபாய் என்று இல்லாமல், நாலு ரூபாய் அல்லது 3-90-க்கு அரிசி கிடைத்து வருகிறது. 400 மைல் சுற்றளவில் இப்படியே கிடைத்து வருகிறது என்பதைப் பெருமையாகச் சொல்லுகிறேன்.

(பிற்பகல் 5-45)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 400 மைலா ?

திரு. சி. வி. ராஜகோபால் : கூனம்பேட்டிலிருந்து திருத்தணி பகுதி வரையில் சொல்லுகிறேன்—மைலை நீங்கள்தான் போட்டுக்கொள்ள வேண்டும். ஆக நாலு ரூபாய் என்ற அளவில்தான் கிடைக்கிறது. எனக்கு முன்பு கூறினார்களே, சமூக விரோதிகள் இருக்கிறார்கள் என்று, அவர்களைச் சும்மா விடக் கூடாது. சமூக விரோதிகளை 'மிசா' சட்டத்தின் கீழ் பிடிக்க வேண்டும் என்றார்கள். அந்தக் கருத்தை வரவேற்கிறேன். ஆனால் அருமை நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் வியாபாரிகளையெல்லாம் 'மிஸா' சட்டத்தில் பிடிக்கின்றார்களே என்று சற்று வருத்தப்பட்டார்கள். சிலரை அப்படிப் பிடித்தால் தான் நாட்டு மக்கள் நல்வாழ்வு வாழ முடியும். செங்கற்பட்டு மாவட்டத்தில் மாவட்டக் கலெக்டர் திரு. இராமநாதன் என்று இருக்கிறார். இன்று அவர்

மாற்றப்பட்டுவிட்டார் என்று சொல்லும்போது வேதனையாகத்தான் இருக்கிறது. அவர் அந்த மாவட்ட மக்களைக் காப்பாற்றியிருக்கின்றார் என்பதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன். அவர் சொன்னாரே, பலமிக்க சமூக விரோதிகள் என்று, அப்படிப்பட்டவர்கள் எங்கள் காஞ்சீபுரத்தில் மட்டும் சுமார் 100 பேர் இருக்கின்றார்கள். 'எனக்கு அவர் வேண்டியவர், இவர் வேண்டியவர், அமைச்சர் வேண்டியவர்' என்றெல்லாம் சொல்லி முன்பிருந்த கலெக்டர்களை இவர்கள் ஏமாற்றியிருக்கின்றார்கள். ஆனால் இவர் கொஞ்சம் கூட நெறி தவறாமல் யார் எப்படிப்பட்டவரானாலும் சரி, யாராவது சிபாரிசு பிடித்துக்கொண்டு வந்தாலும் சரி, நியாயத்தின் பக்கம் நின்று, 'இறுதியில், முதலமைச்சர் அவர்களுக்கே நியாயம் தெரியும். அவர் சொல்லட்டும், பிறகு வேண்டுமானால் விட்டு விடுகிறேன்' என்று பலம் பொருந்திய மோசடிப் பேர்வழிகளையெல்லாம்கூட விடாமல், அவர்களுடைய லாரிகளைப் பறிமுதல் செய்து அவர்களையும் சிறையில் தள்ளியிருக்கின்றார்கள்.

***மாண்புமிகு மேலவைத் தலைவர் :*** *காஞ்சீபுரமா? அது உங்கள் ஊர். உங்களுக்குத் தெரியும்.*

***திரு. சி. வி. ராஜகோபால் :*** *நான் தமிழ் நாடு முழுதும் சுற்றிப் பார்க்கவில்லை. ஆனால் பத்திரிகையில் பார்க்கும்போது, ஒவ்வொரு பகுதியிலே அரிசி கிடைக்காமல் மக்கள் எவ்வளவு கஷ்டப்படுகின்றார்கள் என்றெல்லாம் பார்க்கிறேன். கள்ளக் கடத்தல்காரர்களைப்பற்றியெல்லாம் எழுதியிருக்கின்றார்கள் பத்திரிகையில். பெருமையோடு, அவைத் தலைவரவர்களே, தங்கள் மூலம் சபைக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அப்படிப்பட்டவர் இன்னும் ஒரு ஏழெட்டு மாதம் இருந்தால்—காரணம் இன்னும் ஏழெட்டு மாதங்கள் பஞ்சம் இருக்கும் என்று சொல்லுகின்றார்கள், ஆகவேதான் சொல்லுகிறேன். இவர் இன்னும் ஏழெட்டு மாதங்கள் இருந்தால்—எங்கள் ஜில்லா மக்கள் நிம்மதியாக இருப்பார்கள். வேறு யார் வந்தாலும் இந்த அளவிற்கு மக்களைக் காப்பாற்றுவார்களா என்று . . .*

***மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :*** *யார் வந்தாலும் காப்பாற்றுவார்கள்.*

***திரு. சி. வி. ராஜகோபால் :*** *உண்மைதான். ஆனால் இவர் இந்த மாவட்டத்தில் அனுபவம் மிக்கவர், நேரடியாகப் பல காரியங்களைச் செய்திருக்கின்றார்கள். ஆகவேதான் கேட்டுக்கொள்ளுகிறேன். செம்மையாக நிர்வாகம் இருக்க வேண்டும். நிர்வாகத்தில் இருப்பவர்கள் நேர்மையாகச் செய்தால்தான் நல்ல முறையில் எல்லாம் அமையும். நிர்வாகம் என்பது இடக்கான குதிரை. சவுக்கைப் போட்டு ஓட்ட வேண்டும். அதிலே இருப்பவர்கள் திறமைசாலிகளாக இருக்க வேண்டும். இப்படி நாம் சிரமப்படும்போது மத்திய சர்க்கார்*



*நமக்காக எவ்வளவோ காரியங்களைச் செய்யத்தான் வேண்டும். சில நேரங்களிலே நம்மை மறந்து விடுகின்றார்கள். நேற்று திரு. சுவாமிநாதன் அவர்கள் மத்திய அமைச்சர் திரு. ஜார்ஜ் அவர்கள் திருச்சியிலே பேசியதாகக் குறிப்பிட்டார்கள், தமிழ் நாட்டிலேயிருந்து அரிசி வருகிறது, ஆகவே கேரள மக்கள் முதலமைச்சர் அவர்களைப் பெரிதாக எண்ணுகின்றார்கள் என்றாராம். திரு. ஜார்ஜ் அவர்கள் சொன்னது எப்படி இருக்கிறது என்றால், கேரள மக்கள் தமிழ் நாட்டிலேயிருந்து கள்ளக்கடத்தலில் அரிசி எடுத்துவருகின்றார்கள் என்ற அர்த்தம்படும்படிதான் பேசியிருக்கிறார்கள். கேரள மக்களில் நாணயம் உள்ளவர்கள்கூட கள்ளக்கடத்தல்காரர்கள்தான் என்று சொல்லுவதைப்போல திரு. ஜார்ஜ் அவர்களுடைய பேச்சு அமைந்திருக்கிறது. பெரிய இடத்தில் உள்ள ஒருவர் முடிச்சுப் போடுவது அல்லது பெரியவர்கள் சொல்லுவார்களே, 'சிண்டு' முடிப்பது என்று அதையெல்லாம் செய்யக்கூடாது. பெரிய இடத்தில் உள்ளவர்கள் இப்படியெல்லாம் பேசக் கூடாது என்றுதான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.*

*மத்திய சர்க்கார் உள்ள நிலைமைகளை இன்னும் சற்றுத் தீவிரமாக யோசிக்க வேண்டும். சென்ற தடவை வறட்சி என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னவுடன் ரூ. 14 கோடி கொடுத்தார்கள். ஆனால் அதைவிடக் கொடூரமாக இப்போது இருக்கிறது. ரூ. 25 கோடி வேண்டும் என்று கேட்கும்போது, ஏதோ கொடுக்கிறேன் என்று கொடுக்கின்றார்கள். இதுவரையில் ரூ. 2 அல்லது 3 கோடிதான் வந்தது என்று சொல்லுகின்றார்கள். நமக்குத் தேவைப்படுவது ரூ. 30 கோடி. முப்பது என்று சொல்லும்போது இருபதாவது கொடுக்கலாம், கொடுக்கவில்லை. ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால் நம்மைவிட—நமக்கு அப்பாற்பட்ட பங்களாதேஷ் தேசத்தில் வெள்ளம், பஞ்சம் என்ற நேரத்தில் வாரி வாரி வழங்கியிருக்கின்றார்கள். அவர்களுக்காக சர்க்கரையையும் சிமின்ட்டையும் வாரி வாரிக் கொடுத்தோம். ஒருவிதமான நிபந்தனையும் இல்லாமல் அவர்களுக்கு வாரி வாரிக் கொடுத்திருக்கும்போது, தமிழக மக்களுக்கு அதைச் செய்யக்கூடாதா?*

*நேற்று முதல்நாள் திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் சொன்னார்கள், "எனக்கு 72 வயதாகிவிட்டது. கடந்த 55 ஆண்டுக் காலத்திலே இராஜசிங்கமங்கலம் கண்மாயைக் கட்டுவதற்கு எவ்வளவோ முயற்சிகள் எடுத்தும் பலனளிக்கவில்லை. எங்கள் கட்சி ஆட்சி 18 வருஷ காலம் இருந்தது. அப்போதும் முடியவில்லை. ஆனால் முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபிறகு, நீங்கள் வந்தபிறகு முதலமைச்சர் அவர்கள் அதை எடுத்துக்கொண்டார்கள்". (ஆளும் தரப்பிலிருந்து கைதட்டல்) அவரே முன்னேற்றக் கழகத்தைச் சாடிப் பேசியிருக்கிறார், அப்படிப்பட்டவர் எப்படிப் பாராட்டியிருக்கின்றார் என்பதற்*

காகச் சொல்லுகிறேன். அவரே பாராட்டிப் பேசியிருக்கும்போது நான் பாராட்டிப் பேசுவது சிலாக்கியமில்லை. திரு. சுந்தரேசத் தேவர் அவர்களும் பாராட்டிப் பேசியிருக்கின்றார்கள். சந்தோஷத்துடன் குறிப்பிட்டார்கள்.

அடுத்து நமது உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்கள் தந்திருக்கின்றார்கள், இன்றையதினம்தான் பார்த்தேன்.

(பிற்பகல் 5-40)

கல்லூரிப் பட்டம் வாங்கியவர்கள் வேலையில்லாமல் திண்டாடுவதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை என்கிறார்கள். காவிரிக்குத் தண்ணீர் விட வேண்டும், அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை என்கிறார்கள். இவையெல்லாம் கொஞ்சம் தகராறான சமாச்சாரங்கள். எதை வேண்டுமானாலும் நாம் பேசிவிடலாம். இவை பெரிய விஷயங்கள். கருநாடகத்தில் இருக்கிற முதலமைச்சரையும், மற்ற அமைச்சர்களையும் விரோதம் செய்துகொண்டு பலனில்லை. முள்ளின் மேலே சேலையைப் போட்டால் (குறுக்கீடு) புடவையைப் போட்டால் எடுத்து விட முடியாது. 30 வருடங்கள் ஆகிவிட்டன. அவர்கள்—மைசூர் அணை கட்டுவதும், தண்ணீர் கொடுக்காமல் இருப்பதும் நீண்ட காலச் சமாச்சாரங்கள். இந்த அமைச்சர்கள் 'மைனர்'-களாக அந்த நேரத்தில் இருந்திருப்பார்கள். மேஜராக இருந்திருக்க முடியாது. (குறுக்கீடு) 'யங் பீப்புள்'-ஆக இருந்திருக்கக்கூடும். அந்தக் காலத்திலேயே மைசூர் ஏமாற்றியிருக்கிறது. அவர்களை மெதுவாகத்தான் கேட்க வேண்டும். அவர்கள் எது கேட்டாலும் நாம் வழங்குகிறோம். நமக்கு மின்சாரம் இல்லையென்றால் கேட்கிறோம். இதைக்கூட நாம் மாற்றிக்கொள்ளவில்லையென்றால், 'யூனிட்டி' என்று பேசுவதில் பலனில்லை. ஒன்று, 'யூனிட்டி'-ஐ மறந்துவிட வேண்டும். ஆனால், அதை மறந்துவிட முடியாது. அது கஷ்டமான வேலைதான். மத்திய அரசும் இந்த மாதிரி விஷயங்களில் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அடியோடு சிந்திக்க மாட்டேன் என்று திரும்பிக்கொண்டுவிட்டால், மற்றவர்களும் திரும்பிக்கொள்வார்கள். அப்போது பயன் ஏற்படாது. நாம் கேட்கிறபோது, நம்மைப் பார்த்து—மனம் குளிரப் பார்க்க வேண்டுமேயொழிய, நம்மைப் பார்க்கும்போது 'கடு கடு' என்று பார்த்தால் நன்றாக இருக்காது. அந்த மாதிரி நிலைமைகள் ஏற்படக்கூடாதென்றுதான் கொஞ்சம் லேசாகப் போட்டிருக்கிறார்கள். திரு. தாமோதரன் அவர்கள், தனக்கே உரித்தான பாணியில், லண்டன் ஆங்கிலத்தில் பேசினார்கள். மிக அழகாகக் கருத்துக்களைக் கூறினார்கள். நெய்வேலியில் ஒரு நிமிஷத்திற்கு 50,000 காலன் தண்ணீர் கிடைக்கிறதென்று கூறினார்கள். அப்படி ஏராளமாகக் கிடைக்கும் தண்ணீரை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். அதில் கொஞ்சம் சல்பூரிக் ஆசிட் கலந்திருக்கக்கூடும்; அதை நல்ல தண்ணீராக்கி, சென்னைக்குக்





கொண்டு வரவேண்டுமென்று சொன்னார்கள். அவர் சொன்னது சரிதான். அதை எங்கே சொல்லியிருக்க வேண்டும்? அதைப் பாராளுமன்றத்தில் சொல்லியிருக்க வேண்டும். நெய்வேலியை அவர்கள் கையில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு எத்தனை கோடி ரூபாய் தேவைப்படுகிறது? 1 கோடி அல்லது இரண்டு கோடியா? ஆயிரம் அல்லது இரண்டாயிரம் கோடி ரூபாய் வைத்துக்கொண்டுதான் நம்மால் அதைச் செய்ய முடியும்.

கடைசியாக, ஒன்றை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். செங்கற்பட்டுக்குப் பக்கத்தில் ஓடுகின்ற பாலாறு இருக்கிறதே....

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** பாலாறு ஓடவில்லை, அப்படியே இருக்கிறது.

**திரு. சி. வி. ராஜகோபால்:** அதில் பால் ஓடவில்லை. மணல்தான் ஓடுகிறது. அப்படிப்பட்ட அழகான பாலாற்றின் கரையிலுள்ள பல ஊர்களில்—செங்கற்பட்டு, காஞ்சீபுரம், ஆற்காடு போன்ற பல இடங்களில் தண்ணீர் அடியிலே போய்விட்டது. இப்போது குடிப்பதற்காகத் தண்ணீர் கிடைக்கிறது. பம்ப்செட் போட்டு தண்ணீரை இறைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பாலாற்றிலே இருக்கும் தண்ணீரை எடுத்து சென்னைக்குக் கொண்டு வரப் போகிறார்கள் எனத் தெரிகிறது. அப்படி நேருமானால், காஞ்சீபுரம் போன்ற முக்கியமான டவுன்களுக்குத் தண்ணீர் இல்லாமல் போய்விடும். பாலாற்றுப் படுகையிலுள்ள மற்ற ஊர்களுக்கும் தண்ணீர் கிடைக்காமல் போய்விடும். அப்படிப்பட்ட முயற்சிகள் இருக்குமானால், அங்கிருந்து தண்ணீர் கொண்டு வராமல், அப்பகுதிகளுக்கே அந்தத் தண்ணீர் கிடைக்கும்படிச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த ஆட்சியிலே செவ்வனே காரியங்கள் நடைபெறுகின்றன; மக்களுக்குத் தேவையான காரியங்களை இந்த அரசு செய்து வருகிறது; அந்தப் பணிகளுக்குக் கொடுக்கும் பணத்தைக் கொஞ்சம் ஒழுங்காகச் செலவு செய்ய வேண்டுமென்று கூறி, வாய்ப்பு அளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் 1975-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24-ம் தேதி மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

[பிற்பகல் 5-45]

3. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

80. Notification issued with G.O. Ms. No. 177, Excise and Prohibition, dated the 2nd September 1974 in regard to amendments to the Madras Liquor (Licence and Permit) Rules, 1960. [Laid on the table of the House under section 54(3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

81. Notification issued with G.O. Ms. No. 2451, Rural Development and Local Administration, dated the 19th November 1974 specifying the contiguous areas of Madras City mentioned in the Schedule as forming part of the Madras Metropolitan Planning Area under section 2[23-(a)] of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

82. Notification issued with G.O. Ms. No. 1200, Home, dated the 16th May 1974 in regard to amendments to rule 4, 49G, etc., to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133(3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

83. Notifications issued with G.O. Ms. No. 2688, Rural Development and Local Administration, dated the 1st December 1973 relating to the division of wards and reservation of seat for women in the Ranipet Municipal Council of North Arcot district with effect on and from the date of the next ordinary elections to the Ranipet Municipality. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

84. Notification issued with G.O. Ms. No. 2231, Rural Development and Local Administration, dated the 16th October 1974 in regard to deletion of a park from the approved list of parks within the jurisdiction of Thanjavur Municipality. [Laid on the table of the House under section 14 (3) of the Tamil Nadu Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Tamil Nadu Act 26 of 1959).]



85. Notification issued with G.O. Ms. No. 736, Labour, Employment and Housing, dated the 29th August 1974 in regard to amendments to the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Rules, 1971. [Laid on the table of the House under section 72 (2) of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971 (Tamil Nadu Act 11 of 1971).]

86. Notification issued with G.O. Ms. No. 2513, Rural Development and Local Administration, dated the 27th November 1974 in regard to amendment to sub-rule 2 (a), rule II relating to the construction of compound walls with height not exceeding 2.45 metres under the Tamil Nadu District Municipalities Building Rules, 1972. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

87. Notification issued with G.O. Ms. No. 2338, Home, dated the 28th September 1974 in regard to amendment to rule 155-A of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

88. Notifications issued with G.O. Ms. No. 598, Commercial Taxes and Religious Endowments, dated the 20th November 1974 in regard to amendment to the Revenue Department Notification II-1 No. 1061 of 1965, dated the 12th March 1965, published at pages 1-6 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 15th March 1965. [Laid on the table of the House under section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963).]

89. Notification issued with G.O. Ms. No. 490, Co-operation, dated the 10th September 1974 in regard to amendments to the Tamil Nadu Co-operative Land Development Banks (Miscellaneous Provisions) Rules, 1970. [Laid on the table of the House under section 38-A of the Tamil Nadu Co-operative Land Development Banks Act, 1934 (Tamil Nadu Act X of 1934).]

90. Notification issued with G.O. Ms. No. 2259, Home, dated the 18th September 1974 in regard to amendment to rule 148-D of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

91. Order issued with G.O. R. No. 670, Commercial Taxes and Religious Endowments, dated the 30th November 1974 exempting from liability to entertainments tax, show tax, additional surcharge on entertainments tax and additional surcharge on show tax, all film shows conducted by the Information and Public Relations Department of the Government of Tamil Nadu for the benefit of the children at the Kalaivanar Arangam, Madras. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

92. Notification issued with G.O. Ms. No. 453, Co-operation, dated the 8th August 1974 in regard to amendment to rule 17 (i) of the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [Laid on the table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).]

93. Notification issued with G.O. Ms. No. 456, Co-operation, dated the 8th August 1974 in regard to amendment to the Tamil Nadu Co-operative Societies Rules, 1963.[Laid on the table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Rules, 1963 (Tamil Nadu Act 53 of 1961).]

### *B. Reports, Notifications and other Papers.*

* 24. Address by the Governor of Tamil Nadu to both Houses of the Tamil Nadu Legislature assembled together on 20th February 1975.

* Circulated to all M.L.Cs. on 20th February 1975.



## இணைப்பு I

[5–ஆம் பக்கத்தில் 14 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க]

There is a ban on unauthorised movement of fertilisers outside the State. The ban on Inter-State movement of fertilisers was brought into force, for the first time, only with effect from the middle of June, 1973. with reference to the Notification of the Government of India No. SRO. 249 (E), dated 25th April/1st May 1973. Under the Essential Commodities Act, 1955 the private manufacturers are required to give a portion of their product to the State Government, towards the non-Pool quota of supply. The export of fertiliser is permitted under and in accordance with an authority issued by the Government of India, Ministry of Agriculture or the Director of Agriculture of a State Government or any other officer authorised by the Government in this behalf.

2. From the middle of June 1973 to March 1974. 17 cases of attempted smuggling have come to the notice of Government. They are:

(1) An illicit transport of 80 bags of Superphosphate was detected, when the lorry was intercepted at the Poonamalle Check-post. The lorry, with the loaded material, was handed over to the Police immediately, for taking suitable action.

(2) A quantity of 100 bags of Ammonium Sulphate was seized at Hosur by the Inspector of Police (Food Cell) C.I.D. Hosur, when the lorry was transporting the material illicitly from Krishnagiri to Bangalore. Suitable action is being taken by the Police against the individuals concerned.

(3) The consignment of 680 bags of Complex fertilisers was booked at Hosur Railway station for being transported to Yeshavanthapur Railway station in Mysore State (Karnataka). The unauthorised booking of the fertiliser to a place outside the State was detected by the Inspector of Police (Food Cell), Hosur. The consignment was confiscated. Suitable action is being taken by the Police against the persons concerned.

| Serial number and Unit. (1) | Date and place of occurrence. (2) | Name of fertiliser seized. (3) | Quantity seized in Quintals. (4) | Persons arrested. (5) | Present stage of the case and brief fact. (6) |
|---|---|---|---|---|---|
| 4 Madras .. .. | 26th November 1973, Seven wells | Urea and Insecticides. | 30—00<br>14—00 | 2 | Under investingation. Attempted smuggling to A.P. |
| 5 Do. .. .. | 12th December 1973, Puzhal CheckPost. | Japan Urea and Neyveli Urea. | 34—50<br>5—50 | 7 | Do. |
| 6 Do. .. .. | 26th January 1974, Puzhal CheckPost. | Japan Urea, Fadtomophas, Madras Port. and Neyvali. | 50—00 | 1 | Do. |
| 7 North Arcot .. .. | 14th January 1974, Melapady. | Factomac. | 181—50 | 8 | Do- |
| 8 Dharmapuri .. .. | 30th October 1973, Thally. | M. F. Complex | 15—00 | 2 | Fined. Attempted smuggling from Tamil Nadu to Mysore (Karnataka.) |
| 9 Do .. .. | 18th November 1973, Berigai | Urea, M. F. Complex and Mixture. | 67—50 | 2 | Under Investigation. Attempted smuggling from Tamil Nadu to Mysore (Karnataka). |
| 10 Do .. .. | 11th November 1974 Berigai | M. F. Complex Jappan Urea and C. P. N. | 40—00 | 4 | Fined. Attempted smuggling from Tamil Nadu to Mysore (Karnataka.) |
| 11 Do. .. .. | 25th January 1974. | Sulphate, Complex, C.N. | 7—00 | 3 | Do. |
| 12 Do. .. .. | 9th February 1974. | S. D. K. Urea UBE-Japan Urea, Goa Urea, DAP Complex. | 6—00 | 3 | Pending trial. Attempted smuggling to Mysore (Karnataka). |
| 13 Kanyakumari .. .. | 24th January 1974 Kalai-Khavilai. | A. S. | 62—00 | 3 | Under Investigation. Attempted smuggling to Kerala. |
| 14 Chingleput .. .. | 1st August 1973, 17th November and 29th November 1973. | Urea, A.S. and Complex | 250—00 | 7 | Pending trial, Attempted smuggling to Andhra. |
| Do. .. .. | Arambakam | Mixture | | | |
| 16 .. | | .. | .. | | |
| 17 Coimbatore | 18th March 1974 Pollachi | Urea | 50—00 | 1 | Under investigation. |

The special staff employed in the Director of Agriculture, as also the check-post staff are vigilant in preventing, to the extent possible, illicit transport of fertilisers outside the State. The Director of Agriculture has issued a circular to all those concerned that no permit for the movement of fertilisers from one State to another will be issued by this office. In the absence of the proper clause in the Fertiliser (Control) Order to curtail or prevent inter-District movement of fertilisers, strict instructions have been issued by the Director of Agriculture to the officers of the Directorate of Agriculture to discourage inter-District transactions. Accounts were checked with reference to bills and invoices and stringent action was taken suspending wholesale certificates of Registration. In the current year, 1973-74, 46 wholesale Certificates of Registration were suspended under this category. The Director of Agriculture has also issued orders not to issue any more wholesale Certificate of Registration during the year from 1st September 1972 to curb the entry of possible unscrupulous traders getting access into the market. Recently, the enforecement machinery for the implementation of the Fertiliser (Control) Order, 1957 has been strengthened. Six District Agricultural Officers and 38 Deputy Agricultural Officers have been appointed, as whole-time Fertiliser Inspectors for the purposes of the Fertiliser Control Order. The Deputy Inspectors-General of Police, Food Cell, C.I.D. is also taking steps to prevent smuggling of fertilisers to other States. The Board of Revenue (Food Production) has instructed all the Collectors to make a proper assessment of the non-pool fertilisers becoming available for distribution in their respective Districts and to arrange for a periodical inspection of the premises of such dealers.

## இணைப்பு II

[90-ஆம் பக்கத்தில் 15 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

'Ponni' crop was cultivated in an area of 461.037 acres in both Thanjavur and Tiruchirappalli districts (Thanjavur—370,571 acres and Tiruchirappalli 90466 acres) in both seasons, viz., Samba and Thaladi during 1973-74. The crop raised in Thanjavur District during Samba Season 1973-74 was badly affected by severe incidence of 'Helminthosporium'. The climate was also





favourable for the spread of the disease. Scanty rains also contributed for the reduction in yield during 1973-74. The reduction in yield was of the order of 13.82 per cent for the entire Thanjavur district as compared for 1972-73.

In Tiruchirappalli District also there was a reduction in the yield of 'ponni' during 1973-74. The average yield of 'ponni' was recorded as 1946 kilograms per acre in Adaptive Research Trials which is low when compared to the average yield of 2,113 kilograms per acre during the year 1972-73. This is due to unfavourable seasonal conditions in 1973-74.

1,3X...

## தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

### செவ்வாய்க் கிழமை, 1975 பிப்ரவரி 25.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Police Firing in Palavanatham Village.*

*31 *Q.*—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Police opened fire in Palavanatham in Aruppukkottai Taluk of Ramanathapuram District in September, 1973 ;

(*b*) whether an young man was killed and several villagers injured in consequence ;

(*c*) the circumstances leading to this tragic incident and the details thereof ; and

(*d*) the action taken by the Government in this connection ?

### பலவநத்தத்தில் துப்பாக்கிச் சூடு.

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டத்தில் உள்ள பலவநத்தத்தில் 1973-ஆம் ஆண்டு, செப்டம்பரில் காவல் துறையினரால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதா ?

(இ) அதன் விளைவாக இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டாரா ? கிராமத்தினர் பலர் காயமடைந்தனரா ?

(உ) இந்தத் துயர நிகழ்ச்சிக்கான சூழ்நிலையும் அது பற்றிய விவரங்களும் என்ன ?

(எ) இது தொடர்பாக அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

[1975 பிப்ரவரி 25

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) முதல் (எ) வரை : பலவநத்தம் கிராமத்தில் 20—9—1973-ஆம் நாளன்று இரு வேறு தனியார் போக்குவரத்துப் பேருந்துகளைச் சேர்ந்த ஊழியர்களுக்கிடையே ஏற்பட்ட தகராற்றை—தொடர்ந்து—கலவரம் விளைந்தது. கூட்டத்தினர் ஜெயவிலாஸ் பஸ் போக்குவரத்து நிறுவனத்தைச் சேர்ந்த பேருந்தினையும் ஊழியர்களையும் ஆயுதங்களைக்கொண்டு தாக்கினர். நிகழ்ச்சி நடந்த இடத்தைக் காவலர் அடைந்தபோது கூட்டத்தினர் காவலர்களையும் தாக்கி, காவல் துறை சப் இன்ஸ்பெக்டரையும் உயரத்தூக்கினர். காவலர் படை தடியடி செய்து, கூட்டத்தினரின் கைகளிலிருந்து காவல் துறை சப்-இன்ஸ்பெக்டரை விடுவித்துக் காப்பாற்றியது. கூட்டத்தினர் மேலும் கடுமையான வன்முறையில் இறங்கினர். மீண்டும் மீண்டும் எச்சரிக்கை விடுத்த பின்னரும் கூட்டம் கலைந்து செல்லவில்லை. வன்முறை வயப்பட்டிருந்த கூட்டத்தினரைக் கலைக்கக் காவல துப்பாக்கிச் சூடு நிகழ்த்த வேண்டியதாயிற்று. ரவைத்தோட்டா பாய்ந்ததால் காயமுற்ற ஒருவர் பின்னர் மருத்துவ மனையில் இறந்து போனார். கலவரத்தின்போது சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர், காவலர் 7 பேர், பொதுமக்கள் 10 பேர் காயமுற்றார்கள்.

கலவர நிகழ்ச்சி குறித்து இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அதிகாரி நீதி விசாரணை நடத்தி அதுபற்றி அரசுக்கு அறிக்கையொன்றைப் பணிந்தனுப்பினார். அவர் இந்த துப்பாக்கிச் சூடு தவிர்க்க முடியாததாய் இருந்ததென்றும், நியாயமானது என்றும் தீர்ப்பளித்துள்ளார். அரசு அவர் முடிவை ஏற்றுக்கொண்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினா 32-க்கும் அதே பதில் தான்.

***Rioting in Palavanatham Village.***

***32 Q.—THIRU S. S. THENNARASU : Will the Hon. the Chief Minister be pleased to state—**

**(a) whether there was any disturbance recently at Palavanatham Village, Ramanathapuram District ; and**

**(b) whether it is a fact that there are some Naxalites in the village and they create confusion continuously ?**

பலவநத்த கிராமத்தில் கலவரம்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பலவநத்தம் என்ற கிராமத்தில் அண்மைக் காலத்தில் ஏதாவது கலவரம் ஏற்பட்டதா?



1975 பிப்ரவரி 25]

(இ) அக் கிராமத்தில் சில நக்ஸலைட்டுகள் இருந்து கொண்டு தொடர்ந்து குழப்பங்கள் செய்து வருவது உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம். தனியார் பேருந்துகள் இரண்டின் பணியாளரிடையே சச்சரவு ஏற்பட்டதையடுத்து பலவநத்தம் கிராமத்தில் 20—9—1973 அன்று கலவரமொன்று ஏற்பட்டது.

(இ) இல்லை.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, நக்சலைட்டுகள் இராமநாதபுரம் ஜில்லாவில், மேற்கு இராமநாதபுரத்திலும் வேறு பல இடங்களிலும் பலவிதமான திருவிளையாடல்கள் புரிந்து வருகின்றார்கள் என்று பொதுவாக புகார்கள் வந்து மனுக்கள் முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அப்படி ஏதேனும் நக்சலைட்டுகள் ஈடுபட்டிருக்கின்றார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இது இரண்டு பேருந்து ஊழியர்களிடையே ஏற்பட்ட தகராறின் அடிப்படையிலே எழுந்த கலவரம் ஆகும். நக்சலைட்டுகள் பற்றிய புகார்கள் தனியாக வந்துள்ளன. அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, இந்த வழக்கு சம்பந்தமாக நீதி விசாரணை தவிர வேறு கோர்ட்டுகளிலே அரசு வழக்குத் தொடர்ந்திருக்கின்றதா ? அப்படியானால் அந்தக் குற்றவாளிகளுக்கு ஏதாவது தண்டனை கொடுக்கப்பட்டிருக்கின்றதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, டி. ஆர். ஓ. அவர்களுடைய நீதி விசாரணை அறிக்கை வரப்பெற்று துப்பாக்கிச் சூடு நியாயமானது என்று அவர் தந்த தீர்ப்பை அரசு 7—2—1972-ல் ஏற்றுக்கொண்டது. இப்போதுதான் அதை ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான உத்தரவு இடப்பட்டிருக்கின்றது. குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வது பற்றி இனிமேல் தான் முடிவு எடுக்க வேண்டும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, நக்சலைட்டுகளைப் பற்றி அந்த மாவட்டத்திலிருந்து வேறு புகார்கள் வந்திருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அநேகமாக நம்முடைய மாநிலத்திலே நக்சலைட்டுகளே இல்லை என்ற அளவுக்கு நாம் நினைத்துக் கொண்டிருக்கின்றோம். எந்தவிதமான புகார்கள் இருந்து கொண்டிருக்கின்றன என்பதையும், மறுபடி மற்ற எந்த எந்த மாவட்டத்திலே நக்சலைட்டுகள் தலை தூக்குகின்றார்கள் என்பதைப்பற்றியும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்து மாத்திரம் சொல்லவில்லை. பொதுவாக தமிழ் நாட்டில் சில இடங்களில் நக்சலைட்டுகளுடைய தொந்தரவு இருப்பது, அதன் காரணமாக சில வன்முறை சம்பவங்கள் நடந்தது, சில இடங்களில் நக்சலைட்டுகள் வாசகங்கள் பொதித்த சுவரொட்டிகள் ஒட்டப்படுவது, துண்டுத் தாள்கள் வெளியிடுவது இப்படிப்பட்ட செயல்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதாகச் சொன்னேனே அல்லாமல், நக்சலைட்டுகளுடைய இயக்கங்கள் இன்று விரைவான அளவிலே பரந்த அளவிலே இருப்பதாக நான் குறிப்பிடவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, சுவரொட்டிகள் ஒட்டப்படுவது, துண்டுத்தாள்கள் வெளியிடுவது இப்படிப்பட்ட காரியங்கள் கடந்த ஓரிரு ஆண்டுகளுக்கு முன்னால் நடந்துகொண்டிருந்தன. இப்போது குறுகிய காலத்தில் புதிதாக அந்த மாதிரி நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அப்படி நடக்கவும் இல்லை. அப்படி நடப்பதற்கு யாரும் விரும்பவும் கூடாது.

### *Unrecognised Nursery and Elementary Schools in the State.*

*33 *Q.*—THIRU S. MUTHUSWAMY (on behalf of THIRU K. S. GANAPATHI) : Will the Hon. the Minister for Education be pleased to state —

(*a*) whether it is a fact that the Directorate of School Education has conducted a survey to estimate the number of unrecognised Nursery and Elementary Schools in existence in the State ; and

(*b*) if so, the details thereof ?

### மாநிலத்தில் உள்ள அங்கீகாரம் பெறாத பாலர், தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை.

திரு. செ. முத்துசாமி (திரு. கே. எஸ். கணபதி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்தில் உள்ள அங்கீகாரம் பெறாத பாலர், தொடக்கப் பள்ளிகளின் , எண்ணிக்கையை மதிப்பிட, பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகம் ஆய்வு ஒன்று நடத்தியதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) மாநிலக் கல்வி நிறுவனம் (State Institute of Education) மாநிலத்திலுள்ள அங்கீகாரம் பெறாத மற்றும் அங்கீகாரம் பெற்ற ஆங்கிலப் போதனைப் பள்ளிகள், மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட I. S. C. பள்ளிகள் ( Indian School Certificate) உயர் இடைநிலைப் பள்ளிகள் (Higher Secondary School) பல்கலைக் கழக அங்கீகாரம் பெற்ற மெட்ரிக் பள்ளிகள் இவற்றின் விளைவு மற்றும் இவற்றில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை பற்றிய தோராயமான கணக்கெடுப்பு நடத்தியது. இவ்வேலை இன்னும் பூர்த்தியாகவில்லை.

புதுடில்லியிலுள்ள கல்வி ஆராய்ச்சி மற்றும் ஆசிரியப் பயிற்சிக்கான தேசியக் குழு, மாநிலக் கல்வி இயக்குநர் மூலமாக அனைத்து இந்தியக் கல்வி நிலையக் கணக்கெடுப்பின்கீழ் (All-India Educational Survey) இம் மாநிலத்தில் உள்ள அங்கீகாரம் பெற்ற, அங்கீகாரம் பெறாத பளளிகள் உட்பட ஆரம்பப் பள்ளிகள் முதல் புகுமுக வகுப்புகள் வரையுள்ள எல்லாவிதக் கல்வி நிறுவனங்களைப் பற்றியும் புள்ளி விவரங்களை 1973-74-ம் ஆண்டு முதல் சேகரித்து வருகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, கணக்கு எடுப்பது எப்போது ஆரம்பிக்கப்பட்டது ? எவ்வளவு நாட்களாக நடைபெற்று வருகிறது ? எப்போது முடிவடையும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 1973-74-ஆம் ஆண்டிலே துவக்கப்பட்டு, 1974-ஆம் ஆண்டு முழுவதும் நடைபெற்று புள்ளி விவரம் சேகரிக்கப்பட்டு விட்டது. அதற்குக் கணக்கெடுப்பு நடைபெற்று வருகிறது. விரைவிலே அந்த விவரங்கள் வரும் என்று எதிர்பார்க்கலாம்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, அங்கீகாரம் பெறாத பாலர் பள்ளிகளை அரசு கட்டுப்படுத்தும் உத்தேசம் உண்டா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தக் கேள்வியைப் பொறுத்து இந்த வினா எழவில்லை. இப்போது புள்ளி விவரங்களைப் பொறுத்துதான் சேகரிக்கிறோம். அது கொள்கை அடிப்படையிலே எடுக்கவேண்டிய ஒன்று. அவைகளை எந்த வகையிலே கட்டுப்படுத்தலாம் என்பது பற்றியெல்லாம் தனியாகத்தான் யோசிக்கவேண்டும்.

### *Apprentice Graduate Teachers.*

*34 *Q.*—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the services of some of the apprentice Graduate teachers who were appointed during December 1970, in the 'B' Wing Schools belonging to Tiruchirappalli District, have not been regularised as per G.O. Ms. No. 351, Education, dated 3—3—1973;

(*b*) if so, the number of such persons; and

(c) the action proposed to be taken by the Government in the matter?

### வேலை பழகும் பட்டதாரி ஆசிரியர்கள்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள "பி" வகைப் பள்ளிகளில் 1970 டிசம்பரில் நியமிக்கப்பட்ட வேலை பழகும் பட்டதாரி ஆசிரியர்கள் சிலரது பணிகள், கல்வித்துறையின் 3—3—1973 நாளிட்ட 351-வது எண் அரசு ஆணைப்படி முறைப்படுத்தப்படவில்லையா?

(இ) ஆமெனில், அவ்வாறு முறைப்படுத்தப்படாதவர் எத்தனை பேர்?

(உ) இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) ஏழு ஆசிரியர்கள்.

(உ) இந்த ஏழு வேலை பழகும் ஆசிரியர்களும் 3—3—1973-க்குப் பிறகு நிரந்தரப் பணியிடத்தில் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டு பின்னர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை நியமிக்கும் பொழுது பணியினின்று வெளியேற்றப்பட்டனர். திரும்பவும் அந்த ஏழு பேரும் தஞ்சை மாவட்டத்தில் "ஏ" பிரிவு அரசு உயர்நிலைப் பள்ளிகளில் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். வேலை பழகும் ஆசிரியர் திட்டத்தின்கீழும் மற்றும் அரை மிலியன் வேலைத் திட்டத்தின்கீழும் நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களது பணியை வரன்முறைப்படுத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, 1—4—1971-க்கு முன்பு வேலையில் தற்காலிகமாகச், சேர்ந்த ஆசிரியர்களைப் பொறுத்தவரையிலே, அவர்களுடைய பணி நிரந்தரம் செய்யப்படும் என்று அரசாங்க ஆணையிலே





சொல்லப்பட்டது. இந்த ஆசிரியர்களைப் பொறுத்தவரையிலே, அவர்கள் அப்ரண்டிஸ் டீச்சர்கள் என்று வேலை பழகுபவர்களாக இருந்தார்கள். அப்படி தற்காலிகமாக இருந்தவர்கள் நிரந்தரம் ஆக்கப்பட்டபோது, வேலை பழகுபவர்களாக தற்காலிகமாக இருக்கும் இந்த ஆசிரியர்களுடைய பணியும் அந்த ஆணைப்படி ஏன் வரன்முறை செய்யப்படவில்லை என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, தமிழ் நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வு ஆணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டதன் காரணமாக அவர்கள் சேர்க்கப்பட்டார்கள். மறுபடியும், "ஏ" பிரிவிலே சேர்க்கப்பட்டார்கள். ஆகவே இந்த 7 பேர்களுடைய நிலைமையைத் தனியாகக் கவனிக்க வேண்டிய நிலைமை அரசுக்கு இருக்கிறது. அதை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது 3—3—1973-க்கு முன்னால் நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசியர்களுடைய பணி வரன்முறைப் படுத்தப்படுவது இன்னும் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இவ்வளவு காலம் ஏன் தாழ்த்தப்பட்டது? ஏற்கெனவே போட்ட உத்தரவின்படி உடனடியாக அவர்களுடைய ஊழியம் நிரந்தரம் செய்யப்படும் என்று உத்தரவாதம் அளிக்கப்பட்டது. ஆனால் அவர்களுக்கு இன்கிரிமெண்ட் வழங்கப்படவில்லை. இன்னும் அவர்களுடைய ஊழியத்திற்கு உத்தரவாதம் அளிக்கப்படவில்லை. பணி ரெகுலரைஸ் செய்யப்படவில்லை. இது பரிசீலனையில் இருக்கிறது என்கிறார்கள். எப்போது பரிசீலிக்கப்பட்டு முடிவெடுத்து அவர்கள் நிரந்தரமாகப் பணியிடத்தில் அமர்த்தப்படுவார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, பலருடைய பிரச்சினைகள் தீர்கப்பட்டுவிட்டன. இந்த 7 பேர்கள்பற்றி பிரச்சினைதான் இப்போது இருக்கிறது. இந்த 7 பேர்களுடைய பிரச்சினை தனியாகப் பரிசீலிக்கப்படவேண்டியிருப்பதால், வேறு சில விவரங்கள் இயக்குநர் அவர்களிடம் கேட்கப்பட்டிருக்கின்றன. அதுபற்றி விரைவில் முடிவெடுக்கப்படும்.

திரு ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இந்த 7 பேர்களும் 1970 டிசம்பர் மாதத்திற்கு முன்னாலே சேர்க்கப்பட்டவர்கள். அரசாங்கத்தினுடைய ஆணையிலே, 1—4—1973-க்கு முன்னால் தற்காலிகமாக வேலையிலே சேர்ந்த ஆசிரியர்கள் அனைவருடைய வேலையும் நிரந்தரம் செய்யப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அப்படித் தற்காலிகமாக வேலையில் சேர்ந்தவர்கள் அனைவருடைய வேலையும் நிரந்தரம் செய்யப்படும்போது, இந்த வேலை பழகுபவர்களாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களும் தற்காலிகமாகத்தான் வேலையிலே சேர்ந்தால், அந்த 7 பேர்களுக்கு மட்டும் அந்தச் சலுகை கிடைக்காமல் இருப்பதற்கான காரணம் என்ன? அந்த ஆணையின் ஒரு பகுதியாகவே இந்த 7 பேர்களையும் கருதி அவர்களையும் வேலையில் நிரந்தரம் செய்யலாம் அல்லவா என்று கேட்டுக்கொள்கிறேன்.

[1975 பிப்ரவரி 25

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதனால்தான் இதிலே ஒரு குழப்பம் ஏற்பட்டு அந்த 7 பேர்கள் நீக்கப்பட்டு மறுபடியும் 'ஏ' பிரிவில் சேர்க்கப்பட்டு தனியாக பரிசீலிக்கப்பட வேண்டியிருக்கிறது. இப்போது வரன்முறைப்படுத்துகின்ற காரியம் பரிசீலனையில் இருக்கின்றது. வரன்முறைப்படுத்தும்போது, ஒரு காலவரையறை என்று இருக்கின்றது. மற்றவர்களுக்கு எந்தக்காலம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த அளவு காலம் இவர்களுக்கும் கொடுக்கப்பட்டு வரன்முறைப்படுத்தலாம்.

*Government Servants Family Benefit Fund Scheme.*

*35 Q.—THIRU P. R. THOMAS and THIRU K. ARIVAZHAGAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the Tamil Nadu Government Servants Family Benefit Fund Scheme, which has been extended to the teachers of Aided Schools has not been extended to the teaching and non-teaching staff of Aided Arts and Engineering Colleges and Polytechnics; and

(b) if so, whether the Government will extend the same with effect from 1—1—1974 ?

தமிழ் நாடு அரசுப் பணியாளர் குடும்ப நல நிதித்திட்டம்

திரு. பி. ஆர். தாமஸ் & திரு. க. அறிவழகன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) மானியம் பெறும் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ள தமிழ் நாடு அரசுப் பணியாளர் குடும்பநல நிதித்திட்டம் மானியம் பெறும் கலை, பொறியியல் கல்லூரிகள், பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள் ஆகியவற்றைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கும் பிற பணியாளர்களுக்கும் நீட்டிக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், 1—1—1974 முதற்கொண்டு இத்திட்டத்தை அவர்களுக்குப் பொருந்தும் வகையில் அரசு நீட்டிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இப்பொருள் அரசின் ஆய்விலுள்ளது.

*Extension of the Tamil Nadu Government Servants' Family Benefit Fund Scheme to the Teachers of Aided Colleges.*

*12 Q.—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state—



1975 பிப்ரவரி 25]

(a) whether it is a fact that the Tamil Nadu Governments' Servants Family Benefit Fund Scheme, which has been extended to the teachers of Aided Schools, has not been extended to the teachers of Aided Colleges ; and

(b) if so, the resasons there for ?

மானியம் பெறும் கல்லூரிகளின் ஆசிரியர்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர்களின் குடும்பப் பாதுகாப்பு நிதித்திட்டத்தை நீட்டித்தல்.

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மானியம் பெறும் பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு நீட்டிக்கப்பட்ட தமிழ்நாடு அரசுப் பணியாளர்களின் குடும்பப் பாதுகாப்பு நிதித்திட்டம் மானியம் பெறும் கல்லூரிகளின் ஆசிரியர்களுக்கு நீட்டிக்கப்படாதது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்குரிய காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இது அரசின் ஆய்வில் உள்ளது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன்பு ஒத்தி வைக்கப்பட்ட வினா 12, இப்போது வினா 35, இவ்விரண்டு வினாக்களும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக இருக்கின்றன; வினா 35 திருவாளர்கள் பி.ஆர்.தாமஸ், அறிவழகன் ஆகியோர் பேரில் இருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இரண்டு கேள்விகள் ஏன் ஒரே மாதிரியாகப் போடப்படுகின்றன என்று அறிய விரும்புகிறேன். ஒரே சப்ஜக்ட்டில் இரண்டு கேள்விகள் ஒரே மாதிரியாக இருந்தால், ஏதாவது ஒரு கேள்வியை எடுத்துக்கொண்டு, வேறு கேள்வியை எடுத்துக் கொள்ளாமல் இருக்கும் நிலைமைதான் இதுவரையிலும் மேலவையிலே இருந்தது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இரண்டுக்கும் சற்று வித்தியாசம் இருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, ஒரே மாதிரி என்று சொன்னதால்தான் கேட்கிறேன். வித்தியாசம் என்று இருந்தால், நான் அதைப்பற்றி ஒன்றும் கேட்கவில்லை.

@ 22-2-1975 நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்டது.

*Government Offices at Vellore Fort.*

*36 Q.—THIRU WILSON APPOLLOS (on behalf of THIRU L. BALARAMAN): Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the Government propose to shift the Government Offices at Vellore Fort, North Arcot District ; and

(b) whether the Central Government have asked the State Government to vacate the Fort ?

வேலூர் கோட்டையில் உள்ள அரசு அலுவலகங்கள்.

திரு வில்சன் அப்போலோஸ், (திரு எல். பலராமன் சார்பில்): மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூர் கோட்டையில் இருக்கும் அரசு அலுவலகங்களை வேறு இடங்களுக்கு மாற்ற அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) மத்திய அரசு. கோட்டையைக் காலி செய்யக் கோரியுள்ளதா ?

மாண்புமிகு திரு அ.பெ. தர்மலிங்கம் : (அ) வேலூர் கோட்டையினுள் இருக்கும் அரசு அலுவலகங்களில் யாவும் போதிய இடவசதி இல்லாமல் குறுகிய இடத்தில் இயங்கி வருவதால், முதற் கட்டமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை, வேலூரை அடுத்த சத்துவாச்சாரி கிராமத்தில் புதிய கட்டடம் கட்டி, அக்கட்டடத்திற்கு மாற்ற உத்தேசிக்கப்பட்டிருந்தது. படிப்படியாக வேறு புதிய கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டபின் கோட்டைக்கு உள்ளேயும் வெளியேயும் இயங்கிவரும் மற்ற பிரதான அலுவலகங்களையும் அங்கு மாற்ற உத்தேசிக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்சமயம் நிலவும் நிதி நெருக்கடி நிலை காரணமாக சத்துவாச்சாரி கிராமத்தில் புதிய கட்டடங்கள் கட்டும் திட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(இ) இல்லை.

*Surplus Land taken possession of.*

*37 Q.—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU K. S. GANAPATHI): Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the extent of acres of land notified as surplus under the Tamil Nadu Land Reforms (Reduction of Ceiling on Land) Act, 1970 (Tamil Nadu Act No. 17/70), as on 30—11—1974 ; and

(b) the extent of acres of land taken possession of out of those notified surplus ?



அனுபோகத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட உபரி நிலம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : (திரு கே. எஸ். கணபதி சார்பில்): மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 30—11—1974 நிலவரப்படி, தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பைக் குறைத்தல்) சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 17/1970) உபரியென அறிவிக்கப்பட்ட நிலங்களின் பரப்பளவு யாது?

(இ) அறிவிக்கப்பட்ட உபரி நிலத்தில் அனுபோகத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட நிலத்தின் பரப்பளவு யாது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) 24,414 எக்கர்.

(இ) 20,459 எக்கர்.

(பிற்பகல் 4-10)

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, அது எத்தனை பேருக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ.பெ. தர்மலிங்கம்: மேலவைத் தலைவர் அவர்களே, 30—11—1974 அன்று நிலவரப்படி நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் பயனடையவர்கள் 27,628 பேர்.

திரு ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, 30—11—1974 வரை இந்தச்சட்டப்படி எடுக்கப்பட்ட நடவடிக்கையால் எத்தனை பேருக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ.பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, 27,628 பேர் பயனடைவார்கள்.

திரு ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, மொத்தமுள்ள நிலம் எவ்வளவு? அதில் 27,628 என்று சொன்னால், ஒருவருக்கு எவ்வளவு நிலம் கொடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ.பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 53,486 எக்கர் நிலம் எடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே சில கேசில் இருக்கின்ற காரணத்தாலே அவைகள் தடுப்பு ஆணையாலும் நீதிமன்ற நடவடிக்கைகளாலும் இன்னும் எடுத்துக்கொள்ளப்படவில்லை இப்பொழுது அந்த 27,628 பேரில் 7,244 பேர் பயன்பெறுகின்றார்கள்.

*Snake-Park at Palayamkottai, Tirunelveli District.*

*38 Q.—THIRU V. THANGAPANDIAN (on behalf of THIRU M. SANKARALINGAM): Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state :—

(a) whether there is any proposal with the Government to open a Snake-Park at Palayamkottai, Tirunelveli District; and

(b) if so, when it will be implemented ?

திருநெல்வேலி மாவட்டத்தில், பாளையங்கோட்டையில், பாம்புப் பண்ணை.

திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. எம். சங்கரலிங்கம் சார்பில்): மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில், பாளையங்கோட்டையில், பாம்புப் பண்ணை ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அது எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

*Improving Standard of Meat and Wool.*

*39 Q.—THIRU S. MUTHUSWAMY (on behalf of THIRU K. S. GANAPATHI) : Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state :

(a) whether there is any proposal to improve the standard of Meat and Wool by artificial insemination with the help of South Down and Darset varieties of Sheep imported from Australia ; and

(b) if so, the details thereof ?

இறைச்சி, கம்பளி ஆகியவைகளின் தரத்தை மேம்படுத்துதல்.

திரு. செ. முத்துசாமி (திரு. கே. எஸ். கணபதி சார்பில்) : மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சவுத் டவுன் ( South Down ), டார்செட் (Darset) வகை செம்மறியாடுகளின் உதவியுடன் செயற்கை இனப்பெருக்க வகையில் அவற்றின் இறைச்சி, கம்பளி ஆகியவைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா ?

(இ) ஆமெனில், அது குறித்த விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) செம்மறியாடுகளில், சவுத் டவுன் (South Down) டார்சட் (Darset) இனத்தைச் சேர்ந்தவை இறைச்சிக்காக வளர்க்கப்படுபவையாகும். தமிழ் நாட்டில், இறைச்சிக்காக வளர்க்கப்படும் வகைச் செம்மறியாடுகள் இனத்தை மேம்படுத்தும் பொருட்டு, ஆடு ஒன்று ரூ. 1,025 வீதம் சுமார் ரூ. 2,35,750 வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு இந்திய அரசிடம் எழுதியிருக்கிறோம்.



*Transport Development Finance Corporation.*

*40 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether there is any proposal to set up a Transport Development Corporation for the State ;

(b) if so, the reason therefor ; and

(c) the salient features of the same ?

போக்குவரத்து வளர்ச்சி நிதி உதவிக் கழகம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் போக்குவரத்து வளர்ச்சிக் கழகம் ஒன்றை அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் உண்டா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

(உ) இக்கழகத்தின் முக்கியமான கூறுகள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ), and (இ) தமிழ்நாட்டில் போக்குவரத்துத் துறையை விரிவு படுத்துவதற்கான தேவைகளை நிறைவு செய்வதற்காக, சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு, "போக்குவரத்து வளர்ச்சி நிதியுதவிக் கழகம்", என்னும் வரையறுக்கப்பட்ட பொறுப்புடைய பொதுத் துறை நிறுவனமொன்றை உடனடியாக நிறுவ அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

(உ) முதற்கண், தவணைக் கொள்முதல் ஏற்பாடுகள், பல்வேறு போக்குவரத்துக் கழகங்கள் பேருந்து அடிச்சட்டங்களை வாங்குதல், பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் கப்பல்கள், நாவாய்கள், இழுபடகுகள் முதலியனவற்றை வாங்குதல் ஆகிய வகைகளில் மட்டுமே "போக்குவரத்து வளர்ச்சி நிதியுதவிக் கழகம்" நிதியுதவி செய்யும்.

THIRU G. SWAMINATHAN : May I know what will be the capital of this Corporation and how this capital is going to be subscribed ?

The Hon. THIRU S. RAMACHANDRAN : Sir, the authorised share capital of the Corporation would be Rs. 2 crores, and the Government of Tamil Nadu will subscribe the capital.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, தனிப்பட்ட முறையில் பஸ் வைத்திருப்பவர்களுக்கும் இந்த நிதி உதவிக் கழகம் உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தேசிய மயமாக்கும் திட்டத்தை விரைவு படுத்துவதற்கான நிதி ஆதாரத்தை உண்டாக்குவதற்காகத்தான் இந்தப் போக்குவரத்து நிதி உதவிக் கழகம் ஏற்பாடு செய்யப்படுகிறது. பொது மக்களிடத்திலேயிருந்து கடன் பத்திரங்கள், டெப்பாசிட்டுகள் இவைகள் எல்லாம் வாங்கி இந்த நல உதவிக் கழகம் செயல்படவிருக்கிறது. முதலாவது அரசு நடத்துகின்ற போக்குவரத்துக் கழகங்களுக்கும் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்துக்கும் மட்டும் தான் நிதி அளிப்பதாக இருக்கிறது. காலம் அதிகமாக அதிகமாகப் பணமும் அதிகமாகக் கிடைக்குமேயானால், மற்றவர்களைப் பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

THIRU G. SWAMINATHAN : May I know whether the other State Transport Corporation will also subscribe to the capital of this Corporation ?

The Hon. THIRU S. RAMACHANDRAN : Sir, in fact, the original proposal was that the other Transport Corporations also should subscribe. But recently an Ordinance has been issued by the Government of India wherein it has been clearly stated that if the Transport Corporation subscribe to the capital, then the Financing Corporation cannot issue loans to such Companies. Therefore, the proposal of financing by the Transport Corporations has to be dispensed with according to the latest amendment of the Act.

THIRU G. SWAMINATHAN : May I know whether any policy decision has been taken on the question who will be the Chairman and Members of this Corporation ?

The Hon. THIRU S. RAMACHANDRAN : Sir, the matter is still under consideration.

THIRU G. VASANTHA PAI : Sir, will the Government also consider the introduction of improved means of bus transport under the auspices of this Corporation when it is established ?

The HON. THIRU S. RAMACHANDRAN : Sir, in order to improve the means of transport only, the financing institution is envisaged.

THIRU G. VASANTHA PAI : Sir, what I had in mind was this : Will the Government consider having buses like Grey-line and Grey-hound in this country also ?



The HON. THIRU S. RAMACHANDRAN : Sir, as time passes on, these proposals can be thought of.

THIRU G. SWAMINATHAN : May I know what is meant by 'Grey-line' and 'Grey-hound' ?

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, if I am permitted, I may answer my hon. Friend's question. 'Grey-hound' and 'Grey-line' are the buses which tour right through the United States and Canada respectively. People who go from here get a concession for travel in them and for about 200 dollars, they can ride throughout the country for nearly 1½ months. They have got the facility of issuing metres of tickets to be surrendered for each stage. There is sleeping accommodation in the buses. The buses are all air-conditioned. Comfort of the journey is like journey by air.

MR. CHAIRMAN : It appears that the hon. Member has very widely travelled in many parts of the world.

THIRU G. VASANTHA PAI : Thank you, Sir.

*Incentive Increments to First Grade and Second Grade Tamil Pandits.*

*@ 11. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the B.T. trained First and Second Grade Tamil Pandits are not sanctioned incentive increments when they pass M.A. Degree Examination ; and

(*b*) if so, the reason therefor ?

*முதல் நிலை, இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களுக்கு ஊக்க ஊதியம்.*

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பி. டி. பயிற்சி பெற்ற முதல் நிலை, இரண்டாம் நிலைத் தமிழ் ஆசிரியர்கள் எம். ஏ. பட்டம் பெற்றால், அதற்குரிய ஊக்க ஊதியம் தரப் படுவதில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் என்ன ?

@ 22—2—1975-ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

[1975 பிப்ரவரி 25

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) அண்டு (இ) முதல்நிலைத் தமிழாசிரியர் பதவியில் நியமிக்கப்பட்ட பி. டி. தேர்ச்சி பெற்று இருக்க வேண்டியவர்கள் எம். ஏ., பட்டம் பெற்றால், இரண்டு ஊக்க ஊதிய உயர்வும், எம். லிட்., பட்டம் பெற்றால் மேலும் இரண்டு ஊக்க ஊதிய உயர்வும் அளிக்கப்படுகிறது. முதல் நிலைத் தமிழாசிரியர் பதவியில் நியமிக்கப்பட்ட பி. டி., தேர்ச்சி பெற்று இருக்க வேண்டாத வர்கள், இரண்டாம் நிலைத் தமிழாசிரியர் ஆகியோர் பி. டி. பட்டம் பெற்றால், இரண்டு ஊக்க ஊதிய உயர்வு அளிக்கப்படுகிறது. அத்தகை யோர் எம். ஏ., பட்டம் பெற்றால் மேலும் இரண்டு ஊக்க ஊதிய உயர்வு அளிக்க வேண்டும் என்னும் கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, தற்போது பி. டி. ஆசிரியர் எம். ஏ., பட்டம் பெற்றால் அவர்களுக்கு ஊக்க ஊதியம் உண்டு என்று சொல்லப்படுகிறது. தமிழ் ஆசிரியர்களாக இருப்பவர்கள் பி. டி. பயிற்சி பெற்று அந்த பி.டி. பயிற்சிக்கும் மேலாக எம். ஏ., பட்டம் பெற்றால், அவர்களுக்கு மட்டும் இல்லையென்று சொல்ல வேண்டிய அவசியம் என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அவர்களுக்கும் கொடுக்க வேண்டியது நியாயம் என்று தான் இயக்குநர் அவர்களிடமிருந்து பதில் வந்திருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் அது பற்றி முடிவெடுக்கப்படும்.

### *Australian Strawberry Varieties.*

* @27. *Q.*—THIRU S. MUTHUSWAMY (on behalf of THIRU K. S. GANAPATHI) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that steps have been taken by the Department of Agriculture to propagate the newly introduced Australian Strawberry varieties in the Districts of Madurai, Salem and Tiruchirappalli ; and

(*b*) if so, the details thereof ?

### ஆஸ்திரேலியா ஸ்டிராபெரி பழவகைகள்.

திரு. செ. முத்துசாமி (திரு. கே. எஸ். கணபதி சார்பில்): மாண்பு மிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஆஸ்திரேலியா ஸ்டிராபெரி பழ வகைகளை மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் பரப்பு வதற்கு வேளாண்மைத் துறையால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை ?

@ 24—2—1975-ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது



1975 பிப்ரவரி 25]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் கொடைக்கானலில் அரசு விதைப் பண்ணையில் இந்தப் பழச் செடியின் கன்றுகள் பரப்பப்பட்டு வருகின்றன. திருச்சி, சேலம் மாவட்டங் களில் இந்தப் பழச் செடியை வளர்க்கும் திட்டம் இல்லை.

### *'KEW' variety of Pineapple.*

* @28. *Q.*—THIRU S. MUTHUSWAMY (on behalf of THIRU K. S. GANAPATHI) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state —

(*a*) the acreage where the 'Kew' variety of pineapple is grown in Tamil Nadu : and

(*b*) whether there is any proposal with the Government to introduce this variety in the District of Tiruchirappalli ?

### "கியூ" வகை அன்னாசிப் பழங்கள்.

திரு. செ. முத்துச்சாமி (திரு. கே. எஸ். கணபதி சார்பில்): மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டில் "கியூ (Kew)" வகை அன்னாசிப் பழங்கள் எத்தனை ஏக்கரில் பயிரிடப்படுகின்றன ?

(இ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இந்த வகை அன்னாசிப்பழங் களைப் பயிரிடும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) 1,500 ஏக்கர்.

(இ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 1974–75-ஆம் ஆண்டு 10 ஏக்கர் நிலத்தில் "கியூ" வகை அன்னாசி பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்த அன்னாசிப் பழங்கள் நம்முடைய நாட்டிலேயுள்ள மக்களுக்காகப் பயிரிடப்படுகின் றனவா? இல்லை, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் திட்டமேதும் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, டின்களில் அடைத்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. அது வெற்றிகரமாக இருந்தது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் உள்ள நிலவரம் இது. தற்போதைய நிலவரம் பற்றிய விவரம் என்னிடம் இல்லை.

@ 24—2—1975-ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

[1975 பிப்ரவரி 25

*Eel Fish of Tamil Nadu Exported to Japan.*

* @7. *Q.*—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Social Welfare be pleased to state —

(*a*) whether there has been a great demand for Eel Fish of Tamil Nadu, in Japan ;

(*b*) the value of the Eel Fish exported to Japan during the year 1972–73 ;

(*c*) whether the Government are taking steps for increasing and improving the strain ; and

(*d*) if so, the details thereof ?

(பிற்பகல் 4-20)

ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தமிழ்நாட்டின் விலாங்கு மீன்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு சமூகநல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஜப்பானில் தமிழ்நாட்டின் விலாங்கு ( Eel Fish ) மீன்களுக்கு அதிகத்தேவை உள்ளதா?

(இ) 1972-73 ஆம் ஆண்டில் ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட விலாங்கு மீன்களின் மதிப்பு எவ்வளவு?

(உ) அவ்வகை மீன் இனங்களைப் பெருக்குவதற்கும், மேம்படுத்துவதற்கும் அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றதா?

(எ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : (அ) தமிழ்நாட்டிலிருந்து விலாங்கு மீன் ஜப்பான் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுவதில்லை.

(இ) எழவில்லை.

(உ) & (எ) பொதுவாக விலாங்கு மீன் ருசியுள்ள உணவாக இருப்பதால் அது வெகுவாக விரும்பப்படுகிறது. தமிழ் நாட்டில் ஸ்ரீவை குண்டம் அருகில் தாமிரவாணி அமைப்பில் விலாங்கு காணப்படுகிறது. விலாங்கு குஞ்சுகள் அங்கிருந்து சேகரிக்கப்பட்டு தகுந்த நீர் நிலைகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. இதுவரை விலாங்கு இனப் பெருக்கத்திற்கு என தனியான திட்டம் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. விலாங்கு மீன்களை

@ 21—2—1975-ஆம் நாள் வினாப்பட்டியலிருந்து ஒத்திப் போடப்பட்டது



1975 பிப்ரவரி 25]

மற்ற மற்ற மீன்களைப் போல வளர்க்க வேண்டுமானால் அதற்கு இரையாக சிறு சிறு மீன்கள் தேவைப்படுகின்றன. ஆகவே அது பற்றி சரியான நடவடிக்கை தற்போது அமுலில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, சில நேரங்களிலே தவறான முறையில் விலாங்கு என்ற சொல் வியாக்கியானம் செய்யப்படுகிறது, சில நேரங்களிலே அரசியலில்கூட 'விலாங்கு', என்று சொல்லுகின்றார்களே. அதற்குக் காரணம் என்னவாக இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*Boarding Charges paid for the Students of Government School for the Deaf, Thanjavur.*

* @8. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that boarding charges of Rs. 20 per month given by the Government for each inmate of the Government School for the Deaf, Thanjavur, are found insufficient to maintain the Hostel : and

(*b*) if so, whether there is any proposal with the Government to increase it ?

தஞ்சாவூர் அரசினர் செவிடர் பள்ளியைச் சேர்ந்த மாணவர்களுக்காக வழங்கும் உணவுச் செலவுத்தொகை.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு சமூகநல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) தஞ்சாவூர்; அரசினர் செவிடர் பள்ளியைச் சேர்ந்த மாணவர் ஒவ்வொருவருக்கும் உணவுச் செலவுக்காகத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 20 வீதம் அரசு வழங்கும் தொகை அந்த மாணவர் இல்லத்தைப் பராமரிக்கப் போதுமானதாக இல்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அத்தொகையை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : (அ) ஆம்.

(இ) பூவிருந்தவல்லியிலுள்ள அரசினர் குருடர் பள்ளியைத் தவிர, அரசினர் குருடர்-செவிடர் பள்ளிகள் அனைத்திலும் ஒரு மாணவருக்கு திங்கள் ஒன்றுக்கான உணவுச் செலவுத்தொகையை ரூ. 33

@ 22—2—1975-ஆம் நாள் வினாப்பட்டியலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

ஆக அரசு உயர்த்தியுள்ளது. பூவிருந்தவல்லி அரசினர் குருடர் பள்ளியைப் பொறுத்த மட்டில், ஒரு மாணவருக்கு திங்கள் ஒன்றுக்கான உணவுச் செலவுத்தொகை ரூ. 45 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இதுபோன்றே, தஞ்சையிலுள்ள அரசினர் செவிடர் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு எவ்வளவு ரூபாய் அளிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, சென்னையை அடுத்துள்ள பூவிருந்தவல்லியிலுள்ள அரசினர் குருடர் பள்ளியைத் தவிர மற்ற அரசினர் குருடர்-செவிடர் பள்ளிகள் அனைத்திலும் ஒரு மாணவருக்கு திங்கள் ஒன்றுக்கு உணவுச் செலவுத் தொகை என்று ரூ. 33 தரப்படுகிறது. பூவிருந்தவல்லி பள்ளியைப் பொறுத்த வரையில், ஒரு மாணவருக்கு திங்கள் ஒன்றுக்கு உணவுச் செலவாக ரூ. 45 அளிக்கப்படுகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, சில மாதங்களுக்கு முன்பு வரை தஞ்சைப் பள்ளியில் மாணவர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 20 என்ற வீதத்தில் கொடுக்கப்பட்டு வந்தது. இப்பொழுது ரூ. 33 ஆக அது உயர்த்திக் கொடுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றார்கள். ஏறத்தாழ ரூ. 1 என்று ஆகிறது நாளைக்கு மாணவர் ஒருவருக்கு. இந்தத் தொகை போதுமா? 'கேர்' நிறுவனத்திலிருந்தும் தற்போது உணவுப்பொருள்கள் வராத நிலையில் இந்தத் தொகையை சற்று அதிகரிக்க அரசு முயற்சிக்குமா? பூவிருந்தவல்லிப் பள்ளிக்குக் கொடுப்பதைப் போல இங்கும் ரூ. 45 என்று கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, தற்போதுள்ள விலைவாசி உயர்வினைக் கருத்தில் கொண்டுதான் 1974 செப்டம்பர் திங்களிலிருந்து தஞ்சையிலுள்ள அரசினர் செவிடர் பள்ளிக்கு, முன்பு ரூ. 20 என்று இருந்ததை இப்போது ரூ. 33 என்று—பதிமூன்று ரூபாய் அதிகரித்துத் தரப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, ஒரு பள்ளியில் ரூ. 45 என்றும் இன்னொரு பள்ளியில் ரூ. 33 என்றும் இப்படிப்பட்ட வித்தியாசம் ஏன் காட்டப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு, சி. வி. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, சென்னையையொட்டி இருப்பது பூவிருந்தவல்லி. சென்னையிலுள்ள விலைவாசி ஏற்றத்தையொட்டி அங்கும் விலைகள் கூடிவிடுவதால், அந்தப் பள்ளிக்குச் சற்று கூடுதலாகத்தரப்பட வேண்டுமென்று அவர்கள் கேட்டுக் கொண்டதற்கேற்ப அரசு கருணையுடன் பரிசீலித்து இந்த முடிவினைச் செய்திருக்கின்றது.



திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, Cost of living -ஐப் பொறுத்தவரையில், தஞ்சை, சென்னை இந்த இரண்டுக்கும் அதிக வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை. தஞ்சையில் விலைவாசிகள் சென்னையைவிடக் குறைவாக இருப்பதாக விஞ்ஞான ரீதியாக அரசு முடிவெடுத்திருக்கிறதா? தஞ்சையிலும் விலைவாசி உயர்வு பெருமளவிற்கு உயர்ந்திருப்பதால் அங்கும் ரூ. 45 என்று கொடுக்க அரசு முயற்சிக்குமா? அங்கு 60 மாணவர்கள் தான் படிக்கின்றார்கள். எனவே இதை அரசு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் தெரிவித்த இந்த இரக்கமான கருத்தினை கருணையோடு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## *Repatriates from Sri Lanka.*

@* 30. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :

(*a*) whether it is a fact that the Planning Commission has requested the State Government to revise the Tamil Nadu Fifth Plan for accommodating the repatriates from Sri Lanka ; and

(*b*) if so, the details thereof ?

## ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பும் அகதிகள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பும் அகதிகளைக் குறித்த செலவுக்கு நிதி ஒதுக்கும் வகையில் தமிழ்நாடு ஐந்தாவது திட்டத்தைத் திருத்தி அமைக்குமாறு திட்ட ஆணைக்குழு மாநில அரசைக் கேட்டுக் கொண்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விபரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கிடமில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : விஞக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

@ 22—2—1975-ஆம் நாள் விஞப்பட்டியலிலிருந்து ஒத்திப் போட்டது.

2. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

* THIRU G. VASANTHA PAI : Hon. Chairman, I must thank you for the opportunity given to me. But it is with a deep sense of disappointment that I am speaking today on the Governor,s Budget. Sir, there are three points I shall make on this Governor's speech. There are..............

MR. CHAIRMAN : It is not the Governor's Budget but it is the Governor's Address.

THIRU G. VASANTHA PAI : Sir, I have corrected myself already.

MR. CHAIRMAN : The Chief Minister is waiting to present the Budget on the 1st March (Laughter).

(பிறபகல் 4-30)

THIRU G. VASANTHA PAI : Sir, on 19th January 1970, Sardar Ujjal Singh, the then Governor of Tamil Nadu spoke about the most widespread drought in Tamil Nadu, and mentioned an outlay of 18 crores which included Rs. 5 crores for water-supply, Rs. 2·5 crores for minor irrigation, Rs. 2 crores for major irrigation and Rs. 2·7 crores for inter-connecting roads. It was then stated that many tanks had been desilted and considerable sums had been incurred for such purposes. Sir, it is a pity that this House has not been taken into confidence as to the manner in which those amounts have been spent and as to the kind of works for which those amounts have been expended. Sir, when the Governor's Address gives such details, it is my humble submission to the persons who draft it that the succeeding year's Governor's Address should correlate subsequent achievements to the earlier year's statements in the Governor's Address and bring them up-to-date. Otherwise, Sir, very often, we find only one common thing in these Addresses, namely, the preface as well as the ' Vanakkam ' at the end.

Sir, recently, we read in the papers and the Hon. the Chief-Minister was pleased to explain yesterday in the other House about the speech made by the Prime Minister at some function addressed by her when she said that some years back money had been given for drought relief and that it had not been properly spent. She had said that this was the case throughout the country. It must be indeed bad, when such comments come from the highest



authority, namely, the Prime Minister of India. In certain States—I do not know in which State—money has been poured in, to rear crops not of foodgrains but crops of candidates in the shape of augmenting election funds where there may be a drought. Sir, I would like to say that this money should be properly expended for the benefit of the people affected by drought. Sir, the water difficulty that we have in Madras City as well as in urban and rural areas is of such great significance that people are on the verge of starvation in many places in this country and in the State. Something has to be done. There is no use of having adjournment motions tabled at the beginning of every session on Cauveri dispute, and a Chief Minister here and a Chief Minister there, replying to them. I should say that a National Water Board should be constituted in which the Chief Ministers of all States should be made members and this National Water Board should administer the water distribution throughout the country. Either the Union Government must take it up after taking on rivers to the Union List or the State Government together with the concurrence of the Union Government, with the Union Minister or the Prime Minister at the head, should form a National Water Board which should think of connecting the rivers in the different parts of the country and make the water problem easy of solution. There is no use of having a debate on these matters. There is no use of having political rancours over these matters. There is no use of political impeachment of this Government or that Minister on this matter in this House or in some other House But this must be taken up at the State and the National level. As the Governor himself has stated in his speech, food problem is above all party politics, above all regional politics, above all other considerations. It must be approached and solved having regard to the national interests. Therefore, Sir, I beg of the Hon. the Chief Minister to accept my suggestion of moving for the constitution of a National Water Board in conjunction with the opinion of the Chief Ministers of other States in this country and with the Prime Minister or Union Irrigation Minister at the head. Such a Board will be able to see that the drought problem is solved once and for all. Once again. I repeat athat this should no tbe a subject of political bickering at any level

In the Governor's Address of 1970, a high hope was held out that under the Veeranam Water-supply Scheme for the City, 40 million gallons of water per day would flow into the city in a short

[Thiru G. Vosantha Pai] [1975 பிப்ரவரி 25

time. Though five years have elapsed since then our Governor gave us hope last year that Veeranam Project which would bring 40 million gallons of water per day was likely to be completed in 1975. I find in his present Address, far from the Scheme having been completed, he expresses the hope that we will get water by the end of or during the middle of 1976. Sir, I feel the period of gestation is too long. Five years is not unreasonable in case of whales and other mammals but not in a case where human energy, human material and resources could seek to achieve. The reason given is that pipes are not available for this Veeranam Scheme. The Governor's Address says that it is in an advanced stage. We in this House expect the goods to be delivered quickly. The Governor's Address says that this project is in an advanced stage. Sir, I think only in gynaecology the word is used when it is stated that 'pregnancy is in an advanced stage'. In that case, we may require a Gynaecologist who is willing to perform caesarean operation to bring out the baby at an early date; otherwise, Veeranam baby may be a still-born child.

I thank you, Sir, for the opportunity given to me. I only wished to talk on these two important matters. Besides, there is another matter which I find in the Governor's Address which has been given to me. On page 9 of the Governor's Address, it is said that protected water-supply has been given to two Corporations, 83 Town Municipalities, 5 Municipal Townships 8 Panchayat Townships, and 81 Town Panchayats serving about 65 per cent of the urban population in Tamil Nadu. Sir, I think there is a recession or a going back in this case, because in the speech made on 17th January 1974, the Governor had stated that water-supply had been given to 87 Municipalities. I do not know, Sir, how 87 become 83. Has water-supply been discontinued in the case of four Municipalities? If so, the Governor's Address should have made it clear and given the names of Municipalities to which water-supply has been stopped.

Sir, I find that this mistake as well as some others which I find from a comparative reading of the previous Governor's Addresses show that there has not been an effective correlation between the past Addresses and the present one. I suggest to the Hon. the Chief Minister and other Members of the Cabinet who have a large part in moulding the Governor's Address and placing



1975 பிப்ரவரி 25] [திரு. வசந்தாபாய்]

it before this House to see that we get a connected account from the beginning of any project, and yearwar we know the improvements till we come to the present time.

Sir, I thank you for the opportunity given to me and I think I have been very brief in my speech also.

Mr. CHAIRMAN: The hon. Member's speech was not brief but it was very short.

திரு. அ. அய்யனன் அம்பலம்: மாண்புமிகு மேலவைத்தலைவர வர்களே, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னரசு அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கவர்னர் அவர்களுடைய உரையிலே தமிழகத்தில் ஏற்பட்டிருக்கும் கடுமையான வறட்சியைப்போக்கு வதற்கு இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கும் நடவடிக்கைகளைப் பற்றி கூறியிருக்கிறார்கள். நாட்டு மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுமளவிற்கு, அவர்களை, அவர்களுடைய வறுமை பஞ்சம், பசி, பட்டினியிலிருந்து மீட்க வேண்டுமென்பதற்காக இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கும் நடவடிக்கைகளைப்பற்றி கவர்னர் உரையிலே அறிய முடிகிறது. தமிழக அரசு வறட்சிப் பணிக்காக 10 கோடி ரூபாய்க்கும் அதிகமாக ஒதுக்கியிருக்கிறது. அதிலும் குறிப்பாக இராமநாதபுரம், மதுரை போன்ற தென் மாவட்டங்களில் இந்த வறட்சி பணி வேகமாக நடைபெற்று வருகிறதென்பதை நம்முடைய அரசு அறிக்கைகள் மூலமாகவும் கவர்னர் அவர்களுடைய உரையின் மூலமாகவும் அறிய முடிகிறது. இப்போது இராமநாதபுரம் மாவட்டத்தில் கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னரசு அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்தத் திட்டத்தை இன்னும் தீவிரமாக செயல்படுத்த வேண்டும்; அது எந்த ஆண்டு வறட்சி, பஞ்சம் ஏற்பட்டாலும் அதை தடுக்கக்கூடிய திட்டமாக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது ஒதுக்கப்பட்டுள்ள பணம் அதிகமாக ஊராட்சி ஒன்றியங்கள் சார்பாக செலவழிக்கப்படுகின்றது. இணைப்புச்சாலைகள் போடுதல், குளங்கள் அமைத்தல், குளங்களை மராமத்து செய்தல் போன்றவற்றிற்கு செலவு செய்யப்படுகிறது. ஆனால், நாம் எந்த அளவுக்கு இந்தப் பணிகள் தீவிரமாகச் செயல்பட வேண்டுமென்று நினைக்கிறோமோ அந்த அளவுக்கு வேலைகள் நடக்காமல் தாமதம் ஏற்படுகிறதென்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதிலே நிர்வாகச் சிக்கல்கள் பல இருக்கின்றனவென்று அரசுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு குழி மண் வெட்டுவதற்கு, அரசாங்கத்தினுடைய ஷெட்யூல்ட் ரேட் 14 ரூபாயாக இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்களும், கவர்னர் அவர்களும் வறட்சிப் பகுதிகளுக்குச் செல்லும்போது ஆள் ஒன்றுக்கு நான்கு ரூபாய் கூலிக்குக் குறையாமல் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இந்த வேலைகள் அனைத்தையும் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பெரு வழித்துறை போன்ற அமைப்புகள் காண்ட்

ராக்டர்களிடம் கொடுத்து செய்ய சொல்லுகிறார்கள். 14 ரூபாய் கொடுக்கக் கூடிய ஷெட்யூல்ட் ரேட் வேலையை 20 ரூபாய்க்குக் குறைந்து செய்ய முடிய வில்லை. ஒரு குழு வெட்டுவதாக இருந்தால் குறைந்தது 5 ஆட்கள் தேவைப்படுகிறது. ஒரு ஆளுக்கு நாலாகு ரூபாய் என்றால் 5 ஆட்களுக்கு 20 ரூபாய் ஆகிறது. ஆகவே இந்த வேலைகளைச் செய்வதற்கு யாரும் முன் வரத் தயாராக இல்லை. அதனால் பல இடங்களில் பணத்தைச் செலவு செய்ய முடியாமல் இருக்கிறதென்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். குடி தண்ணீர் கிணறுகளை ஆழப் படுத்துவது, புதிதாக கிணறு வெட்டுவது போன்ற வேலைகளில், 100 அடி ஒரு சதுரத்திற்கு 4 ரூபாய் என்றால், அந்த வேலையைச் செய்ய 6 ரூபாய் கேட்கிறார்கள். 6 ரூபாய்க்கு குறைந்து அந்த வேலையைச் செய்ய யாரும் முன்வருவதில்லை. அந்த வேலைகள் தாமதப்படுவதற்கு இது ஒரு காரண மாக இருக்கிறதென்று அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே இந்த வேலைகளைச் செய்வதற்கு ஷெட்யூல்ட் ரேட்டை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதுரை மாவட்டத்தில் பெரியாறு பாசண வசதி பெற்ற பகுதி நீங்கலாக மாவட்டத்திலுள்ள அத்தனை தாலுக்காக்களும் வறட்சி யால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அத்தனை தாலுக்காக்களும் வறட்சிப் பகுதிகள் என்று மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. பெரியாறு பாசனப்பகுதியில் 2 போகம் சாகுபடி செய்யக்கூடிய நிலங் களில், முதல் போகம் கோடை விவசாயம் நடைபெற்று, நல்ல மகசூல் கிடைத்திருக்கின்றது. இரண்டாவது போகத்திற்கு ஒரு ஏக்கருக்கு ஆயிரம் ரூபாய்க்கு அதிகமாகச் செலவு செய்திருந்தும், கதிர் வரும் நேரத்தில் தண்ணீர் இல்லாமல் சாவியாகப் போய்விட்டது. அதனால் விவசாயிகள் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விளைந்த சில நிலங்களிலும் அரை மேனி, கால் மேனிதான் வந்திருக்கிறது. இப்போது விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கும் தனியார் கடன்கள் அரசுக் கடன்கள் போன்றவைகூட நிறைவேற்றும் தருவாயிலே கோர்ட்டிலே ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த பெரியாறு பகுதியில் கலெக்டர் வறட்சிப் பகுதி என்று அறி விக்காத காரணத்தால் கூட்டுறவுக் கடன்களை வசூல் செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. அதற்கான நோட்டீசுகளைக்கூட கொடுத்துக் கொண்டிருக் கிறார்கள்.

[பிற்பகல் 4-40.]

ஆகவே, ஒரு ஏக்கர் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் செலவு செய்து இரண் டாம் போகம் விளையாத நிலைமையில் அடுத்த போகம் அடுத்த ஆண்டு விவ சாயம் செய்வதற்கு எந்த வசதியும் இல்லாமலிருக்கும்போது தனியார் கடன் களைப் பொறுத்தவரை எப்படி அரசு ஒத்தி வைத்து வசூல் செய்ய எந்தவித நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என்று இருக்கின்றதோ அதுமாதிரி இந்த கூட்டுறவுக் கடன் வசூலையும் ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

லெவியைப் பொறுத்தவரையில் பெரியார் பகுதியில் உள்ள அரை மேனி, கால் மேனி கண்ட இடங்களிலெல்லாம் லெவியை வசூல் செய்ய வேண்டுமென்று அதிகாரிகள் கொஞ்சம் அதிகமாகவே விவசாயிகள் மத் தியில் சொல்கிறார்கள். நாம் முழு அளவிலே ரேஷன் கொடுப்பதாக





அறிவிக்கவில்லை. அப்படி இருக்கும்போது விவசாயிகள் மத்தியில் இருக்கும் நெல்லையும் கொள்முதல் செய்துவிட்டால் 500 ரூபாய்க்கு அதிகமாகச் சம்பளம் வாங்கக்கூடியவர்களுக்கு குடும்ப கார்டோ, எந்தவித உத்தர வாதமோ நாம் கொடுக்கவில்லை. வெளி மார்க்கெட்டில் அரிசியே கிடைக் காத நிலை ஏற்படும். விவசாயிகளைப் பொறுத்தவரையில், பெரும்பான் மையோர் வங்கியிலே ஒரு கணக்கு வைத்து வரவு செலவு செய்யக்கூடிய நிலைமையில் இல்லை. ஒரு 10 மூட்டை நெல் அவர்களுடைய தேவைக்கு மேல் வைத்திருந்தால்தான் அவ்வப்போது அதை வெளி மார்க்கெட்டில் விற்று, செலவு செய்யக்கூடிய ஒரு சந்தர்ப்பத்திலே அவர்கள் இருக்கிறார்கள் ஆகவே, இதை இவர்கள் விற்கும்போது, வாங்கிச் சாப்பிடக்கூடிய, மேலே சொன்ன அந்த குடும்பக் கார்டு இல்லாத மக்களுக்கும், நியாயமான விலையில் அரிசி கிடைப்பதற்கு ஒரு சந்தர்ப்பமாக இருக்கும். மதுரை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் விவசாயிகள் எல்லாம் மதுரையில் 5 லட்சம், 6 லட்சம் ஜனங்கள் உள்ள மதுரை நகரத்தில், மதுரையைச் சுற்றியுள்ள இடங்களில் இருந்தாலும் அவர்களுக்கு அரிசி செல்ல வேண்டி யிருக்கிறது. ஆகவே மதுரைப் பகுதியில் கொள்முதலை—கொள்முதல் கொடுக்க வேண்டாம் என்று சொல்லவில்லை—கொஞ்சம் லெவியைக் குறைவாக விதிக்க வேண்டும் என்றும் அதை அதிகத் தீவிரப்படுத்தக் கூடாது என்றும் இந்த சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

அடுத்தபடியாக, இந்த வறட்சியைப் பொறுத்த அளவிலே, மாநில அரசு 55 கோடி ரூபாய் செலவு செய்ய தேவைப்படும் என்று சொல் லியிருக்கிறது. இன்னும் மத்திய அரசு அதற்கு அதிகமான உதவிகள் செய்ய வேண்டும். அதில் எந்தவிதமான அரசியல் அபிப்பிராயங்களும் இல்லாமல் நாம் எல்லோரும் மத்திய அரசை இந்த சபையின் மூலம் கேட்க வேண்டும். சட்ட மன்றத்தில் பேசியவர்கள் எல்லாம் குறிப்பிட் டார்கள். நானும் இந்த சபையில் மத்திய அரசு அதிகமான உதவி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும், இந்த அரசு எடுத்த நடவடிக்கைகளுக்கு இந்த சபையும் ஒத்துழைக்கும் என்றும் நம்புகிறேன்.

அடுத்தபடியாக, திரு. தென்னரசு அவர்கள், இராமநாதபுரம் மாவட் டத்தில் தேவர் அவர்களுடைய ஞாபகமாக இந்த அரசு முதுகளத்தூரில் அமைக்க இருக்கும் உப்பளத்தை தேவர் பெயரால் அமைக்க வேண்டு மென்று சொன்னார்கள். இந்த அரசு கட்டபொம்மன் கோட்டையை எழுப்பி யிருக்கிறது, திருவள்ளுவர் நினைவாலயம் எழுப்பியிருக்கிறது, பூம்புகார் நினைவுச் சின்னம் எழுப்பியிருக்கிறது என்றெல்லாம் திரு. தென்னரசு அவர்கள் சொன்னார்கள். அந்த முறையிலே தேவர் அவர்களுக்கு அவர் களுடைய நினைவுச்சின்னமாக பசும்பொன்னிலே ஒரு நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டும். சென்ற ஆண்டுகூட நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் ஒரு சந்தர்ப்பத்திலே எங்களையெல்லாம் கூப்பிட்டு நினைவாலயத்தை எப்படி அமைக்க வேண்டுமென்று ஒரு மெப்பைக் காண்பித்தார்கள். ஆகவே, அந்தத் திட்டம் என்ன நிலையிலே இருக்கிறது என்பதை அறிய முடியவில்லை. அதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

திரு. தென்னரசு அவர்கள் கூறிய கோரிக்கையை நானும் ஆதரித்து தேவர் அவர்களுக்கு ஒரு நினைவாலயம் எழுப்ப வேண்டும், அதற்கு இந்த அரசு உடனடியாக இந்த ஆண்டே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்பொழுதுகூட பாண்டியன் போக்குவரத்துக் கழகம் என்று மதுரையிலே நம்முடைய அரசு ஸ்தாபனத்தின் பெயரால் ஒரு போக்குவரத்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் ஓடக்கூடிய பேருந்துகளைப் பிரித்தாவது தேவர் அவர்களுடைய பெயரிலே, அந்த கட்ட பொம்மன் போக்குவரத்துக் கழகம் இருக்கின்றதே அந்த முறையிலே, அமைக்கலாம் என்று ஆலோசனையும் கூறிக்கொண்டு எனக்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து ஆளுநர் அவர்களுடைய உரையை வரவேற்று முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது எனது கருத்தைக் கூற வாய்ப்புத் தந்தமைக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்தக் கூட்டுக் கூட்டத்திலே ஆளுநர் அவர்கள் ஆற்றிய அந்த உரையின் சாராம்சத்தைப் பார்க்கும்போது தமிழக அரசு இதுவரை நிறைவேற்றிய நடவடிக்கைகளையும், இனி நிறைவேற்றப் போகிற செயல் திட்டங்களையும் எடுத்துக்கூறக்கூடிய ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி போல அது அமைந்திருக்கிறது என்று கூறிக்கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன். அதே காரணத்தினால்தான் அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த பெருமக்களும் இந்தத் திட்டத்தை வரவேற்பதோடுகூட அதிகமாகப் பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன். இந்தச் செயல் திட்டங்கள் திறம்பட ஒரு அரும் பணியாக, பெரும் பணியாக நடைபெற வேண்டுமென்றால் ஒரு முக்கியமான குறிக்கோள் அதில் அடங்கியிருக்கிறது என்பதை நினைவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன். அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த பெருமக்களுடைய ஒத்துழைப்பும் இருந்தால்தான் இந்த திட்டமானது திறம்படச் செயல்பட முடியும். அந்த அடிப்படையிலே முகவை மாவட்டத்தைச்சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமகிருஷ்ண தேவர் அவர்கள் கூறிய ஒரு கருத்தை இந்த சபையின் முன் வைக்க ஆசைப்படுகிறேன். என்னவென்றால், இத்தகைய செயல் திட்டங்கள் நடைபெறும்போது, வாய்க்கால்களில் செல்லும் நீர் செல்லவேண்டிய நேரத்திற்கு, இடத்திற்குச் செல்லாது சுற்றியோ வற்றியோ, தடை ஏற்பட்டால் அதனால் எந்தவிதப் பயனும் ஏற்படாது என்பதைத் தெளிவாக எடுத்துக்கூறினார்கள். அந்த அடிப்படையில் நடைபெறக்கூடிய செயல் திட்டங்கள் அனைத்தையும் சிறந்த முறையில் அரசு கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பொதுவாக நாட்டிலே உள்ள உணவு உற்பத்தியை எடுத்துப் பார்க்கும் போது, ஒரு முக்கியமான கருத்தை மனதில் வைத்துக் கொண்டு செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஒரு தொலை நோக்கு உணவுத் திட்டத்தை அரசு அடிப்படையாகக் கொண்டு செயல்பட வேண்டும். காரணம் "Population increases in geometrical proportion" என்று கூறுகிறார்கள். மேல் நாட்டு வல்லுநர்கள் பலப்பல ஆராய்ச்சிகளை நடத்தி 2 ஆயிரம் ஆண்டு அல்லது 2,007 ஆண்டு வரும்



போது இந்த உலகத்தின் ஜனத்தொகை இரண்டு பங்காக ஆகுமென்று கூறியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. அவ்வாறு ஜனத்தொகை பெருகும் காலத்தில் வசதி படைத்தவர்கள் பணம் உடையவர்கள் தான் உணவுப் பொருட்களை வாங்கிச் சாப்பிடமுடியும். மற்றவர்கள் எல்லாம் சத்துள்ள மாத்திரையை வாங்கிச் சாப்பிட முடியுமென்று குறிப்பிட்டிருக்கும் அந்த நிலையை நாம் எடுத்துக்கூறும்போது, நாமும் அதில் அதிக கவனம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். நம்முடைய நாட்டைப் பொறுத்த அளவிலே, 1947-ம் ஆண்டில் சுதந்திரம் பெற்ற பிறகு அந்த நாளிலிருந்து ஜனத்தொகை 33 கோடிக்கு உள்ளாகவே இருந்தது. ஆனால் இன்று ஜனத்தொகை 55 கோடியாக உயர்ந்திருக்கிறது என்றால், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் இன்று $4\frac{1}{2}$ கோடியாக இருக்கிறது என்றால், ஒருவேளை 2,000 ஆண்டு, 2,007 ஆண்டு வரும்போது நிச்சயமாக குறைந்தது 8 கோடி மக்கள் தொகையை உடைய ஒரு மாநிலமாக இது விளங்கும். அந்த நிலைமையை நாம் மனதில் கொண்டு மாநில அரசு ஒரு தொலை நோக்குத் திட்டத்தைக் கொண்டு உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதே சமயத்தில், இந்த வறட்சியானது ஒருசில மாவட்டங்களைத்தான் பாதித்திருக்கிறது. மற்ற மாவட்டங்கள் அவற்றுக்கு உதவி செய்து அந்த நிலையை மாற்றக்கூடிய நிலையில் தற்போது இல்லை என்றால், நம்முடைய உணவு உற்பத்தித் திட்டம் தோல்வியடைந்திருக்கிறது என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அவ்வாறு தோல்வியடைந்ததற்குக் காரணம் நாம் முன் ஜாக்கிரதையாக எடுக்க வேண்டிய திட்டங்களையெல்லாம் எடுத்துப் பின்பற்றவில்லை என்பதுதான். குறிப்பாக உணவு உற்பத்தியைப் பொறுத்தவரையிலே, நாம் நீர்வளம், நிலவளம் இவைகளைப் பெருக்கி நவீன முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று அநேகர் எடுத்துக் கூறினார்கள். நீர்வளத்தைப் பொறுத்தவரையில், எல்லா மாநில அரசுகளும் முயற்சி எடுத்து வெகுவாக நீர் வளத்தை விருத்தி செய்ய ஆரம்பித்திருக்கின்றன. காவிரியிலிருந்து நீர் பெறுவதற்கு நாம் எவ்வாறு முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறோம் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் அதே சமயத்தில் நீர்வளத்தை சிக்கன முறையில் குறைந்த அளவில் பயன்படுத்தக்கூடிய நடவடிக்கை எடுக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். குறிப்பாக தற்காலத்திலே நவீன விதைகள் எனப்படும் ஐ.ஆர். 8, ஐ.ஆர். 20, கருணை போன்ற விதைகளைப் பயன்படுத்தியவர்கள் வாழும் பகுதியிலே அதிகமான அளவில் தண்ணீர் தட்டுப்பாடு வந்த காலத்திலேயும் சமாளித்திருக்கிறார்கள். பொதுவாக இன்றுள்ள மக்கள் கதிர் விட்ட பிறகுதான் அதிகமாகத் தண்ணீர் வேண்டுமென்ற ஒரே கருத்தை வைத்திருக்கிறார்கள். அது பொய்யானது என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது. கதிர் விட்ட பிறகும் தண்ணீர் இல்லாத நிலையிலேயும் இந்த மூன்று வகையைச் சார்ந்த நெல்லும் விளைந்து நல்ல மகசூலைக் கொடுத்திருக்கிறது என்பதையும் கூறிக்கொண்டு, அந்த முறையிலே விவசாயத் துறையிலே இந்தக் கருத்தை விரிவாக்கலாம் என்ற அபிப்பிராயத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவ்வாறு செய்வதற்கு அடிப்படை இடலாம். இரசாயன உரத்தைத் திட்டவட்டமாக மத்திய அரசிலிருந்து பெற்றுக்கொள்ள சகல முயற்சிகளும் எடுத்துக்கொள்ள வேண்டும். எடுத்துக்கொள்ளப்படும் முயற்சிகளைப்

பாராட்டுவதோடுகூட, இரசாயன உரத்தை மட்டுமே நம்பி வாழ்வது நம் மாநிலத்திற்கு நல்லதல்ல என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். பொது வாக உரம், நிலவளம் என்று எடுத்துக்கொண்டவுடனே, இயற்கை உரம், செயற்கை உரம் என்று இரண்டு பிரிவாகப் பார்க்கும்போது, அதிகமான செயற்கை உரத்தை நம்பியிருக்கும்போது நிச்சயமாக தோல்வி தான் அடை கிறோம். நம்முடைய பண்டைக்கால முறையைப் பார்க்கும்போது, கால்நடைச் செல்வம் மிகுந்தது நம்நாடு என்பது தெளிவாகிறது. உலகத்திலேயே மூன்றாவது இடத்தில் வைக்கலாம் என்று நினைக்கிறேன். ஆனால் ஒரு வேளை பால் உற்பத்தியில் அந்த நிலைமை இல்லாவிட்டாலும், கால்நடை களின் எண்ணிக்கையில் அதிகமாக உள்ள நாடு இது. தொழுவுரம், சாணம் கோமயம், போன்ற பொருட்களை நாம் கிராமத்திலே வீணாக்குகிறோம். அந்தக் கோடிக்கணக்கான மதிப்புள்ள செல்வத்தை நாம் பத்திரப் படுத்தினால் நிச்சயமாக உணவு உற்பத்தியில் அதிகமாக முன்னேற முடியும் என்பதையும் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[பிற்பகல் 4·50.]

அந்தப் பணியினை அரசு மேற்கொண்டு, ஊராட்சி ஒன்றியங்களையும், கிராமப் பஞ்சாயத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டு, கிராமங்கள் யாவும் கம்போஸ்ட் தொழிற்சாலைகளாகத் திகழ வேண்டும். தமிழகத்தில் அனைத்துக் கிராமங்களும் கம்போஸ்ட் உரங்களைத் தயாரிக்கக்கூடிய தொழிற்சாலைகளாக விளங்கும் என்றால், நிச்சயமாக நம்முடைய உணவு உற்பத்தி பெருமாரியாகப் பெருகும். காரணம் என்னவென்றால், வெறும் ரசாயன உரத்தை மட்டும் நாம் கொடுத்து வரும்போது, நிலங்களில் மகசூல் குறைந்துகொண்டே போகிறது. ஆனால் இரண்டு பக்கத்திலும் இயற்கை உரத்தையும், ரசாயன உரத்தையும் கொடுக்கும்போது, நிச்சய மாக அதிகமான மகசூல் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள் கின்றேன்.

கடுமையான வறட்சி நிறைந்த பகுதியாக முகவை மாவட்டம் இருக் கிறது. அந்தப் பகுதியை நான் பார்வையிட்டபோது சில பள்ளிகளிலே நான் கண்ட உண்மைக் காட்சிகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன். சில பள்ளிகளிலே மாணவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைந்து விட்டது. காரணம் என்னவென்றால் அவர்களுக்குச் சரியான உணவு கிடையாது. வரக்கூடிய மாணவர்களுக்கோ கவனம் இல்லை. சில மாணவர்களை அவர் களுடைய பெற்றோர்கள் அனுப்பவில்லை. பஞ்ச வேலைக்கு அழைத்துக் கொண்டு போய் விடுகிறார்கள். சில இடங்களிலே சிறப்புக் கட்டணம் கட்ட வேண்டிய நிலையிலே மாணவர்கள் பள்ளிக்கு வரும்போது ஆசிரியர்கள் அதைக் கட்ட வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார்கள். அதனால் அவர் கள் பள்ளியிலிருந்தே அகன்று விடுகின்றார்கள். இந்தச் சிறப்புக் கட்டணத் திற்கு அந்தப் பஞ்சப் பகுதியிலிருந்து வருபவர்களுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதே சமயத்திலே ஆசிரி யர்கள் மாணவர்கள் எண்ணிக்கை மாற்றப்படாவிட்டால், அரசு ஆணை யைப் பொறுத்து, பல ஆசிரியர்கள் பணியிறக்கம் செய்யப்படும் சூழ்நிலை ஏற்படுவதைக் கவனித்து அப்படி ஏற்படாமல் இருக்கும்படி பார்த்துக கொள்ள வேண்டும்.





முன்பு முகவை மாவட்டத்திலே புயல் வீசிய காலத்திலே புயல் நிவாரணப் பிரதேசப் படி என்று ஆசிரியர்களுக்கும் அரசு ஊழியர் களுக்கும் அரசு வழங்கியது. அந்த முறையிலே இப்போது வறட்சிப் பகுதியிலே உள்ள மக்களுக்கும், ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் வறட்சி நிவாரணப் பிரதேசப்படி ஒன்றை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். இப்பொழுது நகரிலே வாழக்கூடியவர்களுக்கு எவ்வாறு சி. சி .ஏ. வழங்கப்படுகிறதோ அந்த முறையில் வழங்கினால், அது மிகவும் உதவியாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். அதே சமயத்தில் அவர்கள் கட்ட வேண்டிய கடன் பாக்கி இருந்தால், அதற்கு விட்டுக் கொடுத்து கால கட்டத்தைத் தள்ளி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையிலே விலைவாசி உயர்வைப்பற்றிக் குறிப் பிட்டிருக்கின்றார்கள். அந்த விலைவாசி உயர்வினால் மாநில அரசு ஊழி யர்கள், ஆசிரியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அது யாவ ரும் அறிந்த உண்மைதான். அவர்கள் இரண்டு நிலையிலே பாதிக்கப்பட்டி ருக்கின்றார்கள். ஒன்று மத்திய அரசினுடைய ஊதிய முடக்கச் சட்டம்-

**"It is anti-labour, anti-democratic and anti-socialistic black Act".**

என்று சொல்லலாம் என்று கருதுகிறேன். காரணம் என்னவென்றால் தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிக்கின்ற நிலையில் அது அமைந்திருக் கின்றது. ஊதிய உயர்வு கொடுப்பதால்தான் பண வீக்கம் ஏற்படுகிறது என்றால், அதை யாரும் ஒப்புக்கொள்ள முடியாது என்ற நிலை இருக் கின்றது.

**Mr. CHAIRMAN :** Democracy is not anti-people but some people make it appear so.

**திரு. பி. ஆர். தாமஸ் :** தலைவர் அவர்களே, இந்த நிலையிலே ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் இந்த ஊதிய முடக்கச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். மாநில அரசு ஊதிய உயர்வைக் கொடுக்க முயன்ற காலத்தில் கூட ஒரு பாதியை மத்திய அரசினுடைய ஆணையால் பறித்துக்கொண்டு போவதனால் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலை இருக்கிறது. அதுபோன்று மாநில அரசைப் பொறுத்தவரையிலே, மத்திய அரசு அளித்து வரக்கூடிய பஞ்சப்படி ஊதியங்களை எல்லாம் அந்தந்த சமயங் களில் வழங்காத நிலை இருப்பதனால் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் அதிகமான அவல நிலையில் இருக்கிறார்கள் என்பதைக் கூறிக்கொள் ஆசைப்படுகிறேன். எனவே எவ்வெப்பொழுது மத்திய அரசு ஊதிய உயர் வைக் கொடுக்கிறதோ அப்போதெல்லாம் மாநில அரசும் அதைச் செயல்படுத்த வேண்டும். நாட்டில் பொதுவான தேசிய ஊதியக் கொள்கை ஒன்று நிர்ணயிக்கப்பட வேண்டும். அதோடுகூட மத்திய அரசு ஊதியத்தை உயர்த்தும்போதெல்லாம் மாநில அரசும் அந்த ஊதிய உயர்வை அளிக்க வேண்டுமென்ற கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டு மென்று கூறிக்கொள்கிறேன்.

[திரு. பி. ஆர். தாமஸ்] [1975 பிப்ரவரி 25

நம்முடைய தமிழ் நாடு அரசு கொள்கை அளவிலே, பொருளாதாரக் கொள்கை அளவிலே 1960–ஆம் ஆண்டிலே வருவாய் அளவில் 45 சத விகிதத்தை அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் ஊதியமாகக் கொடுத்து வந்தார்கள். 1968–69 லே இந்த விகிதமானது 39.6 சதவிகிதம் என்று குறைந்தது. 1971–72 லே இந்த விகிதமானது 38 சதவிகிதமாகக் குறைந்து இன்று வெகுவாகக் குறைந்திருக்கும் என்று சொல்லக்கூடிய நிலையில் இருப்பதோடு கூட, 1971–ஆம் ஆண்டில் இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலும் தமிழக மாநிலம் தான் ஊழியர்களுக்கு அதிகமான ஊதியம் கொடுத்தது என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும் இன்று அந்த நிலை இல்லை. காரணம் என்னவென்றால் கேரள மாநிலத்திலே அவர்களுடைய மொத்த வருவாயில் 67 சதவிகிதத்தை ஊழியர்களுக்காகக் கொடுக்கிறார்கள். அண்டையிலே உள்ள ஆந்திர மாநிலத்திலே மொத்த அரசின் வருவாயில் 48 சத விகிதத்தை ஊழியர்களுக்கு ஊதியமாகக் கொடுக்கிறார்கள். அது மட்டுமல்ல, கருநாடக மாநிலத்திலே மொத்த வருவாயில் 51 சதவிகிதத்தை தன்னுடைய ஊழியர்களுக்காக அந்த அரசு ஊதியமாகக் கொடுக்கிறது என்பதைக் கூறிக்கொண்டு இந்த அடிப்படையிலே நம்முடைய மாநில அரசும் கருணை உள்ளத்துடன் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய இந்தப் பஞ்சப்படி உயர்வை மனநிறைவளிக்கும் வகையில் கொடுக்க வேண்டுமென்று கூறிக்கொள்வதோடு கூட, நேற்று கல்லூரி ஆசிரியர்கள் கொடுத்த நான்கு கோரிக்கைகளை, நியாயமான அடிப்படை உரிமைகளை

(1) Implomentation of U.G.C. scale of pay,

(2) Direct payment of salary,

(3) Security of service,

(4) Absorption of Tutors and Demonstrators as Assistant Professors.

அரசு உடனடியாக, வழங்க வேண்டுமென்று கூறி வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

[மாற்றுத் தலைவர் திரு. அ. அய்யணன் அம்பலம் தலைமை].

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, தமிழக ஆளுநர் அவர்களுடைய உரைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னரசு அவர்கள் கொண்டு வந்த நன்றி அறிவிப்புத் தீர்மானத்தினைத் தொடர்ந்து இந்த அவையிலே சில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். சோதனை மிகுந்த இன்றைய சூழ்நிலையில் தமிழக மக்கள் படும் அல்லலையும் அதற்கான நிவாரணப் பணிகளுக்காக இந்த அரசு மேற்கொண்டுள்ள வழிவகைகளையும் பற்றி விரிவாகத் தெரிவிக்கின்ற ஒரு அறிவிப்பாக ஆளுநர் அவர்களுடைய உரை அமைந்திருக்கிறது என்பதை இந்த மன்றத்திலே நான் எடுத்துச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்று தமிழ் நாட்டில், நான்



1975 பிப்ரவரி 25] [திரு. மு. இராமநாதன்]

சார்ந்திருக்கின்ற கோவை மாவட்டமாக இருந்தாலும் சரி, எங்கள் மாவட்டத்திற்கு அரிசி வழங்குகின்ற தஞ்சை மாவட்டமாக இருந்தாலும் சரி, நாடு முழுவதும் கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கின்றது என்பதை இந்த மன்றத்திலும், அடுத்த அவையிலும் பேசிய எல்லா உறுப்பினர்களும் குறிப்பிட்டு, தங்களுடைய உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்திச் சொல்லியிருக்கின்றார்கள். மரபு வழியில் வாழ்ந்து வருகின்ற இந்த தமிழகத்தில், இந்தியப் பேரரசில் சோதனைகள் பல்வேறு கட்டங்களில் ஏற்பட்டபோது, இந்தியப் பேரரசு நெருக்கடியில் ஆட்படுத்தப்பட்டபோது நமது முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமிழகம் முழுவதிலும் ரூ. 6 கோடி வரையில் பெற்று நமது இந்திய அரசுக்கு வழங்கியிருக்கின்றார்கள்.

ஆளுநர் அவர்கள் தம்முடைய உரையில் நமது மாநில அரசான தமிழக அரசு எந்தெந்த வகையிலெல்லாம் மத்திய அரசினுடைய உதவியை எதிர்பார்த்தது என்பதைத் தனியாகக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

பொதுவாக தமிழகத்தில் விளைச்சல் குறைந்து விட்டது என்பது தெரியும். ஏறத்தாழ கடந்த ஆண்டு 39 லட்சம் ஏக்கரிலே விளைந்த சம்பாப் பயிர், இந்த ஆண்டு 29 லட்சம் ஏக்கரிலே தான் விளைந்திருக்கிறது. அதுவும் முழுமையான அளவில் விளையவில்லை என்பதையும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதே போல, பயறு வகைகள் 2 லட்சம் ஏக்கரிலே சென்ற ஆண்டு விளைந்தன. இந்த ஆண்டு ஒரு லட்சம் ஏக்கரிலேதான் விளைந்திருக்கின்றன. அது போலவே புஞ்சை தானியங்கள் 15 லட்சம் ஏக்கரிலே கடந்த ஆண்டு விளைந்தன. இந்த ஆண்டு 7 லட்சம் ஏக்கரிலே விளைந்திருக்கின்றன. ஒட்டு மொத்தமாக தமிழ் நாட்டினுடைய பற்றாக்குறை நிலை 20 லட்சம் டன் அளவுக்கு இருக்கின்றது. இதைச் சரிக்கட்டுவதற்கு வருகின்ற இந்த 10 மாத கால அவகாசத்தில் ஒரு மாதத்திற்கு ஒரு லட்சம் டன் உணவு தானியங்கள் வீதம் மத்திய அரசிலிருந்து நாம் எதிர்பார்க்கின்றோம். அது மட்டுமல்லாமல் தமிழ் நாடு 4 லட்சம் டன் அரிசியும், 3 லட்சம் டன் மற்ற புஞ்சை உணவு தானியங்களையும் வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்வதற்கு, திட்டம் வைத்திருக்கின்றார்கள் என்ற அறிவிப்பையும் இங்கே தந்திருக்கின்றார்கள்.

இந்த மன்றத்தில், மாற்று தலைவரவர்களே, தங்கள் மூலம் நான் இந்த அவைக்கு ஞாபகப்படுத்த விரும்புவது, கடந்த இரண்டாவது உலக மகா யுத்தம் நடந்த காலத்தில் இந்த நாட்டை வெள்ளைக்காரர்கள் ஆண்டுகொண்டிருந்த போதிலும், தமிழ் நாடு, ஆந்திரா, மைசூர், கருநாடக மாநிலங்கள் மொழி வாரியாகப் பிரியாமல் "மெட்ராஸ் ஸ்டேட்" என்ற பெயரில் ஒன்றாக இருந்தது. 1939–42–ல் இதைவிடக் கடுமையான வறட்சி, பஞ்சம் இருந்த அன்றைய வெள்ளைக்காரர்கள் காலத்திலே கூட, "மெட்ராஸ் ஸ்டேட்டு"க்கு என்று சில தனித்த அதிகாரங்களைக் கொடுத்திருந்தார்கள். அன்று வெள்ளையர் அரசாங்கம் தான் இருந்தது.

[பிற்பகல் 5–00]

அப்போது பர்மா, ரங்கூன் பகுதிகளிலேயிருந்து அரிசி வந்தது பெரியவர்களுக்கு, அதுவும் இந்த மன்றத்திலே அங்கம் வகிக்கின்ற வயது முதிர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, ஞாபகமிருக்கும் என்று நான் கருதுகிறேன். அரிசி வியாபாரத்தில் தொடர்புடையவன் என்கின்ற முறையில், அந்தக் காலத்தில் வியாபாரம் செய்து வந்த குடும்பத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில்...

திரு. ஜி. சுவாமிநாதன் : மாற்றுத்தலைவரவர்களே, யார் அந்த மாதிரி வியாபாரம் செய்தது ? இந்த அவையில் யார் வயதானவர்கள் என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. மு. இராமநாதன்: மாற்றுத்தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்கூட அதைப்பற்றி நன்றாக அறிவார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைத் தனியாகக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில் இருக்க மாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும் அந்தக் காலத்திலே கூட அரிசியில் ஒரு கொள்கை வகுத்து ஏ1, ஏ2, ஏ3 அதுமாதிரி சி1, சி2, சி3, என்ற 6 வகையான அரிசி ரகங்கள் பண்டமாற்று முறையில் சென்னை மாநில சர்க்காராலே இறக்குமதி செய்யப்பட்டன. ஏ1 என்று சொல்லுகின்ற ரகம் ஒரு அரிசி இரண்டு துண்டாக உடைந்தால் எப்படி இருக்குமோ அப்படி இருக்கும். ஏ2 ரகம், ஒரு அரிசி மூன்று துண்டாய் உடைந்தால் எப்படி இருக்குமோ அப்படி இருக்கும். ஏ3, ஒரு அரிசி நான்கு துண்டாக உடைந்தால் எப்படி இருக்குமோ அது போன்ற ரகம் அதே போல சி1, சி2, சி3, என்ற ரகங்கள் இருக்கும். எதற்கு இதைச் சொல்லுகின்றேன் என்றால், அந்த நெருக்கடி வந்த நேரத்தில் நேரடியாக இறக்குமதி செய்து இங்கு இருக்கின்ற தட்டுப்பாட்டைப் போக்குகின்ற ஒரு அதிகாரத்தை இந்த மாநில அரசுக்கு....

திரு. சி. வி. ராஜகோபால் : மாற்றுத்தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் திரு இராமநாதன் அவர்கள் அந்தக் காலத்துக் கதையை சொல்லுகிறபோது, இந்த அரிசியைப் பற்றி பேசுகிறபோது, அவருக்கு ஒன்றை நான் நினைவு படுத்த விரும்புகிறேன் அந்தக் காலத்தில் இந்திய சர்க்கார் வெள்ளைக்கார ஆட்சியாக இருந்தாலும், சர். ராமசாமி அவர்கள் தான் இந்தியா பூராவுக்கும் உணவுச் செயலராக இருந்தவர். என்ன செய்வது என்று எண்ணி, பிரேசில் அரிசி என்ற ஒரு வகை அரிசியை மொத்தமாக இந்தியாவில் இறக்குமதி செய்து, அதனுடைய விலை படி. 10 அணுவோ 11 அணுவோ அந்தக் காலத்துப் பணம் என்று சராசரி ஏழை மக்களைக் காப்பாற்றுவதற்காக அவர் செய்திருக்கிறார் என்பதை மாற்றுத்தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல "ஸ்டான்டர்டு க்ளோத்" என்று 7 அணு, 8 அணு விலையில் கூட ஏழை எளியவர்களுக்குத் தரும் அந்தக் காரியத்தை அவர்தான் செய்திருக்கிறார். இதைச் செய்தது அந்தக் காலத்திலே டாக்டர் ராமசாமி என்பதை இந்த நேரத்திலே, மாற்றுத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அவர் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாற்றுத்தலைவர் அவர்களே, இந்த அவையிலே வயதானவர்கள் யார் என்ற பிரச்சினையை நண்பர் திரு. சுவாமிநாதன் எழுப்பினார். எதிர்க்கட்சித் தலைவர் என்று நண்பர் திரு. இராமநாதன் சொன்னார். இல்லை, இல்லை, நான்தான்; என்று நண்பர் திரு. ராஜகோபால் நிரூபிக்கிறார் என்று கருதுகிறேன்.



திரு. மு. இராமநாதன் : மாற்றுத்தலைவர் அவர்களே, மாண்புமி மாற்று உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து மேலும் என்னுடைய கருத்துக்கு வலுவூட்டுவதாக இருக்கும் என்று ஏற்று நான் சொல்லுகின்ற ரகங்கள் ரங்கூன் ரகம் என்ற பெயராலே அன்றைக்கு இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும் இந்த மாமன்றத்திற்குச் சொல்ல விரும்புகின்றேன். அப்படி ஒரு நெருக்கடி வந்திருக்கின்ற இந்த சந்தர்ப்பத்தில் நம்முடைய பஞ்ச நிவாரண நடவடிக்கையிலே ஒன்றாக இந்த மாநிலத்து மக்கள் கண் கலங்காமல் அவர்களை அரை வயிறாவது சாப்பிட வைக்க வேண்டுமென்கின்ற முறையிலே நாம் மத்தியப் பேரரசிடத்தில் பல வகையில் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால் அதே நேரத்தில் வங்க நாட்டில் அந்த நாட்டு மக்களுக்கு அரிசி இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் வந்தது. இந்தியப் பேரரசிடத்தில் வங்க மக்களுக்குப் போதுமான அளவுக்குக் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லாத சந்தர்ப்பத்தில் நேப்பாள நாட்டிலேயிருந்து . நேரடியாக வங்காளமே அரிசியைக் கொள்முதல் செய்துகொள்கின்ற, இறக்குமதி செய்து கொள்ளுகின்ற ஒரு அதிகாரத்தைத் தந்திருந்த மத்தியப் பேரரசு, அதுபோல இப்பொழுது தமிழ் நாட்டுக்கு ஏற்பட்டிருக்கிற நெருக்கடியான சந்தர்ப்பத்தில் வெளிநாட்டிலிருந்து, தாய்லாந்து நாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்குத் தேவைப்படும் அரிசியை, நாங்கள் கொடுப்பதற்குச் சித்தமாயிருக்கிறோம் என்று அறிவிப்பைத் தெரிவித்தும், தமிழ்நாடு பெற்றுக் கொள்ள முடியாத ஒரு இக்கட்டை ஏற்படுத்தியிருப்பதை நம்முடைய துர்பாக்கியம் என்று சொல்லலாமே தவிர, வேறு ஒன்றும் சொல்லுவதற்கில்லை. மறைந்த தந்தை பெரியார் அவர்கள் ஒரு நேரத்திலே ஒரு கருத்தைச் சொன்னார்கள். எப்போதுமே நம்முடைய வீட்டிலே ஒரு துக்கம் ஏற்பட்டுவிட்டால், நமக்கு இருக்கின்ற சங்கடம் பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு இருக்க முடியாது. நம்முடைய சங்கடத்தை நாம் நான் தீர்மானிக்க வேண்டும், அனுபவித்துக்கொள்ள வேண்டும் என்பது நாட்டிலே மரபு. அதுபோல தமிழ் நாட்டு மக்களுக்கு சங்கடங்களும் சோதனைகளும் வந்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தெரிவிப்பது போல், முகவை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், வேறு பல மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் தங்கள் சொந்த மாவட்டத்தில் பிழைப்பதற்கு வழி இல்லாமல் வேறு பல மாவட்டங்களுக்கு பிழைப்புத் தேடிச் செல்கின்ற அளவுக்குப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. ஆயிரம் ரூபாய், 1,500 ரூபாய் மதிப்பு மிக்க தங்கள் ஆடுமாடுகளை 500 ரூபாய் அல்லது கிடைத்த விலைக்கு விற்றுவிட்டு அவர்கள் அந்தப் பணத்தை வைத்துக்கொண்டாவது வாழ்க்கை நடத்த வேண்டுமென்று சொல்லத்தக்க அளவுக்கு பஞ்ச நிலை இருக்கின்ற இந்தக் கால கட்டத்தில், நாம் எந்த இடத்திலேயிருந்து உதவியை எதிர்பார்க்கிறோமோ, எந்த இடத்திலேயிருந்து உதவி வர வேண்டுமென்று நாம் நம்பிக்கொண்டிருக்கிறோமோ, அந்த இடத்தில் தமிழ் நாட்டு மக்களுடைய கஷ்ட நஷ்டத்திற்காகக் காட்டப்பட வேண்டிய பரிவு காட்டப்படாமலிருப்பதை மன வேதனையோடு இந்த மன்றத்திலே கூறுவது என்னுடைய கடமையாகும். இந்த மன்றத்திலும் சரி, மற்ற மன்றத்திலும் சரி, நம்மை நம்பி அனுப்பி வைத்திருக்கின்ற

நாட்டிலே இருக்கும் மக்கள் இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பவர்களும், அவர்களுக்கு நல்ல அறிவுரைகளைக் கூறுகின்ற எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்களும் ஏதாவது ஒரு பரிகாரத்தைக் கண்டு வாழ்வளிப்பார்கள் என்றுதான் வெளியில் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். இந்த மன்றத்தில் பல உறுப்பினர்கள் தங்களுடைய கருத்தைத் தெரிவித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன் அவர்கள் நேற்றுப் பேசுகின்ற நேரத்திலே, 7, 8 ஆண்டு காலமாய் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற இந்த அரசு செயலற்று, திறனற்று இந்த நாட்டையே கெடுத்து விட்டது என்பதுபோல் சொன்னார்கள். அது மட்டுமல்ல, மின்வாரியத் துறையை எடுத்து விமர்சனம் செய்து விவசாயிகளுக்காக என்ன செய்தீர்கள் என்றெல்லாம் கேட்டார்கள். என் நினைவு சரியாக இருக்குமானால், ஒரு முறை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூட இந்த மன்றத்திலே சொன்னார்கள். 1938-லேயிருந்து 1967 வரைக்கும் கிணறுகளுக்கு பம்ப்செட்டுகள் மாட்டி மோட்டார் மூலம் தண்ணீரை வெளியே எடுத்து பாசனத்துக்குப் பயன்படுத்துகின்ற ஒரு பக்குவம் 938-லே கொண்டுவரப்பட்டது. 1938-லே துவங்கப்பட்டு 1967 வரை தமிழ்நாடு முழுவதும் ஓடிக்கொண்டிருந்த பம்ப்செட்டுகளின் மொத்த எண்ணிக்கை 2½ லட்சம். ஆனால் 1967-க்குப் பிறகு ஆட்சிக்கு வந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்கள் 1967-லே ஆட்சிக்கு வந்தது முதல் 1974 முடிய இன்று வரைக்கும் எடுத்துக்கொண்டால், இந்த அரசின் சார்பில் விவசாயத்துக்கு முக்கியத்துவம் தந்து, நாம் தந்த பம்ப்செட்டுகளின் மொத்த எண்ணிக்கை 4 லட்சம். ஆக இப்பொழுது தமிழ்நாட்டில் ஓடிக்கொண்டிருக்கிற மொத்த பம்ப்செட்டுகளின் எண்ணிக்கை 7 லட்சம் இன்னும் 9 லட்சம் பம்ப்செட்டுகள் என்று சொல்லத்தக்க வகையில் 2 லட்சம் பம்ப்செட்டுகள் பொருத்துவதற்கான விண்ணப்பங்கள் நம்முடைய மின் வாரியத்தினுடைய கவனத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அதைக் கூட இந்த ஆளுநரின் உரையிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள். தமிழ்நாடு முழுவதும் ஒட்டு மொத்தமாகச் செய்ய கூடிய மின் உற்பத்தியினுடைய திறன் 2,254 மெகாவாட். அதில் பெரியாறாக இருந்தாலும் சரி, மேட்டூராக இருந்தாலும் சரி, குந்தா பவர் ஹவுஸ் ஒன்று, இரண்டு, மூன்று என்று ஆரம்பித்து பைக்காரா முடிய தமிழ்நாட்டில் நீர் மின்சாரம் என்ற கணக்கை எடுத்துக் கொண்டால், ஒட்டு மொத்தமாக 1,224 மெகாவாட் மின்சாரம் நமக்குக் கிடைக்கிறது. அனல் மின்சாரம் என்ற வகையில் 1,030 மெகாவாட் மின்சாரம் நமக்குக் கிடைக்கிறது. ஆக மொத்தம் 2,254 மெகாவாட் மின்சாரம் நமக்கு இப்போது கிடைக்கிறது. நீண்ட காலமாக மதிப்பிற்குரிய பெரியவர் முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் காலத்திலே கூட நெய்வேலி 2-வது சுரங்கத் திட்டத்தை அமுல் படுத்துங்கள் என்று வற்புறுத்தினார்கள். ஆனால் இன்றும் நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஒரு வேளை நமக்கு இருக்கின்ற ஒரு நெருக்கடியில் நீர் மின்சாரமே நமக்குக் கிடைக்காத ஒரு நிலை இருக்குமானால் ஏதாவது ஒரு இடைக்கால ஏற்பாட்டை நாம் முயற்சி எடுத்துச் செய்யாமல் விட்டு விடுவோமானால், ஒரு காலத்தில் தமிழ்நாடே இருண்ட நாடாகப் போனாலும் போய்விடும் என்கின்ற அச்சத்தை ஆளுநர் அவர்களுடைய உரையிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதற்கான திட்டத்தை





ஒவ்வொரு ஆண்டும் நாம் மத்தியப் பேரரசிடத்தில் வலியுறுத்திச் சொல்லிக் கொண்டு வருகிறோம். தூத்துக்குடியில் ஒரு ஆயிரம் மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்ற ஒரு அணு மின் நிலையத்தை ஏற்படுத்துவதற்கு அனுமதி தரவேண்டும். விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல் நெய்வேலியில் இரண்டாவது சுரங்கத்தைத் தோண்டி, அதன் மூலம் ஒரு ஆயிரம் மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்ற ஒரு வாய்ப்பை இப்போதே தொடங்கினால் தான் ஒரு 7, 8 ஆண்டுக் காலத்துக்குப் பிறகாவது அது பயனளிக்கும். அந்தத் திட்டத்திற்கு பரிவு காட்டவேண்டும். அது மட்டுமல்ல. கல்பாக்கம்

[பிற்பகல் 5-10]

அணுமின் உற்பத்தியை அபிவிருத்தி செய்து, அதன் மூன்றாவது கட்ட வேலையைத் தொடங்கி 500 மெகாவாட் மின்சாரம் பெறும் திட்டத்திற்கு இப்போதே உதவி தாருங்கள் என்று, இப்படி நாம் ஒவ்வொரு அறிவிப்பிற்கும் மையப் பேரரசிடம் "பார்த்துக் கொடுங்கள், ஏதாவது ஒரு வகையில் கவனம் செலுத்தி உதவி தாருங்கள்" என்றுதான் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஒரு வேளை இந்தியத் துணைக் கண்டம் வடக்கு தெற்காக 2000 மைல் நீளம் கொண்டதாகவும், கிழக்கு மேற்காக 2,500 மைல் கொண்டதாகவும் இருப்பதால், இமயம் முதல் குமரி வரையிலுள்ள எல்லாப் பகுதி மக்களின் சங்கடங்களைக் கேட்கும் அளவிற்கு அவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறதோ இல்லையோ எனக்குத்தெரியாது தமிழக மக்கள் இன்று வாடும் வாட்டம், அவதியுறும் சங்கடங்கள், படும் துன்பங்கள் கொஞ்சநஞ்சமல்ல. ஆளுநர் அவர்கள் தம் உரையில் குறிப்பிட்டுள்ளதைப்போல, நம்மிடம் உணவுப் பொருள் உபரியாக இருந்த நேரத்தில், நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் உதவி கோரியவர்களுக்கெல்லாம் வாரிவாரி வழங்கினார்கள். எந்தெந்த இடத்திலிருந்து வேண்டுகோள்கள் வந்தனவோ அந்த இடங்களுக்கெல்லாம் ஐயாயிரம் டன்கள் என்றும், பத்தாயிரம் டன்கள் என்றும் அனுப்பிக் கொண்டிருந்த தமிழகம் இன்று அரை வயிற்றுக்கும் உண்ண உணவின்றி கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றது. இப்படி அவதியுறும் இந்த நேரத்தில் நாம் உபரியாக உள்ள பிற மாநிலங்களிலிருந்து நமக்குத் தேவையான உணவுப் பொருள்களை நேரடியாகக் கேட்டுப் பெறலாம் என்றால், அதற்கும் நமக்கு அதிகாரம் இல்லை. அந்த அதிகாரத்தையாவது தாருங்கள் அல்லது பிற மாநிலங்களிலிருந்து நீங்களாவது பெற்றுத் தாருங்கள் என்று நடுவண் அரசினைக் கேட்டால், இதுவரையில் தக்க உதவியினை அவர்கள் அளிக்கவில்லை. தமிழிலே பச்சையாகச் சொல்லப்போனால், "சோப்பு சீப்பு விற்க வந்த" வெள்ளையர்கள் நம்மை 150 ஆண்டுக்காலம் பரிபாலனம் செய்தார்கள். அவர்கள் ஆண்ட காலத்தில் கூட இந்திய நாட்டிலே எங்காவது ஒரு மாநிலத்திலே பஞ்சத்தால் வறுமையால் மக்கள் வாடுகின்றார்கள் என்ற நேரத்திலே அந்த மாநில அரசுக்குப் பரிகாரம் காணவேண்டும் என்று ரங்கூன் போன்ற அண்டை நாடுகளிலிருந்து தருவித்துக் கொள்ளுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள். ஆனால் இன்றைக்கு நாட்டின் வட மாநிலங்கள் பலவற்றில் உபரியாக உணவு தானியம் இருந்தும், அந்த மாநிலங்களிலிருந்து தமிழக மக்கள் வாட்டம் போக்கிட அரிசியையோ, வேறு புஞ்சை தானியத்தையோ தருவித்துக் கொள்ளுவதற்கு

மத்திய அரசிடம் விண்ணப்பம் போட்டுக் கொண்டிருக்க வேண்டிய நிலைமை தமிழகத்தில் வந்திருப்பது உள்ளபடியே பரிதாபகரமான நிலைமை என்பதைக் சொல்லாமலிருக்க முடியாது.

இந்நாட்டு மக்களுக்கு விடுதலை வேண்டும் என்று மகாத்மா காந்தியடிகள் கேட்டபோது, "வெள்ளையன் இந்த நாட்டை ஆள்கிறான். ஆனால் அவன் இந்த நாட்டு மக்களின் வாழ்விலும் வளத்திலும் நாட்டு மக்களின் எதிர்கால வளர்ச்சியிலும் சிறிதும் அக்கரை இல்லாது இருக்கின்றான். நமக்கென ஒரு அரசு, நமது அரசு, நமது ஆட்சி வேண்டும். அப்போதுதான் நம் நாட்டு மக்களை உலக அரங்கில் உயர்த்திக் காட்ட முடியும். அதற்கு நமக்கு முதலாவதாகச் சுதந்திரம் வேண்டும்" என்றுதான் அன்றைக்கு காந்தியடிகள் சுதந்திரப் பிரகடனம் செய்தார். அந்த நேரத்தில் பல்வேறு தியாகங்களைச் செய்து, அந்தத் தியாகங்களினால் பெற்ற சுதந்திரம் நமது சுதந்திரம், இப்போது இந்தச் சுதந்திரப் பெருநாட்டிலே பொறுப்பேற்றுக்கொண்டிருப்பவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், இன்றுள்ள பிரச்சினை திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களுடையதுதானே நமக்கென்ன என்று இந்த மன்றத்தில் மட்டுமில்லை, மற்ற மன்றத்திலும் உள்ள உறுப்பினர்கள் யாரும் எண்ணமாட்டார்கள் என்று உறுதியாக நம்புகிறேன். இன்றுள்ள உணவுப் பிரச்சினை தமிழகத்திலுள்ள 4½ கோடித் தமிழ் மக்களுடைய பிரச்சினையாகும். நமது முதலமைச்சர் அவர்கள் நேற்று இந்த மாமன்றத்தில் சொன்னதைப் போல, கபினி ஆற்று நீர் தேக்கப்பட்டு, காவிரியில் விடப்படாமல், என்றைக்கோ செய்த ஒரு ஒப்பந்தத்தின் விளைவாக அந்த நீர் தமிழகத்திற்கு மறுக்கப்படும்போது, இன்றைக்குப் பதில் சொல்லும் இடத்தில் இன்று வேண்டுமானால் திராவிட முன்னேற்றக் கழக அரசு இருக்கின்றது என்று கொள்ளலாம். ஆனால் எதிர்காலத்தில், இன்றோ நாளையோ மறுநாளோ அல்லது எதிர்காலத்தில் என்றாவது ஒருநாள் தமிழகத்தின் பிரச்சினைகளுக்குப் பதில் சொல்லக்கூடிய இடத்தில் வேறு யாராவது அங்கே அமர்ந்தாலும், அவர்களும் சேர்ந்துதான் இதிலே இழுக்கப்படுவார்களே தவிர, இன்றுள்ள பிரச்சினைகளிலிருந்து இன்றில்லை என்றும் தப்பித்துக்கொள்ள முடியாது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன் அவர்கள், "நீங்கள் எட்டாண்டு காலம் ஆண்டீர்கள். இப்போது ஆட்சி செயலற்றுப் போய்விட்டது. ஆளும் கட்சியினரின் போக்கினால்தான் இன்று இந்த வாட்டத்தைப் பெற்றிருக்கிறோம்" என்றார்கள். நான் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். திட்டக் குழு உறுப்பினராக முன்னாள் தமிழகத் தொழில் அமைச்சர் திரு. வெங்கட்ராமன் அவர்கள் நீலகிரி வந்திருந்த நேரத்திலே கோவை மாவட்ட விவசாயிகளின் சார்பிலே சந்தித்தபோது, நீலகிரி மாவட்டம் கூடலூருக்குப் பக்கத்திலுள்ள பாண்டியாறு-பொன்னம்புழா பகுதி, அந்தக் காலத்தில் எல்லைகளைப் பிரிக்கப்பட்ட காலத்திலே தமிழகத்தில் பொறுப்பேற்றிருந்த அரசு காங்கிரஸ் அரசு அந்த அரசு அந்த நேரத்திலே இதிலே கவனம் செலுத்தியிருந்தால் பாண்டியாறு



பொன்னம்புழா தமிழகத்திற்குப் பயன்பட்டிருக்கும். கோவை மாவட்டம் தமிழகத்தின் இரண்டாவது தஞ்சை மாவட்டமாக மாற்றப் பட்டிருக்கும். இப்போதுகூட நமது முதலமைச்சர் அவர்களும், பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும் கேரள அரசோடு மூன்று முறை பேச்சுவார்த்தைகள் நடத்தி கடைசியாகக் கேட்டார்கள். உங்களுக்குப் போக எஞ்சியுள்ள ஸர்ப்ளஸ் வாட்டரைத் தாருங்கள், எங்கள் கோவை மாவட்டத்தில் பல்லடம், கோவை, அவினாசி ஆக மூன்று வட்டங்களும் வறட்சிப் பிடியிலிருந்து என்றென்றும் நீங்கிவிடும் என்று கேட்டபோதும், கேரளத்தில் இருந்த அரசியல் சூழ்நிலை காரணமாக, அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. மதிப்பிற்குரிய திரு. வெங்கட்ராமன் அவர்களிடம், "அந்தக் காலத்திலேயே நீங்கள் இதிலே கொஞ்சம் கவனம் செலுத்தியிருந்தால், இவ்வளவு சங்கடங்கள் தமிழகத்திற்கு வந்திருக்காது, 700 மெகாவாட் மின்சாரத் திறனும் நமக்குக் கிட்டியிருக்கும். தொழிலுக்கும் விவசாயத்திற்கும் நமக்குப் பெரிதும் பயன்பட்டிருக்கும். அன்றே அதிலே நாம் கவனம் செலுத்தியிருந்தால், இன்று கேரள நாட்டோடு இவ்வளவு பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்டிருக்க வேண்டியதில்லை" என்று சொன்னபோது, அவர் அந்தக் காலத்திலே எங்கள் கவனத்திலிருந்து இது விடுபட்டுப் போய் விட்டது என்றுதான் சொன்னாரே தவிர, இந்த மன்றத்தில் உள்ள உறுப்பினர் சிலர் இப்போது குறிப்பிட்டதைப் போலச் சொல்லவில்லை. 1930-லே அல்லது 1928-லே மதிப்பிற்குரிய இரத்தினசபாபதி முதலியார் அவர்கள் கோவை நகராட்சித் தலைவராக இருந்தபோது, கோவையின் குடிநீர்த் திட்டமாக சிறுவாணித் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இன்று அந்தச் சிறுவாணித் திட்டம் கேரளாவிற்குப் போய்விட்டது. இன்று நிலைமை எப்படி இருக்கிறது என்றால், மாநிலங்களைப் பிரித்த நேரத்திலே பைஃபர்கேஷன் நடந்தபோது, அந்தத் திட்டத்தின் டன்னல்வாய் கேரளாவிற்குச் சொந்தம் என்று பிரித்துவிட்டார்கள். இப்போது கேரள சர்க்கார் அந்தச் சுரங்கவாயிலை மூடிவிட்டால், கோவைக்கு குடிநீர் இல்லை என்ற நிலைதான் இருக்கிறது. எந்தெந்தக் காலத்திலே எந்தெந்தப் பிரச்சினைகளைப் பற்றி வலிவோடு நமது நன்மைகளைக் கருத்தில் கொண்டு, விட்டுக்கொடுக்காமல் போராட வேண்டுமோ அந்தக் காலத்திலே அனைத்தையும் விட்டுக் கொடுத்துவிட்டு இன்றைய தினம் போய்விட்டதை எண்ணிப் பேசுவதில் லாபம் இல்லை. தமிழ்நாட்டு கிராமப்புறங்களிலே பழமொழியொன்று சொல்லுவார்கள், "தாயும், மகளும் ஒன்றானாலும் வாயும் வயிறும் வேறு" என்று. அதைப் போல என்னதான் ஒரு நாட்டு மக்களானாலும், தேவைகள் என்று வரும்போது, சற்று எண்ணிப்பார்க்கத் தவறிவிட்ட காரணத்தினால் சிறுவாணி கேரளத்திற்குப் போய்விட்டது. பாண்டியாறு-பொன்னம்புழா கேரளத்திற்குப் போய்விட்டது. இப்படிப் பல்வேறு திட்டங்களை அவர்களுக்கு அன்றைக்கு மனமுவந்து கொடுத்துவிட்டு இன்றையதினம் அவர்களிடம் கெஞ்சிக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். மத்திய அரசுக்கு விண்ணப்பங்களை அனுப்பிக் கொண்டிருக்கிறோம். தமிழக மக்கள் பரந்த உள்ளமும் பண்பாடும் கொண்டவர்கள். எனவேதான் அந்த நாளிலிருந்து இந்த நாள் வரையில், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற முறையில் யார் எப்படி வந்தால் என்ன, யார் எதை எடுத்துச்

[திரு. மு. இராமநாதன்] [1975 பிப்ரவரி 25

கொண்டால் என்ன என்ற பரந்த உள்ளத்தோடு அனைத்தையும் விட்டுக்கொடுத்துக்கொண்டு வருகிறோம். இன்றைக்கு எல்லாவற்றையும் இழந்துவிடக்கூடிய நிலை இருக்கிறது. காவிரியை இழந்துவிட்டோம். சிறுவாணியை இழந்தோம். பாண்டியாறு, பொன்னம்புழாவை இழந்தோம். அன்றையதினம் சென்னை மாநிலம், கேரள மாநிலம் இந்த இரண்டும் இணைந்திருந்த பகுதிகளைப் பிரிக்கும் நேரத்திலே தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, அகஸ்தீஸ்வரம், கல்குளம், விளவங்கோடு, செங்கோட்டை போன்ற ஒன்பது தாலுக்காக்கள் தமிழ் நாட்டுடன் சேர்க்கப்பட வேண்டும் என்று போர்க்கொடி உயர்த்தினோம். ஆனால் மதிப்பிற்குரிய திரு. காமராஜர் அவர்கள் அந்த நேரத்திலே என்ன சொன்னார்கள் ? அவருக்கே உரிய பாணியில் "தேவியாவது, பீராவது, குளமாவது, மேடாவது" என்று சொன்னார்களே தவிர, பின்னால் வரக்கூடிய விளைவுகளை எண்ணிப்பார்க்கத் தவறியதன் காரணமாக இன்றைக்கு அதன் தீமைகளை ஒட்டுமொத்தமாக தமிழ்நாடுதான் அனுபவித்துக்கொண்டு வருகிறது. அந்தத் தீமைகளை நாங்களும் அன்றைக்குப் பதவியிலிருந்துகொண்டு அப்படிப் பேசிய கட்சியினரும் ஆக அனைவரும் சேர்ந்துதான் அனுபவித்துக்கொண்டு வருகிறோமே தவிர, யாரும் ஒதுங்கிப்போய்விடவில்லை. அப்படிப்பட்ட நெருக்கடியான கட்டத்தில் தமிழ் நாட்டு மக்கள் இருக்கின்றார்கள் என்பதைச் சுட்டிக்காட்டவே இதையெல்லாம், தலைவர் அவர்களே, இந்த நேரத்திலே இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்தப் பஞ்ச நேரத்திலே, வறட்சிப்பிடியில் மக்கள் அவதியுறும் நேரத்திலே, கவர்னர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டிருப்பதைப் போல, ரூபாய் 55 கோடியைப் பஞ்ச நிவாரணப் பணிகளுக்காக ஒதுக்கியிருக்கிறது நமது அரசு. முதல் கட்டமாக தமிழக அரசு ரூபாய் பத்து கோடி ஒதுக்கி அதிலே முதலில் ரூபாய் மூன்று கோடியும், அடுத்த கட்டமாக ரூபாய் இரண்டு கோடியும், பின்னர் ரூபாய் ஐந்து கோடியும் என்று ஒதுக்கியிருக்கிறது. மத்தியப் பேரரசு இத்தகைய பணிகளுக்காக ரூபாய் 7·5 கோடியை ஒதுக்கியிருக்கின்றார்கள் தமிழ்நாட்டிற்காக. நாம் மத்திய அரசிடம் ஒட்டுமொத்தமாக எதிர்பார்ப்பது ரூபாய் 30 கோடியாகும். அது கிடைத்த பின்னர், தமிழகம் முழுவதும் பஞ்ச நிவாரணப் பணிகளை ஒரு போர்க்கால நடவடிக்கையைப் போல செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறோம் நாம். இப்படிச் செய்யும் நேரத்தில் ஒரு வேளை மாசி மாதத்திற்குள் பெருமழை பெய்து அதன் மூலம் நமக்கு நல்ல பலன்கள் கிடைக்கவும் கிடைக்கலாம் என்று ஏங்கும் நிலைமையில் தமிழ் நாட்டு மக்கள் வாட்டத்தோடு இருக்கிறோம் என்பதைத்தான் இந்த அறிவிப்பு எடுத்துக் காட்டுகிறது. மத்தியப் பேரரசு கொடுக்கும் என்றோ அல்லது எதிர்பாராமல் மழை வந்து அனைத்தும் சரியாகப் போய்விடும் என்றோ, நாம் கையைக் கட்டிக்கொண்டு சும்மா இருந்து விடவில்லை. நாட்டிலே மழையும் இல்லை, மக்களுக்குப் பிழைக்க வழியும் இல்லாமல் அவதிப்படுகின்றார்கள் என்பதை நன்கு உணர்ந்துள்ள நமது அரசு 61 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பினை அளித்திடும் திட்டத்தைத் தீட்டி வலுவிருந்தும் உழைப்பதற்குத் தயாராக இருந்தும் வேலை இல்லாமல் அவதிப்படும் மக்களின் துயர் துடைக்க அவர்களுக்கு வேலை வாய்ப்பினை நல்கிட வேண்டும் என்ற முறையில் இதற்காக



1975 பிப்ரவரி 25] [திரு. மு. இராமநாதன்]

ரூபாய் 55 கோடியை ஒதுக்கி, இந்தத் தொகையிலே 65 சதவிகிதம் ஊதியமாகத்தான் மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்ற அளவிலே ஒரு புரட்சிகரமான திட்டத்தைத் தீட்டி நாம் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

இதைப் பாராட்டும் இதே நேரத்திலே நான் இன்னும் ஒன்றை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நமது முதலமைச்சர் அவர்களையும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும் கோவை மாவட்டத்தைச் சார்ந்தவன் என்ற முறையில், பல்வேறு பிரச்சினைகளில் பிற மாநில அரசுடன் பேசி வெற்றிகண்ட தாங்கள் மேலும் பாண்டியாறு-புன்னம்புழா திட்டம்பற்றி கேரள அரசோடு பேசி அதன்மூலம் கிடைக்கும் உபரி நீரைக்கொண்டு, கோவை, அவிநாசி பல்லடம் ஆகிய மூன்று தாலுக்காக்களில் துயர் துடைப்பதற்கு வழி காண வேண்டும், விவசாயத்திற்கு மட்டுமன்றி குடிநீர் பிரச்சினைகளையும், அந்த மூன்று வட்டங்களிலே தீர்த்து வைக்க வேண்டும் என்று பணிவுடன் வேண்டிக்கொள்ளுவது என் கடமையாகும்.

(பிற்பகல் 5-20)

அதுமட்டுமல்ல, இப்போதும்கூட குடி தண்ணீர் சப்ளை செய்வதற்கான சில திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டு, அவை அதிகாரிகளின் கருத்துப்படி "அன்-எக்கனாமிக் ஸ்கீம்"—பொருளாதார அடிப்படையில் லாபகரமானதாக இல்லை என்று தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன. அப்படி "அன்-எக்கனாமிக் ஸ்கீம்" என்று சொல்கிற சில திட்டங்கள் .. ..

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை.)

(தலைவர் மணியடித்தார்.)

இன்னும் ஒரு நிமிஷத்தில் முடித்துக் கொள்ளுகிறேன். தலைவரவர்களே, தங்கள் மூலமாக ஒன்றைச் சொல்லிகொள்ள விரும்புகிறேன். நஷ்டம் ஏற்படுவதாக இருந்தாலும் சூலூர் பஞ்சாயத்து உள்ளிட்ட பல்வேறு கிராமங்களுக்கும், பல்லடம் பகுதி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களுக்கும் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்திலிருந்து வரும் தண்ணீரைக் குறைந்த பட்சம் குடிதண்ணீருக்காவது பயன்படுத்துவதற்கு ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அந்தத் தண்ணீரை குளங்களில் தேக்கி வைத்து, குடிதண்ணீருக்குப் பயன்படும்படியாகச் செய்யவேண்டும். இந்தத் திட்டம் நீண்டநெடுங் காலமாகச் சொல்லப்படுகிற திட்டம். அதை "அன்-எக்கனாமிக் ஸ்கீம்" என்று தள்ளுபடி செய்யாமல், நஷ்டம் ஏற்பட்டாலும், வேறு மார்க்கம் இல்லையென்பதால், அந்தத் திட்டத்தை ஆழ்ந்து பரிசீலித்து நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அதே போன்று தொடர்ந்து நடைபெற்று வருகிற பஞ்ச நிவாரண நடவடிக்கைகளோடு சேர்த்து இன்னொரு நடவடிக்கையும் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கோவை மாவட்டத்தில் பல காட்டாறுகள் இருக்கின்றன. மலைத் தொடர்களிலிருந்து வரும் தண்ணீர் வேகமாக வந்து, சென்று விடுகிறது. அப்படி இல்லாமல்

[திரு. மு. இராமநாதன்] [1975 பிப்ரவரி 25

வருகிற தண்ணீரை, சிறு சிறு ஓடைகளை ஆழப்படுத்துவதன் மூலமும், "ரிவெட்மென்ட்" கட்டி, சிறுசிறு தடுப்புகளைப் போட்டு பாதுகாப்பாக வைப்பதன் மூலமும், தேக்கி வைத்து பின்னால் உபயோகித்துக்கொள்ள லாம். அப்படிப்பட்ட "செக்-டேம்" ஸ்கீமைப் பரவலாக தமிழ்நாடு பூராவும் பெரியதொரு திட்டமாக நிறைவேற்ற இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று இந்த மன்றத்திற்கு நினைவு படுத்த விரும்புகிறேன்.

இறுதியாக ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அண்ணா அவர்கள் முதலமைச்சராக ஆனவுடன், முதலாவது மாதத்திலேயே ஒன்றைச் சொன்னார்கள். "நான் இந்தப் பொறுப்பிலிருந்து என் னென்ன மக்களுக்குச் செய்ய வேண்டுமென்று கருதினேனோ அவற்றை யெல்லாம் எண்ணிப் பார்க்கிறேன். எனக்கு இருக்கிற அதிகாரங்களையும் எண்ணிப் பார்க்கிறேன். என்னிடத்தில் மக்கள் வைத்திருக்கும் நம்பிக் பிக்கையையும் எண்ணிப்பார்க்கிறேன். மக்கள் எண்ணுகின்ற ஆசை களுக்கு ஏற்றவகையில் காரியங்கள் செய்ய மனம் இருக்கிறது. ஆனால் என் கையில்தான் அதிகாரம் இல்லை" என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லிவிட்டு, " நான் இந்த நாற்காலிக்கு வந்தவுடன், எனக்கு அதிகாரம் இல்லை" மத்திய அரசை எதிர்த்துப் போர் தொடுத்துவிட்டேன் என்று அதற்கும் இதற்கும் வம்பிழுத்து, மக்கள் மத்தியில் சிக்கலை ஏற்படுத்த விரும்பவில்லை; என் சக்திக்கேற்ப எதை எதைச் செய்ய முடியுமோ அதைச் செய்கிறேன். மாநில அரசு வரம்பி லிருந்து நிறைவேற்றமுடியாத என்னுடைய எண்ணங்கள் இன்னின்ன வகையில் தடைபடுகின்றன, அதை நாட்டுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் கேட்டுக்கொள்ளுங்கள்" என்று அன்று சொன்னார்கள். நம்முடைய முதல் வரவர்களும் சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையை அளித்தபோது சொன்னார்கள். இன்றைய ஆளுநர் உரையிலும் சொல்லப்பட்டிருக் கிறது. " இன்னின்ன காரியங்கள் செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன். ஆனால வருமானம் ஒரு எல்லைக்குட்பட்டதாக இருக்கிறது. வரி வாங்கும் வாயில்கள், துறைகள் அனைத்தும் மத்திய அரசுப் பொறுப்பில் இருக் கின்றன. எனக்குக் கடல் போல் உள்ளம் இருக்கிறது ; காரியங்கள் செய்ய எண்ணம் இருக்கிறது ; ஆனால் இநதத் திட்டங்களை நிறைவேற்ற அதிகாரம் இல்லை " என்று சொன்னார்கள். . அப்படிப்பட்ட நிலை எதிர் காலத்தில் இல்லாமல் எந்த நோக்கத்தோடு வெள்ளைக்காரன் வெளியேற வேண்டுமென்று சொன்னோமோ அந்தக் காரணத்திற்காக, அந்தச் சுதந் திர உரிமைகள், அந்த அடிப்படை ஜீவாதார உரிமைகள் இந்திய நாட்டில் இருக்கும் எல்லாப் பகுதி மக்களுக்கும் சீராகக் கிடைக்கும் வகையில் நம்முடைய அரசினுடைய எண்ணங்கள் இருக்கவேண்டும். மத்திய அரசின் சிந்தனை இருக்கவேண்டும் ; மாற்றாந்தாய் மனப்பான்மை இருக்கக்கூடாது ; எங்களுக்கு இருக்கும்போது எல்லோருக்கும் தந்தோம் ; இப்போது வாட்டத்தில் இருக்கிறோம், பஞ்சத்தில் இருக்கிறோம்; கஷ்டத்திலே இருக்கிறோம்; அந்தத் தமிழ் மக்கள் வாட்டத்தைப் போக்க பரிவு காட்டவேண்டுமென்றும் மத்திய அரசு தாய் மனப்பான்மையோடு நடந்து கொள்ள வேண்டுமென்றும் இந்த ஆளுநர் உரை கேட்டுக் கொள்கிற தென்பதை மீண்டும் நினைவுபடுத்தி, ஆளுநர் உரைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.



1975 பிப்ரவரி 25]

திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி: மன்றத் தலைவரவர்களே, இரு அவைகளின் உறுப்பினர்கள் கூட்டுக் கூட்டத்தில் மேதகு ஆளுநர் அவர்கள் நிகழ்த்திய உரைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் முறையில் ஒருசில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு மாநிலத்தில் ஏற்பட்டிருக்கும் பயங்கரமான நிலைமையை, வேதனைக்குரிய நிலைமையை நாம் சமாளிக்க வேண்டிய நிர்பந்தத்தில் இருக்கிறோமென்பதை கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையிலே தெளி வாகக் கூறியிருக்கின்றார்கள். நமது மாநிலத்தில் வட கிழக்குப் பருவக் காற்று அறவே பொய்த்துவிட்டது. அதனால் நமக்குப் பெருமளவு தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. பெருமளவு விவசாயம் பாதிக்கப் பட்டுவிட்டது. மேலும், மின்சார உற்பத்தியிலும் நமக்குப் பெருமளவு பாதகம் ஏற்பட்டிருக்கிறது. இதனால் உணவு உற்பத்தி செய்வதற்கான மின்சாரத்திலே குறைவு ஏற்பட்டிருக்கிறது. இத்தனையையும் நாம் சமா ளிக்க வேண்டும். அதற்கான முயற்சிகளைத் தமிழக அரசு எந்தெந்தத் துறையிலே செய்து கொண்டிருக்கின்றது என்பதையெல்லாம் கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அதை வரவேற்றுப் பாராட்டு கிறேன். இன்றைக்குள்ள வறட்சி நிலைமையிலே, எப்படி எப்படி இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமோ அப்படியெல்லாம் தீர்ப்பதற்கு தமிழக அரசு முழு முயற்சி எடுத்து, ஆவன செய்துகொண்டுதான் இருக்கிறது.

இப்படிப்பட்ட நிலையிலே, நம்முடைய மாநிலத்திற்கு முதலில் தேவைப் படுவது உணவு. உணவுப் பற்றாக்குறை எவ்வளவு ஏற்பட்டிருக்கிறதென் பதையும் அவர்கள் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். 20 லட்சம் டன் இன்னும் 10 மாதங்களுக்குத் தேவைப்படுகிறது ; இதை மத்திய அரசு கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். பெரிய நாடு நமமுடைய நாடு. பரந்த தேசம் இந்தியா. அதிலே ஒரு மாநிலமாக இருக்கிறது தமிழகம். இயற்கையின் விளைவால் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. மழை பெய்யாமல் போவது அல்லது அதிகமாக மழை பெய்து வெள்ளத்தினால் ஆபத்து உண்டாவது—இப்படியெல்லாம் ஏற்படுவது உண்டு. இந்த நிலைக்கு உட்பட்ட மக்கள் நலனைக் குறித்த முழுப் பொறுப்பையும் மத்திய அரசு எடுத்துக்கொண்டு, அதற்கான நிவாரணப் பணிகளைச் செய்யவேண்டும். மாநில அரசு, அதன் வருவாய்க்குட் பட்டு, நிர்வாக வசதிக்குட்பட்டுதான் மக்களின் தேவைகளுக்கு ஈடு கொடுக்க முடியும். ஆனால் எதிர்பாராமல் இப்படிப்பட்டதொரு நிலை உண்டானால் அதற்கு மத்திய அரசுதான் முழுப்பொறுப்பேற்று செய்ய முடியும். அப்படியொன்றும் செய்ய முடியாத பிரச்சினையல்ல இது, ஈடு கொடுக்க முடியாத ஒரு பெரிய நிலையும் இல்லை. இன்றைக்கு 50 அல்லது 55 கோடி ரூபாய் இருந்தால் நாம் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிடலாமென்றும் திட்டமிட்டு வேலை செய்கிறோம். மேலும், 20 லட்சம் டன் உணவுப் பற்றாக்குறை இருக்கிறது. அதையும் கொடுத்து உதவவேண்டுமென்று கேட்கிறோம். மற்ற மாநிலங்களெல்லாம் நல்ல நிலையிலே இருக்கின்றன. அவர்களிடமிருந்து வாங்கி இந்த அவசர நிலையில் நமக்குக் கொடுத்துதவ மத்திய அரசு முன்வரவேண்டும். நாம் எவ்வளவோ கேட்டும், உதவி

செய்வதில் காலதாமதம் செய்து கொண்டிருக்கிருர்கள். மேற்கொண்டு காலதாமதம் செய்யாமல் உடனடியாக உதவிக்கு வர வேண்டும். இது மக்களுடைய பிரச்சினை. இது பசிப் பிரச்சினை; பட்டினிப் பிரச்சினை, உயிர் பிரச்சினை. இதற்காகும் காலதாமதத்திற்கு எந்த சமாதானமும் சொல்லமுடியாது. அதனுல் மத்திய அரசு உதவி செய்ய முன்வருவதற்கு என்னென்ன முறையில் வற்புறுத்த வேண்டுமோ அல்லது நிர்பந்திக்கவேண்டுமோ அவைகளைச் செய்யவேண்டும். அரசியல் காரணத்திற்காக இல்லாமல், இங்குள்ள மக்களுடைய பிரச்சினையாகக் கொண்டு இதைச் செய்து தீரவேண்டும்.

(பிற்பகல் 5-30.)

விவசாயத்துக்கு மின்சாரம் மிகவும் அவசியம். விவசாயத்தை ஒட்டிய பிரச்சினையை நாம் மனதில் கொண்டு பார்க்கும்போது முக்கியமாகத் தென்படுவது மின்சாரம். மேலும், விவசாயத்திற்கு வேண்டிய நீர்ப் பாசன வசதிகள், உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் இவைகள் எல்லாம் காலாகாலத்தில் கிடைக்கச் செய்ய வேண்டும். மேலும், அவைகள் அந்தந்த விவசாயிகளுக்குச் சரியாக உரிய காலத்தில் போய்ச் சேருகின்றனவா என்பதையெல்லாம் நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். இவைகளையெல்லாம் இப்பொழுது நல்ல முறையில் செய்துகொண்டுதான் இருக்கிறோம்.

மின்சாரத்தை நம் தமிழகத்திலே பெருவாரியாக நம்பியிருக்கவேண்டியிருக்கிறது. இயற்கையாக உள்ள ஆற்று நீர்ப்பாசன வசதிகள் நமக்கு மிகக் குறைவு. காவிரி நீர்ப்பாசனம் ஒன்று தான் நமக்குப் பெருமளவில் இருந்தது. இன்றைக்கு அது பல சிக்கல்களுக்கும், தொல்லைகளுக்கும் கருத்து வெற்றுமைக்கும் உள்ளாக்கப்பட்டு நம்மை அச்சுறுத்திக்கொண்டிருக்கிறது. அதன் முடிவுகள் எந்த நிலையிலே நம்மைக்கொண்டுபோய் விடுமோ என்ற ஒரு பீதியும், பயமும் இருக்கின்றது. இதையெல்லாம் நல்ல முறையிலே தீர்த்துவைக்கவேண்டிய பொறுப்பு மத்திய அரசினுடைய பொறுப்பு. இதற்கு ஒரு தீர்வு காண வேண்டுமென்று மாநில அரசு பல ஆண்டுக்காலமாக, ஒரு 6, 7 ஆண்டுக் காலமாக, தீவிர நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறது. இருந்தாலும்கூட அவைகள் நல்லவித முடிவுக்கு வராமல், பல கோணங்களிலே இழுக்கப்பட்டு, மாற்றப்பட்டிருக்கின்ற ஒரு பயங்கரமான சூழ் நிலையை இன்றைக்குப் பார்க்கும்போது, மிகவும் வேதனையாக இருக்கிறது.. இந்த நிலை எப்படியாவது மாற வேண்டும். தமிழகத்தில் நாம் ஏற்கெனவே பெற்று வருகின்ற நீர், ஏற்கெனவே இருக்கின்ற ஆயக்கட்டுகளை பாதிக்காத வகையில் இருந்தால் போதுமென்றும், மேற்கொண்டு நமக்கு அதிக வசதிகள் தேவையில்லை என்றும் நாம் ஒத்துக்கொண்டும்கூட இன்னும் அந்தநிலை மாறவில்லை என்றுல், அது என்ன காரணமோ என்று போகப்போகத்தான் தெரியும். அது பேச்சுவார்த்தையில், தற்போது இருக்கும்போது, நாம் அதிகமாக அதைப்பற்றிப் பேசுவது, இருக்கின்ற நிலைமையையும் கெடுத்துவிடும் என்றுதான் நினைக்கிறேன்.





மேலும், குடிதண்ணீர் நிலைமை உணவு நிலைமை பற்றியெல்லாம் ஆளுநர் அவர்களுடைய உரையிலே கூறினுர்கள். மற்றும் பேசிய நண்பர்களும் சொன்னுர்கள். விநியோகிக்கும் உணவு எல்லாம் மக்களிடத்திலே நேரடியாகப் போய்ச் சேருவதற்கான வழிவகைகளை நாம் செய்ய வேண்டும். அதுபோல இன்றைக்கு குடிதண்ணீரும் பல இடங்களிலே இல்லாமல் மிகவும் சிரமமான நிலைமை இருக்கிறது. அதுவும் கிராமப் பகுதிகளில் ரொம்பச் சங்கடமாக இருக்கிறது. மனிதனுக்கு குடிப்பதற்கே தண்ணீர் இல்லையென்றுல், கால்நடைகளுக்கு எந்த அளவுக்கு இதிலே சிரமம் இருக்கிறது என்பதையும் நாம் உணராமல் இருக்க முடியாது. இதையும் நாம் உணர்ந்து அதற்கு வேண்டிய வசதிகளை நாம் செய்ய வேண்டும். மக்களுக்கு உணவு அளிப்பது போல கால்நடைகளுக்கு வேண்டிய தீவனங்கள், வைக்கோல் போன்ற உணவுப் பொருட்களை எங்கிருந்தாவது வரவழைத்து அதற்கும் கொடுக்க வேண்டும். விவசாயத்திற்கு மிகவும் இன்றியமையாத கால்நடைச் செல்வங்களையும் பேணி, அவை அழியாமல், பாழாகாமல், அவற்றைப் பாதுகாப்பதற்கு நாம் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

இன்றைக்கு சென்னை நகரிலே குடிதண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கின்றது. அதற்கு கோடிக்கணக்கான பணத்தை ஒதுக்கி உடனடியாக நிவாரணம் அளிக்க வேண்டும் என்றெல்லாம் கவர்னர் அவர்களுடைய உரையிலே சொல்லியிருக்கிருர்கள். அதெல்லாம் வரவேற்கத்தக்கது. ஆனுல் ஒரு குறை என்னவென்றுல், இப்படி முன்பு ஒரு பற்ருக்குறை ஏற்பட்டிருந்தபோது, 25 லட்சம் ரூபாய் அளவிலே ஒரு "கிராஷ் புரோகிராம்" என்று சொல்லி செலவு செய்து ரோடுகளிலே பைப்புகள் எல்லாம் போட்டு, கைப்பைப்புகளையும்போட்டு தண்ணீர் கொடுத்தார்கள். அவ்வாறு செய்து அந்தத் தற்காலிகமான சங்கடத்திலிருந்து மக்களை மீட்டார்கள். ஆனுல் அந்த 25 லட்சம் ரூபாய் செலவு செய்து போட்ட பைப்புகள் இன்றைக்கு என்ன ஆயிற்று என்றுதான் தெரிந்து கொள்ள முடியவில்லை. அவைகள் எப்படியோ மறைந்துபோய்விட்டன. ஆகையால், அம்மாதிரி நிலைமைகள் தற்போது செய்யப்படுகின்ற காரியங்களிலே இல்லாமல், வாங்கி வழங்கக்கூடிய சாமான்கள் மறையாமல், அழியாமல், திருட்டுப்போகாமல் நாம் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு நிரந்தரமாகப் பாதுகாக்கும் பொருட்டு, சரியான பொறுப்புக்களை உரியவர்களுக்குக்கொடுத்து அவைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த கால நிலைமைகளையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு, எதிர்காலத்திலே என்னென்ன வேலைகளைச் செய்ய வேண்டும், எப்படி எப்படி அவைகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதைத்தான் நான் கூறுகின்றேனே தவிர எதுவும் குற்றமாகவோ, குறையாகவோ சொல்லவில்லை. இன்றைக்கு இருக்கக்கூடிய இந்த நெருக்கடியை நாம் எப்படியும் சமாளித்தாக வேண்டும். இதைச் சமாளிக்க, விவசாயத் துறையிலே உற்பத்தி தேவையான அளவுக்குக் கிடைக்கும்படி நாம் வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும்.

[திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி] [1975 பிப்ரவரி 25

நாம் எடுக்கும் நடவடிக்கைகளில் மத்திய அரசினால் பலவிதமான காலதாமதங்கள் ஏற்படுகின்றன என்பதையெல்லாம் நம்முடைய ஆளுநர் அவர்கள் தங்களுடைய உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு நெய்வேலியிலே இரண்டாவது சுரங்கத்தை வெட்டுவதிலும் காலதாமதம், அவ்வாறே தூத்துக்குடியில் மின்சாரம் உண்டு பண்ணுவதிலும் காலதாமதம், கல்பாக்கம் அணுமின் நிலையத்தை உருவாக்கி மின்சாரம் உற்பத்தி செய்வதிலும் காலதாமதம். இப்படியே காலதாமதமாக இன்னும் 10 ஆண்டுகாலம் போனால், அந்த 10 ஆண்டுக் காலத்தில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளும், மக்களுடைய எண்ணிக்கையும் அதிகமாக இருக்கும் என்பதையும் மனதில் கொள்ள வேண்டும். முன்பு 2 லட்சம் மோட்டார் பம்புசெட்டுகள் இருந்த நிலையை மாற்றி இன்றைக்கு 7 லட்சம் மோட்டார் பம்புசெட்டுக்கள் போட்டிருக்கிறோம். இருப்பினும் இன்றைக்கு உணவு பற்றாக்குறையாக இருக்கிறது. நாட்டில் வறட்சி இருக்கிறது. ஜனப்பெருக்கம் அதிகமாகப் போய்க்கொண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் நன்றாக மனதில் கொண்டு மின்சார வசதியை நாம் பெருக்கிக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய மத்திய அரசை நன்றாக வற்புறுத்திச் செய்ய வேண்டும்.

மக்கள் வாழ்வதற்குத் தேவையான உணவுப் பொருட்கள், மற்றும் எல்லா வசதிகளையும் அவர்கள் பெற்றுக்கொள்ளத் தக்கவாறு நாம் தீவிர நடவடிக்கை மேற்கொள்வது அவசியம். இதிலே அரசியலோ, கட்சியோ சம்பந்தமில்லை என்பதை எடுத்துக்கூறி வற்புறுத்தி இவையெல்லாம் செய்ய வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த அரசு ஏற்கெனவே பல முயற்சிகளைச் செய்திருக்கின்றது. ஆனால் மத்திய அரசுதான் ஏதோ காரணத்தைக் காட்டி காலதாமதம் செய்வதாகத் தெரிகிறது. இது வருந்தத்தக்கது. இப்படி ஒரு நிலைமை நீடித்துக்கொண்டே போனால், மக்களுடைய மனப்பாங்கு, போக்கு வேறு விதமாக, விபரீதமாகக்கூடப் போகும். அதையெல்லாம் மத்திய அரசு எச்சரிக்கையாக மனதில் வைத்துக்கொண்டு செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

*திரு ஏ. பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னரசு அவர்கள் முன்மொழிந்து, ஆளுநர் அவர்கள் உரைமீது நடந்து வருகின்ற விவாதத்திலே பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறிக்கொள்ளுகிறேன்.

மேதகு ஆளுநர் அவர்களுடைய உரை பார்ப்பதற்கு பருகுகின்ற நீர் போல இருந்தாலும் அதன் பக்கத்திலே போய்ப் பார்த்தால் அது வெறும் கானல் நீராகத்தான் காணப்படுகிறது. இன்னும் சொன்னால் அது எட்டுச் சுரைக்காயேயொழிய கறிக்கு உதவுகின்ற நாட்டுச் சுரைக்காயாக இல்லை. இதற்குச் சான்றாக நான் சொல்லப்போவது, 5-ம் பக்கத்திலே அவர் மிக அழகாக, தெளிவாக கோடிட்டுக் காட்டியிருப்பது. அது என்னவென்றால்,



1975 பிப்ரவரி 25] [திரு. ஏ. பாலசுப்பிரமணியம்]

"கூட்டுறவு சங்கங்கள் கொடுத்த குறுகிய காலக்கடன்கள் நடுத்தரக் காலக்கடன்களாக மாற்றப்படும். இதன் விளைவாக பழைய கடன்களை திருப்பிச்செலுத்த வேண்டும் என்று வற்புறுத்தாமல் கூட்டுறவு சங்கங்கள் அடுத்த பயிரிடு பருவத்துக்கும் குடியானவர்களுக்கு குறுகிய காலக் கடன்கள் மேலும் கொடுக்க முடியும். விவசாயிகளுக்கு தனிப்பட்டவர்கள் கொடுத்த கடன்களை வசூலிப்பதற்காக நீதிமன்றத்திலே நடவடிக்கை எடுப்பதை ஓராண்டுக்குத் தடை செய்து அவசரச்சட்டம் ஒன்றும் இயற்றப்பட்டுள்ளது".

என்று மிக அழகாக ஏட்டிலே எழுதியிருக்கிறார்கள். ஆனால் நடைமுறையிலே பார்க்கின்றபோது—இன்றைக்கு அந்தத் தனிப்பட்டவர்களுடைய கடன்களை ஓராண்டு ஒத்திவைப்பதற்காக சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள்—இதிலே பலனடையக்கூடியவர்கள் நிலச்சுவாந்தார்கள். ஏறக்குறைய 10 ஏக்கர் நிலம் எனக்கிருக்கிறது என்று சொன்னால், அந்தச் சட்டத்தினாலே எனக்கு அனுகூலம் இருக்கிறது. ஆனால் அந்த நிலத்திலே பாடுபடுகின்ற நிலமில்லாத சாதாரண ஒரு ஏழைத் தொழிலாளிக்கு அந்தச் சட்டம் பாதுகாப்பு கொடுக்கவில்லை. உதாரணமாக இவ்வாறு பணிபுரிகின்ற சாதாரண ஒரு ஏழை விவசாயிக்கு ஒரேயொரு வீடு மட்டும் இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். இந்தச் சட்டம் அந்த வீட்டைப் பாதுகாக்கவில்லை. அவனுடைய அந்த வீட்டை இன்றைக்கு கோர்ட் மூலமாக ஏலம் போடுகின்ற காட்சியை நாம் இன்றைக்குக் காண்கிறோம்.

அடுத்து, இன்றைக்கு கூட்டுறவு நாணயச் சங்கத்தின் மூலமாகக் கொடுக்கப்பட்டிருக்கிற கடன்களெல்லாம் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன, நீண்டகாலக் கடன்களாக ஆக்கப்பட்டிருக்கின்றன என்று கவர்னர் அவர்களுடைய உரையிலே மிகத்தெளிவாகக் குறிப்பிட்டிருந்தாலும்கூட, வசூலிப்பதிலே மிகவும் அச்சுறுத்தலும், கெடுபிடியும் இருப்பதை நாம் பார்க்கிறோம். ஏறக்குறைய 2 மாதங்களுக்கு முன்பாக மூன்னாள் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சேலம் மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்தபோது, அவர்களிடத்திலே நாங்கள் நேரடியாகச் சொல்லியிருக்கிறோம். "கூட்டுறவு நாணயச் சங்கத்தார் ஏழை விவசாயிகளை அச்சுறுத்தி, கெடுபிடி செய்து, நிலங்களை ஜப்தி செய்து வசூலிக்கிறார்கள். நீங்கள் ஆவன செய்ய வேண்டும்" என்று கேட்டிருக்கிறோம். அப்போது சேலம் மாவட்டத்திலே உள்ள மத்திய வங்கியிலே ஒரு கூட்டத்தைக் கூட்டியிருந்தார்கள். அங்கே இருக்கின்ற அதிகாரிகளைப் பார்த்தும் அந்தக் கூட்டுறவு வங்கியின் தலைவரைப்பார்த்தும் சொன்னார்கள். அரசாங்கம் ஒரு உத்தரவைப் போட்டு, நீங்கள் அதை மீறிச்செய்தால் அது நல்லதல்ல என்று சொன்னார்கள். இருந்தாலும் கூட அது வாய்ப்பேச்சளவில், போய்விட்டது. இன்றைக்கு நடைமுறையிலே அங்கே இருக்கின்ற விவசாயிகளை அச்சுறுத்தி வசூலிப்பதையும், அவர்களுடைய நிலங்களை ஜப்தி செய்வதையும் கண்கூடாக நான் காண்கிறேன். அது மட்டுமல்ல எங்கள் சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் சரி, தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் சரி, அங்கே இருக்கின்ற விவசாயிகள் கல்லையும் உடைத்து கழனியாக்கி நெல்லை விளைவிக்கக்கூடிய கடுமையான உழைப்பாளர்கள்.

(பிற்பகல் 5–40).

அவர்கள் இன்றைக்கு இந்த வானத்தைப் பார்த்துத்தான் அவர்களுடைய மானத்தை மறைக்கக்கூடிய நிலையிலே இருக்கின்றார்கள். அங்கே வளமான மண் உண்டு. அங்கே பாடுபட மக்கள் உண்டு. ஆனால் வற்றாத நீர் ஊற்றுக்கள் இல்லை. ஆக்வே அவர்களுடைய கடன் வசூலை ஒத்தி வைக்க வேண்டுமென்று கவர்னர் அவர்களுடைய உரையிலே மிகத் தெளிவாகச் சொல்லியிருந்தும், அது நடைமுறையில் இன்னும் வரவில்லை. மக்கள் வேதனையடைகின்றார்கள். அதற்கு உடனடியாக அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இந்தக் கூட்டுறவுச் சங்கத்திலே உயர் மட்ட அதிகாரிகளைக் கலந்து பேசுகிறபோது, அரசினிடத்திலிருந்து தாக்கீதோ, உத்தரவோ எதுவும் வரவில்லை என்று சொல்லுகின்றார்கள். அரசு உடனடியாக அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, தமிழ் நாட்டிலே ஏற்படக்கூடிய வறட்சி கடந்த 100 ஆண்டுக் காலத்திலே இல்லாத ஒரு வறட்சியாக இருக்கின்றது என்கிறார்கள். தென்னை மரம் காய்ந்துவிடுகின்ற அளவு வறட்சி ஏற்பட்டது. இப்போது பனை மரமே காய்ந்துவிடுகின்ற அளவுக்கு வறட்சி ஏற்பட்டிருக்கின்றது என்பதைப் பார்க்கலாம். நம் மேலவையிலே இருக்கக்கூடிய மதிப்பிற்குரிய திரு. ராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் கூட இந்தமாதிரி வறட்சியை நான் பார்த்ததே இல்லை என்று சொல்லுகின்றார்கள். இந்த வறட்சிக்குக் காரணமாக இந்த அரசாங்கத்தைக் குறை சொல்லவில்லை. ஏனென்று சொன்னால், இந்த வறட்சி இயற்கையாக ஏற்பட்ட ஒன்று. அதற்கு இந்த அரசு தான் காரணம் என்று சொல்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் அரசியலிலே லாபம் தேடுபவர்களாகத் தான் இருக்க முடியும். அவர்கள் மக்களுடைய துடிப்பை உணராதவர்கள் ஆவார்கள். ஏனென்றால் இன்றைக்கு மழை பெய்யாததற்குக் காரணம் நாம் யாரையும் சொல்வதற்கு இல்லை. ஏனென்றால் லட்சோபலட்சம் முஸ்லீம் மக்கள் கடற்கரையிலே தொழுகை நடத்துகின்றார்கள், பல்லாயிரக்கணக்கான இந்துக்கள் கோயில்களிலே பிரார்த்தனை செய்கிறார்கள் வருண ஜபம் செய்து மழையே வா வா என்று பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாலும், மழை வராத காட்சியைப் பார்க்கிறோம். நாம் கடவுளைத் தான் நொந்துகொாள்ள வெண்டும். கருணாநிதி என்ற பெயரிலே இருக்கக்கூடிய தமிழகத்து முதல்வரை நொந்துகொள்வதிலே பிரயோசனம் இல்லை என்றுதான் சொல்லிக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன். ஏனென்றால் நாம் இவ்வளவு ஜெபம் செய்தும், பிரார்த்தனை செய்தும்கூட மழை வராததற்குக் காரணம் கடவுளுக்குக் கோபம் எல்லாம் நம் மீதே தவிர தமிழகத்தின் முதல்வர் மீது கோபம் கொள்ளவில்லை என்பதற்கு இந்த ஜபம் செய்வது ஒரு ஆதாரமாக அமைந்திருப்பதை நாம் காணலாம்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு நிவாரண வேலைகள் எல்லாப் பகுதிகளிலும் நடந்து வருவதை நாம் காண்கிறோம். இருந்தாலும் கூட அந்த நிவாரண வேலைகள் எல்லாம் அங்கங்கே சில சம்பிரதாயங்கள்





காரணமாக, சில தலையீடுகள் காரணமாக, தடைப்பட்டு நிற்பதையும் நாம் காண்கின்றோம். எங்கள் பகுதியிலே ஊராட்சி ஒன்றியங்களிலே இன்றைக்கு நடக்கின்ற வேலைகள் எல்லாம் கிணறுகளை ஆழப்படுத்துவது தான். அங்கே இருப்பவர்களுக்கு எப்படியாவது குடி தண்ணீர் வசதி செய்து தர வேண்டும் என்று அங்கே கிணறுகளில் அடி வெட்டு வெட்டப்படுகின்றன: ஏறத்தாழ 100 அடி ஆழத்திற்குத் தோண்டியும் கூட, பாறையை உடைத்தும்கூட நீர் இல்லாத காட்சியைக் காண்கின்றோம். இன்றைக்கு அந்தக் கிணற்றில் இறங்கி வேலை செய்வதற்குக்கூட ஆள் இல்லாத நிலைமை இருக்கின்றது. அந்த நூறு அடி ஆழமுள்ள கிணறுகளில் இறங்கி வேலைசெய்ய ஆளே கிடையாது. ஆகவேதான் இன்றைக்கு அந்த வேலையும் தடைப்பட்டு நிற்கிறது.

அடுத்தபடியாக, எங்கெங்கேயோ ஏரிகளிலே வேலை செய்கின்றார்கள் என்றெல்லாம் சொல்கின்றார்கள். எங்கள் மாவட்டத்திலும் சரி, தர்மபுரி மாவட்டத்திலும் சரி, ஏரியிலே யாரும் வேலை செய்யவே காணோம். அதற்கு ஒன்றியத்திலே கேட்கின்றபோது, அங்கே இருக்கக்கூடியவர்கள், 100 ஏக்கருக்கு மேற்பட்ட பாசன வசதி உள்ள ஆயக்கட்டுகளில் உள்ள ஏரிகள், குளங்கள் எல்லாம் பொதுப்பணித் துறையின் பொறுப்பிலே வருகின்றன என்று சொல்கின்றார்கள். எங்களுக்குச் சம்பந்தமில்லை என்று சொல்கின்றார்கள். பொதுப்பணித் துறையினரிடம் கலந்து பேசுகின்றபோது, எங்களுக்கு நடைமுறையில் சில கோளாறுகள், சிக்கல்கள் இருக்கின்றன என்று அவர்கள் சொல்கின்றார்கள். ஆகவே எங்கள் பகுதியிலே பெரிய பெரிய ஏரிகளில், குளங்களில் வேலை எதுவும் நடக்கவில்லை. அப்படி இருக்கின்றபோது இங்கே 61 லட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அது எப்படி முடியும் என்று தெரியவில்லை. பத்திரிகையிலே படிப்பதற்கும், கவர்னர் உரையைக் கேட்பதற்கும் அதை மீண்டும் மீண்டும் படிப்பதற்கும் நமக்கு மிகவும் ஆவலாக இருக்கின்றது. ஆனால் இடத்தில் சென்று பார்க்கின்றபோது அங்கே நடப்பதுதான் உண்மையாக இருக்க முடியும். மதிப்பிற்குரிய திரு ராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் சொன்னதை நான் இன்றைக்கு மீண்டும் வலியுறுத்துகிறேன். இன்றைக்கு ஒரு குளத்திலிருந்து ஒரு யூனிட் மண் எடுத்துப் போடுவதற்கு ரூ. 36 கொடுக்கிறார்கள். அப்படி ரூ. 36 கொடுக்கின்றபோது, அமைச்சர் பெருமக்களோ, ஆளுநர் அவர்களோ, மற்ற பெரியவர்களோ, அதிகாரிகளோ வரும்போது, அந்த ஏரியிலே 300 ஆட்களை வைத்து வேலை செய்வதுபோல பாவனை செய்கிறார்கள். அமைச்சர்கள், வந்தவர்கள் சென்றுவிட்ட மறுநாள் அங்கே 10 அல்லது 12 பேரை வைத்து வேலை செய்கின்ற காட்சியைத் தான் நாம் பார்க்கிறோம். ஆகவே உடனடியாக இந்த அரசு இதற்குத் தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். இன்றைக்கு கிராமப் பகுதியிலே உணவு இல்லாமல் கூட பல நாட்கள் இருக்கலாம். ஆனால் நீர் இல்லாமல் பல நாள் வாழ முடியாது. குறிப்பாக சென்னை நகரத்தில் பஞ்சம் இருப்பதாகவோ, யாரும் பட்டினி இருப்பதாகவோ தெரியவில்லை. ஆனால், எங்கள் கிராம மக்களைப் பார்த்தால், அங்கே மக்கள் படுகின்ற வேதனையை, துயரத்தை நாம் வெளிப்படையாகவே பார்க்கலாம், குடி நீருக்காக தாய்மார்கள் குழந்தைகளைக் கட்கத்திலே தூக்கிக்கொண்டு 5 அல்லது 6 மைல் தூரத்திற்குச் சென்று தண்ணீர் எடுத்துக்கொண்டு வருவதைக் காண

கிறோம். சமீபகாலமாக நாம் பத்திரிகை வாயிலாகப் பார்க்கிறோம். நீர் ஊற்று நிபுணர்கள் இருப்பதாகச் சொல்கின்றார்கள். அவர்களை வைத்துக் கொண்டு எந்தெந்த கிராமங்களிலே தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கிறதோ, பஞ்சம் இருக்கிறதோ, அங்கு உடனடியாக நிபுணர்களை வைத்துப் பரிசீலனை செய்து, அவர்களுடைய உதவியுடன் உடனே குழாய்க் கிணறுகளை அமைத்துத் தர வேண்டுமென்று நான் இந்த அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். குழாய்க்கிணறுகளுக்குக்கூட இந்தத் திட்டத்திலே லட்சக்கணக்கான பணம் ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் நடைமுறையிலே எந்த ஊரிலே வேலை நடக்கிறது என்றே எனக்குத் தெரியவில்லை. எங்கள் பகுதியிலே வேலை துவக்கப்படவில்லை என்று தெரிகிறது. அதற்குப் போதிய மெஷினரி கிடைக்கவில்லை என்கின்றார்கள். பவர் டிரில்ஸ் கிடைக்கவில்லை என்று சொல்கின்றார்கள். பவர் டிரில்ஸ் இல்லாமலிருந்தால், தண்ணீர்தாகம் நின்றுவிடுமா என்ன ? உடனடியாக அரசு இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உணவுப் பிரச்சினையைப் பொறுத்த வரையிலே, இன்றைக்கு நாம் மிகப் பயங்கரமான சூழ்நிலையிலே இருந்துகொண்டிருக்கின்றோம். முன்பெல்லாம் கிராமப் பகுதியிலேயிருந்து வருபவர்கள், சொல்வார்கள், " நகரத்திலே இருக்கின்ற நீங்கள் எல்லாம் தான் அரிசி சாப்பிடவேண்டுமா ? எங்களுக்குக் கொஞ்சம் அரிசி போடச் சொல்லக் கூடாதா " என்று ஆனால் இன்றைக்கு அவர்கள், " எங்களுக்கு அரிசி கூட வேண்டாம், உணவுப் பொருள் என்று என்ன இருக்கின்றதோ, அதை மட்டும் போடச் சொல்லுங்கள், என்று சொல்கின்றார்கள். எங்கள் மாவட்டத்தில் இது நாள் வரையிலே மரவள்ளிக் கிழங்கு குச்சிக் கிழங்கு என்பவைகள் மாற்று " புட்ஸ்டஃப்ஸ் " ஆக இருந்தன. அவைதான் அவர்களுடைய முக்கியமான உணவுப் பண்டங்களாக இருந்து வந்தன. இப்போது பெரும்பாலான எக்கரில் மழை இல்லாத காரணத்தினால் அந்த மாற்று உணவான மர வள்ளிக் கிழங்கு அறுவடையாகிவிட்ட காரணத்தினாலே, அந்த மரவள்ளிக்கிழங்கே கிடைக்கவில்லை. அந்த மர வள்ளிக் கிழங்கு கிடைக்காத காரணத்தினாலே, இன்றைக்கு உணவுப் பண்டம் என்று எந்தப் பண்டம் கிடைத்தாலும், அதை எங்களுக்குக் கிடைக்க வகை செய்து கொடுங்கள் என்று சொல்கின்றார்கள்.

அது மட்டுமல்ல, கிராமத்திலே கூட்டுறவு நாணயச் சங்கம் வாயிலாக இன்றைக்கு உணவு விநியோகம் செய்கின்றோம். ஆனால் அந்த இடத்திலே போய்ப் பார்த்தால் இன்றைக்கு அடிக்கின்ற வெயிலிலே ஏறத்தாழ 2 பர்லாங் தூரத்திற்கு கியூவிலே மக்கள் நின்று கொண்டிருக்கின்ற காட்சியை நாம் காண்கின்றோம். ஆகவே அதைப் பகிர்ந்து பற்பல இடங்களிலே போடுகின்ற ஒரு முறையை இந்த அரசு கையாள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். காரணம், அவர்கள் 3 மணி நேரம் அங்கேயே நின்று கொண்டிருந்தால், அவர்கள் வேலைக்குப் போவதற்குக்கூட முடியாமல் அன்றைய வருமானம் பாதிக்கப்படக்கூடும். ஆகவே அந்த நடைமுறைக் கோளாறுகளைத் தவிர்த்து, பல இடங்களில் உணவுப் பொருள்களை விநியோகிப்பதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.



மதிப்பிற்குரிய திரு. தேவர் அவர்கள், அமைச்சர்கள் வந்தால்தான் அங்கே " அலர்ட் " ஆகிறது என்று சொன்னார்கள். எங்கள் ஊரைப் பொறுத்தவரையிலே, எங்களுக்கு அந்த விதமான பயம் இல்லை. எங்களுக்கு இருக்கக்கூடிய மாவட்ட ஆட்சித் தலைவரும் சரி, என் வட்ட கோட்டாட்சித் தலைவரும் சரி, மக்களுடைய கோரிக்கைகளை, பிரச்சினைகளைக் கவனிப்பதிலே சிறந்த முறையிலே இருக்கின்றார்கள். அவர்களிடத்திலே சொன்னால், எந்தக் கட்சிக்காரர்கள் என்று பார்க்காமல், பாகுபாடு இல்லாமல் பரிந்து பேசுகின்றார்கள். "எங்களுக்கு பணத்தை மட்டும் அள்ளித் தாருங்கள். எங்கள் மாவட்டத்திலே நாங்கள் எப்படி வேலை செய்கிறோம் என்பதையும் பாருங்கள் ", என்று சொல்லிக் கொள்கின்றேன். உங்களுடைய வருகையைக்கூட நாங்கள் எதிர்பார்க்கவில்லை என்றுதான் நான் சொல்லிக்கொள்கின்றேன்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :</u> வந்தால் வரவேற்க மாட்டார்களா ?

<u>திரு எ. பாலசுப்பிரமணியம் :</u> இப்போது பணம்தான் தேவைப்படுகிறது.

அடுத்து, இந்த அரசினுடைய கொள்கையையெல்லாம் நான் பார்த்தேன். முன்பு " உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம் " என்று சொன்னார்கள். உறவுக்குக் கை கொடுத்து எங்கு அனுப்ப வேண்டுமோ அங்கெல்லாம் அனுப்பியிருக்கின்றார்கள். உரிமைக் குரல் கொடுப்பது, இந்த மாமன்றத்திலே கேட்கிறது, இந்தக் கோட்டையிலே கேட்கிறது. அது டெல்லியிலே கேட்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே அவர்கள் உரிமைக் குரல் டெல்லியிலே அதிகமாகக் கேட்க வேண்டும்.இந்தத் தமிழகத்தின் பிரதிநிதியாக பொறுப்பிலே இருக்கக்கூடியவர்கள் கூட்ட, டெல்லியிலே தமிழகத்தினுடைய பஞ்சத்தை மிக நன்றாகத் தெரிந்திருந்தும், நாம் சொல்லிச் சொல்லித்தான் பணத்தைத் தருகிறார்களே தவிர, அள்ளி அள்ளித் தருகின்ற மனப்பான்மை இன்னும் அவர்களுக்கு வரவில்லை. ஆகவே நம் குரல் அங்கே அதிகமாக ஒலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, நம் தமிழகத்து அரசையும் நம் மாண்புமிகு முதல்வர் அவர்களையும் நான் கேட்டுக்கொள்வதெல்லாம், நீங்கள் கண்ணீர் விட்டேனும் காவிரியைக் கொண்டுவந்துவிடவேண்டும். உங்கள் பதவியை துச்சமெனக் கருதி, பதவியைத் துறந்தேனும் மக்கள் பசியைப் போக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கின்றேன்.

எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். வணக்கம்.

(பிற்பகல் 5-50).

*Thiru D. V. D'MONTE: Hon. Chairman, Sir, I am very thankful for the opportunity you have given me to offer my comments on the Governor's Address.

Sir, one notable aspect of the Governor's Address is that no mention is made at all of the recession that is facing the State. There are two major areas of Government policy in which immediate steps should be taken as are called for to rescue the economy from stagnation, if not recession. This largely relates to the sphere of fiscal policy and the sphere of power and fuel consumption. A study made by the Federation of Chambers of Commerce, Sir, revealed that nearly 50 per cent of the industries investigated report power shortage, paucity of coal and raw materials, labour trouble, etc. This is not an imaginary or exaggerated position. The impact is particularly bad as far as the small-scale sector is concerned. The nationalised banks have largely failed to permit small industries to develop according to their expanded credit needs. The grave power crisis has literally brought the small industries to their knees. The overall effect on small-scale industries, with its high employment potential, is really disastrous. Many small-scale units in the State have been forced to lay off workers and even they will be forced to close down their establishments, largely because of slackening sales and staggering of inventories apart from the stranglehold of credit curbs. This is particularly so of the automobile and ancillary industries. These units are the worst hit. The 50 per cent drop in production of cars and passenger vehicles has hit ancillary units and small-scale units down the line. Most observers expect that the situation will get worse. Tamil Nadu in particular and South India in general have been known in the past as being the Detroit of the country; that is not the case now, Sir. These problems will have to be looked into and suitable remedial measures—(including complete removal of the power restrictions—) taken to help diversify, and also help the units to under-write, their credit needs. Unless such assistance comes quickly and massively enough, many small-scale units will be forced to close down.

Sir, the chill winds of recession are sweeping across the State bringing in its wake further miserly of rendering thousands jobless. With the rising prices and higher wages which tend to restrict production, I request, Sir, that the Government take note of these problems as far as the small industries and ancilliary industries are concerned.



Now, Sir, water or rather the lack of it figures largely in the Governor's Address. I am reminded of Coleridge's poem–with our vast sea coastline—" Water, water everywhere ; but not a drop to drink ". It is trite to say that drinking water is the most basic necessity of life. But this has to bear emphasis because the Union and State Governments as well as the planners have all along been treating water more as an input for agriculture and industry rather than as a necessity of life. There are two major reasons why those responsible for water-planning at the national and State levels have not accorded the type of priority that potable water needs. First, there is a facile assumption that it is the responsibility of the local authorities only to ensure an adequate supply of potable water for the people in their respective territories. Secondly, Sir, water being a commonplace thing, its adequate supply is invariably taken for granted. Certain recent developments are stressing that the authorities concerned at all levels of administration should take a second look at the problem of water-supply for the rural and urban population. The failure of the North-East monsoon has certainly severely affected Tamil Nadu. Water-supply in Madras is so inadequate that the authorities have been obliged to provied water every alternative day. If this is the plight of people for water in towns like Madras, one can well imagine the severity of the situation in villages where plaus for drinking water-supply are seldom. prepared and much less executed. An important objective of our planning, Sir, to quote "to a large extent as possible, supplies of good drinking water should become available in most villages by the end of the Plan period "

Nearly a decade has passed by since the completion of the Third Plan. Yet, rural and urban people are experiencing drinking-water difficulties and shortages in varying degrees. If the State Government are earnest about providing this basic necessity of life to the growing population, they will see to it that water is treated as an essential article of mass consumption and accordingly they should formulate and establish plans for it.

Now, Sir, I would like to say a few words about prohibition. The Tamil Nadu Government's decision to re-introduce Prohibition in September last and to abolish races on 31st March of this year is a sort of gamble the State can hardly afford. The victims are wage-earners at the lowest rung of the economic ladder. When the Madras Race Club closes down, the already severe unemployment problem will intensify. The Tamil Nadu Government has given less thought to the economic and political implications of shutting out employment avenues than to illusory dividends. This is a wild gamble in which the risks outweigh the returns. Mine was a lone voice of dissent last year, when the Bill was re-introduced. As a measure of social reform, one cannot say anything against it. I am only concerned about the economic aspect of it. The loss of excise revenue was then estimated at about Rs. 56 crores a year. We now expect a 50 percent compensation from the Central Government as a requirement to meet the total Plan expenditure of Rs. 234 crores in the Fifth Five-Year Plan period. Given its own tight resources, the Centre can hardly be expected to shore up the financial needs of the State. The consequences have now become far more disagreeable than what is reckoned. The whole thing is now a wild gamble in which the risks of financial losses far outweigh the returns

Now, coming to the Madras Metropolitan Development Authority, it is four years since the Plan was formulated, but no concrete steps have been taken for the implementation of the Plan. However, many things have happened contrary to what is contemplated in the Plan making it more difficult now, than four years to implement the Plan. According to the Plan, land-use and buildings control regulations would be so framed that suitable action can be taken. While this is still to be done, I find that a number of massive buildings are being put up in Madras, which, as it is, violates any successful regulation on land-use and building-control. Several multi-storeyed buildings, two-starred, three-starred and five -starred hotels and tall commercial and residental blocks have come up during the last two or three years in primarily residential areas. These have been permitted

[பிற்பகல் 6-00]

to be build on the edge of the High ways and no provision has been made to widen the roads to carry the additional traffic or to provide parking space even for the vehicles used by the residents, staff and visitors. This is also a warning to the already deteriorating water-supply position in the City. So, the heavy expenditure on widening





roads, parking space, improvements in the water supply necessitated by this rather what I feel thoughtless sanction will have to be borne by the tax payer If there has been any special reason for permitting the construction of such buildings, some sort of levy should have been made to meet the cost of these measures of improvement as part of our strategy for socialising land and appropriating, for quick development, certain substantial share of increments in land values and income from more extensive land utilisation. The pride of Madras City, which was the Marina, Mount Road and IslandGround has been desecrated, so to say, by extensive monuments. It is desirable, Sir, that at least hereafter a ban should be placed on major constructions till the Madras Metropolitan Development Authority is ready to enforce the comprehensive set of sound land use and building regulations. To achieve this, the Madras Metropolitan Authority should have high level talent at their disposal to perform these functions effectively, scuientifically, aesthetically and economically.

Sir, while I have nothing to say in regard to the request of the State Government for massive aid from the Centre similar in line to what Bombay and Calcutta are getting, I would like to touch briefly on the financial aspects of the Madras Metropolitan Plan, I can understand the request for special grant for water supply, slum improvements, health services, etc. under All-India schemes formulated by the Central Government. But I cannot see how Central grants can be made available to finance the Plan itself. Have we tried to secure repayable loans from national and international sources? I understand that these plans have always been formulated with the help of international resources, if such projects will yield surplus income and a good return. Apart from toning up the civic administration and imposing economy in expenditure, public utility services such as Pallavan Transport, Water Supply and Drainage Board and Housing Board should maintain a high standard of efficiency, economy, and integrity, if even a part of the plan is to be put into effect. It will also be posible to get sizable amount through octroi, capital levy on new buildings, special sales tax on turnover to finance the development plans. The Tamil Nadu Government do not have to wait indefinitely till grants or subsidies are received from the CentralGovernment. While the claim for the massive financial assistance from the Central Government is deserving as in the case of Bombay and Calcutta, we must able to provide tangible results in finding other resources quickly enough.

]Thiru D. V. D'Monte] [1975 பிப்ரவரி 25

Now, coming to the economy, Sir, while I am not one of those who go so far as to say that our Tamil Nadu economy is on the reverse gear, I must point out that it does present a rather depressing picture. The Government's efforts to sustain the tempo . . . .

MR. CHAIRMAN: Does the hon' Member prepare his speech in a 40-pages notebook or in loose papers? The hon. Members are not allowed to read out their speeches. They may have some hints in their hands.

THIRU D. V. D'MONTE: Sir, I have only notes. Sir, the Government's efforts to sustain the tempo of our industrial progress have not produced any tangible results. Never before had the State suffered from such vast set-backs. The allegations of transmission loss—Sir, I am referring to power shortage and power supply the allegations of transmission loss, undue delay in the compilation of sales figures, production figures, etc., have essentially become political issues to-day. It is clear that our electricity consumption targets are unrealistic and the pace of industrial progress would warrant high consumption. The line loss is another factor on which we do not have correct figures. In the recent past, line losses have gone up. Factors like inadequacy of coal and power supply coupled with the fact that there was not sufficient water in the Hydel Reservoirs have contributed to the fact that our generating plants are not working to optimum capacity.

I have nothing more to say, Sir, excepting to close with my congratulations to the State Government on the very fine welfare schemes they have started and especially, those schemes aiming at the welfare of the poor, the sick and the abandoned. I am also happy about the social security scheme designed to mobilise the savings in the community and promoting social security. While giving high priority to these social service schemes, I would request the Tamil Nadu Government to take in hand other schemes where high priority is involved and cater to the needs of the small scale sector. I have made a plea earlier and at least the small scale sector should be allowed their full requirement of power. It is this sector which is employment-oriented and it will go a long way to maintain the pace of industrial growth in the State. Sir, I have done.



[1975 பிப்ரவரி 25]

[மாற்றுத் தலைவர் திரு. ஜி. சுவாமிநாதன் தலைமை]

*திரு. மு. மாசிலாமணி :—மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, 20-ம் தேதி மேதகு ஆளுநர் அவர்கள் இரண்டு அவைகளின் இணைந்த கூட்டத்தில் 34 நிமிஷத்தில் ஆற்றிய அவரது உரையில் பெரும்பகுதி நமது உள்ளங்களையெல்லாம் கவரத் தக்க அளவில் தமிழகத்திலுள்ள வறட்சி நிலைகுறித்து அமைந்திருப்பது கண்டு, அவற்றிற்குப் பரிகாரம் காணத்தக்கவகையில் பல திட்டங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளது கண்டு நான் பெருமைப்படுகிறேன்.

அந்த உரைக்கு நன்றி தெரிவிக்கும் முறையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னரசு அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை வரவேற்றுப் பேச வாய்ப்பினை அளித்தமைக்காக மாண்புமிகு தலைவரவர்களுக்கு நான் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இன்றைக்கு ஐந்து நாட்களாக அந்த உரையின் மீது நமது மன்ற உறுப்பினர்கள் மிகத் தெளிவாகவும் நுட்பமாகவும் பல எடுத்துக்காட்டுகளை மன்றத்தின் முன்னர் வைத்துப் பேசிவருகின்றார்கள். தமிழ் நாட்டிலே இன்று வறட்சியால் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டுள்ள பகுதி முகவை மாவட்டமும் தருமபுரி மாவட்டமுமாகும். அதைப் போன்றே தென்னாற்காடு மாவட்டத்திலும் சில பகுதிகள், குறிப்பாக, திண்டிவனம், செஞ்சி, கள்ளக்குறிச்சி போன்ற பகுதிகள் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டுள்ளன. இப்படிப் பாதிக்கப்பட்டுள்ள பல பகுதிகளிலும், நமது அரசு பெருமளவிற்கு துரித நடவடிக்கை எடுத்து வருவதை மனிதாபிமானம் உள்ளவர்கள் யாருமே பாராட்டாமல் இருக்க முடியாது. இதிலே கட்சி நோக்கத்தைத் தள்ளிவிட்டு அனைவருமே திறந்த உள்ளத்துடன இந்த அரசு வறட்சி நிவாரணத்திற்காக நடவடிக்கைளை எடுத்துவரும் பாங்கினையும் நமது முதலமைச்சர் அவர்கள் எடுத்துவரும் துரித நடவடிக்கைகளையும் பாராட்டினார்கள். அப்படிப்பட்ட நிலையில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் எடுத்துவரும் நடவடிக்கைகளை, ஆளுநர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டுள்ள சிலவற்றை என்னால் குறிப்பிட்டுச் சொல்லாமல் இருக்க முடியாது.

"வறட்சியால் பீடிக்கப்பட்டுள்ள பகுதிகளிலே நில வரியும் உள்ளூர்த் தீர்வையும் மேல் வரியும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. அரசுக்குச் சேர வேண்டிய கடன் தொகைகளையும் பழைய நில வரி பாக்கிகளையும் வசூலிப்பது, அடுத்த பசலிக்கு ஒத்திப் போடப்பட்டுள்ளது."

என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். உள்ளபடியே இது வரவேற்கத் தக்கதாகும். மனிதன் எவ்வளவுதான் நல்வாழ்க்கையில் ஈடுபட்டு, எவ்வளவு தான் நல்ல வருமானத்தோடு இருந்தாலும் ஏதாவதொரு நேரத்தில் அவனுக்குக் கடன் தொல்லை இல்லாமல் இருப்பதில்லை. இப்படிக் கடன் தொல்லைகள் இருக்கும்போது அவனது வாழ்க்கை செம்மையாக இருப்பதில்லை. அன்றைக்கே குறிப்பிட்டார்கள் : "கடன்பட்டார் நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்று. அத்தகைய முதுமொழிக்கேற்ப வறட்சிக் காலத்திலே கடன் தொல்லையும் இருக்கும்போது, சற்று அந்தத்

தொல்லையிலிருந்து விடுபடக்கூடிய நிலையில் நமது அரசு இந்த நிவாரணத்தை அளிக்க முன் வந்திருப்பது வரவேற்கத்தக்கதாகும். இதற்காக இந்த அரசுக்கு நான் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, அரசுக்குச் சேரவேண்டிய கடன் தொகைகளையும், வசூலிப்பதை ஒத்திவைத்திருக்கின்றார்கள். இத்தகைய அறிவிப்புகளெல்லாம் நமது மாநில ஆளுநர் அவர்களது உரையினை நாம் அனைவரும் வரவேற்கத் தக்க சான்றுகளாகும். இந்த உரையின்மீது பல உறுப்பினர்கள் பேசினார்கள். எனக்கு முன்னர் பேசிய திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் முதலமைச்சர் அவர்களைப் பார்த்து, "இந்த மாமன்றத்திலே மட்டும்தான் உங்கள் குரல் ஒலிக்கின்றது, உங்கள் குரல் மத்தியிலும் ஒலிக்க வேண்டும்" என்று பாங்காகக் கேட்டுக்கொண்டார்கள். அப்படிப் பட்டவருடைய ஆட்சி இன்றைக்குத் தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த ஆட்சியினை அமைத்த பிறகு இரண்டேகால் ஆண்டுக்காலம் ஆண்டபிறகு, தமிழகத்தின் $4\frac{1}{4}$ கோடி மக்களிலே இரண்டுகோடி மக்கள் பிற்பட்ட மக்கள், $1\frac{1}{2}$ கோடிப் பேர் ஆதித்திராவிடப் பழங்குடி மக்கள் என்பதை உணர்ந்து அவர்களுக்காக பல்வேறு திட்டங்களை வகுத்துக்கொடுத்துவிட்ட பின்னர் நம்மையெல்லாம் மீளாத்துயரத்துக்குள்ளாக்கிவிட்டு இன்று வங்கக் கடலோரத்தில் துயில்கொண்டிருக்கின்றார். நமது அண்ணாவின் அடிச் சுவட்டிலே நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சமுதாயத்தின் அடித்தளத்தில் தாழ்ந்து மங்கிக் கிடக்கும் சமுதாயத்தினரின் மேம்பாட்டிற்காக—தாமும் தாழ்த்தப்பட்டதொரு குடிமகனாக இருந்து இன்று கோலோச்சும் கோமானாக இருக்கும் காரணத்தினால் தான் பட்ட துயர், பட்ட துன்பங்கள் பிறர் பட வேண்டாம் என்ற எண்ணத்தில் கடந்த ஆறாண்டுகாலத்திலே பல்வேறு காரியங்களைச் செய்து வந்திருப்பது சரித்திரத்திலே பொன்னேட்டிலே பொறிக்கப்பட வேண்டியவையாகும். அப்படிப்பட்ட காரியங்களைச் செய்து வருகின்றார் என்பது மறுக்க முடியாத ஒன்றாகும்.

(பிற்பகல் 6-10)

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு ராமநாதன் அவர்கள் தெள்ளத் தெளிவாக பேரறிஞர் அண்ணா அவர்கள் வழி நின்று, இன்று இந்த நாட்டை ஆண்டு கொண்டிருக்கின்றார் டாக்டர் கலைஞர் அவர்கள் என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். இந்த நாட்டுக்கு ஆபத்து ஏற்படும் போதெல்லாம், இந்த நாட்டுக்குத் தொல்லைகள் ஏற்படும் போதெல்லாம் எதிர்க் கட்சித் தலைவர்களை மதிக்கின்ற வகையிலே, அண்ணா அவர்களின் வழி நின்று டாக்டர் கலைஞர் அவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் அவ்வப்போது டெல்லிக்குத் தெரிவித்திருக்கிறார்கள், "உறவுக்குக் கை கொடுப்போம் உரிமைக்குக்குரல் கொடுப்





போம்" என்று. ஆனால் அதை டெல்லி கேட்டதா என்றால் கேட்கவில்லை. இன்றைய தமிழகத்தினுடைய தானைத் தலைவர் கடந்த சட்ட மன்றத் தொடர் கூட்டத்திலே ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். "இந்த நாட்டு மக்களுக்கு நான் தலை நாயகனாக இருக்கிறேன் ; இந்த நாட்டில் இருக்கிற கோட்டைக் கொத்தளங்களில் உள்ள புல் புதர்களை அகற்றுவதற்குக்கூட முதலமைச்சருக்கு உரிமையில்லை ; அதற்குக்கூட டெல்லியைக் கேட்க வேண்டும். கோட்டையில் பறக்கிற கொடியை எவனாவது பழுதுபடச் செய்வானேயானால், அவன் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க உத்தரவு இருக்கிறது ; ஆனால் புல் புதர்களை வெட்டுவதற்கு உத்தரவு இல்லை" என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் என்ன நடந்தது? கடந்த சுதந்திர தினத்தன்று, இந்தியப் பூபாகத்திலே மறக்கமுடியாத, மறுக்க முடியாத ஒரு சரித்திரச் சான்றினை கலைஞர் அவர்கள் ஏற்படுத்தினார்கள். அந்தக் காட்சியை நாமெல்லாம் பார்த்தோம் இதுநாள்வரை ஆளுநர் அவர்கள் ஏற்றிக்கொண்டிருந்த கொடியை. கடந்த சுதந்திர நாளன்று நம்முடைய முதலமைச்சரவர்கள் ஏற்றினார்கள். டாக்டர் கலைஞர் அவர்கள்தான் அந்தப் பெருமையை உருவாக்கியிருக்கிறார்கள் பின்னால் யார் முதலமைச்சராக வந்தாலும், எந்தக் கட்சி வந்தாலும், அவர்களெல்லாம் கொடியேற்றுவதற்குரிய ஒரு வரலாற்றை அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். இது டெல்லி அறிந்திருக்கிற ஒரு காட்சியல்லவா!, மீண்டும் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன், மாநில சுயாட்சிப் பிரகடனத்தை தமிழ்நாடு அரசு சொல்லி வந்தது. இன்றைய தினம் அது காஷ்மீர் எல்லைக்குள் புகுந்து, ஷேக் அப்துல்லா அவர்கள் வரை சென்றிருக்கிறது. இது ஒரு சரித்திரச் சான்றாகும்.

இன்று நாட்டிலே பல பிரச்சினைகள், வறட்சி நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. இன்று அரசியலிலே அரிதாரம் பூசிக்கொண்டிருப்பவர்கள், இந்த வறட்சி நிலைமையைப் பயனபடுத்திக்கொண்டு நாட்டு மக்களிடம் அலங்கோல அரசியலை உருவாக்கலாமென்று ஆட்டம் போட்டுப் பார்த்தார்கள். பாவம், மக்கள் அவர்கள் முகத்தில் கரி பூசிவிட்டார்கள். வறட்சி நிலைமை இன்று மட்டும் ஏற்படவில்லை. 1972 ஆம் ஆண்டு இந்த நாட்டிலே இயற்கையின் கோரப் பிடிப்பால், பெரு மழை பெய்து, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது. அப்போது எத்தனையோ ஜீவ ஜந்துக்கள் இறந்தன. எவ்வளவோ குடிசைகள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப் பட்டன. எத்தனையோ மண் குடிசைகள் சரிந்து விழுந்திருக்கின்றன. இந்த நெருக்கடியை இந்தக் கழக அரசு சமாளித்திருக்கிறது. அதுமட்டுமல்ல. 1969 ஆம் ஆண்டு நமக்கு நெருக்கடி வந்தபோதும் இந்த அரசு சமாளித்திருக்கிறது. எட்டு ஆண்டு காலம் எப்படியோ உருண்டோடிவிட்டது. இந்த 8 ஆண்டு கால வரலாற்றை நாம் திரும்பிப் பார்த்தால், அப்பப்பா, சொல்லத் தரமன்று ; கொஞ்ச நஞ்சமான சோதனைகளா எத்தனையோ சோதனைகள்; அரசியலில் உள்ள காழ்ப்புணர்ச்சிகள்; "எடுத்தேன், கவிழ்த்தேன், பார்—6 மாதம்தான் என்றார்கள் பிறகு மூன்று வருஷம் தான் என்றார்கள்; பிறகு, அல்ல அல்ல 5 வருஷம்தான் என்றார்கள்" "1971-லே சமாதி கட்டியாகிவிட்டது" என்று சொன்னார்கள், ஆனால் நம் நாட்டு மக்கள் நன்றி மறக்கவில்லை

"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தில் மாணப் பெரிது" என்று வள்ளுவர் , சொன்னதுபோல் இந்த நாட்டுமக்கள் நன்றி மறவாதவர்களாக இருக்கிறார்கள். அது தமிழ்நாட்டின் பண்பு. அந்த உணர்வால்தான் ஒன்றுபட்ட பிரச்சினைக்கு மாற்றுக் கட்சித் தலைவர்களையும் அழைத்து, அவ்வப்போது பேசுகிறார் டாக்டர் கலைஞர் அவர்கள்.

அது மட்டுமல்ல. இன்றைய தினம் இந்த வறட்சியால் பாதிக்கப்பட்டிருப்பவர்களில் முடிதிருத்துவோரையும், சலவைத் தொழிலாளரையும் குறிப்பிடாமலிருக்க முடியாது. துணியைத் துவைப்பதற்குக்கூட தண்ணீர் கிடைக்காமல் சலவைத் தொழிலாளர்கள் அல்லல்படுகிறார்கள். "சென்னையைச் சுற்றிப் பார்த்தேன்; சென்னையில் வறுமை இல்லை" என்று சொன்னார்கள். வசதியுள்ளவர்களுக்கு இது வாய்ப்பாக இருக்கும். அவர்கள் வீட்டிற்குள்ளே கேணி இருக்கும் குழாய் இருக்கும். இன்று வட சென்னையில் 16 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வசிக்கும் பி. அன்ட் சி. மில் பகுதியிலே தண்ணீர் கிடைக்காமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களது தாகத்தைப் போக்கக்கூட தண்ணீர் கிடைக்கவில்லை. அவர்கள் உண்ண சாப்பாடு இல்லாமல், தேனீர் கடைகளிலுள்ள மசால்வடை, சம்சா போன்றவற்றைச் சாப்பிட்டு, காலம் தள்ளும் நிலைமை இருக்கிறது. இதை யாரும் மறந்துவிடக் கூடாது. எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், இன்று சென்னையில் 35 லட்சம் பேர்கள் வாழ்கிறார்கள். அவர்கள் இருப்பதற்கு வீடு கிடைக்கவில்லை. குடும்பத்தை நடத்தும் அளவுக்கு ஊதியம் கிடைக்கவில்லை. நாட்டிலே வறட்சி இருக்கிறது. இந்த அரசு எவ்வளவோ கஷ்டப்பட்டு, தீவிரமாக குடும்பக் கட்டுப்பாடு பிரச்சாரம் செய்து வந்தாலும், நாட்டிலே வறட்சி ஏற்பட்டுள்ள நேரத்திலும்கூட பிள்ளைகள் பெற வறட்சி குறையவில்லை. அந்த அளவுக்கு குடும்ப பாரம் ஏறிக்கொண்டு போகிறது. பொருளாதாரம் உயர்வுக்குத் தகுந்தாற்போல், விலைவாசிகளின் ஏற்றத்துக்குத் தகுந்தாற்போல், அவர்களுக்கு ஊதியம் கிடைக்கவில்லை. எனவே குடும்பத்தை நடத்தும் வாய்ப்பு தொழிலாளர்களுக்கு இல்லை. சென்னையில் மட்டும் மொத்தம் 11,740 சலூன்கள் இருக்கின்றன. அந்தச் சலூன்களில் 10,000 சலூன்கள் பாதிக்கப்பட்டு, மூலையிலே முக்காடு போட்டுக் கொண்டு அந்தத் தொழிலாளர்கள் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வறுமையில் இருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்ன? இந்த நாட்டிலே படித்த மாணவர்களும், மற்றவர்களும் ஹிப்பிபோல் நாகரீக உடையில் இருந்துகொண்டு, முடியை வளர்த்துக்கொண்டிப்பதால், முடி திருத்தும் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நான் நகைச்சுவைக்காகச் சொல்லவில்லை. உள்ளத்திலிருந்து சொல்லுகிறேன். அவர்கள் குடும்பங்களில் இருள் சூழ்ந்திருக்கிறது. அண்மையில், ஒரு வாரத்திற்கு முன்னால் நான் ஒரு செய்தியைப் பத்திரிகையில் பார்த்தேன்: ஏர்லைன்ஸ் நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள் ஹிப்பியைப் போல் இருப்பதால், அவர்கள் ஓர் உத்தரவு போட்டிருக்கிறார்கள். உடனடியாக முடியைத் திருத்தினால்தான் வேலை என்று சொல்லிவிட்டார்கள். அது முந்தா நாள் அமுல் நடத்தப்பட்டிருக்கிறது. எனவே, இதற்கு ஒரு வழி வகை செய்ய வேண்டும்—வழி வகை கூட அல்ல. மாண்புமிகு முதலமைச்சரவர்களை, தலைவரவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். இந்த





நாட்டிலே வாழ்கின்ற முடி திருத்துவோர், மற்றும் சலவையாளர்கள் ஒவ்வொரு அரசியல் கட்சியின் முதுகெலும்பாகவும் வாழ்கிறவர்கள். அவர்களுடைய வாழ்விலே எவ்வளவோ நன்மைகளை இந்த அரசு செய்திருக்கிறது. முடி திருத்தும் கருவிகளை இனமாக ரூ. 75 அளவில் வழங்கி வருகிறது. 170 ரூபாய் பெறுமானமுள்ள $6\frac{3}{4}$ கிலோ எடையுள்ள இஸ்திரிப் பெட்டியை இனமாக வழங்கியிருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு, இந்த இரண்டு தாயத்துக்கும் 12 லட்சம் ரூபாய் தந்திருக்கிறது. அதை மறுக்கவில்லை. ஆனாலும், அவர்கள் வாழ்விலே இன்று ஒளி இழந்திருக்கிறார்கள். எனவே, இந்த நேரத்திலே, அவர்கள் வாழ்விலே ஒளி ஏற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாற்றுத் தலைவர் (திரு ஜி. சுவாமிநாதன்)</u>: அரசாங்கம் இதைப் பொறுத்து என்ன செய்யலாம் என்பதற்கு உறுப்பினரவர்கள் தன்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு மு. மாசிலாமணி</u>: தலைவரவர்கள் கேட்டதன் காரணமாகச் சொல்கிறேன். ஓர் உத்தரவு போடவேண்டும். கல்லூரி முதல்வர்களுக்கு, அவர்கள், மாணவர்களையும், மற்றவர்களையும் முடி திருத்திக்கொள்ள வேண்டுமென்று ஒரு வேண்டுகோளாகத் தெரிவிக்க வேண்டும் என்பதற்கான ஓர் உத்தரவு போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. அரசியல் கட்சித் தலைவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். இதை ஒரு பொதுப் பிரச்சினையாக வைத்துச் செய்வோமானால், நன்மை ஏற்படும். மனிதன் நியாயமான கோரிக்கைக்குக் கட்டுப்படுவான். எனவே இதை ஒரு வேண்டுகோளாக விடுவீர்களானால், முடி திருத்துவோர் வாழ்வில் ஒளி ஏற்படும். கடந்த ஆண்டு நான்கூட ஒரு வேண்டுகோளைப் பத்திரிகை மூலமாக அனுப்பினேன். பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர்கள், காலையிலே உணவு போடுவதற்குமுன், முடியைத் திருத்திக்கொண்டு வந்தால்தான் சோறு போடுவேன் என்று செல்லமாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அப்படி சில தாய், தந்தையர்களைக் கேட்டுக் கொண்டவுடன், இது கொஞ்சம் குறைந்திருக்கிறது. ஆகவே, இதை ஒரு பொதுப் பிரச்சினையாக வைத்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்

(பிற்பகல் 6–20)

கிறேன். அது மட்டுமல்ல. இப்போது தட்டார் வேலை செய்கின்றவர்கள்கூட ரொம்பவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த வறட்சியின் மூலமாக நாம் தேவையான விவரங்களை ஆராயும்போது இதையும் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், இந்த அரசு செவி சாய்த்து வருகிறது. ஏழை மக்களுக்காகவும், நடுத்தர மக்களுக்காகவும், செயலாற்றுவதற்கு, பணியாற்றுவதற்கு இந்த அரசு என்றென்றைக்கும் காத்துக்கொண்டிருக்கிறது. "இந்த ஆட்சியிலே இருப்பதுதான் எங்களுடைய லட்சியமல்ல, நாங்கள் மக்களுக்குச் செய்ய வேண்டியதையெல்லாம் செய்கிறோம்" என்று அடிக்கடி

[திரு. மு. மாசிலாமணி] [1975 பிப்ரவரி 25

கூட்டங்களிலும் மற்ற இடங்களிலும் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் விளக்கியிருக்கிறார்கள். நாட்டு மக்களோடு நாங்கள் ஒன்றிவிட்டிருக்கிறோம். ஆகவே, என்ன இன்னல்கள் வந்தபோதிலும், என்ன துன்பம் வந்த போதிலும், நாங்கள் செய்த காரியங்கள் பற்றி சாதனைகள்பற்றி எதிர் காலத்திலே பேசத்தான் போகிறார்கள். மேலும், இவற்றையெல்லாம் மற்றவர்களும் அடிக்கடி எடுத்துச்சொல்லி வருகின்ற நிலையை நாங்கள் பார்க்கின்றபோது மனமகிழ்ச்சி அடைகிறோம்.

இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர்களும் மற்ற மாற்றுக் கட்சி நண்பர் களும் ஒருசேர முழுமனதுடன் இந்த வறட்சியைப் போக்க வேண்டுமென்று பாடுபட்டு, முகவை மாவட்டத்திலும், மற்ற மாவட்டங்களிலும் பம்பரம் போல் சுழன்று பாடுபடுகிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. அவர்கள் நாட்டு மக்களால் போற்றப்படுகிறார்கள். இந்த மக்களையெல்லாம் நாம் பஸ்களிலே, தெருக்களிலே நடமாடுகின்றபோது சந்திக்கும் நேரத்தில், அவர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருந்தாலும்கூட, இந்த ஆட்சியையும், இந்த வறட்சிப் பணிகள் சிறப்பாக நடந்தேற ஒத்துழைக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் மற்றவர்களையும் வாழ்த்தி வரவேற்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம் என்பதையும் இந்த நேரத்தில் மனதில் வைத்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம்.

மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையில் தற்கால சூழலுக்கேற்ப மிகவும் நேர்த்தியாகவும், பண்பாடாகவும் இந்த வறட்சி நிலைமை குறித்து அவர் சொல்லியிருப்பது கண்டு என் சார்பாகவும், நான் சார்ந் திருக்கின்ற இயக்கத்தின் சார்பாகவும் மனமார்ந்த நன்றி நவின்று, மாண்புமிகு உறுப்பினர் திரு தென்னரசு அவர்கள் முன்மொழிந்திருக் கின்ற தீர்மானத்தை உளமார வரவேற்று எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**VICE-CHAIRMAN (Thiru G. Swaminathan)**: I have to announce to the House that the Hon. the Chief Minister will reply to the discussion on the Governor's Address on 28th February 1975. The Council will meet on 28th February 1975 also.

The House will now adjourn and meet again at 4 p.m. tomorrow (26th February 1975).

The House then adjourned.

(பிற்பகல் 6-25)



## 3. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

### *A. Statutory Rules and Orders.*

100. Second Annual Report 1974 of the Anna Transport Corporation Limited, Salem. [*Laid on the table of the House under section* 619 (*A*) *of the Companies Act*, 1956 (*Central Act I of* 1956.]

101. Third Annual Report 1974 of the Cheran Transport Corporation Limited. [*Laid on the table of the House under section* 619 (*A*) *of the Companies Act*, 1956 (*Central Act I of* 1956].

102. Third Annual Report 1974 of the Pandiyan Roadways Corporation Limited. [*Laid on the table of the House under section* 619 (A) *of the Companies Act*, 1956 (*Central Act I of* 1956].

103. Notification issued with G. O. Ms. No. 266, Co-operation, dated the 19th June 1974 in regard to amendment to Schedule V of the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [*Laid on the table of the House under section* 119(4) *of the Tamil Nadu Co-operative Societies Act*, 1961 (*Tamil Nadu Act* 53 *of* 1961)].

104. Notification issued with G. O. Ms. No. 2162, Rural Development and Local Administration, dated the 5th October 1974 relating to declaration of Kancheepuram, as Local Planning Area under section 10(4) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [*Laid on the table of the House under section* 123(2) *of the Tamil Nadu Town and Country Planning Act*, 1971 (*Tamil Nadu Act* 35 *of* 1972).]

105. Notification issued with G.O.Ms. No. 2163, Rural Development and Local Administration, dated 5th October 1974 relating to declaration of Yercaud as Local Planning Area under section 10 (4) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [*Laid on the table of the House under section* 123(2) *of the Tamil Nadu Town and Country Planning Act*, 1971 (*Tamil Nadu Act* 35 *of* 1972].

106. Notification issued with R. Dis. No. 111624/72, E4, Director of Rural Development, dated the 30th July 1974 in regard to extension of certain provisions relating to Building Regulations of the Tamil Nadu District Municipalities Act, 1920 to certain Panchayats given in Schedule II thereto. (*Laid on the table of the House under section* 199(2) *of the Tamil Nadu Panchayats Act*, 1958 (*Tamil Nadu Act XXXV of* 1958].

107. Notification issued with G.O.Ms. No. 319, Co-operation, dated the 20th July 1974 in regard to amendment to sub-rule (K) of rule 13 of the Tamil Nadu Co-operative Land Development Bank (Miscellaneous Provisions) Rules, 1970. [*Laid on the table of the House under section 38-A of the Tamil Nadu Co-operative Land Development Bank Act*, 1934 (*Tamil Nadu Act X of* 1934) ].

*B. Reports, Notifications and Other Papers.*

Nil.

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

புதன்கிழமை, 1975 பிப்ரவரி 26.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்–விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Separate Sub-treasury for Tiruvarangam Town*

*41 *Q.*—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there was any proposal with the Government to open a separate Sub-Treasury for Tiruvarangam Town ; and

(*b*) if so, the present stage thereof ?

திருவரங்கம் நகரத்திற்கு ஒரு தனி உதவிக் கருவூலம்

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருவரங்கம் நகரத்திற்கு ஒரு தனி உதவிக் கருவூலம் (Sub-Treasury) ஏற்படுத்த அரசிடம் ஏதாவது திட்டம் இருந்ததா ?

(இ) ஆமெனில், அது தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) திருவரங்கத்தில் துணைக் கருவூலம் ஒன்று தொடங்குவதற்கு 1972-ல் கருவூலங்கள்—கணக்குத் துறை இயக்குனர் செயற்குறிப்பு ஒன்றை அனுப்பினார்.

(இ) திருச்சி துணைக் கருவூலத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் திருவரங்கம் அமைந்திருப்பதால், இச்செயற்குறிப்பை அரசு தள்ளி விட்டது.

திரு ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, ஸ்ரீரங்கம் நகரமும் அதற்குப் பக்கத்திலுள்ள 8 கிராமங்களும் அந்த ஸ்ரீரங்கம் பிரிக்காவிலே அடங்கியிருக்கின்றன. இரண்டும் சேர்ந்து முக்கால் லட்சத்திற்கு மேற்பட்ட ஜனத்தொகை இருப்பதால், ஏராளமான பேர்கள் வரிகள், வாய்தாக்கள் கட்டுவதற்கு அதிகக் கஷ்டப்படுகிறார்கள். அதற்காக அங்கே ஏற்கனவே துணைக்கருவூலம் வேண்டும் என்று ஜனங்களுடைய அபிப்பிராயத்தின் பேரிலே முடிவு எடுக்கப்பட்டதா, அதற்கான இடங்கள் சரியான முறையில் கிடைக்காததினாலே அந்தக் குறிப்பு மாற்றப்பட்டதா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போல, திருவரங்கம் திருச்சியிலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்றது. திருச்சியிலே திருவரங்கத்தில் இந்தக் கருவூலம் இருக்கின்ற காரணத்தினாலும், அதே போல 15 கிலோ மீட்டர் தூரத்தில் லால்குடியிலே ஒரு துணைக்கருவூலம் அமைந்திருக்கிறதனாலும், அங்கேயுள்ள தேவையை அவைகள் நிறைவு செய்கின்றன என்ற அளவில் இந்தச் செயற்குறிப்பு கைவிடப்பட்டது.

### *Fire Service Station in Taluk Headquarters*

* 42 Q. THIRU Y. VENKATESWARA DIKSHIDAR and THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Chief Minister be pleased to state.—

(*a*) whether the Government have any proposal to open a Fire Service Station in each of the Taluk Headquarters; and

(*b*) if so, when it will be opened?

### தாலுகா தலைநகரங்களில் தீயணைக்கும் நிலையம்.

திருவாளர்கள் ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் & வே. தங்க பாண்டியன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்.—

(அ) எல்லாத் தாலுகா தலைநகரங்களிலும் ஒரு தீயணைக்கும் நிலையத்தை நிறுவும் நோக்கம் ஏதும் அரசுக்கு உள்ளதா?

(இ) ஆமெனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.





திரு. வே. தங்கபாண்டியன்: தலைவரவர்களே, ஒவ்வொரு தாலுக்காவிலும் தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்துவது இன்றுள்ள சூழ்நிலையில் மிகவும் அத்தியாவசியமானதாக இருக்கிறது. இராமநாதபுரத்தில் அருப்புக்கோட்டை, முதுகுளத்தூர் ஆகிய இரண்டு தாலூக்காக்களிலும் தீயணைப்பு நிலையம் இல்லாமல இருக்கிற காரணத்தினால், இந்த இரண்டு தாலூக்காக்களுக்கும் முன்னுரிமை கொடுத்து அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, தீயணைப்பு நிலையங்கள் அமைப்பதற்கு குறிப்பிட்ட இடம் வட்டத் தலைமையிடமாகத்தான் இருக்க வேண்டுமென்று இல்லை. பொதுவாக தீ விபத்து ஏற்படக்கூடிய இடங்கள், தொழிற்சாலைகள், தீ விபத்து அபாயங்கள் ஏற்படும் என்ற நிலையில் உள்ள இடங்கள் என்ற பொருத்தமான காரணத்தைக் கருத்தில் கொண்டு, தீயணைப்பு நிலையங்கள் தொடங்கப்படுகின்றன. ஒரு வட்டாரத்திற்கு ஒன்று இருக்கவேண்டுமென்ற அடிப்படையில் இந்த நிலையங்கள் தொடங்கப்படுவதில்லை. அருப்புக்கோட்டை பற்றிச் சொன்னார்கள். 1974-ஆம் ஆண்டிலே மொத்தம் 26 தீயணைப்பு நிலையங்கள் தொடங்க அரசு ஒப்புதல் வழங்கியிருக்கிறது ஆனால் 26 நிலையணைப்பு நிலையங்களில் 5 இடங்களில் தான தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மற்ற இடங்களில் இடம் கிடைக்கவில்லை என்பது போன்ற காரணங்கள் காட்டுகின்றனர். இந்த 26 இடங்களில் அருப்புக்கோட்டையும் ஒன்றாகும்.

திரு கே. எஸ். அப்துல் வகாப்: தலைவரவர்களே, தமிழகத்தில் மொத்தம் தீயணைப்பு நிலையங்கள் எத்தனை இருக்கின்றன? அதுபற்றி ஜில்லா வாரியாக புள்ளி விவரம் சொல்லமுடியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, 1975-ம் வருடம் ஜனவரி மாதம் 31ம் தேதி அன்றைய நிலவரப்படி மொத்த தீயணைப்பு நிலையங்கள் 81. அவைகள் சென்னை நகரத்தில் 14, செங்கற்பட்டில் 5, தென்ஆற்காடு 7, வட ஆற்காடு 8, சேலம் 2, தர்மபுரி 1, மதுரை 7, திருச்சி 6, புதுக்கோட்டை 1, தஞ்சை 8, நீலகிரி 2, கோவை 8, நெல்லை மாவட்டம் 5, இராமநாதபுரம் மாவட்டம் 6, கன்னியாகுமரி மாவட்டம் 1.

திரு எஸ். ராமகிருஷ்ணத் தேவர்: தலைவரவர்களே, தேவகோட்டை ஒரு பெரிய முனிசிபல் நகரம். காரைக்குடியிலே ஒரு நிலையம் இருக்கிறது. தேவகோட்டையிலிருந்து இராமநாதபுரம் வரையில், காரைக்குடிக்கும் இராமநாதபுரத்திற்கும் மத்தியிலே எதுவும் இல்லை. பெரிய ஊர்கள் இடையில் இருக்கின்றன. தேவக்கோட்டை, திருவாடானை, தொண்டி, ராஜசிங்கமங்கலம், தேவிப்பட்டணம் இவைகளுக்கு இடையில் கிட்டத்தட்ட 60 மைல்களுக்கு இடையிலே ஒரு நிலையம் கூட இல்லை. அதை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைரவர்களே, 1974-ஆம் ஆண்டிலே நான் அறிவித்து அரசு ஒப்புதல் வழங்கிய இடங்களில் தேவகோட்டையும் ஒன்று. மொத்தம் 26 இடங்கள். அதில் ஐந்து

இடங்களில்தான் இந்தத் தீயணைப்பு நிலையங்களை அமைத்திருக்கின்றார்கள். ஏன் மற்ற இடங்களில் அமைக்கவில்லை என்பதற்குக் காரணம் கேட்டதற்கு, அங்கெல்லாம் இடங்கள் கிடைக்கவில்லை என்று காரணம் காட்டியிருக்கின்றார்கள். அது மாத்திரம் அல்ல, இதற்கான வண்டிகளை அமைத்துக் கொடுக்கும் பொறுப்பை சாமுண்டீஸ்வரி கம்பெனியார் என்கிற கம்பெனி ஏற்றுக்கொண்டு அவைகள் அத்தனையையும் 1975-ஆம் ஆண்டு ஜுன் மாதத்திற்குள் வண்டி அமைப்பு வேலைகளையெல்லாம் முடித்தும் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த வண்டிகளுக்கான சேஸிஸ் எல்லாம் ஆரம்பத்திலேயே வாங்கி வைக்கப்பட்டுள்ளன. 26 இடங்களில் தேவகோட்டையும் ஒன்றாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துறையினுடைய அதிகாரிகள் இன்னும் போதுமான அக்கறை எடுத்துக்கொண்டால் இதையெல்லாம் விரைவிலேயே முடித்துவிடுவார்கள் என்று கருதுகிறேன்.

திரு. கே இராஜாராம் : தலைவரவர்களே, இந்த விஷயத்தில் அரசாங்கத்திற்கு என்று கொள்கை ஏதேனும் இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன். அதாவது எல்லா முனிசிபல் நகரங்களிலும் தீயணைப்பு இயந்திரங்கள் வைக்கப்படுவது என்று இருக்கவேண்டும் அல்லது கூடுமானவரையில் மாநிலம் பூராவும் 15 மைல்களுக்குள் உள்ள ஒவ்வொரு ஊரிலும் தகவல் வந்தவுடன் 20 நிமிடம் அல்லது 25 நிமிடத்திற்குள் இந்தத் தீயணைப்பு இயந்திரங்கள் வந்து சேரும்படி இலக்குக்குள் நிர்ணயித்து அந்த இயந்திரங்கள் நிறுத்திவைக்கப்படவேண்டும். இப்படி ஏதாகிலும் ஒரு கொள்கை அரசு வகுத்திருக்கின்றார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, எந்தெந்த இடங்களில் மிகவும் தேவைப்படுகிறது என்பதைக் கணக்கெடுத்து அதன்படி அமைப்பது என்ற கொள்கையைத் தான் அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. முன்பெல்லாம் ஆண்டுக்கு 2. 3 அல்லது 4 இடங்கள் என்ற வகையிலே இப்படிப்பட்ட தீயணைப்பு நிலையங்கள் நிறுவப்படும். கடந்த 1974-ஆம் ஆண்டிலேதான் இப்படி 3, 4, 5 இடங்களுக்கு என்று கொடுத்தது போதாது என்று முதலிலேயே 15 இடங்களில் அமைக்கப்படவேண்டும் என்று அரசின் சார்பிலே ஒப்புதல் வழங்கப்பட்டது. இருந்தாலும், அதற்குப் பிறகு மேலும் அது போதாது என்று 11 இடங்களையும் சேர்த்து மொத்தம் 26 இடங்களில் அமைக்கப்படவேண்டும் • என்று அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால் நிலைமை என்னவென்றால் 4 இடங்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டு 4 இடங்களிலும் ஆரம்பிக்கப்பட்டது. 26 இடங்களுக்கு அனுமதி கொடுத்த பிறகும் கூட 5 இடங்களில் தான் இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. காரணம் என்னவென்றால் நிலங்களை ஆர்ஜிதம் செய்வதற்கு என்று அரசு கேட்கும்போது அங்கங்கே உள்ளவர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்றுவிடுகிறார்கள். அந்த இடத்தை எடுத்துக்கொள்ளக்கூடாது என்று வழக்கு மன்றத்திற்குச் செல்கிறார்கள். அந்த அளவுக்கு சமுதாய ஒத்துழைப்பு



இல்லாத காரணத்தால், இந்தச் சங்கடங்கள் ஏற்படுகின்றன. 1975ம் ஆண்டிற்குள்ளாக நான் முதலிலே குறிப்பிட்ட 26 இடங்களில் நிறைவு செய்யப்படும் என்று கருதுகிறேன்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவரவர்களே, அப்படி தீயணைப்பு நிலையங்கள் இருக்கின்ற இடங்களில்கூட வண்டிகள் சிலசமயம் பழுதாகி இருக்கின்றன. அவைகள் வந்து வேலை செய்யமுடியாமல், பழுதடைந்திருப்பதன் காரணமாக தீ விபத்து ஏற்பட்டு எரிந்துவிடுகின்றன. அப்படிப்பட்ட பழுதடைந்த வண்டிகளை மாற்றுவதற்கு எந்த வகையில் அரசு ஏற்பாடுகள் செய்திருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அப்படிப்பட்ட புகார் வருகின்ற நேரத்தில் எல்லாம் உடனடியாகக் கவனம் செலுத்தப்பட்டு உடனே தீர்க்கப்படுகின்றது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த 26 இடங்களில் எந்தெந்த இடங்களில் ஆர்ஜிதம் செய்ய அரசாலே முயற்சி எடுக்கப்பட்டு, அவற்றிலே எத்தனை இடங்களில் தனியார்கள் வழக்கு மன்றத்திற்குப் போயிருக்கின்றார்கள் என்பது பற்றி ஏதாவது விவரம் அரசிடம் இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, 26 இடங்களில் ஏன் அமைக்கவில்லை, 5 இடங்களில் மாத்திரம்தான் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதற்குக் காரணம் கேட்டபோது சொல்லப்பட்ட காரணங்களில் அதுவும் ஒன்று. எந்தெந்த இடங்களில் என்கின்ற விவரங்கள் இப்போது என் கைவசம் இல்லை.

திரு. எ. பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு தலைவரவர்களே, சேலம் மாவட்டத்திலே நாமக்கல் ஒரு நகர தலைமையகமாக இருப்பதாலும், அது சேலம் மாவட்டத்தில் ஒரு பெரிய தாலூக்காவாக, 3 எம்.எல்.ஏக்கள் கொண்ட தொகுதியாக இருக்கும் பெரிய தாலூக்காவாக இருக்கின்றது. அது மாத்திரம் அல்லாமல், அங்கே தீவிபத்து ஏற்பட்டால், ஒன்று சேலத்திலிருந்து வரவேண்டும் அல்லது காரைக்குடியிலிருந்து வரவேண்டும். 30 மைல் தூரம் வரவேண்டியிருக்கிறது. வருவதற்குள்ளாக வேலை பூராவும் முடிந்துவிடுகிறது. ஆகவே, உடனடியாக நாமக்கல் தாலூக்காவில் ஒரு நிலையம் அமைப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன். இது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நாங்கள் ஏற்கனவே ஒரு மகஜரும் கொடுத்திருக்கின்றோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, வம்பில்லாமல் இந்த 26 இடங்களையும் படித்துவிடுவது நல்லது என்று கருதுகிறேன். 1974-இல் ஒப்புதல் வழங்கிய 26 இடங்கள் கிருஷ்ணகிரி, பண்ருட்டி, ஆரணி, மேட்டுப்பாளையம், பட்டுக்கோட்டை,

மணப்பாறை, நாமக்கல், சிவகெங்கை, ஆத்தூர், செங்கம், திருக்கோவிலூர், கடையநல்லூர், வந்தவாசி, நத்தம், ஸ்ரீபெரும்புதூர், துறையூர், வாணியம்பாடி, ராசிபுரம், அருப்புக்கோட்டை, தேவகோட்டை, செஞ்சி, தேனி, அல்லி நகரம், ஸ்ரீவில்லிபுத்தூர், தாம்பரம், திருவள்ளூர், எண்ணூர் இவைகளில் பண்ருட்டி, ஆரணி, பட்டுக்கோட்டை, மணப்பாறை, எண்ணூர் ஆகிய இடங்களில்தான் நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மற்ற இடங்களில் நிலையங்கள் அமைப்பதற்கு இந்தக் கேள்வியில். ஏற்பட்டிருக்கின்ற உணர்ச்சியை அடிப்படையாக வைத்தாவது பொறுப்புள்ள அதிகாரிகள் உடனடியாகக் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன்.

திரு ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, நாமக்கல்லிலே எம்.எல்.ஏக்கள் இருப்பதாகச் சொன்னார்கள். அதிக எம்.எல்.ஏக்கள் இருக்கிற ஊரிலே அதிகமாக அவர்கள் இருக்கிற காரணத்தினால் அதிகமாகத் தீ விபத்து ஏற்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, எம்.எல்.ஏக்கள் எல்லாம் தீயவர்களல்ல.

திரு ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவர் அவர்களே, நம்முடைய மாநகரத்திலே 16 இடங்களிலே இந்தத் தீயணைப்புப் படைகள் இருக்கின்றன என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி இருந்தும் நம்முடைய சேப்பாக்கத்தில் தீப்பிடித்து அது அணைந்த பிறகுதான் அந்தத் தீயணைப்புப் படை அங்கு வந்து சேர்ந்திருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அறிவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அது ஏதோ ஒரு பத்திரிகையில் வந்த தவறான செய்தி.

### *Selection Grade Pay to Graduate Teachers*

* 43 Q.—THIRU G. SWAMINATHAN and THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the Graduate Teachers with a service of 10 years and more have not yet been granted Selection Grade Pay as per the latest G. O. of the Government; and

(*b*) if so, the reason therefor ?



### பட்டதாரி ஆசிரியர்களுக்குத் தேர்வுத் தர சம்பளம்.

திருவாளர்கள் ஜி. சுவாமிநாதன் & டி. சந்தோஷம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) 10 ஆண்டுகளும் அதற்கு மேலும் பணியாற்றியுள்ள பட்டதாரி ஆசிரியர்களுக்குக் கடைசியாக வெளியான அரசாணையின்படி தேர்வுத்தர சம்பளம் இன்னும் வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ), and (இ) அரசாணை எண் 519, கல்வி, நாள் 1973-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ல் பி.டி. ஆசிரியர்களுக்கும், முதல்நிலைத் தமிழாசிரியர்களுக்கும், சிறப்புப்பிரிவு ஆசிரியர்களுக்கும் பத்தாண்டு காலப் பணி அடிப்படையில் தேர்வு நிலைப் பதவி அளிக்க ஆணையிடப்பட்டது. அதன்படி பி.டி. ஆசிரியர்களுக்கும் முதல்நிலைத் தமிழாசிரியர்களுக்கும் தேர்வு நிலை அளிக்கப்பட்டது. தேர்வு நிலை அளிக்கப்படவேண்டிய சிறப்புப் பிரிவு ஆசிரியர்களின் வகைகளை தெளிவாக்குவது பற்றிய கருத்துக் அரசின் ஆய்வில் உள்ளது. அது தெளிவாக்கப்பட்டதும் சிறப்புப் பிரிவு ஆசியர்களுக்கும் தேர்வு நிலை அளிக்கப்படும்.

திரு ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி 1973-லே நான் கேட்டது. அதிக காலம் ஆகிவிட்டது என்று எனக்குத் தோன்றுகிறது. மற்ற ஆசிரியர்களுக்கு இதுபற்றி ஒரு முடிவு ஏற்படக்கூடிய ஒரு தெளிவு ஏற்பட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத்தெளிவு ஏற்பட இன்னும் எத்தனை ஆண்டுகளாகும் என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வி இயக்குநர் திரும்பத் திரும்ப பல்வேறு சந்தேகங்கள் கேட்டிருப்பதன் காரணமாக கடைசியில் பி.டி. ஆசிரியர்கள் வாங்குகின்ற சம்பளத்துக்கு ஈடாக சிறப்புப் பிரிவிலே வாங்குகிறவர்களுக்கெல்லாம் இந்தத் தேர்வு நிலை வழங்கலாமென்ற ஒரு செயற் குறிப்பின்மீது இப்பொழுது முடிவு எடுக்கப்பட்டு வருகிறது. இப்பொழுது அது பரிசீலனையில் இருக்கிறது. ஆகவே விரைவில் இதுபற்றி முடிவெடுத்து அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, 10 ஆண்டுக்கால அடிப்படையில் செலக்சன் கிரேட் வழங்க எல்லா நிர்வாக ஊழியக் காலமும் எடுத்துக்கொள்ளப்படுகிறதா அல்லது எடுக்கப்படாமல் நிராகரிக்கப்பட்டிருந்தால், அரசின் கவனத்திற்கு அதைக் கொண்டு வந்தால் அரசு வழங்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நாம் 10 ஆண்டு பணிக் கால அடிப்படையில் தேர்வு நிலைப் பதவி அளிப்பது என்று ஆணை வெளியிட்டுள்ளோம். உறுப்பினர் சொல்வது மாதிரி விடுபட்டிருந்தால் அதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் அரசாங்கம் அதுபற்றி கவனிக்கும்.

### *Increment to Headmasters.*

*44 Q. THIRU S. MUTHUSWAMY (on behalf of THIRU K. S. GANAPATHI): Will the Hon. the Minister for Educational be pleased to state.—

(*a*) whether it is a fact that the Headmasters of the Government 'A' Wing High Schools in the pay scale of Rs. 450–25–750 have not been granted increment in their scale of pay for the last 2 years, and were only permitted to draw increments in the selection Grade scale of pay of Rs. 400–15–430–20–550–25–650; and

(*b*) if so, the reasons therefor ?

### தலைமை ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு

திரு செ. முத்துசாமி (திரு கே. எஸ். கணபதி சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) 'A' பிரிவு அரசினர் உயர்நிலைப்பள்ளிகளில் ரூ. 450-25-750 சம்பள வீதத்தில் வேலை பார்க்கும் தலைமை ஆசியர்களுக்கு கடந்த இரண்டு ஆண்டுகளாக அந்தச் சம்பள வீதத்தில் சம்பள உயர்வு தரப்படாமல் ரூ. 400-15-430-20-550-25-650 என்ற தேர்வுத்தர சம்பள வீதத்தில்தான் சம்பள உயர்வுகள் அனுமதிக்கப்பட்டன என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்குரிய காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) 1970-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் தேதி முதல் அமுலாக்கப்பட்ட ஊதிய விகிதங்களின் அடிப்படையில் தமிழ்நாடு கல்வி சார் நிலைப் பணியினுள்ள தலைமையாசிரியர் பதவிகள் (அ. பிரிவு) புதிய உயர் பதவியாகக் கருதப்படுவதால் அப்பதவிகளுக்கு தனி விதிகள் ஏற்படுத்தவேண்டியுள்ளது. இப்பிரச்சினை அரசின் ஆய்விலுள்ளது. அவ்விதிகள் வெளியிடப்படுவரை முறையாக நியமனங்கள் செய்ய இயலாதலால், தற்காலிக நியமனங்கள் செய்யப்பட்டு ரூ. 450-25-750 என்ற ஊதிய விகிதத்தில் துவக்க ஊதியமான ரூ. 450 அவர்களுக்கு தற்காலிகமாக அளிக்கப்பட்டு வருகிறது.



திரு செ. முத்துசாமி: தலைவரவர்களே, அரசு விதிகள் வகுத்து தனிப்பட்ட மானேஜ்மெண்டுகளிலும், டிஸ்ட்ரிக்ட் போர்டு பள்ளிகளிலும், முனிசிபல் பள்ளிகளிலும் இந்தச் சம்பளம் வழங்க வேண்டுமென்று நிர்ணயித்துவிட்டது. ஆனால் அரசினுடைய நேரடிப் பார்வையில் நீண்டகாலமாக இருக்கக்கூடிய இந்த 'ஏ விங்' பள்ளிகளிலே, நிர்வாகத்திலே, இது வரையிலே இப்படிப்பட்ட முறைகள் ஏற்படுத்தப்படாமல் 400 ரூபாய் மட்டும் சம்பளம் வழங்கப்பட்டுக் கொண்டிருப்பது நியாயமா ? அதை அரசு உடனடியாக ஒரு மாதத்திற்குள்ளாவது மாற்றி, விதியை ஏற்படுத்தி, வழங்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, உயர்நிலைப்பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்கள், பள்ளி ஆய்வாளர்கள் மற்றும் அரசிதழ் பதிவு பெறுத தலைமை ஆசிரியர்கள் ஒரே நிலையில் வைக்கப்பட்டார்கள். பிறகு இரண்டாவது ஊதியக்குழுவின்போது தலைமை ஆசிரியர்கள் நிலை சற்று உயர்த்தப்பட்டது. ஆகவே தனிவிதிகள் வகுக்கப்படவேண்டிவந்தது. அண்மையில் விதிகளுக்குத் தேவையான திருத்தங்கள் வெளியிடப்பட்டுவிட்டன. அதனுடைய அடிப்படையிலே அளிக்கப்பட்டவர்களுடைய நியமனம் விரைவிலே வரன்முறை செய்யப்பட்டு விதிகளின்படி ஊதியம் நிர்ணயம் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துச்சாமி : தலைவர் அவர்களே, இன்றைக்கு விதிகள் வகுக்கப்பட்டு வெளியிடப்படும்போது அவர்கள் தலைமை ஆசிரியர்களாகப் பொறுப்பேற்றதிலிருந்து அந்த 450 ரூபாய் சம்பளம் நிலுவை முதற்கொண்டு வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, வரன்முறை செய்யப்படுவது என்ற ஒரு நிலைமை ஏற்படும் பொழுது, அவர்கள் அந்தப் பொறுப்புக்கு ஏற்ற காலத்திலிருந்து தான் வரக்கூடும். அந்த நிலைமையில் வருகின்றபொது, மற்றவர்கள் எந்தச் சலுகையைப் பெறுகிறார்களோ அதை இவர்கள் பெற இயலும்.

### *Lady Higher Physical Education Teachers*

*45 Q.—THIRU P. R. THOMAS.—Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether it is a fact that the Lady Higher Physical Education Teachers after securing B. A. or M. A., Degree are permitted to appear direct for the B. P. Education Examination ; and

(b) if so, whether the Government will extend the same benefit to their male counterparts ?

உடற்பயிற்சி ஆசிரியைகள் (உயர்தரம்)

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) உடற்பயிற்சி ஆசிரியைகள் (உயர்தரம்) பி.ஏ. அல்லது எம்.ஏ. பட்டம் பெற்றபிறகு B.P. கல்வித்தேர்வை நேரடியாக எழுத அனுமதிக்கப்படுகிறார்களா ?

(இ) ஆமெனில் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கும் (உயர்தரம்), அந்தச் சலுகையை அரசு வழங்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

*Appointment of qualified Librarians.*

*46 Q.—THIRU V. THANGAPANDIAN (on behalf of THIRU K. ARIVAZHAGAN AND THIRU M. SANKARALINGAM):—Will the Hon the Minister for Education be pleased to state :—

(a) whether there is any proposal to appoint qualified Librarians in all Secondary Schools, since library reading is stressed in internal assessment; and

(b) if so, whether any special scale of pay will be introduced for them ?

தகுதிபெற்ற நூலகர்களை நியமித்தல்

திரு. வே. தங்கப்பாண்டியன் (திருவாளர்கள் கே. அறிவழகன் and எம். சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம் :

(அ) நூலகப் படிப்பு, மாணவர் படிப்புத்திறன் மதிப்பீட்டுக்கு (Internal Assessment) அவசியம் என்று வற்புறுத்தப்படுவதால் தகுதிபெற்ற நூலகர்களை நடுநிலைப்பள்ளிகள் (Secondary Schools) எல்லாவற்றிலும் நியமிக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அவர்களுக்காகத் தனிச் சம்பளவிதம் ஏதும் கொண்டுவரப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.



*Specialised T. B. Doctors for Asaripallam T. B. Hospital.*

*47 Q.—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Health be pleased to state :

(a) whether it is a fact that Doctors, who have specialised in 'Tuberculosis' are not available in adequate numbers in the Tuberculosis Hospital at Asaripallam, Kanyakumari District and

(b) if so, the steps taken to remedy the situation ?

ஆசாரிபள்ளம், காசநோய் மருத்துவ மனைக்கு காசநோய் சிறப்புப் பயிற்சி பெற்ற மருத்துவர்கள்.

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிபள்ளம், காசநோய் மருத்துவ மனையில், அந்நோயில் சிறப்புப் பயிற்சிபெற்ற மருத்துவர்கள் போதிய அளவில் இல்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அக்குறையை நீக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) காசநோய்த்துறையில் சிறப்புப் பயிற்சி பெற்ற மருத்துவர்கள் போதுமான அளவில் கிடைக்கவில்லை. சிறப்புப்பயிற்சி பெற்ற மருத்துவர்கள் கிடைக்கும்போது அவர்கள் அந்த நிலையத்தில் பணியாற்றுமாறு செய்யப்படுவார்கள்.

*Delay in preparing Pay Bills for the Teachers Serving in Kadaladi Panchayat Union.*

*48 Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(a) whether it is a fact that there has been delay in preparing the pay bills for the months of April and May for the teachers serving in Kadaladi Panchayat Union due to the transfer of Education Funds of the Union to the General Fund ; and

(b) if so, whether action has been taken against the Panchayat Union Commissioner ,who made such transfer ?

[1975 பிப்ரவரி 26

## கடலாடி ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு சம்பளம் போடுவதில் காலதாமதம்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) கடலாடி ஊராட்சி ஒன்றியத்தில் கல்வி நிதியிலுள்ள பணத்தை ஒன்றியப்பொதுநிதிக்கு மாற்றியதால், அங்கு பணிபுரியும் ஆசிரியர்களுக்கு எப்ரல், மே மாதச் சம்பளம் போடுவதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அப்படிச்செய்த ஒன்றிய ஆணையாளர் மீது நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) and (இ) கடலாடி ஒன்றியத்தில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மே மாதத்திய சம்பளம் உரியநாளாகிய 31—5—74 அன்றே வழங்கப்பட்டது. எப்ரல் மாதத்திய சம்பளம் மட்டும் 30—4—74 அன்று வழங்குவதற்குப்பதிலாக 3—5—74 அன்று வழங்கப்பட்டது. இதற்குக் காரணம், கல்விநிதியிலிருந்து பணத்தை ஒன்றியப்பொது நிதிக்கு மாற்றியதால் அல்ல. கல்வி மான்யம் 20—4—74-இல் கிராம அபிவிருத்தி நெறியாளரிடமிருந்து அனுப்பப்பட்டது. அதன் பின்பு மாவட்ட கல்வி அதிகாரியிடம் ஒப்புதல் பெற்று, சரி செய்யப்படுவதில் சற்று காலதாமதம் ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக எப்ரல் மாதத்திய ஊதியம் 3 நாட்கள் தாமதமாக 3—5—74-இல் வழங்கப்பட்டது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவர் அவர்களே, பொதுவாக எந்த ஊராட்சி ஒன்றியத்திலும் இப்பொழுது இருக்கிற விதி முறைப்படி கல்வி நிதியிலிருந்தே வேறு நிதிக்கு மாற்றப்படும் என்று புது உத்தரவு இருந்தும், சில ஒன்றியங்களிலே அப்படி அந்த விதிக்குப் புறம்பாகச் செயற்படுகிற காரணத்தால் உரிய காலத்திலே ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படவில்லை என்ற குறைபாடு இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே இதுபோன்ற நிகழ்ச்சிகள் எந்த ஒன்றியத்திலும் நடைபெருமலிருப்பதற்கு அரசு கடுமையான உத்தரவு பிறப்பிக்குமா என்று தெரிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, கடுமையான உத்தரவு இருக்கிறது. உத்தரவை மாற்றுவதானல் அதிகாரிகளிடம் கேட்டுத்தான், மேலும் டி.ஆர்.டி.யிடம் கேட்டுத்தான், மாற்றவேண்டுமென்று உத்தரவிருக்கிறது. ஆகவே, குறிப்பிட்ட ஒரு யூனியனைப்பற்றி அவர்கள் குறிப்பாகச் சொன்னல் நலமாக இருக்கும். ஆனல் இவர் சொன்ன யூனியனிலே என்ன செய்திருக்கிறார்கள் என்று சொன்னல், பொது நிதியிலிருந்து கல்வி நிதிக்காக அவர்கள் எடுத்திருக்கிறார்கள். திரும்ப அந்த நிதியைப்போட்டிருக்கிறார்கள். ஆனல் இந்த செய்தியைப்பொறுத்த வரையிலே, இது தவருன செய்தி.



1975 பிப்ரவரி 26]

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் : தலைவர் அவர்களே, பொதுவாகவே என்னுடைய ஆர். எஸ். மங்கலம் யூனியனிலுள்ள பொது நிதியிலிருந்து கல்வி நிதிக்காக எடுப்பதில்லை. 1961-ஆம் வருஷத்திலே பொது நிதியிலிருந்து மற்ற நிதிக்காக 2,20,000 ரூபாய் எடுத்துச் செலவுசெய்திருக்கிறார்கள். இப்பொழுதுதான் அந்த விஷயம் வெளியாகி சர்க்காரிலிருந்து ஒரு உத்தரவு வந்தது. இந்தச் சந்தர்ப்பத்திலே இந்த மாதிரி "ரேட்டிபிகேஷன்" கொடுக்கக் கூடாது என்று சொன்னதன்பேரிலே எவ்வளவு பாக்கி இருக்கிறது என்ற விஷயம் எனக்குத்தெரிந்தது. அதற்கு மேலே உடனே கலெக்டருக்கு எழுதியிருக்கிறோம். இந்த மாதிரி பொது நிதியிலிருந்து பணத்தை எடுத்தும் இதுவரைக்கும் கவர்ன்மெண்ட்டிலிருந்து திரும்ப வாங்காமல் இருக்கிறார்களே, அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் அந்தப்பணத்தை வாங்கி பொது நிதியில் வரவு வைக்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறோம். சீக்கிரம் அதற்கு ஒரு உத்தரவு பிறப்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, இது கேள்வியாக இல்லை. அவர்கள் ஒரு பிரச்சினையைப்பற்றிச் சொல்லுகிறார்கள். ஆகையினாலே, முறைப்படி நடவடிக்கை நடந்து கொண்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறையிலே இப்படிப்பட்ட கோளாறுகள் நடைபெற்ற காரணத்தால் தனி அக்கவுண்டில் பெயரை வைத்து எல்.எப். 3 என்று தெளிவாகப் போட்டிருக்கிறார்கள். பொது நிதியிலிருந்து கல்வி நிதிக்கு எடுக்கலாமே தவிர கல்வி நிதியைப் எடுத்துப் பொது நிதியில் போடுவதற்கான எந்த விதமான "புரொவிஷனும்" சட்டத்திலே இல்லை. அப்படி இருக்கும்போது, இந்தப் பஞ்சாயத்து யூனியனிலே கல்வி நிதிக்குப் பொது நிதியிலிருந்து எடுத்துப்போட்ட பணத்தை மீண்டும் கல்வி நிதியிலிருந்து எடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறுவதிலிருந்து தெரியவருகிறது. அப்படி எடுப்பதற்கு அனுமதி இருக்கிறதா ? அப்படி முறைக்கு மாறுக எடுத்திருந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(பிற்பகல் 4-20)

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, முதலில் ஒன்றைச் சொல்லிக்கொள்ளுகிறேன். இதிலே முறைக்கு மாறுக எதையும் செய்யவில்லை. பொது நிதியிலிருந்து கல்வி நிதிக்கு என்று எடுத்திருக்கின்றார்கள். காரணம் கல்வி நிதியில் பணம் இல்லை. அந்த மாதத்தில் ஆசிரியர்களுக்குக் கொடுப்பதற்கு பணம் இல்லை என்று செய்தார்கள். மறுமாதத்தில் கல்வி நிதியில் போதிய அளவிற்கும் அதிகமாக இருந்துவிட்ட காரணத்தினுல், எடுத்ததை மீண்டும் பொதுநிதிக்கே சேர்த்துவிட்டார்கள்.

திரு. அ. அய்யனன் [illegible] அம்பலம் : தலைவரவர்களே, யூனியன் அங்கீகாரம் இல்லாமலேயே [illegible] இப்படி பொதுநிதியிலிருந்து கல்வி நிதிக்கு என்று எடுத்து [illegible] விடுகின்றார்கள். இதனால் யூனியனின் வேலைகள் பாதிக்கப்பட்டுவிடுகின் [illegible] றன. எனவே இம்மாதிரி இல்லாமல் எதிர்காலத்தில் யூனியனின் [illegible] அங்கீகாரம் பெற்றுத்தான் பொது நிதியிலிருந்து கல்வி நிதிக்கு [illegible] எடுத்துக்கொள்ளலாம், மாற்றிக் கொள்ளலாம் என்று அரசு ஆ [illegible] ணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராய [illegible] ணசாமி : தலைவரவர்களே, தொடர்ந்து இது நடைபெற்று வருவதா [illegible] ல், இந்தப் பிரச்சினையைத் தனியாகக் கவனிக்கலாம்.

*Designers of Tamil Nadu Pavilion in 'Asia '72 Exhibition.*

*49 Q.—THIRU V. THANGAPANDIAN (on be [illegible] half of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(a) the persons who designed the Tamil Nadu Pavilion in Asia '72 Exhibition, at New Delhi ; and

(b) the cost of the (1) design and (2) its execution ?

ஆசியா 72 பொருட்காட்சியில் தமிழ்நாட்டு அரங்கத்தை வடிவமைத்த நபர்கள்.

திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) புது டில்லியில் நடைபெற்ற ஆசியா '72 கண்காட்சியில் தமிழ்நாடு அரங்கின் வடிவமைத்த நபர்கள் யாவர் ?

(இ) (1) அவ்வடிவமைப்பின் செலவும் (2) அதைக்கட்டிமுடித்ததற் கான செலவும் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) பொதுப்பணித்துறை யின் தலைமைக்கட்டிடக் கலைஞர் ஆசியா '72 பொருட்காட்சியில் தமிழ் நாட்டு அரங்கத்தை வடிவமைத்தார்.

(இ) (1) அரசாங்கத் தலைமை கட்டிடக்கலைஞரால் வடிவமைக்கப் பட்டதால் அதற்காக எதுவும் செலவு செய்யப்படவில்லை.

(2) தமிழ்நாடு அரங்கு கட்டுவதற்கு ஆன செலவு ரூ. 8,08,192 (எட்டு இலட்சத்து எட்டு ஆயிரத்து நூற்று தொண்ணூற்று இரண்டு).



திரு வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, டெல்லியில் நடை பெற்ற "ஆசியா 72" கண்காட்சியில் தமிழ்நாடு அரசு சார்பிலே அமைக்கப்பட்ட அரங்கத்தின் மூலமாக தமிழக அரசுக்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு ? அதற்காக ஆன செலவு போக லாபம் மிஞ்சிற்றா ? அப்படியானால் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, வருமானம் பற்றிய விவரக்குறிப்பில்லை. தமிழ்நாடு பற்றிய குறிப்புகளை "ஆசியா'72" பொருட்காட்சியில் வைத்து உலக அரங்கில் பல்வேறு நாடுகளுக்கும் அவைபற்றி தெரிவிக்க வேண்டும் என்று நமது பொதுப்பணித்துறையின் மூலமாக அந்த அரங்கம் கட்டப்பட்டது. அந்த பொருட்காட்சி முடிந்த பிறகு உலக கண்காட்சி அங்கு நடைப்பெறப்போவதாக அறிந்து நமது அரங்கத்தைக் கலைக்க வேண்டிய அவசியமில்லை என்று அதை அப்படியே சில காலம் வைத்திருந்தோம். பின்னர் உலக கண்காட்சி தற்சமயம் நடைபெறப்போவதில்லை என்று அறிந்து அந்த அரங்கத்தைப் பிரிப்பதற் கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

*Complaint made to the Deputy Commissioner of Hindu Reilgious and Charitab.e Endowments (Administration) Department (Srirangam).*

*50 Q.—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Religious and Charitable Endowments be pleased to state :

(a) whether any complaint has been made to the Deputy Commissioner of Hindu Religious and Charitable Endowments (Administration) Department (Srirangam) on 14th August 1974, stating that different kinds of trees have been felled down and taken away from the grove belonging to Kadambavaneswarar Temple at Kulithalai in Tiruchirappalli district ; and

(b) if so, the action taken thereon ?

இந்து சமய அறக்கட்டளை (ஆட்சித்) துறை துணை ஆணையர் (ஸ்ரீரங்கம்) அவர்களிடம் புகார்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) திருச்சி மாவட்டம் குளித்தலையில் உள்ள அருள்மிகு கடம்ப வனேஸ்வரர் கோவிலுக்கு சொந்தமான தோப்பில் பலதரப்பட்ட மரங்கள் வெட்டப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டதாக இந்து சமய அறக்கட்டளை ஆட்சித் துறை துணை ஆணையர் (ஸ்ரீரங்கம்) அவர்களிடம் 14—8—1974 ஆம் தேதி புகார் ஏதும் செய்யப்பட்டதா ?

(இ) ஆமெனில் அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) காவல் துறையினரிடம் புகார் செய்யப்பட்டது. காவல் துறையினர் திருட்டுப்பற்றி துப்பு எதும் கிடைக்கவில்லை என்று விவரம் தந்துள்ளனர். ஆகவே கோவில் நிர்வாக அதிகாரியின்மீது மரங்களின் விலை மதிப்பை குத்தகைத்தாரரிடம் இருந்து பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவரவர்களே கடம்பவனேஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமான தோப்பில் ஏராளமான மரங்கள் வெட்டப்பட்டுள்ளன. அந்த மரங்களை வெட்டுவதற்கு குறைந்தபட்சம் ஒரு வாரகாலமாவது ஆகியிருக்கவேண்டும். ஒருவரால் அதைச் செய்திருக்கவும் முடியாது. பலபேர் சேர்ந்து பல நாட்கள் வெட்டித்தான் அவ்வளவு மரங்களையும் வெட்டி எடுத்துச் சென்றிருக்கமுடியும். சந்நதிக்கு எதிராக உள்ள தோப்பு அது. அதிலே ஒரு வார காலத்திற்கு மேலே ஆட்கள் வெட்டி வண்டியில் ஏற்றிச் சென்றிருக்கிறார்கள். அப்படி அவற்றை அப்புறப்படுத்தும் வரையில் தேவஸ்தான அதிகாரிகள் அதுபற்றி கவனிக்காமல் இருந்திருக்கிறார்கள் என்றால் இது வேதனைக்குரிய ஒன்று. மேலும் போலீசில் ரிப்போர்ட் கொடுத்தும் திருட்டை செய்தவர்கள் யார் என்று அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை என்றால் அதற்கான காரணம் ஒன்றும் தெரியவில்லை. எனவே இதில் உடனடியாக சர்க்கார் மேலும் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இந்த மரங்கள் வெட்டப்பட்டுவிட்டன என்ற செய்தி 14—8—1974 அன்றைக்கு திருச்சியிலுள்ள துணை ஆணையருக்குக் கிடைத்தது. தகவல்கள் மூலமாகவும், மனுக்கள் மூலமாகவும் தெரிவிக்கப்பட்டது. அவர் உடனடியாக நிர்வாக அதிகாரியிடம் தொடர்புகொண்டு விசாரித்தபோது 19—8—1974 அன்று காவல் துறையினரிடம் புகார் செய்திருப்பதாகத் தெரிவித்தார். காவல் துறையினரிடம் புகார் கொடுத்தபிறகு, அதன்பேரிலே அறநிலைய விசாரணை தேவையில்லை என்று காவல் துறையினர் நடத்தும் விசாரணை முடியும் வரையில் ஒன்றும் செய்ய வேண்டிய அவசியமில்லை என்று காத்திருந்தார். பின்னர் 30—10—1974-ல் காவல் துறையினர் துப்பு ஒன்றும் கிடைக்கவில்லை என்று தெரிவித்தபிறகு, அன்றையதினமே அறநிலைய துணைக் கமிஷனர் அவர்கள் சென்று அன்றே விசாரணையைத் துவக்கினார். மரங்கள் வெட்டப்படுவதை கவனிக்காமல் விட்டுவிட்ட குற்றச்சாட்டு அந்த நிர்வாக அதிகாரி இரத்தினசபாபதி அவர்களைச் சாரும் என்று அவர் மீது நடவடிக்கை எடுக்கும் முறையில் உடனடியாக அவரைப் பதவியிலிருந்து தற்காலிக நீக்கம் செய்து விசாரணையை மேலும் செய்து வருகின்றார். சம்பந்தப்பட்ட இடம் குத்தகைக்காரர்களுக்கு விடப்பட்டிருந்தது. அவர்கள் அந்தத் தோப்பிலிருந்து மரங்களைப் பாதுகாக்கத் தவறிவிட்டதால், அவர்களிடமிருந்தும் அந்த மரங்களுக்கான நஷ்டயீட்டை வசூலிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவரவர்களே, வெட்டப்பட்ட மரங்களின் எண்களையோ அளவையோ கணக்கிலெடுத்துக்கொண்டால், அவற்றை சாதாரணமாக வண்டிகளிலே ஏற்றி எடுத்துச்சென்றிருக்க முடியாது. லாரிகளை அமர்த்தித்தான் எடுத்துச் சென்றிருக்கவேண்டும். அதற்கும் பல நபர்களைக் கொண்டுதான் அதைச் செய்திருக்க முடியும். அந்தக் கோயிலுக்கு ஏராளமான டிரஸ்டிகள் இருக்கின்றார்கள். அந்த அங்கத்தினர்களில் ஒருவர் பேரவையின் உறுப்பினராகவும் இருக்கிறார். போர்டு ஆஃப் டிரஸ்டியின் சேர்மனாகவும் இருக்கிறார். இவ்வளவுபேர் இருந்தும் இது நடந்திருக்கிறது. கோவிலுக்கு அருகிலேயே உள்ள தோட்டத்தில் இதெல்லாம் நடந்திருக்கிறது. ஆனால் யார் செய்தார்கள் என்று கண்டுபிடிக்க முடியவில்லை என்றால், ஆச்சரியமாக இருக்கிறது. இதிலே துரிதமான நடவடிக்கை எடுத்தால்தான், ஜனங்களுக்கும் கோயில் சொத்துக்கள் முறையாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன என்ற எண்ணம் இருக்கும். இதிலே தக்க நடவடிக்கை எடுக்க முடியாதா ? ஏனென்றால் அமைச்சர் அவர்களுடைய பதிலிலே காவல் துறையினரிடம் புகார் கொடுக்கப்பட்டது. அவர்கள் துப்பு கிடைக்கவில்லை என்று விட்டுவிட்டார்கள் என்றார். இதிலே காவல் துறையினர் சரியான முறையில் நடவடிக்கை எடுத்தார்களா இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, நிர்வாக அதிகாரியால் காவல் துறையினரிடம் புகார் செய்யப்பட்டது. காவல் துறையினரிடமிருந்து, துப்பு துலக்க முடியவில்லை என்று செய்தி வந்த பிறகுதான் அறநிலையத் துணை ஆணையாளர் நேராகச் சென்று பொது மக்களையும் சந்தித்து, விசாரித்த பிறகு நிர்வாக அதிகாரி தமது பொறுப்பிலிருந்து தவறியிருக்கக்கூடும் என்ற அடிப்படையில் அவரைத் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். இதிலே சம்பந்தப்பட்ட அனைவர் மீதும் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இப்படி வெட்டி எடுத்துச் செல்லப்பட்ட மரங்களின் மதிப்பு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

இரண்டாவதாக, துணை ஆணையர் சென்று விசாரித்து இன்னார் குற்றவாளியாக இருக்க முடியும் என்று கருத இடமிருக்கும்போது காவல் துறையினரால் மட்டும் ஏன் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதை அமைச்சர் அவர்களால் விளக்கமுடியுமா என்று அறிய விரும்புகிறேன். அங்குள்ள காவல் துறையினரால் இதைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றால், சென்னையிலிருந்து பிரத்தியேகமாக காவல் துறை அதிகாரிகளை வரவழைத்து இதைக் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அந்த மரங்களின் மதிப்பு எவ்வளவு இருக்கும் என்ற விவரங்கள் இல்லை. மேலும் காவல் துறையினரிடமிருந்து வந்த முழு விவரமும் என்னிடம் இல்லை. துணை ஆணையரிடம் இதைத் தங்களால் துப்பு கண்டுபிடிக்க முடியவில்லை என்று சொல்லிவிட்டார்கள். என்று மட்டும் தெரிகிறது.

ஏன் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதற்கான தகவல்கள் என்னிடம் இல்லை. ஆனால் இதுபற்றி அந்தக் கோவிலின் நிர்வாக அதிகாரியிடமும், அறங்காவலர்களிடமும் துணை ஆணையர் அவர்கள் விசாரித்து வருகின்றார். மேற்கொண்டு தகவல்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவரவர்களே, அத்தோட்டம் குத்தகைக்காரர்களின் பொறுப்பிலிருந்தது என்கிறார்கள். துணை ஆணையர் அந்த குத்தகைதாரர்களிடம் சென்று விசாரித்தாரா? அவர்கள் என்ன விதாயம் கூறினார்கள் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, நிர்வாக அதிகாரியை தற்காலிக வேலை நீக்கம் செய்து அவரையும் கோவில் நிர்வாகத்தில் சம்பந்தப்பட்ட பிறரையும் விசாரணை செய்து வருகின்றார் துணை ஆணையர், விசாரணை முடிந்த பிறகு நிச்சயமாக யார் தவறு செய்திருந்தாலும், அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி * அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்).

## 2. தகவல் கோரலும் ஒத்திவைப்புத் தீர்மானங்களும்.

### (1) உறுப்பினர் திரு. வி. வெங்கா : உறுப்பினர் விடுதி அரங்கில் தாக்கப்பட்டது குறித்து.

MR. CHAIRMAN : Thiru S. Muthuswamy seeks to raise a matter about the alleged attack on a Member of this House, Thiru V. Venga, in the forenoon of today in the Legislators' Hostel compound.

திரு. செ. முத்துசாமி : மேலவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட மிக முக்கியமான, இந்த அவை உறுப்பினர் ஒருவர் தாக்கப்பட்ட செய்தியை மேலவையில் எழுப்புவதற்கு தங்களின் அனுமதியைக் கோருகிறேன்.

இன்று காலை 11-20 மணிக்கு நான் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில், என்னுடைய 5-ம் எண்ணுள்ள ரூமில் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்தேன். என்னுடைய அறைக்கு முன்னால் அதாவது "ரிஸெப்ஷன் போர்ட்டிக்கோ" விற்கு முன்னால் சப்தம் கேட்டதால், என்னுடைய அறையிலிருந்து ஓடிவந்தேன். அங்கே மேலவை உறுப்பினர் திரு. வெங்கா அவர்கள் தலையிலிருந்து ரத்தம் கொட்டிக்கொண்டிருந்தது. அவரை முன்னாள் எம்.எல்.ஏ. மேத்தா அவர்களும் மற்றும் சிலரும்



பிடித்துக்கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில், "குத்திவிட்டு ஓடுகிறார்கள்" என்று ஒரு டாக்ஸியைக் காட்டினார்கள். அந்த டாக்ஸி அப்போது மெதுவாகச் சென்று வளைந்து, வடக்குப் பக்கமாக வேகமாகப் போய் விட்டது. அந்த நேரத்தில் எம்.எல்.ஏ. ஹாஸ்டல் பஸ் அங்கே நின்று கொண்டிருந்தது. அந்த டாக்ஸியின் எண்ணை ரிஸெப்ஷனில் இருப்பவர்கள் குறித்துக்கொண்டதாகத் தெரிகிறது. மேலவை உறுப்பினர் திரு. வெங்கா அவர்களுக்கு ஏராளமான ரத்தம் கொட்டிக்கொண்டிருந்தது. அவர் மயங்கிய நிலையில் இருந்ததால் நானும், அவரைப் பிடித்துக் கொண்டிருந்தவர்களும் அவருடைய நண்பர் காரிலேயே திருவல்லிக்கேணி காவல் நிலையத்துக்குச் சென்று ரிப்போர்ட் கொடுத்தோம். உடனடி சிகிச்சைக்கு அவரை பொது மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லுங்கள் என்று சொல்லிவிட்டு இத்தகவலைக் கூறுவதற்காகக் கோட்டைக்கு வந்தேன். பார்த்த எம்.எல்.ஏக்களிடமும், சட்டமன்றத் தலைவரிடமும் விவரத்தைக் கூறினேன்.

சட்டமன்ற விடுதியில் தங்கும் உறுப்பினர்களின் உயிருக்குப் பாதுகாப்பு அளிப்பதற்குண்டான நடவடிக்கைகளை அவைத் தலைவர் எடுத்துக் கொள்ள ஆவன செய்ய வேண்டுமென்ற இந்த மிகவும் முக்கியமான பிரச்சினையை தங்கள் முன்னிலையில் வைக்கின்றேன். இது குறித்து தாங்கள் பரிசீலித்து என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளீர்கள் என்றும் உறுப்பினர் ஒருவரை இவ்விதமாகக் குத்திவிட்டுச் சென்ற காலிகளைப் பிடிப்பதற்காக அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதையும் அவையில் முதலவர் இந்த அவைக்கு தெரிவிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN.—Thiru M. Arumugasamy has given notice of an Adjournment Motion regarding the serious sense of insecurity prevailing among the Legislators as a result of the multiple stab injuries inflicted on Thiru V. Venga, M.L.C., right in front of the Assembly Hostel portico at 11-20 a.m. on 26th February 1975.

[பிற்பகல் 4-30]

*திரு. எம். ஆறுமுகசாமி : மேலவைத் தலைவரவர்களே, நான் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை இந்த சபையின் முன் வைப்பதற்கு முன்னால் மிகவும் மன வேதனையோடு இதனைச் செய்ய நேர்ந்துவிட்டதென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய தினம் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கியிருக்கும் விடுதியில் சட்டமன்ற மேலவை உறுப்பினர் ஒருவர் பட்டப் பகலில் 11½ மணியளவில் சட்டமன்ற விடுதியில் இறங்கி வரும்போது, 5 அல்லது 6 பேர்களால் மிகவும் பயங்கரமான ஆயுதங்கள் கொண்டு தாக்கப்பட்டார் என்பது சாதாரண நிகழ்ச்சியாக எனக்குப்படவில்லை.

[திரு. எம். ஆறுமுகசாமி] [1975 பிப்ரவரி 26

இந்த நிகழ்ச்சியைச் சொல்லுவதற்கு முன்னால் எனக்கு நேர்ந்த ஒரு அனுபவத்தைச் சொல்லியாக வேண்டும். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நான் சட்ட மன்ற உறுப்பினர்கள் அறையில் தங்கியிருந்தபோது இரவில், தொலைபேசியில் யாரோ சிலர் பேசினார்கள். தங்களை சில குறிப்பிட்ட அரசியல் கட்சிக்காரர்கள் என்று சொல்லிக்கொண்டார்கள். என்னை கடுமையான வார்த்தைகளால் மிரட்டினார்கள். என்னை அவர்கள் மிரட்டவேண்டிய அவசியமில்லை என்று நான் நிறுத்திக்கொண்டேன். அதனைப் பற்றி, அப்போது சட்ட மன்ற விடுதியை மேற்பார்வையிடும் அதிகாரம் பெற்ற சபாநாயகர், திரு. மதியழகன் அவர்களுக்கு, எழுத்து மூலமாகப் புகார் செய்தேன். நாளது வரையில் அந்தப் புகார் கிடைத்தது என்பதற்கான பதில் கடிதம்கூட எனக்குக் கிடைக்கவில்லை. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இன்று பார்க்கிறேன். சில காலிகள் சட்ட மன்ற மேலவை உறுப்பினர் விடுதியில் உறுப்பினர் ஒருவரைத் தாக்கும் கொடுமையான நிகழ்ச்சி நடந்திருக்கிறது. அவர் என்னுடைய நல்ல நண்பர். அதற்காக நான் பேசவில்லை. இந்த அவையில் முந்தா நாள் எதிரே உட்கார்ந்திருந்தார். நேற்று எனக்குப் பின்புறம் உட்கார்ந்திருந்தார். அதுகூட் எனக்குப் பின்னால்தான் தெரியும். இன்றைய தினம் அவர் மருத்துவ மனையில் இருக்கிறார். என்ன காரணம்? என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இப்படிப்பட்ட நிலைமையில், சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு எந்த விதமான பந்தோபஸ்தும் இல்லாத நிலைமையில், ஒரு வேளை சுதந்திரமாக கருத்துக்கள் இங்கே சொல்லப் படுவதற்குக் கூட, வெளியே நாம் அச்சுறுத்தப்படுவோமென்று சொன்னால், நிச்சயமாக நாம் ஜனநாயகத்தில் வாழ்கிறோமென்பதை என்னால் நம்ப முடியவில்லை. எனவே, இதற்கான சரியானதொரு நடவடிக்கை இருந்தாலொழிய இந்தச் சட்டசபையிலே பேசுவதற்குக்கூட விருப்ப மில்லையென்பதை மிக்க வருத்தத்துடன், மேலவைத் தலைவரவர்களே, தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, இன்று நடந்துள்ள சம்பவம், மெத்தனமாக எண்ணிவிடக்கூடிய சம்பவம் இல்லை. சில மாதங்களுக்கு முன், 2 அல்லது 3 மாதங்களுக்கு முன் அவை உறுப்பினர்கள் தங்கியிருக்கும் விடுதியிலிருந்து ஒரு காரைப் பட்டப்பகலில் தள்ளிக் கொண்டு போய், நெருப்பு வைத்து கொளுத்த முற்பட்டார்கள். இன்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் ஒருவர், உறுப்பினர் விடுதியை விட்டு வெளியே வந்து, வேறொரு காரில் ஏறின சமயத்தில், "கொஞ்சம் பேச வேண்டும், வாருங்கள்" என்று அழைத்து, குத்தியிருக்கிறார்கள். இது பயங்கரமான செயல். உறுப்பினர்கள் சபைக் கூட்டங்களுக்கு வருவதற்காக சென்னைக்கு வந்திருக்கிறார்கள். வந்த இடத்தில், அதுவும் உறுப்பினர்கள் தங்கியிருக்கும் இடத்தில் இம்மாதிரி ஏற்பட்டால், மேலும் பல்வேறு குற்றங்களுக்கு இடம் கொடுக்கும். இம் மாதிரி இடங்களில் தவறாகப் பேசுவதே குற்றம். சட்ட விரோதமான பேச்சை இந்த இடத்தில் பேசினால்கூட, இந்த அவை அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கமலாமென்று விதி இருக்கிறது. இது, "பிரிசிங்ட்ஸ் ஆப் தி கவுன்சில்" என்று சொல்லக்கூடிய இடம். இந்த இடத்தில் பலாத்காரத்தில் ஈடுபட்டு, ஓர் உறுப்பினரைத் குத்தி இருக்கிறார்கள். அதிர்ஷ்டவசமாக அவர் உயிர் போகவில்லை.



1975 பிப்ரவரி 26] [திரு கே. ராஜாராம்]

ஆஸ்பத்திரியில் இருந்து கிடைத்த தகவல்படி அம்மாதிரியான ஆபத்து இராது என்பது ஓரளவுக்கு மன ஆறுதலைக் கொடுக்கிறது. இம் மாதிரியே விட்டுக்கொண்டிருந்தால் பெரிய தவறுகள் ஏற்படும். உள்துறை அதிகாரத்தை வைத்துக்கொண்டிருக்கும் முதலமைச்சரவர்கள் இது சம்பந்தமாகக் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். உறுப்பினர்களுக்கே இந்த கதி என்றால் சாதாரண அரசியல்வாதிகளின் நிலைமை என்னவாகும் ? அதுவும் உறுப்பினர்கள், அரசாங்க விடுதியில் தங்கியிருக்கும்போது இம்மாதிரி ஏற்படுவதென்பது நினைக்கக்கூட முடியாத ஒன்று. இதுவரை இம்மாதிரி நடந்தது கிடையாது. ஆகையால் இதில் முதலமைச்சரவர்கள் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். இனிமேல் எங்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது ? சட்ட சபைக் கூட்டத்திற்கு வந்துவிட்டு, திரும்பி ஊர் போய்ச் சேருவோமா என்ற எண்ணம் வந்துவிட்டால், அது பயங்கரமானதாகும். எங்களுக்கு தக்க பாதுகாப்பு தரவேண்டும். இனிமேல் உறுப்பினர்களுக்கு இதுமாதிரி ஏற்படாதவாறு பாதுகாப்பு கொடுக்கக்கூடிய ஒரு "அன்டர்டேக்கிங்" கொடுத்தால் ஒழிய நாங்கள் சட்ட சபைக்கு எப்படி வருவது ? எங்களுடைய கடமைகளை எப்படியாற்றுவது ? ஜனநாயகத்தை எப்படி நிலை நாட்டுவது ? எனவே வெளியூரிலிருந்து வரும் உறுப்பினர்களுக்குத் தக்க பாதுகாப்புக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்வதுடன், முதலமைச்சரவர்கள் திட்டவட்டமாக அதை அறிவிக்க வேண்டும். மேற்கொண்டு இதில் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு வெங்கா அவர்களை இன்றைய மதியத்திலே சிலர் படுகாயமுறச் செய்தது பற்றி எதிர்க்கட்சித் தலைவரவர்களும், மற்ற நண்பர்களும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். இதிலே, வெளியூரிலிருந்து வந்திருக்கும் உறுப்பினர் உள்ளூரிலுள்ள உறுப்பினர் என்பதல்ல முக்கியம். ஓர் உறுப்பினர் தன்னுடைய கடமையை ஆற்றக்கூடிய பணியிலிருந்து தவிர்க்கப்பட்டிருக்கிறார் என்று நான் சொல்லுகிறேன். நான் இதை ஓர் உரிமைப் பிரச்சினையாக, தலைவரவர்களே, தங்கள் முன்னால் வைக்க விரும்புகிறேன்.

"ஹாஸ்டல்"—அதாவது விடுதி சட்டமன்றத்தினுடைய ஒரு பகுதி. அதாவது சட்டமன்றத்தினுடைய "பிரிசிங்ட்ஸ்" என்பதாகும். நாளைய தினம் சட்டமன்றத்திற்குள்ளோ அல்லது மற்ற பகுதிகளிலோ இப்படிப் பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறக்கூடிய நிலைமை ஏற்பட்டால், ஓர் உறுப்பினர் தன்னுடைய உரிமையைப் பாதுகாத்துக்கொண்டு, தன்னுடைய கடமையைச் செய்ய முடியாதவாறு ஆக்கப்பட்டிருக்கிறார் என்று தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது மாதிரி நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறக்கூடிய பயம் ஏற்படுமானால், எந்த உறுப்பினரும் பணியாற்ற முடியாது. அதுமட்டுமல்ல, தலைவரவர்களே, அவர்களுடைய உரிமையைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பு தங்களைச் சாருமென்று தெரிவித்துக்கொள்கிறேன். இதுபற்றிய முக்கியமான நடவடிக்கைகளையும், நிகழ்ச்சிகளையும் சட்டசபையைச் சார்ந்த ஒரு "பிரிவிலஜஸ் கமிட்டி"

ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை பிரிவிலஜஸ் கமிட்டியிடம் விட வேண்டுமென்று சொல்வதற்குக் காரணம், ஒரு சட்ட மன்ற உறுப்பினர், அவர் கடமையாற்றக் கூடிய ஒரு பகுதியிலிருந்து தாக்கப்பட்டிருக்கிறார் என்பதுதான். எனவே அந்தக் கமிட்டியிடம் விட்டு இதைத் தகுந்தபடி ஆராய்ந்து இதற்கு முடிவெடுக்கும் நிலைமையை உருவாக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டு எங்களுக்குத் தகுந்த பாதுகாப்பை நீங்கள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மாதிரி ஒரு நிகழ்ச்சி நடந்ததற்கு என்னுடைய சார்பிலேயும், என்னுடைய கட்சியின் சார்பிலேயும் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்தச் சபையில் எடுத்துச் சொல்லப்பட்ட சம்பவத்தையொட்டி நானும் எனது வேதனையைத் தெரிவித்துக் கொள்கிறேன். காலையிலே சட்ட மன்ற உறுப்பினர்களுடைய விடுதியில் நடை பெற்ற வன்முறைச் சம்பவம் கட்சி சார்பற்ற முறையில் அனைவராலும் கண்டிக்கத்தக்க ஒன்றாகும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், நண்பர் திரு சுவாமிநாதன் அவர்களும் எடுத்துக் காட்டியதுபோல், உறுப்பினர்கள் தங்கள் பணியை ஆற்றுவதற்கு இயலாத அளவுக்கு செய்யப்படுகின்ற சூழ்நிலை நண்பர் திரு வெங்கா அவர்கள் தாக்கப்பட்டதன் மூலமாக ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் அனைவரும் நன்றாக உணர்கிறோம். இப்படிப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் அரசியலிலும், அல்லது தனிப்பட்ட முறையிலேயும் நடைபெறக் கூடாது என்பது தான் அனைவருடைய கருத்தாகும்.

(பிற்பகம் 4-40)

காலையிலே நடைபெற்ற சம்பவத்தையொட்டி, அந்தச் செய்தி எங்களுக்கு எட்டியதும் உடனடியாக காவல் துறையினரோடு அதுபற்றிப் பேசி துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. நான் காவல் துறையினரை அழைத்துப் பேசுவதற்கு முன்பாகவே அவர்கள் அதற்கான நடவடிக்கைகளிலே ஈடுபட்டிருக்கிறார்கள். தன்னைத் தாக்கியவர்கள் யார் என்பது பற்றிய விவரங்களை தாக்கப்பட்ட நண்பர் திரு வெங்கா அவர்கள் தரவில்லை. எனினும் அவர்களைக் கண்டுபிடிப்பதிலே காவல் துறையினர் தீவிரமாக ஈடுபடுவார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கடந்த 2, 3 மாதங்களுக்கு முன்பு சட்ட மன்ற உறுப்பினர் திரு கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய காரை அங்கிருந்து வெளியிலே கொண்டுபோய், அண்ணா சிலை வரையிலே எடுத்துச்சென்று அதைக் கொளுத்துவதற்கு முயற்சிகள் நடைபெற்றன என்று சொன்னார்கள். அதுவும் பிறகு கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. அதைப் போலவே, அதைவிட மிக வருந்தத்தக்க நிலையிலே நடைபெற்றிருக்கின்ற இன்றைய நிகழ்ச்சிக்கும், காவல் துறையினர் தகுந்த நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்ற உறுதியை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். நண்பர் திரு ஆறுமுகசாமி அவர்கள், திரு. வெங்கா அவர்கள் முந்தா நாள் ஓர் இடத்திலே உட்கார்ந்து இருந்தார். நேற்று இன்னொரு இடத்திற்கு வந்தார், காலையிலே மருத்துவ மனைக்குப் போய்விட்டார், இடையிலே என்ன நடந்தது என்பதை யூகித்துக் கொள்ளுங்கள் என்று—அதை உள்நோக்கம் என்று சொல்ல மாட்டேன்—ஏதோ ஒரு கருத்தை மற்றவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்கின்ற வகையிலே கூறியது இதை ஓர் அரசியல் விஷயமாக ஆக்கிவிடக்கூடுமோ என்று நான் அஞ்சுகின்றேன். ஏனென்றால், கடந்த 2, 3 ஆண்டுக் காலத்தில் இந்த இடத்தில் இருப்பவர்கள் அந்த இடத்திற்குப் போவதும், அந்த இடத்திலிருப்பவர்கள் இந்த இடத்திற்கு வருவதும்—இந்தியாவிலே தமிழ் நாட்டிலே மாத்திரம் இல்லாமல் இருந்த அந்தப் பழக்கம் நடைபெற்று வருகிறது. ஆனால் அப்பொழுதெல்லாம் நடைபெறாத ஒரு சம்பவம் இப்பொழுது நடைபெற்றிருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. ஆகவே, இந்த இடத்திலிருந்து அந்த இடத்திற்குப் போனதற்காகத்தான் அது நடைபெற்றுவிட்டது என்பது போன்ற யூகங்களைச் செய்வதை நண்பர் திரு. ஆறுமுகசாமி போன்ற பொறுப்புள்ள உறுப்பினர்கள், ஏன் அவர்களே கூட, ஒத்துக்கொள்ள மாட்டார்கள் என்று நான் கருதுகின்றேன். எனினும் இந்த மன்றத்தினுடைய மாண்புமிகு உறுப்பினருக்கு ஏற்பட்டிருக்கின்ற இந்தச் சங்கடத்துக்கு நானும் என்னுடைய வருத்தத்தையும் வேதனையையும் தெரிவித்துக்கொள்வதோடு உரிய நடவடிக்கைகள் காவல் துறை மூலமாக நிச்சயமாக எடுக்கப்படும் என்பதையும், சட்ட மன்ற விடுதிகளுக்கு பாதுகாப்பு போன்ற காரியங்கள் அதிகமாக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு மேலவைத் தலைவர் : இன்றைய நிகழ்ச்சி உள்ளபடியே வருத்தத்தைத் தரக்கூடியதாகும். எனக்கு அந்தச் செய்தி சரியாக 12 மணிக்கு அறிவிக்கப்பட்டது. நானும் உடனே போலீஸ் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு என்ன நடந்தது என்பதைக் கேள்விப்பட்டபோது, என்றுமே நடந்திராத ஒன்று, இனி நடக்கவே முடியாது என்று உத்தரவாதம் கொடுக்க முடியாத ஒன்று, எந்த நேரத்திலேயும் எதுவும் நடக்கலாம் என்ற ஐயப்பாட்டிற்குக் கொண்டு தள்ளுகின்ற ஒன்று நடக்கிறதே என்று வருத்தப்பட்டேன். ஆனால் உறுப்பினர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்வேன். எந்த உறுப்பினர்களை யார் பார்க்க வருகிறார்கள், யார் பார்ப்பதற்குத் தகுதி படைத்தவர்கள் என்று கண்டிப்பாகப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கக்கூடாதவர்களையெல்லாம் என் அறையிலே அனுமதிக்கிறீர்கள்? ஒன்று வாசல் படியிலே வைத்துப் பார்க்கக்கூடியவர்கள் பெயரைச் சொல்லி, அந்த உறுப்பினருக்கு இது அறிவிக்கப்பட்டு, என்னைப் பார்க்கச் சொல்லுங்கள் என்று அனுமதி கொடுத்து உள்ளே அனுப்புவதா, அல்லது இரண்டு பக்கத்திலேயும் பலத்த போலீசைப் போட்டு போகின்றவர்களைச் சோதனை போட்டு கடுமையான ஆயுதங்கள் வைத்திருக்கிறார்களா என்று பார்த்து உள்ளே அனுப்புவதா, இன்னும் என்னென்ன கடுமையான நடவடிக்கைகள் எடுத்து பாதுகாப்பு தரலாம் என்று கருதுவதில் என்னுடைய உரிமையை நான் மீறவில்லை. ஆனால் இதற்குப் பிறகு கண்ட கண்டவர்கள் வேறு எங்கும் ஓட்டல் கிடைக்காத காரணத்தினால் ஒரு கடிதம் வாங்கிக் கொண்டு வந்து இன்னாருடைய பெயரிலே எனக்கு அறை வேண்டுமென்று தங்குவதையும்,

வெளியிலே வேறெங்கேயும் 15 ரூபாய், 20 ரூபாய் கொடுப்பதற்கு பதில் 2 ரூபாய் கொடுத்து இங்கே தங்கிவிடலாமா என்று கருதுவதையும் உறுப்பினர்கள் மனதிலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி யாருக்காவது கடிதம் கொடுத்து, யாராவது தங்கி இந்த மாதிரி சம்பவங்கள் நடந்து விட்டால், எப்படி நாங்கள் அதற்கு உத்தரவாதம் அளிக்க முடியும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் தீவிரமாகச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, அங்கிருந்து யாரும் வந்து அவரைத் தாக்கவில்லை. துர்ப்பாக்கியவசமாக யாராவது அறைக்குள்ளே போய்த் தாக்கியிருந்தால், அவருடைய உயிரே போயிருக்கக் கூடிய ஒரு நிலைதான் வந்திருக்கும். வெளியே வந்தவரை ஒரு டாக்ஸியிலே வந்து வழிமறித்துத் தாக்கியிருக்கிறார்கள். அதுதான் பிரச்சினை. அதற்கு தகுந்த நடவடிக்கை தாங்கள் எடுக்க வேண்டுமென்று.. .. ..

மாண்புமிகு மேலவைத் தலைவர்: எப்படித் தாக்கினார்கள், யார் தாக்கினார்கள் என்று தெரியாதபோதே நாம் அது பற்றி ஒரு முடிவு எடுக்கக் கூடாது. நான் சொல்லுவதெல்லாம், யாருமே தாராளமாக உள்ளே வரலாம், போகலாம் என்ற நிலைமையை நீங்கள் உருவாக்கி விடுவீர்களானால், எப்படி அவர்களைக் கண்டுபிடிப்பது என்பதுதான். இன்னாரை இங்கே வரச் சொல்லியிருக்கிறோம் என்று கடிதங்கள் கொடுத்து அனுப்புகிறீர்கள். உங்கள் பெயரிலே அவர்கள் அறை எடுத்துத் தங்குகிறார்கள். வெளியே அதிகச் செலவாகிறது, இங்கே மலிவாக இருக்கிறது என்றும் சொல்லுகிறார்கள். அதையும் நீங்கள் கொஞ்சம் சிந்திக்க வேண்டும். நாங்களே போலீசாரைப் போட்டு உள்ளே யார் யாரைப் பார்க்கப் போனாலும், "உங்களை இன்னார் பார்க்க வந்திருக்கிறார்கள், நீங்கள் அனுமதிக்கிறீர்களா?" என்று கேட்டு அனுமதிக்கவும் செய்யலாம். அல்லது அப்படித் தேவையில்லை, இரவிலே வருகிறார்கள், பகலிலே வருகிறார்கள் என்று சொன்னால், வருகின்றவர்கள் உங்கள் தொகுதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்கூட, நாங்கள் சோதனை போடுவோம். அதை ஒப்புக்கொள்கிறீர்களா?

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தாராளமாக ஒப்புக்கொள்கிறோம்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, திடீரென்று டாக்ஸியிலே வந்தார்கள். டோரைத் திறந்தவுடனே அவரைப் பிடித்து அடித்துக் குத்தி இருக்கிறார்கள். அந்தக் காரிலே அவர் உட்காரப் போகும்போது, வேறு காரிலே இவர்கள் வந்து—என்னுடைய அறைக்கு நேர் முன்னிலையிலே அந்த டாக்ஸி நிறுத்தப்பட்டு—இது நடந்திருக்கிறது. உள்ளே சென்று, ரிசப்ஷனுக்கு உள்ளே சென்று நடந்த நிகழ்ச்சியல்ல இது. இப்படி நடப்பதற்கு எப்படிப்பட்ட பாகாப்பு கிடைக்கும்?



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களும் அதுதான் சொல்லுகிறார்கள். இப்போது ஒரு டாக்ஸி உள்ளே வந்தது. ஒரு கண்டிப்பான சட்டம், "டாக்ஸிகள் வருவதாக இருந்தால் வெளியே இருக்கின்ற காவலர்களிடத்திலே அனுமதி பெற்றுத்தான் வரவேண்டும்" என்கின்ற அளவிற்கு இருக்க வேண்டும். அப்படிப் போட்டால் என்ன ஆகிறதென்றால், சட்ட மன்ற உறுப்பினர்கள் "டாக்ஸி வருவதற்குக்கூட அனுமதிப்பதில்லை" என்கின்ற அளவிற்கு ஓர் உரிமைப்பிரச்சினையைக் கிளப்புகிறார்கள். அந்தச் சங்கடத்தைத்தான் தலைவர் அவர்கள் சொல்லுகிறார்களேயல்லாமல், இன்று நடைபெற்ற இந்த வேதனையான சம்பவத்தைப் பற்றி அவர்கள் விமர்சிக்கவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: எப்படி இருக்கவேண்டும் என்பதை நான் எழுதி உங்களுக்குப் படித்துக் காட்டுகிறேன். நீங்கள் ஒப்புக்கொண்டால் சரி. தகுந்த முறையில் என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று கண்டு பிடிக்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: ஒரு கமிட்டி போட்டுவிட்டால் அதில் இதுபற்றி ஆராய்ந்து ஒரு முடிவு எடுக்கலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: திரு. வெங்கா வெளியே வந்தார். டாக்ஸியிலே யாரோ வந்தார்கள். யாரோ தொகுதி ஆள் என்று நம்பி திரு. வெங்கா வெளியே வந்தார். அவரை உடனே தாக்கிவிட்டு, நின்ற ஒரு பஸ்ஸையும் தாண்டி டாக்ஸி ஓடியது என்று திரு. முத்துசாமி சொல்கிறார். கண்டிப்பாக ஒரு டாக்ஸி போனால், நம்பரை "நோட்" செய்துகொண்டு அனுப்புவது அல்லது யாரைப் பார்க்கப்போகிறீர்கள் என்ற ஒரு குறிப்பை எடுத்துக்கொண்டு அனுப்புவது, இதையெல்லாம் செய்யலாம். உங்களுடைய பயத்தைப்போக்குவதுதான் என்னுடைய கடமையே தவிர காலிப்பசங்களை எல்லாம் உள்ளே விட்டுவிட்டு உங்களுடைய பயத்தை அதிகப்படுத்துவது என்னுடைய நோக்கமல்ல. நான் அதையெல்லாம் சரிசெய்து ஒரு இரண்டு நாட்களிலே தெரிவிக்கிறேன். உங்களுக்கெல்லாம் தரச்சொல்கிறேன். அது சரியாக இருக்கிறதா என்று நீங்கள் எல்லாம் பார்த்து ஒப்புக்கொள்வீர்களானால் அதை நடைமுறைக்குக்கொண்டுவருவதில் எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

†Thiru G. VASANTHA PAI: Sir, with the permission of the Chair, may I suggest that instead of our giving out ideas which may be put forward as defence in a case which appears to be one of attempted murder, we may wait for the Police report and then discuss this matter, because this involves the privileges of the hon. Members of this House. I request that this may be considered.

MR. CHAIRMAN: What has happened is......

Thiru G. VASANTHA PAI: Sir, I am referring to the defence made out by the Hon. Chairman. Instead of giving an inkling of a possible defence to the accused and thereby helping one of those persons who have committed the crime. I request that the Police report may be got and the matter may thereafter be fully discussed in this House.

Thiru S. NARAYANASWAMY: I think it is perfectly proper Mr. Chairman, that the security arrangements that are necessary may be discussed. What the Hon. Chairman wanted was to see that practical security arrangements were made. I suggest that may be discussed without the slightest delay.

MR. CHAIRMAN: We have not come to a conclusion yet.....

Thiru G. VASANTHA PAI: Sir, I was not referring to that. I was referring to the Chairman's remark that Members of the Legislature were bringing persons inside the Legislator's Hostel and that might be one of the reasons for these incidents happening. I was only suggesting our apprehensions should not be put forward now till we know what is the real thing behind this action and once we have all facts coming in, we must have the privilege of discussing the matter in this House because our own security is involved.

Mr. CHAIRMAN: The matter stands midway. We have to get some information from the Police and the doctors.

முதலமைச்சர் அவர்கள் இவைகளையெல்லாம் சரிசெய்யவேண்டுமென்று ஒப்புக்கொண்டதால், இதற்கு மேலும் விவாதம் தேவை இல்லை என்று, சொல்லி, மாண்புமிகு எதிர்க்கட்சித்தலைவர் கொடுத்திருக்கும் அட்ஜர்ன்மென்ட் மோஷனை எடுத்துக்கொள்ளலாம்.



## 2. வேலூரிலுள்ள சி. எம். சி. ஆஸ்பத்திரியில் வேலை நிறுத்தம் குறித்து.

திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதி 44-ன் கீழ் சட்ட மன்ற மேலவையின் நடவடிக்கைகளை ஒத்தி வைத்து அடியிற்கண்ட விஷயத்தைப் பற்றி விவாதிக்க அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

"வடாற்காடு மாவட்டத்தின் தலைநகரான வேலூரில் உள்ள சி. எம். சி. ஆஸ்பத்திரியில் கடந்த ஒரு மாதகாலமாக நடந்து வரும் வேலை நிறுத்தம் பொதுவாக அவ்வூர் பொதுமக்களையும் குறிப்பாக அம்மருத்துவமனையில் இருக்கும் நோயாளிகளையும் பாதித்துக்கொண்டிருக்கிறது. இது அண்மையில் ஏற்பட்ட அவசர முக்கியத்துவமான விஷயமானதாலும், இவ்விஷயத்தில் அரசு போதிய கவனம் செலுத்தி விவகாரத்தைத் தீர்த்துவைக்கத் தவறியதைப்பற்றியும் விவாதிக்க சபையின் நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்".

(பிற்பகல் 4-50)

தலைவரவர்களே, ஒரு முக்கியமான சம்பவத்தைப்பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்காகத்தான் இந்தத் தீர்மானத்தை கொண்டுவந்திருக்கின்றோமே ஒழிய, வேறு எதற்காகவும் இல்லை. தமிழ்நாடு மட்டுமல்லாமல், அகில இந்திய அளவிலே இந்தப்பேச்சு லிடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. தமிழகத்திலுள்ள வேலூர் .சி.எம்.சி. ஆஸ்பத்திரி என்பது உலகப்பிரசித்திபெற்ற ஆஸ்பத்திரியாகும். சிசி ஆப்பரேஷன்களைச் செய்துகொள்வதற்காக அயல்நாடுகளிலிருந்து கூட நோயாளிகள் இங்கே வருகின்றனர். அப்பேர்பட்ட பெயர்பெற்ற ஆஸ்பத்திரி தமிழ்நாட்டில் இருப்பது, நமக்கு ஒரு நல்ல கியாதியையும், புகழையும் உண்டுபண்ணிக்கொண்டிருந்தது. அங்கு ஸ்ட்ரைக் ஏற்பட்டிருக்கின்றது. எங்கெங்கோ ஸ்ட்ரைக் நடந்திருக்கின்றது. எந்தெந்த இன்ஸ்டிடியூசன்களிலோ இதற்கு முன் ஸ்ட்ரைக் நடைபெற்றிருக்கின்றது. சிம்ஸன் கம்பெனியில் நடந்த ஸ்ட்ரைக்கைவிட வேறு எங்கு நடக்கப்போகிறது? எல்லாவற்றையும் நாம் சமாளித்திருக்கிறோம். இந்த ஸ்ட்ரைக்கையும் சரியானபடி சமாளித்திருக்கமுடியும். நேற்றையதினம் நடந்த சம்பவம் என்னுடைய மனதை உருக்கிவிட்டது. டாக்டர் ஜான்சன் அவர்கள் பொதுஜனங்களிடம் வெகு நன்றாகப் பழகிக்கொண்டிருக்கக்கூடியவர்கள். எந்த நோயாளியாக இருந்தாலும், டாக்டர் ஜான்சனைப் பார்த்துவிடுவார்கள். சென்னையிலிருந்து எந்த நோயாளி அந்த ஆஸ்பத்திரிக்குப்போனாலும் முதலில் டாக்டர் ஜான்சனைப்பார்த்துவிட்டுத்தான் போவார்கள். அப்பேர்ப்பட்ட நல்ல மனிதர் அவர். அப்படிப்பட்ட ஒரு நல்ல மனிதரை ஆஸ்பத்திரியிலேயே வைத்துத் தாக்கியிருக்கின்றார்கள். எலும்பு முறிய அடித்திருக்கின்றார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : டாக்டர் ஜான்சனை அடித்தவர்கள் வேலை நிறுத்தம் செய்கின்ற தொழிலாளர்கள் அல்ல. விசுவாசத் தொழிலாளர்கள் என்று கூறப்படுகிறது.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, ஏதோ ஆஸ்பத்திரியில் உள்ள தொழிலாளர்கள் என்று சொல்லமுடியுமே தவிர, வேறு யார் என்று என்னால் கூறமுடியாது. முதலமைச்சர் அவர்கள் சி. ஐ. டி. வைத்துத்தெரிந்து சொல்கின்றார்கள். அந்த வசதியோடு நான் இல்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, டாக்டர் ஜான்சன் அவர்கள் தொழிலாளர்கள் சார்பாக இருக்கின்றார் என்பதற்காகத்தான் அவர் தாக்கப்பட்டார்கள். அவர் கொடுத்த கம்ப்ளெயின்டில் மருத்துவ மனையில் அட்மிட் ஆவதற்கு முன்னால் அப்படிச் சொல்லியிருக்கின்றார்கள். என்னிடத்திலும் சொல்லியிருக்கின்றார்கள்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, டாக்டர் ஜான்சன் அவர்கள் இப்போது இங்கே ஜெனரல் ஆஸ்பத்திரியிலேதான் மருத்துவம் பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள். இம்மாதிரியெல்லாம் நடந்துகொண்டிருந்தால் நம் மாநிலத்திற்கு மிகவும் கெட்டபெயர் ஏற்பட்டுவிடும். ஆகவே, முதலமைச்சர் அவர்கள் இதிலே அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். இதிலே எடுத்திருக்கின்ற அக்கறை குறைவு என்று சொல்லமாட்டேன். இரண்டு மூன்று முறை அவர்களை அழைத்து வைத்துப்பேசி பத்திரிகையிலே செய்தி கொடுத்தார்கள். நாங்கள் எல்லாம் பத்திரிகைச் செய்தி கொடுத்த மறுநாளே தீர்ந்துவிடும் என்று கூட நம்பியிருந்தோம். அநேகமாக தமிழ் நாட்டில் எல்லோருமே அப்படித்தான் நம்பினார்கள். ஏனெனில் பதில் அறிக்கை சாதகமாக வந்திருக்கிறது. வேலூரிலிருந்து வந்திருந்தது. தீர்ந்துபோய்விட்டது என்று நினைத்தேன். ஆனால் மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியமாதிரி இப்போது அதிகமான பலாத்காரமான செயல்களில் ஈடுபட ஆரம்பித்திருக்கிறது. இதைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசாங்கம்தான் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

இன்னொரு விஷயம், அங்கேயுள்ள அரசியல் கட்சியினர் அத்தனை பேர்களுமே இதை எப்படியாவது தீர்த்து வைக்கவேண்டும் என்று இருக்கின்றார்கள். அரசியல் ரீதியிலே எந்தவிதமான கெட்ட நோக்கமும் இருப்பதாக நான் சொல்ல முடியாது. எப்படியாவது தீர்த்து வைக்கவேண்டும் என்றுதான் எல்லோரும் சேர்ந்து, சர்வ கட்சியைச் சேர்ந்த பொதுஜனங்கள் ஊர்வலமே வந்திருக்கின்றார்கள். இந்த ஆஸ்பத்திரி ஸ்ட்ரைக் தீரவேண்டுமென்று கோஷமிட்டுக் கொண்டே ஊர்வலம் ' வந்திருக்கின்றார்கள். ஆகையால் ஊர் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது.





முதலமைச்சர் அவர்கள் இப்போது எடுத்துக்கொண்டிருக்கின்ற அக்கறையோடு மேலும் கொஞ்சம் அக்கறை காட்டி, எப்படியாவது ஒரு நாள் அங்கேயிருந்தாவது எல்லோரையும் அழைத்துப் பேசி, அந்த ஸ்ட்ரைக்கை ஒழித்துக்கட்டி நம்முடைய மாநிலத்திற்கு ஒரு நல்ல பெயர் உண்டுபண்ணவேண்டும் என்று வேண்டிக் கொள்கின்றேன். அதை எப்படித் தீர்ப்பார்கள் என்று எனக்குத் தெரியாது. அதைத் தீர்த்துவைக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, வேலூர் மருத்துவமனையின் பெருமை குறித்து எதிர்க்கட்சித் தலைவரவர்கள் எடுத்துக்கூறிய கருத்தில் எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் கொண்டதல்ல இந்த அரசு. அவர்கள் எடுத்துக்காட்டியது போல மிகச்சிறந்த மருத்துவ நிபுணர்களும் அங்கே இருக்கின்றார்கள். வேலூர் மருத்துவ மனையைப் பொறுத்தவரையில், இந்த அரசு அந்த மருத்துவமனைக்கு வேண்டிய உதவிகளை தொடர்ந்து செய்துவந்திருக்கின்றது. அப்படிப்பட்ட ஒரு மருத்துவ மனையில் கடந்த 50 நாட்களாக நடைபெற்று வருகின்ற வேலை நிறுத்தம் காரணமாக அந்த மருத்துவ மனையினுடைய சிறப்பு போய்க்கொண்டிருக்கின்ற அளவிலே, வேலூர் பொதுமக்கள் வருந்துகின்ற அளவுக்கு அந்த மருத்துவமனையிலே பணியாற்றிய தொழிலாளர்கள் வேதனைக்கு உட்படுகின்ற அளவுக்கு உள்ள சூழ்நிலையைத் தவிர்த்திடவேண்டுமென்பதற்காக அரசின் சார்பில் எல்லா வகையான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. எதிர்க்கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டதுபோல, கடந்த 2, 3, வாரங்களுக்கு முன்பு, தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும், நிர்வாகத்தினரையும் அழைத்து 2, 3 மணிநேரம் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தினோம். பெரிய தொழிற்சங்கப் போராட்டங்களிலே கூட இல்லாத அளவுக்குப் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு சமரசம் காண்பதற்கு அரசின் சார்பிலே முயற்சி எடுத்துக் கொண்டேன். 5 பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டதன் காரணமாக இந்த வேலை நிறுத்தம் தொடங்கியது. அன்றைக்கு வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்ட 15 பேர்களை வேலை நீக்கம் செய்தார்கள். நான் சொன்னேன். முதலிலே வேலை நீக்கம் செய்த 5 பேர்களைப் பற்றித் தனியாக ஒரு தீர்ப்பு அளித்து விடுங்கள். அதிலே நானும் தலையிடவில்லை. தொழிற்சங்கத் தலைவர்களும் அதை வற்புறுத்தமாட்டார்கள். ஆனால் வேலை நிறுத்தம் காரணமாக வேலை நீக்கம் செய்யப்பட்ட அந்த 15 தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளுங்கள் என்றும், அதற்காக அவர்கள் வருத்தம் தெரிவிக்கவும் கடிதம் எழுதிக்கொடுக்கவும் தயாராக இருக்கிறார்கள் என்றும் சொன்னேன். பதில் சொல்வதாகச் சொல்லி வேலூருக்குச் சென்றவர்கள் சரியான பதிலைச் சொல்லவில்லை. பிறகு கமிட்டியைக் கூட்டுகிறோம், கவுன்சிலைக் கூட்டுகிறோம் என்றெல்லாம் சொல்லி அந்த 15 பேர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள முடியாது என்பதற்கான காரணங்களையெல்லாம் விளக்கி

பத்திரிக்கைகளிலே பக்கம் பக்கமாக விளம்பரங்களைக் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு சில வன்முறைச் சம்பவங்கள் அங்கே நடைபெற்றன. அதிலே போலீஸார் தலையிட்டு அந்த வன்முறைச் சம்பவங்களை எந்த வகையிலே கட்டுப்படுத்தினார்கள் என்பதும் தொழிலாளர்கள் பலரும் தடியடி போன்ற அடக்கு முறைக்கு ஆளாக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்பதும், அந்த வன்முறைச் சம்பவங்களின் காரணமாக போலீஸாரும் காயமடைய நேரிட்டது என்பதும் குறித்து எதிர்க் கட்சித் தலைவரவர்கள் இங்கே சுருக்கமாகக்குறிப்பிட்டார்கள். நேற்று காலையிலே மீண்டும் அந்த நிர்வாகிகளை அழைத்துப் பேசவேண்டும் என்று அழைத்து அவர்கள் நேற்று மாலையிலே 5½ மணிக்கு வந்து பேசினார்கள். மேலவைத் தலைவரவர்கள் அறையிலேதான் நானும் மாவட்டத்தினுடைய அமைச்சர் மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் அவர்களும் அந்த நிர்வாகிகளைச் சந்தித்து 6 மணியிலிருந்து 7 மணி வரையிலே பேசினோம். அவர்கள் அந்த 15 பேரை வேலைக்கு எடுத்துக்கொள்ள முடியாது, அவர்கள் மன்னிப்புக் கடிதம் கொடுத்தாலும் தாங்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ள முடியாது என்பதிலேதான் தீவிரம் காட்டுகின்றார்கள். இது ஆயிரம் பேர்களுடைய பிரச்சினை. ஆயிரம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டிருக் கின்றார்கள். இந்த அரசைப் பொறுத்த வரையிலே எத்தனையோ முறை இப்படிப்பட்ட பல போராட்டங்களில், எல்லாத் தொழிற் சங்கப் போராட்டங் களிலும் தொழில் அதிபர்களிடம், தொழிற் சங்கப்பிரதிநிதிகளிடம் கலந்து பேசி, ஒரு சமரச முடிவுக்கு வருகிற நேரத்தில், யாரையும் பழி வாங்காமல் அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அரசு சொன்னால் அந்தச் சமரச ஏற்பாடுகளை தொழிலதிபர்கள் எல்லாம் ஏற்றுக் கொண்டிருக் கின்றார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல, சிம்சன் விவகாரத்தைப் போல பெரிய விவகாரம் இல்லை. ஆனால் சிம்சன் விவகாரத்திற்காகப் போராடிய தொழிற் சங்கத் தலைவர்கள் எல்லாம் இன்றைக்குக் காணோம். இதற்கெல்லாம் அட்ஜெர்ன்மெண்ட் மோஷன் கொடுப்பதற்கு தொழிற் சங்கத் தலைவர்களையெல்லாம் நான் காணமுடியவில்லை. ஆனால் இன்றைக்கு வேலூரிலே நடைபெறுகின்ற இந்தத் தொழிலாளர்களுடைய போராட்டத்திற்கு அனுதாபம் காட்டுகின்ற வகையிலே, நாட்டிலே தொழிற் சங்கங்களை வைத்துக் கொண்டிருக்கின்ற தலைவர்கள் எதுவும் பேசுவதாகவும் எனக்குத் தெரியவில்லை. காரணம் ஏதோ திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு இதன் மூலம் ஒரு கெட்ட பெயரை உண்டாக்க வேண்டுமென்ற எண்ணம் நாட்டிலே இருக்கக் கூடிய வேறு கட்சித் தொழிற் சங்கங்களுக்கு இருக்கிறதே அல்லாமல், ஒரு 15 பேர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள நிர்வாகம் மறுக்கிறதே என்கின்ற எண்ணம்கூட பல தொழிற் சங்கங்களுக்கு வராமலிருப்பதி லிருந்து, உண்மையில் இந்த அளவுக்கு அரசியல் மாறுபாடுகள் ஏற்பட லாமா என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. நேற்று மேலவைத் தலைவர் அவர்களுடைய அறையிலேதான் நான் விளக்கமாகச் சொன்னேன், நம்முடைய தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற போராட்டம், வரலாற்றி றிலே இல்லாத அளவுக்கு கோட்டையைச் சுற்றிச்சுற்றி 3 நாட்கள் நடத்திய ஊர்வலம், அவர்கள் நடந்துகொண்ட முறை, அவர்கள் எழுதிய ஆபாச மான கடிதங்கள், இவைகள் அத்தனைக்கும் பிறகும்கூட அவர்களெல்லாம்





வேலை நீக்கம் செய்யப்பட்டு பின்னர் வேலைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது, அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டு பின்னர் அங்கீகாரம் அளிக்கப் பட்டது இந்த விஷயங்களையெல்லாம் எடுத்துச் சொன்னேன். அண்மை யிலே திருவாரூரான் சர்க்கரை ஆலையிலே 30 பேர்கள் மீது வழக்கு நடைபெற்று அவர்கள் சிறைச் சாலைக்குச் சென்று தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கின்ற நேரத்திலே கூட அவர்களை விடுதலை செய்து, மறு படியும் அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்ன தையும் அதை நிர்வாகம் எடுத்துக் கொண்டதையும் சொன்னார்கள். நம்முடைய மேலவைத் தலைவர் அவர்கள் கூடச் சொன்னார்கள். கிருஸ்த வர்களால் நடத்தப்படுகின்ற மருத்துவ மனை இது. பாவ மன்னிப்பில் கிருஸ்தவர்கள் மிகவும் பெயர் பெற்றவர்கள். ஆகவே பாவ மன்னிப்பு நீங்கள் ஏன் வழங்கக்கூடாது என்றுகூடக் கேட்டார்கள். நீண்ட நேரம் அவர்கள் நிர்வாகிகளுக்கு அறிவுரைகளை எடுத்துச் சொன்னார்கள். நானும் எவ்வளவோ வேண்டிக் கேட்டுக்கொண்டேன்.

(பிற்பகல் 5-00)

இதற்குப் பிறகும் நாங்கள் பிடித்ததுதான் பிடிவாதம் என்கின்ற அளவுக்கு அவர்கள் இருந்துகொண்டிருக்கின்றார்கள். இதற்குமேல் எப்படித் தலையிடுவது என்று எனக்குப் புரியவில்லை. டாக்டர் ஜான்சன் போன்ற நல்ல டாக்டர்கள் கூட தொழிலாளர்களுக்காக வாதாடிய காரணத் திற்காகவும், இந்த நிலைமை சாதகமாக, சுமுகமாக முடிய வேண்டு மென்பதற்காக டாக்டர் ஜான்சன் அவர்களும் வேறு சில டாக்டர்களும் அடையாளமாக ஒரு நாள் உண்ணாவிரதம் கூட இருந்தார்கள் என்ற காரணங்களையொட்டி டாக்டர் ஜான்சனைப் போன்றவர்கள் எல்லாம் அடிக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் அந்த மருத்துவ மனையிலே கூட சிகிச்சை செய்துகொள்ள முடியாமல், அந்தப் புகழ் பெற்ற வேலூர் மருத்துவ மனையிலிருந்து நம்முடைய பொது மருத்துவ மனைக்கு மருத்துவத்திற் காக வந்திருக்கின்ற ஒரு வேதனையான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதைத் தீர்த்து வைக்க வேண்டிய முழுப் பொறுப்பும் இன்றைக்கு வேலூர் மருத்துவ மனை நிர்வாகத்தின் கையில்தான் இருக்கிறது. இந்த 15 பேரை அவர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளலாமென்றும் அவர்கள் மறுபடியும் தவறு செய்தால் எந்தவிதமான தண்டனை வேண்டுமானாலும் வழங்கலாம் என்றும்கூட நான் அவர்களுக்குச் சொன்னேன். அண்மை யிலே டில்லியிலே பிரதமரைச் சந்தித்துப் பேசியபோதுகூட, இதைப் பற்றி விவாதிக்க நேரிட்டது. அப்பொழுதும் முதலிலே வேலை நீக்கம் செய்யப்பட்ட 5 பேரைப் பற்றிப் பிரச்சினை இல்லை. இப்பொழுது வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிற 15 பேரை வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்றுதான் நான் சொன்னேன். அவர்களும் வருத்தக் கடிதம் எழுதித் தரத் தயாராக இருக்கிறார்கள் என்கின்ற விவரங்களை பிரதம ரிடத்தில் நான் சொன்னேன். அதற்குப் பிறகு நீங்கள் மீண்டும் முயற் சித்துப் பாருங்கள் என்று அவர்களும் அக்கறையோடு சொன்னார்கள். அதையொட்டித்தான் நேற்றும் கூப்பிட்டுப் பேசினோம். நேற்றைக்கும் அவர்கள் ஒத்து வரவில்லை. மறுபடியும் சொல்வதாகச் சொல்லிவிட்டுப்

போய்விட்டார்கள். இதுதான் நிலைமை. தொடர்ந்து அரசு சட்டம் ஒழுங்கு அமைதியைக் காப்பாற்றுவதிலே நிச்சயமாக கண்ணும் கருத்துமாக இருக்கும் என்பதை நான் எடுத்துச் சொன்னேன். ஆனால் தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கானவர்கள் எவ்வளவு நாளைக்கு இந்த வேதனையை அனுபவித்துக்கொண்டிருப்பார்கள் என்பதை அவர்கள்தான் எண்ணிப்பார்த்துஒரு சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்துகின்ற பொறுப்பை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதை மாத்திரம் எடுத்துக் கூறி இதற்கு மேல் விவாதிக்கத் தேவையில்லை என்பதை, தலைவர் அவர்களே, தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, நமது தொழிலாளர் நல அமைச்சர் திரு. இராஜாராம் அவர்கள் தீராத விவகாரங்களையெல்லாம் தீர்த்து வைத்துக்கொண்டு வருகிறார்கள். அந்த வகையில் அவர்களைப் பொறுப்பாக வேலூருக்கு அனுப்பி, அங்கு அவர்கள் 2, 3 நாட்கள் இருந்தாவது நிர்வாகத்தினரைக் கூப்பிட்டு வைத்து தீர்க்கப்படாத இந்த பிரச்சினையைத் தீர்த்து வைக்கும்படி நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இது தொழிற் சங்கச் சட்டத்திலேயுள்ள பிரச்சினை அல்ல. நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய பெயரே இருக்கின்ற காரணத்தினால், திரு. இராஜாராம் மீது கொண்டிருக்கின்ற அந்தப் பற்றை நான் பாராட்டுகின்றேன். என்னுடைய அமைச்சரவையிலே யாரைப் பாராட்டினாலும் அது என்னைப் பாராட்டியது போலத்தான். ஆகவே ஒரு முதலமைச்சர் சொன்ன இந்த சமாதானத்தைவிட நான் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களைக் கேட்கிறேன்—அவர் தன்னை தர்ம சங்கடத்தில் ஆழ்த்துவதாகக் கருதக் கூடாது—இந்த 15 பேரை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்வது நியாயமா அல்லவா என்பதை இந்த அவையில் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தீராத விவகாரங்களை எல்லாம் மாண்புமிகு திரு. இராஜாராம் தீர்த்து வைக்கிறார் என்றால், தீராத வியாதியையெல்லாம் தீர்த்து வைக்கிற அந்த ஆஸ்பத்திரி இந்தப் பிரச்சினையைத் தீர்க்கலாம் அல்லவா.

திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு. ராஜாராம் அவர்களை நீங்கள் அனுப்பிவையுங்கள். அவர்கள் நிச்சயமாக இதை வெற்றிகரமாகச் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.



திரு செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, என்னைப்பொறுத்த அளவில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுவது நியாயம் தான். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறுவதை உடனடியாக அந்த சி. எம். சி. நிர்வாகம் ஏற்கவேண்டும். அதற்காக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன முறையிலும் தனியாக அவர்கள் சென்று அணுகுவதற்கான ஓர் ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மிகவும் பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நான் கேட்ட கேள்வியைத் தட்டிக் கழிப்பது ஏனென்று எனக்குப் புரியவில்லை. நான் அவரிடமிருந்து அவருடைய பதிலை அறிய விரும்புகிறேன்.

திரு கே. ராஜாராம்; தலைவர் அவர்களே, நான் தட்டிக் கழிக்க விரும்பவேயில்லை. நான் ஆரம்பத்தில் சொன்னபோதே நீங்கள் சொன்னவுடனேயே இந்தப் பிரச்சினை முடிந்துவிட்டது என்று எண்ணி நான் மகிழ்ச்சியாக இருந்தேன் என்று சொன்னதே போதும். அதுவே நான் ஒப்புக்கொண்டதாகத்தான் அர்த்தம். நீங்கள் 15 பேரை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சொன்னதை அவர்களும் ஒப்புக்கொள்வார்கள். விவகாரம் தீர்ந்துவிட்டது என்று நான் முதலிலே நம்பினேன். நான் மட்டுமல்ல எல்லோரும் நம்பினர். ஆகையினால் நீங்கள் சொன்ன அந்த 15 பேரும் வேலைக்குக்கூடப் போய்ச் சேர்ந்துவிட்டார்கள் என்றுகூட நான் நம்பினேன். அதனால்தான் சொன்னேனேயொழிய எனக்கு மாறுபட்ட கருத்தே கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்; இப்பொழுது அவர் முடிவைச் சொல்லிவிட்டார் அல்லவா ?

திரு ஜி. சுவாமிநாதன்; தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை சங்கடத்திலே ஆழ்த்தக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஏதோ நான் முதலமைச்சர் என்கிற முறையிலே இதுவரை சொன்னதைக் கேட்காமல் இருந்தாலும், ஓர் அவையின் சார்பாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், அவையிலே இருக்கிற மற்ற உறுப்பினர்கள் அத்தனை பேருமே இந்த 15 பேரை வேலைக்கு எடுத்துக்கொள்ளவேண்டியது நியாயம்தான் என்று சொன்ன பிறகாவது இதிலுள்ள கருத்தை எடுத்துக்கொண்டு வேலூர் மருத்துவமனை நிர்வாகம் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு ஒரு சமரசத்திற்கு வர வேண்டுமென்று நான்கேட்டுக் கொள்ளுகிறேன்,

**Thiru A. R. DAMODARAN:** Hon. Chairman, Sir, since we have now entered into a discussion, the business of the House may be adjourned so that we may discuss the matter.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு எனது அனுமதியை மறுக்கிறேன்.

## 3. அறிவிப்பு.

### அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

**Mr. CHAIRMAN:** At a meeting of the Business Advisory Committee held at 3-30 P.M. today, the following further programme of business has been decided :

27–2–1975 : Further discussion on the Governor's Address.

28–2–1975 : Reply by the Hon. the Chief Minister to the discussion on the Governor's Address.

1–3–1975 : Presentation of the Budget for 1975–76.

2–3–1975 : Sunday Holiday.

3–3–1975 : General Discussion on the Budget for 1975–76.

Further programme of business will be decided later. The House will meet from 4 p.m. to 7 p.m. daily.

## 4. ஆளுநர் உரையின்மீது விவாதம்—தொடர்ச்சி.

* திரு ஏ. தங்கவேல்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய சிறப்புமிக்க உரையை வரவேற்றுப் பாராட்டி நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இன்று ஐந்தாவது நாளாக நடைபெற்றுக்கொண்டிருக்கிற இந்த விவாதத்தில் 4 நாட்களாக மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே ஆற்றிய நல்ல கருத்துக்களையெல்லாம் உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருந்தேன். கவர்னர் அவர்கள் காலமறிந்து செய்யவேண்டிய, ஆற்றவேண்டிய முக்கியமான நல்ல காரியத்தினை அனைவருமே வரவேற்று நன்றி தெரிவித்துக் கொண்டார்கள். இரண்டொரு குறைகளைத்தவிர பொதுவாகவே அனைவருமே வரவேற்கத்தகுந்த





நல்ல சிறந்த உரையாக இருந்தது என்பதை அனைவருமே, இரண்டொருவரைத் தவிர, இங்கு பாராட்டினார்கள். சென்ற டிசம்பர் மாதம் நடைபெற்ற கூட்டத்திலே மதிப்பிற்குரிய பெரியவர் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு ராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் எவ்வளவு வேதனையுடன் அவர்களுடைய மாவட்டத்திலே வறட்சி நிலைமை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி நம்முடைய முதலமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் அங்கே வரவேண்டும், தங்களுடைய வேதனைகள் எல்லாம் தீர்க்கப்படவேண்டுமென்று மிக உருக்கமாகக் கேட்டுக்கொண்டார்கள். அதையெல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் கேட்டுக்கொண்டிருந்தார்கள். முதலமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் ரெவின்யூ போர்டு மெம்பர்களுடன் வறட்சியால் பாதிக்கப்பட்ட இராமநாதபுரம் மாவட்டத்தைச் சுற்றிப் பார்த்து அங்கே உடனடியாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை போர்க்கால நடவடிக்கைபோல் எடுத்தார்கள். குறிப்பாக நம்முடைய முதல்வர் அவர்கள் இந்த வறட்சிப் பணியிலே தீவிரமாக ஈடுபட்டார்கள். அன்று திரு ராமகிருஷ்ணத் தேவர் அவர் கள் பேசும்போது வேதனையோடு பேசினார். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்பொழுது இங்கே பேசிய பேச்சில் எவ்வளவு மகிழ்ச்சிகரமாகப் பேசி நிம்மதியாக உட்கார்ந்திருக்கிறார் என்பதை நாமெல்லாம் பார்க்கிறோம். நம்முடைய பகுதியிலே வறட்சி நிவாரண வேலைகள் எவ்வளவு துரிதமாக நடைபெறுகின்றன என்று அவர்கள் உற்சாகத்தோடு பாராட்டி நிம்மதியாக இந்த அவையிலே உட்கார்ந்திருக்கும் காட்சியை நாம் பார்க்கும்போது உள்ளபடியே மற்ற இடங்களிலெல்லாம், வறட்சியால் பாதிக்கப்பட்ட இதர இடங்களில் எல்லாம்,

(பிற்பகல் 5-10)

வறட்சியால் பாதிக்கப்பட்ட தமிழகமெங்கிலும், ராமநாதபுரம் மாவட்டமெங்கிலும் வறட்சி நிவாரணப் பணிகள் எவ்வளவு துரிதமாக இன்றைய தினம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் என்பதைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. அந்த அளவுக்கு இன்றைய தினம் நம்முடைய அரசு வறட்சி நிவாரணப் பணியிலே தீவிரமாக கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. என்றாலும்கூட எதிர்க் கட்சியினைச்சார்ந்தவர்கள், திராவிட முன்னேற்றக் கழக அரசின்மீது ஏதாவது ஒன்றைச் சொல்லவேண்டும் என்பதற்காகச் சொல்லுகின்றார்களே தவிர உண்மையிலேயே நாட்டிலுள்ள மக்கள் திருப்திப்படும் அளவிற்கு பல்வேறு பணிகள் நடந்துகொண்டு வருகின்றன. என்பதை அவர்களும் உணர்ந்துதான் இருக்கின்றார்கள்.

நமது முதலமைச்சர் அவர்கள் வறட்சி நிவாரணப் பணிகள் என்றும் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் துயர் துடைப்பதற்கு என்றும் பல்வேறு நடவடிக்கைகளை உடனடியாக எடுத்துச் செயல்படுத்தி வருகின்றார்கள். இப்படி துரித நடவடிக்கைகளை எடுத்துவரும் நேரத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவி செய்யும் வகையில், விவசாயத்திற்காக அரசு வழங்கியுள்ள கடன் தொகைகளை அவர்களிடமிருந்து வசூலிப்பதை தள்ளி வைத்திருக்கின்றது என்ற நல்லதொரு உத்தரவையும் வெளியிட்டிருக்கின்றார்கள். அதுமாத்திரம் அல்ல, அரசிடம் மட்டும் விவசாயிகள் கடன் பெற்றிருக்கவில்லை. தனியார்களிடமிருந்தும்

[திரு. ஏ. தங்கவேல்] [1975 பிப்ரவரி 26

அவர்கள் கடன் பெற்றிருக்கின்றார்கள் என்பதை உணர்ந்த அரசு தனியாரிடமிருந்து பெற்ற கடன்களை வசூலிப்பதற்காக கோர்ட்டு நடவடிக்கைகளை அவர்கள்மீது ஓர் ஆண்டுக் காலத்திற்குத் தொடரக்கூடாது என்ற தனி உத்தரவினை ஆளுநர்மூலம் பிறப்பித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சிறப்பான நடவடிக்கைகளுக்காக நாட்டு மக்கள் அனைவரும் நமது அரசினை வெகுவாகப் பாராட்டுகின்றார்கள்.

விவசாயிகளுக்கு இன்றைய தினம் பெருமளவிற்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கின்றது என்பதுதான் இன்று எடுக்கப்பட்டுவரும் வறட்சி நிவாரணப் பணிகளின் முக்கிய அம்சமாகும். இப்படி வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலே தென்னாற்காடு மாவட்டத்திலும் சில பகுதிகள் இருக்கின்றன. குறிப்பாக சிதம்பரம், கடலூர், விழுப்புரம் தவிர அந்த மாவட்டத்திலே பல்வேறு பகுதிகளும் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக திண்டிவனம், செஞ்சி மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இங்கெல்லாம் சென்ற ஆண்டு மழையில்லை. இந்த ஆண்டும் தொடர்ந்து மழை இல்லாமல் போய்விட்டது. எனவே வறட்சியால் இந்தப் பகுதிகள் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டுள்ளன. விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டுவிட்டது. ஆனால் இப்போது அரசு எடுத்து வரும் இந்த நடவடிக்கைகளால் அங்குள்ள மக்கள் ஓரளவிற்கு ஆறுதல் பெற்றிருக்கின்றார்கள். இவ்வளவு நன்மைகளைச் செய்துள்ள நேரத்திலே, இன்று விவசாயிகளிடம் ஒரு சிறு குறை இருக்கத்தான் இருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

அங்கே திண்டிவனம் பகுதியில் மட்டுமில்லை, தமிழகம் முழுவதுமே என்றும் சொல்லலாம். கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக அரசு கடன் வசதியைச் செய்து கொடுக்கின்றது. இப்படிக் கடன் வாங்கி ஆழப்படுத்தும் விவசாயிகள் அநேகமாக சிறு சிறு விவசாயிகள் தான். அவர்கள் உள்ள ஆழத்தை மேலும் 10 அல்லது 20 அடி என்று தோண்டினால் போதும் என்று நினைப்பார்கள். ஆனால் ஆழப்படுத்த வேண்டும் என்று அவர்கள் கோரினால் இடையே 700 அடி இருந்தால் தான் உதவி அளிக்க முடியும் என்று சட்டம் இருப்பதால், விவசாயிகள் அந்த உதவியினைப் பெற முடியாதவர்களாக இருக்கின்றார்கள். எனவே அடிக் கணக்கைப் பாராமல் அரசு கடனுதவி அளித்தால் வறட்சி நிலையை ஓரளவிற்குச் சமாளித்து விடுவோம் என்கிறார்கள் அவர்கள். வறட்சி நிலையை உபயோகித்துக் கொண்டு இந்த நேரத்திலே கிணறுகளை ஆழப்படுத்த வேண்டும். இது நல்ல சந்தர்ப்பம். எனவே இப்போது இதைச் செய்ய வேண்டும். எனவே இடையிலே 100 அடியா அல்லது 200 அடியா என்று பாராமல் உதவி அளிக்க வேண்டும் என்று அவர்கள் கேட்கின்றார்கள். நமது முதலமைச்சர் அவர்கள் வறட்சி நிவாரண வேலைகளுக்கு என்று ரூ. 55 கோடி ஒதுக்கி பல பணிகளைத் திட்டமிட்டு செயலாற்றி வரும் இந்த நேரத்திலே போர்க்கால நடவடிக்கைகளை போல பல்வேறுநடவடிக்கைகளை எடுத்து வரும் நேரத்திலே இதையும் சற்று கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உலக வங்கிகூட இதை வற்புறுத்தவில்லை என்று சொல்லுகின்றார்கள். ஆனால் இதிலே ஏதோ சட்டச் சிக்கல் இருப்பதாகச் சொல்லுகின்றார்கள். இவற்றை எல்லாம் தளர்த்தி அடிக்கணக்கைப் பார்க்காமல் உடனடியாக கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு ஏதாவது செய்ய



1975 பிப்ரவரி 26] [திரு. ஏ. தங்கவேல்]

வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட உதவியினை அளித்தாலொழிய பாதிக்கப்பட்ட அந்த விவசாயிகளுக்கு வேறு நிதி வசதி கிடையாது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு இதை அரசாங்கம் சற்று கருணையுடனும் அவசர உணர்வுடனும் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று கிராமப் பகுதியிலே மக்கள் பெரிதும் சிரமப்படுகின்றார்கள். அவர்களுக்குக் கிடைக்கும் வருவாயைக் கொண்டு அரிசி வாங்கிச் சாப்பிடும் நிலையில் அவர்கள் இல்லை. எனவே அவர்களுக்கு சிறு தானியம், கம்பு. கேழ்வரகு, புஞ்சை தானியம் தேவைப்படுகிறது. அதை வேண்டிய அளவிற்கு கிராமப் பகுதிகளுக்கு அனுப்பி அவர்களுக்கு உதவிட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இப்படி தமிழகம் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள நேரத்திலே மத்திய அரசு நமக்கு வேண்டிய உதவிகளை அளிக்க முன் வராமல் ஏதோ மாற்றாந்தாய் மனப்பான்மையில் நடந்துகொள்ளும் முறையைப் பார்க்கும்போது அது மிகவும் வேதனை தரக்கூடியதாக இருக்கின்றது. இப்போது மட்டுமில்லை, வெள்ளைக்காரன் ஆண்ட காலத்தில் கூட நமது நாட்டிலே பஞ்சம் வந்திருக்கின்றது. அந்த நேரத்திலே பர்மாவிலிருந்தும் பிற நாடுகளிலிருந்தும் அரிசியைத் தாராளமாக வரவழைத்துக் கொடுத்து நிலைமைகளை சமாளித்திருக்கின்றார்கள் அவர்கள். தாய்லாந்திலிருந்து அரிசியை வரவழைத்துக் கொடுத்திருக்கின்றார்கள் அந்தக் காலத்திலே. அந்த அளவிற்கு இன்று நாம் பாதிக்கப்பட்டிருந்தாலும், நமது தேவைகளைப் பொருத்த வரையில், மத்திய சர்க்கார் போதிய அக்கறை காட்டாமல் இருக்கிறார்கள். நாம் 30 கோடி ரூபாய் வறட்சி நிவாரண உதவியாக வேண்டும் என்று கேட்டிருந்தோம். அதிலே கூட இதுவரையில் ரூ. 7·5 கோடியைத்தான் தருவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். இப்படி எதை எடுத்தாலும் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு செய்கின்றார்களே தவிர, உள்ளபடியே நமக்கு அவர்கள் உதவுவதற்குத் தயாராக இல்லை என்றுதான் தெரிகிறது. இது மட்டுமில்லை, காவிரி நீர் பிரச்சினையில்கூட நமது முதலமைச்சர் அவர்கள் எவ்வளவோ முயற்சித்தும்கூட மத்திய அரசு தலையிட்டு அவர்கள் கட்சி ஆண்டு கொண்டிருக்கும் கருநாடக மாநிலத்தோடு பேசி அதிலே நல்ல திருப்பத்தைக் கண்டிருக்கலாம். ஆனால் அதிலும் அவர்கள் நமக்குப் பாதகமான முறையில்தான் நடந்து கொண்டிருக்கின்றார்கள் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. இப்படி மத்திய அரசினர் நமக்குப் பல்வேறு விதத்தில் தொந்தரவுதான் கொடுத்துக் கொண்டிருக்கிறார்களே தவிர, உதவுவதற்கு முன் வரவில்லை. சமீபத்தில் நமது பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் சென்னைக்கு வந்து ஒரு நாள் இருந்து உடனே சென்றுவிட்டார்கள். இதைவிட மிகமுக்கியமான வறட்சி நிவாரணப் பணிகளை அவர் பார்த்துவிட்டுச் சென்றிருந்தால், நன்றாக இருந்திருக்கும். இதையெல்லாம் சொல்லும்போது, அங்கே உள்ளவர்கள் நம்மை, ஏதோ எதிர்க்கட்சிக்காரர்கள்—வடநாடு தென்னாடு என்றுதான் நினைக்கின்றார்களே தவிர, உண்மை நிலையை அவர்கள் புரிந்துகொள்ள மறுக்கின்றார்கள். அவர்களுடைய நடவடிக்கைகளைக் கண்டுதான் நாமும் அவர்கள் பேரிலே குறைகளைச் சொல்ல

வேண்டியிருக்கிறது. பிரதமர் அவர்கள் இங்கே வந்து விழாக்களிலே கலந்து கொண்டவர்—தமிழகத்திலே கடந்த 100 ஆண்டுகளாக ஏற்பட்டிராத வறட்சி இன்று ஏற்பட்டிருக்கின்றது—பாதிக்கப்பட்ட பகுதிகளைப் போய்ப் பார்த்திருக்கலாம். ஆனால் அப்படிச் செய்யவில்லை. உள்ளபடி வருந்தத்தக்க செயல் இது. அந்த அளவிற்கு அவர்கள் தமிழ்நாடு ஏதோ செய்துகொண்டிருக்கின்றது என்று நினைக்கின்றாரே தவிர, பேச்சளவில் ஒருமைப்பாடு, ஒருமைப்பாடு என்று அவர்கள் பேசுகின்றார்களே தவிர, செயலளவில் இவையெல்லாம் இருக்கின்றதா என்று பார்த்தால், இல்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்கின்றது.

(பிற்பகல் 5–20)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

அதனாலேதான் நமக்கெல்லாம் இம்மாதிரி சங்கடங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. மின்சாரம் விஷயமாக இங்கே பேசிய, உறுப்பினர்கள் ஏற்கனவே எல்லாவற்றையும் பற்றிச் சொன்னார்கள். மின்சார வாரியம் சரியாக நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. அங்கே தலைமையிலே இருக்கும் அதிகாரிகள் கூடுமான அளவுக்கு எவ்வளவு நன்றாகச் செயல்பட்டு மின்சாரத்தை வழங்க வேண்டுமென்று நினைக்கிறார்களோ, அந்த அளவுக்கு கீழே இருக்கக்கூடிய அதிகாரிகள் சரியான முறையில் பணியாற்றவில்லை. அவர்கள் அதைச் சரியான முறையில் கவனிக்காமல் அசட்டை பண்ணிக்கொண்டு தவறு செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் செய்கின்ற தவறுதான் இங்கே மேலே உள்ளவர்களை வந்து சேருகிறது. புதிதாக மின்சார இலாகா பொறுப்பு ஏற்றுக்கொண்டுள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்களை ஒன்று கேட்டுக் கொள்வேன். கீழ்மட்டத்தில் வேலை செய்கிறவர்களின் தவறுதான் இவ்வளவு பெரிய இன்னல்களை ஏற்படுத்துகிறது. இந்தக் கடுமையான வறட்சி நிலைமையில் விவசாயிகள் ஏராளமான பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உள்ளபடியே மின்சாரம் கொடுக்கவேண்டுமென்றால், தாங்கள் கொஞ்சம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி எடுத்தாலொழிய கீழ்மட்டத்திலுள்ளவர்கள் ஒழுங்காக வேலை செய்யமாட்டார்கள். அந்தக் குறைபாடு எப்போதும் இருந்து கொண்டுதானிருக்கும். நாம் எவ்வளவுதான் வறட்சி நிவாரணப் பணிகளைச் செய்து கொண்டிருந்தாலும் விவசாயிகளுக்குத் தேவையான மின்சாரத்தைக் கொடுத்தால்தான், பயன் ஏற்படும். 60,000 பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் கொடுக்கப் போகிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். இதை அவர்கள் கொடுக்கப்போகிறார்களா என்றால், இல்லை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : துணைத்தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். இப்போது இருக்கும் பிரச்சினை அலுமினியம் கிடைக்கவில்லை என்பதுதான். மின்சார இலாகாவிற்கு "கண்டக்டர்கள்" வேண்டுமென்று சொல்கிறார்கள். அலுமினியம் இல்லாததன் காரணமாக "கண்டக்டர்கள்" வருவதில் தாமதம் ஏற்படுகிறது. அந்த அதிகாரம் மத்திய அரசின் கையில்





தான் இருக்கிறது. நம் அதிகாரிகள் டெல்லிக்குப்போய் வற்புறுத்தியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் திரு மாதவன் அவர்கள் மூலமாகக்கூட மத்திய விவசாய அமைச்சரை வற்புறுத்தியிருக்கிறோம். நாளைக்குச் செயலாளர் செல்லவிருக்கிறார். அந்த அலுமினியம் "கண்டக்டர்கள்" கிடைத்தால், உடனடியாக பம்பு செட்டுகளுக்கு கனெக்ஷன் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். அதிகாரிகளைப்பொறுத்து காலதாமதம் என்று சொல்லமுடியாது.

திரு. ஏ. தங்கவேல் : நன்றி. நம்முடைய அமைச்சர் அவர்கள், "கண்டக்டர்கள்" கிடைப்பதில் உள்ள சங்கடத்தை இங்கே விளக்கமாக எடுத்துக்கூறினார்கள். அது உள்ளபடியே வரவேற்கத் தகுந்தது என்றாலும் கூட, அங்கே உள்ளவர்கள் ஒழுங்குபடுத்தி, முறைப்படுத்திச் செய்யவில்லை என்பதுதான் எல்லோருடைய குறையாகும். அதைத் தவிர்ப்பதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கொஞ்சம் கடுமையான நடவடிக்கையில் இறங்கினால், நன்றாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய தினம் நம்முடைய தமிழக அரசு வறட்சி நிவாரணப் பணிகளுக்காக எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சியைச் சுட்டிக்காட்டி நம்முடைய மேதகு ஆளுநர் அவர்கள் இங்கே ஆற்றிய உரையை வரவேற்று முடிக்கிறேன். வணக்கம்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை உண்மையிலேயே ஒரு சிறந்த உரை, வரவேற்கத்தக்க உரை என்று தெரிவித்துக் கொள்கிறேன். அவருடைய உரையைப்பார்த்தால், அதிலே பெரும் பகுதி வறட்சியைப் பொறுத்துச் சொல்லப்பட்டிருப்பதைக் காணலாம். நாட்டில் வறட்சி ஏற்பட்டு மக்கள் அவதியுறும் சமயத்தில் மற்ற பிரச்சினைகளையெல்லாம் விட்டுவிட்டு வறட்சிப்பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது, பாராட்டத்தக்கது. அந்த அம்சத்திலே அவருடைய உரைக்கு முஸ்லீம் லீக் கட்சியின் சார்பிலே நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு தமிழகத்திலே கண்டுள்ள வறட்சிபற்றி நிபுணர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், சுமார் 100 ஆண்டுக் காலத்தில் இந்த அளவுக்கு மழை பற்றாக்குறையாக இருந்ததில்லை என்கிறார்கள். அப்படியென்றால், சரித்திரம் கண்டிராத அளவுக்கு மழை குறைவாகப் பெய்திருக்கிறது என்ற பொருளில் வருகிறது. சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு, என்னுடைய வாலிபப் பருவத்திலே வங்கத்தில் வறட்சி ஏற்பட்ட செய்தியைப்படித்தது இன்றைக்கும் எனக்குத் தெளிவாக நினைவிருக்கிறது. அப்போது பாங்களாதேஷ் இல்லை. கிழக்கு வங்கம், மேற்கு வங்கம் என்றில்லை. ஒன்றுபட்ட வங்காளம்தான் இருந்தது. அங்கே ஏற்பட்ட வறட்சியிலே பட்டினிச் சாவுகள் ஏற்பட்டன. ஒன்று இரண்டு அல்ல; ஆயிரம், இரண்டாயிரம் அல்ல, பல லட்சம் பேர் பட்டினியால் செத்தார்கள். அதைவிடக் கடுமையான வறட்சி இன்றைக்கு தமிழகத்தை எதிர்நோ

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்] [1975 பிப்ரவரி 26

யிருக்கிறது. ஆனாலும், பட்டினிச்சாவு எத்தனை என்று பார்த்தால், இன்றையவரைக்கும் ஒன்றுகூட இல்லை என்று உறுதியாகச் சொல்லலாம். ஆனால் பொய்ப் பிரச்சாரங்கள் செய்யப்படுகின்றன. அன்றைக்கு வறட்சியால் பல லட்சம் பேர்கள் செத்தார்கள். அதைவிடத் தீவிரமான வறட்சியில் இன்று ஒரு மனிதன் கூட சாகவில்லையென்றால், என்ன காரணம்? அன்றைக்கு ஆங்கிலேயனுடைய ஆட்சி; இன்றைக்கு கலைஞருடைய ஆட்சி. அன்றைக்கு இரண்டாவது உலக மகாயுத்தம் நடந்துகொண்டிருந்தது. அவர்கள் கவனம் எல்லாம் யுத்தத்தில் இருந்தது. யார் இருந்தால் என்ன, யார் மடிந்தால் என்ன என்று அக்கறையில்லாமல் பிரச்சினைகளைக் கையாண்டதின் காரணமாக, லட்சக் கணக்கானோர் செத்தார்கள். இன்றைக்கு ஓர் உயிர் கூட இழக்கக்கூடாதென்ற அக்கறையுடன் சகல பணிகளையும் ஒத்திவைத்துவிட்டு, வறட்சிப்பணிகளுக்கே தன்னை அர்ப்பணித்துக்கொண்டுள்ள தமிழக அரசு எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கையின் காரணமாக, ஒரு சாவுகூட இல்லை. இதற்காக, 55 கோடி ரூபாய் தேவைப்படுகிறதென்று பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. அதிலே 25 அல்லது 30 கோடி ரூபாயை தமிழக அரசு சார்பிலே செலவுசெய்ய ஆரம்பித்துவிட்டார்கள். 25 அல்லது 30 கோடி ரூபாயை தமிழக அரசு செலவு செய்கின்றது என்றால், எந்தச் சூழ்நிலையில் என்பதை நாம் பார்க்கவேண்டும். சென்ற ஆண்டு மதுவிலக்கை மீண்டும் அமுல்படுத்த நமது அரசு தீர்மானித்தது. அதன் மூலம் சுமார் 150 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. அந்த நிலையிலேதான், மேற்கொண்டு 30 கோடி ரூபாயைச் செலவு செய்கிறது என்றால், அது சாதாரண வேலையல்ல. அதற்கு மிக்க துணிச்சல் வேண்டும். அவர்களின் துணிச்சலான முயற்சிக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தமிழக அரசு மத்திய அரசிடம் 30 கோடி ரூபாய் தருமாறு கேட்டுள்ளது. ஆனால் $7\frac{1}{2}$ கோடி ரூபாயைத்தான் கொடுப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அந்தச் செய்தி நம்மையெல்லாம் வேதனையுறச் செய்கிறது. இதற்கு முன்பு, அதாவது 5, 6 ஆண்டுகளுக்கு முன்பு ஒருமுறை தமிழகத்தில் வறட்சி ஏற்பட்டது. இது போன்றது அல்ல அது. வறட்சி மிகவும் குறைவான நிலையில இருந்தது. அப்போது மத்திய அரசு 17 கோடி ரூபாய் கொடுத்ததாக எனக்கு நினைவிருக்கிறது. இப்போது 7 கோடி ரூபாய் கொடுத்துவிட்டு 30 கோடி ரூபாய் பற்றி ஆராய்ச்சி செய்கிறோம் என்று சொல்லக்கூடிய கருத்து உயிர்களுடன் விளையாடுவது என்றுதான் சொல்லவேண்டும். இதில் பேரம் கூடாது. மனமுவந்து, பெரிய மனது செய்து உடனடியாக தமிழகத்தின் கோரிக்கையை மத்திய அரசு நிறைவேற்றவேண்டுமென்று நான் வற்புறுத்திக்கேட்டுக்கொள்கிறேன். வறட்சிப்பகுதிகளை நானும் சென்று பார்த்தேன். குறிப்பாக ஆர். எஸ். மங்கலம் என்ற ஊரில் ஒரு கண்மாய் இருக்கிறது. தமிழகத்திலே உள்ள கண்மாய்களிலே, அது இரண்டாவது பெரிய கண்மாய். தமிழகத்திலுள்ள பெரிய கண்மாய் வீராணம் ஏரிதான். அடுத்த கண்மாய் ஆர். எஸ்



1975 பிப்ரவரி 26] [திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

மங்கலத்தில் உள்ளதாகும். அந்த ஊரிலுள்ளவர்களை இதுபற்றி விசாரித்தேன். 70 வயது மூதியவர் ஒருவரிடத்திலும் இதுபற்றிக் கேட்டேன்.

(பிற்பகல் 5-30)

"உங்களுக்கு வயது அதிகமாக ஆகின்றது, உங்கள் ஆயுள் காலத்திலே எப்போதாவது இந்தக் கண்மாய் வரண்டு இருந்ததை, தண்ணீர் இல்லாமல் இருந்ததைப் பார்த்ததுண்டா?" என்று கேட்டேன். "என் ஆயுள் பூராவும் என்றைக்குமே இப்படி நான் பார்த்ததில்லை, இன்றைக்குத்தான் முதல் தடவையாக பூரா கண்மாயும் காய்ந்து கிடக்கின்றது. வறண்டு கிடக்கின்றது" என்ற கருத்தினை அவர்கள் சொன்னார்கள். வறட்சியினுடைய கடுமை எந்த அளவுக்கு இருக்கின்றது என்று நாம் இதிலிருந்து யூகித்துத் தெரிந்து கொள்ளலாம். மக்களுக்கு உதவி செய்யவேண்டுமென்ற நோக்கத்திலே ரோடுகளைப்போட்டிருக்கிறார்கள். கண்மாய்களை ஆழப்படுத்துகின்றார்கள். பாலங்கள் கட்டுகின்றார்கள். அந்த வறட்சிப் பகுதியிலே மக்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுத்து, அவர்கள் ஊதியம் பெற்று ஏதாவது கைக்குக் காசு கிடைத்தால் ஜீவனத்திற்கு ஏதாவது வழிசெய்யலாம் என்ற அடிப்படையிலே செலவு செய்யப்படுகிறது. ஆனால் ஒருபகுதியினர் என்னிடத்திலே குறை சொன்னார்கள். இப்படி ரூபாய் கொடுக்கின்றார்கள். எல்லோருமே உடல் திடகாத்திரமாக வேலை செய்து சம்பாதிக்கக் கூடியவர்களாக இல்லை. வயது முதிர்ந்தவர்களால் வேலை செய்ய முடியவில்லை. உடல் பலஹீனமாக உள்ளவர்கள், அங்கஹீனர்கள் ஆகியவர்களால் வேலை செய்ய முடியவில்லை. இவர்களுக்கெல்லாம் ஒரு பாதுகாப்பும் இல்லை என்ற நிலை இருக்கின்றது. அவர்களுக்குக் கடன் உதவி செய்து கொஞ்சம் தவணைவைத்து ரூபாய் வாங்கிக்கொள்ளக்கூடிய அளவுக்கு ஏதாவது செய்யவேண்டும். கொஞ்சம் வசதி உள்ளவர்கள் ஏதாவது ஈட்டின் பேரில் ரூபாய் அவர்களுக்குக் கொடுத்து உதவ வேண்டும் என்ற கருத்தை நீங்கள் அரசிடம் வற்புறுத்த வேண்டும் என்ற கருத்தினை என்னிடத்தில் சொன்னார்கள். அரசு அந்தக் கருத்தின்மீது கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த உழைப்பவர்களுக்கு விநியோகிக்கப்படும் அரிசி மிகவும் குறைவாக இருக்கிறது. மற்ற இடங்களிலே உள்ளவர்களுக்குக் கொடுப்பதுபோல்தான் அவர்களுக்கும் கொடுக்கிறார்கள். அது போதுமானதாக இல்லை. அந்த வறட்சிப் பகுதிகளுக்குக் கொஞ்சம் கூடுதலான அரிசி கொடுக்க சிபாரிசு செய்யுங்கள் என்றும் என்னிடத்தில் சொன்னார்கள். அதையும் அரசு கவனிக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்ளுகிறேன். கவர்னர் பெருமான் அவர்கள் மத்திய அரசாங்கத்தினுடைய பிரதிநிதி. அவருடைய உரையைப் பார்த்தால், பல இடங்களிலே மத்திய அரசை அவர்கள் வற்புறுத்தி கூடுதலான உதவி செய்யுங்கள். உடனடியாக உதவி செய்யுங்கள் என்று சொல்லும் சொற்கள் பல இடங்களில் வருகின்றன. தன்னுடைய எஜமானரையே வற்புறுத்தி பணியவைக்கும் அளவுக்குச் சொல்கிறார்கள். மத்திய அரசாங்கத்தினுடைய பிரதிநிதியாகிய அவருடைய கோரிக்கையில் எந்த அளவுக்கு நியாயம் இருக்கின்றது என்பதை மத்திய அரசு புரிந்துகொண்டு உடனடியாக

உதவி வேலையிலே அவர்கள் ஈடுபடவேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன். இன்றைக்கு விவசாய அறுவடை நடந்துகொண்டிருக்கும் கட்டம். இந்த அறுவடையிலே லெவி வாங்குகிறார்கள். வாங்கக் கூடிய லெவி மிகவும் அதிகமான அளவில் இருக்கின்றது என்று மக்களிடத்திலே பெரும் கூக்குரல் எழுப்பப் பட்டிருப்பதை நாங்கள் காண்கிறோம். நிலச்சுவான்தார்களும் கத்துகிறார்கள். உழைப்பவர்களும் கத்துகிறார்கள். இரண்டு சாராரிடத்திலும் அரசு கெட்ட பெயர் எடுக்கக்கூடிய வகையிலே தான் லெவியை நிர்ணயித்திருக்கின்றது. பார்க்கும்போது நியாயமானதாகவே தெரியவில்லை. 2¼ ஏக்கர் ஒருவர் வைத்திருக்கிறார் என்றால், அவருக்கு உற்பத்தியாகக் கூடியது 45 மூட்டைகள். அதில் 35 மூட்டைகள் லெவி கொடுக்கச் சொல்லுகிறார்கள். மிச்சம் இருப்பது 10 மூட்டைகள்தான். மீதியிருக்கின்ற இந்த 10 மூட்டையையும் உழுபவர்களும், நிலச்சுவான்தார்களும் பகிர்ந்துகொள்வார்கள். ஆக, 45 மூட்டை நெல் விளைச்சலானால், 35 மூட்டை லெவி கேட்கின்றார்கள். என்ன நியாயம்? கேட்கும்போதே அநியாயமாகத் தெரிகின்றது.

அதுமட்டுமல்ல. தாங்கக் கூடிய அளவிலே லெவியின் விலையும் இல்லை. அவர்கள் ஏதோ 57 ரூபாய் கொடுக்கின்றார்கள். திருச்சியைப் பொறுத்த மட்டில் நான் தெரிந்துகொண்டது இதுதான். 57 ரூபாய் ஒரு மூட்டைக்குக் கொடுக்கின்றார்கள். அது பஜாரிலே என்ன விலை என்றால் 130 ரூபாய் ஒன்றுக்கு மூன்று விலைக்கு பஜாரிலே போகிறது. இவ்வாறு இந்த விலை கொடுத்து லெவி என்ற பெயரிலே வாங்கப்படுவது நியாயமா? இவ்வளவு வித்தியாசத்தில் லெவி வாங்குவது நியாயமில்லை என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். பஜாரிலே என்ன விலை இருக்கின்றதோ அதிலே ஒரு 25 சதவீதம் குறைவாகக் கொடுத்து லெவி வாங்கலாம். கொடுப்பவர்களும் மகிழ்ச்சியுடன் கொடுப்பார்கள். மற்றொரு புதிய சட்டத் திருத்தம் என்ன கேள்விப்படுகிறேன் என்றால், ஒருவர் தன் வீட்டில், முன்பெல்லாம் 65 மூட்டைகள் வரைக்கும் ஸ்டாக் வைத்துக்கொள்ளலாம். அது ஸ்டாக், கணக்குக் கொடுக்க வேண்டியதில்லை. ஒருவர் 65 மூட்டைகள் வரைக்கும் வைத்துக் கொள்ளலாம். இப்போது குறைத்து 35 மூட்டைக்குமேல் வைக்கக் கூடாது என்கிறார்கள். நான் சொல்கிறேன், ஒரு நிலச்சுவான்தாராக இருந்தாலும் சரி, அல்லது உழவராக இருந்தாலும் சரி, ஒரு வருஷத் தேவைக்குரிய சரக்கு அவர்கள் வைத்துக்கொள்ள அனுமதி கொடுக்க வேண்டும். குறுவை அறுவடையிலே அவர்களுக்கு அடுத்த பாதி வரும் என்று சொல்கிறார்கள். குறுவை அறுவடை எல்லா நிலங்களிலும் ஏற்படுவதில்லை. ஒரேயொரு தடவை விளைச்சல் வரக்கூடிய நிலங்கள் எத்தனையோ அதிகமாக இருக்கின்றன. அப்படிப்பட்ட நிலங்களையெல்லாம் நம்பி எப்படி இருப்பது? ஆகவே ஒரு வருஷம் ஸ்டாக் என்று வைப்பது, குறைந்த பட்சம் 65 மூட்டைகள் என்று முன்பு இருந்ததே அந்த அடிப்படையைக் கையாள வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.





அரசு குதிரைப் பந்தயத்தை நிறுத்தப் போகிறது என்ற ஒரு நல்ல செய்தியை நமக்கெல்லாம் அளித்தது. ஆனால் நடைமுறையில் பார்த்தால், சென்ற ஆண்டு அதை ஒத்திவைத்து இந்த ஆண்டு மறுபடியும் அதை நடத்துவதாக இருக்கின்றோம். வரக்கூடிய செய்திகளைப் பார்த்தால், அடுத்த ஆண்டும் மறுபடியும் ஒத்திவைத்து குதிரைப் பந்தயம் நடக்கும் என்ற நிலைதான் இருப்பதாக நாம் அறிகிறோம். இது மிகவும் வருந்தத்தக்க ஒன்று. இந்த ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அகில இந்தியாவுக்கே அது வழிகாட்டியாக அமையும் . நமது தமிழகத்திற்குப் பெருமையளிக்கக்கூடிய ஒரு நல்ல திட்டம். இதை மறுபடியும் ஒத்திவைக்காமல் உடனடியாக அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மாண்புமிகு ஆளுநர் அவர்களுடைய உரைமேல் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, முடித்துக்கொள்ளுகிறேன்.

<u>தவத்திரு குன்றக்குடி அடிகளார்:</u> மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தடவை இந்த சபை கூடியிருக்கின்றபோது, தமிழகத்தினுடைய தென்பகுதி இடங்கள் மிகக் கடுமையான வறட்சி நிலைமைகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, கடந்த 100 ஆண்டுகளில் இப்படிப்பட்ட வறட்சியை நம்முடைய மாநிலம் சந்தித்ததில்லை. ஆயினும் ஒரேயொரு மனநிறைவைத் தருகின்ற செய்தி என்னவென்றால், துன்பங்கள் எவ்வளவு கடுமையாக வந்தாலும், அந்தத் துன்பத்தை உடனடியாகச் சமாளிக்கின்ற ஒரு துணிவு, ஒரு செயல்முறை நம்முடைய அரசினிடத்திலே இருந்ததென்பது பாராட்டுதலுக்குரியது. என்றார் திருவள்ளுவர். துன்பத்துக்குத் துன்பத்தைக் கொடுப்பவர்கள் 'இடும்பைக்கு இடும்பைபடுப்ப' வெற்றிபெருவார்கள் என்பது வள்ளுவருடைய வாக்கு. அந்த அடிப்படையில் விரைந்து செயல்பட்டதினாலே அந்த வறட்சியினுடைய பாதிப்புகள் தவிர்க்கப் பட்டிருந்தாலும், இன்னும் நம்முடைய கவனத்திற்கு உரிய செய்திகள் பலவாக இருக்கின்றன. குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் திருவாடானை, முதுகுளத்தூர் வட்டாரங்கள், திருப்பத்தூர் தாலுக்காவிலே கூட பல பகுதிகள் ஆகியவற்றில் குடி தண்ணீருக்குக்கூட சிரமப்படுகின்ற நிலைகள் ஏற்பட்டிருக்கின்றன. அதனால் விரைவாகக் குடிதண்ணீர் கிணறுகளை ஆழப்படுத்துகிற முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அப்படி மேற்கொள்ளுகிறபோது,—எனக்குத் தெரிந்த செய்திகள்—ஆழ் கிணறுகளாகத் துளை போடுகிற கருவிகள் நம்மிடம் தேவையான அளவுக்கு இல்லை என்று தெரிகிறது. மற்ற மாநிலங்களிலுள்ள அரசுகளும் இது பற்றி நடுவண் அரசைக் கேட்டிருப்பதாகத் தெரிகிறது. மிலிட்டரியிலுள்ள போரிங் மெஷின்ஸை வாங்கி ஆழமாகப் போட்டால் தான், நமக்குத் தண்ணீர் கிடைக்க முடியும். சேர்ந்தாற்போல் இரண்டு ஆண்டுகளாக மழை இல்லாததால் 40 அடி, 50 அடி, 100 அடியில் எல்லாம் தண்ணீர் கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. குறைந்த பட்சம் 250 அடி 300 அடி போனால்தான், தண்ணீர் கிடைக்க முடியும். அவ்வளவு ஆழக் கிணறுகளை நாம் சுலபமாகவும், விரைவாகவும் போடவேண்டுமென்றால், மிலிடெரியிலிருந்து நமக்கு போரிங் மெஷின்ஸ் வாங்கி விரைவாக தொழில் செயல்பாடு செய்யவேண்டுமென்பதை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

[தவத்திரு குன்றக்குடி அடிகளார்] [1975 பிப்ரவரி 26

அடுத்து, வறட்சி நிவாரணப் பணிகளாக கண்மாய்கள், ஏரிகள் வெட்டு கிற வேலைகள் விரைவாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. அது மிகுந்த மனநிறைவைத் தரக்கூடியதாக இருக்கிறது. அது பாராட்டு தலுக்குரிய செய்தி. "ரெட்டேபிசம்" என்று சர்க்கார் இலாக்காவில் சொல்லக்கூடிய முறைகளையெல்லாம் மாற்றி, மிகுந்த விரைவாக அந்த வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன ஆயினும் கூட ஏற்கனவே வறட்சி யின் காரணமாக, மண் கெட்டியாக போயிருப்பதின் காரணமாக, வெட்டுகிற தொழிலாளர்கள் தங்களுடைய தேவைக்குரிய ஊதியத்தைப் பெறக்கூடிய அளவுக்கு வெட்ட முடியாமல் மிகுந்த சங்கடப்படுகிறார்கள். எனவே, இந்த மாதிரியான வறட்சி நிவாரண காலங்களுக்கு என்றாவது மதிப்பீட்டின் மீது ஏதாவது 50 விழுக்காடு அதிகமாக விகிதாச்சாரம் கொடுத்து, அவர் களுக்குத் தன்னிறைவான கூலி கிடைக்கும்படி செய்ய முடியுமா என்று அரசு பரிசீலிக்கவேண்டும்.

சாதாரணமாக இந்த மாதிரிக் கடுமையான காலங்களில் கூத்தாரம், பிக்காசு போன்றவைகளைப்போட்டு வெட்டினால் கூட, வெட்ட முடியாமல் இருக்கிறது. இதையெல்லாம் நான் நேரடியாகவே பார்த்தேன். மிகவும் சங்கடப்படுகிறார்கள். தேவைக்கான உணவும் இல்லை. இப்படியான ஒரு சங்கட காலத்தில் அவர்களுக்கு நாம் பழைய ஷெடியூல் ரேட்டில் கூலி கொடுத்தால், அது கட்டுபடியாகாது. எனவே, இந்த ஒரு 6 மாத காலத்துக்கு இந்த வறட்சி நிவாரணப் பணிகளிலே வேலைசெய்கிற தொழிலாளர்களுக்கு மட்டுமாவது மதிப்பீட்டின் மீது ஏதாவது விகி தாச்சாரத்தைக் கூட்டிக்கொடுத்தால், அவர்களது தற்காலத் தேவைக்கு மிகவும் உதவியாக இருக்கும். அதை நம்முடைய அரசு பரிசீலிக்க வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள்.

(பிற்பகல் 5-40)

அதே போலவே நேற்று நான் கோவையிலே பார்த்தபோதுகூட, பல தென்னந்தோப்புகளில் மரங்கள் பட்டிருக்கின்றன. நமக்கு விலை மதிப்புள்ள தென்னந் தோப்புகள், மற்ற மரங்கள் இந்த வரட்சியின் காரணமாகப் பாதிக்கப்பட்டு விடாமல் இருப்பதற்கு அந்த மாதிரியான தோப்புகள் இப்போதே கிணறுகள் இருக்கின்றனவா, தண்ணீர் இறைத்து அவைகளைப் பாதுகாத்துக் கொள்ள முடியுமா என்பதை இந்த அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு முயற்சித்தால், இன்னும் இரண்டு மூன்று திங்களில் வருகின்ற பாதிப்பிலுல் நம்முடைய பொருளாதாரம் பாதிக்கப்படாமல் காப்பாற்றிக்கொள்ள முடியும். காரணம் நமக்கு அயல் நாட்டுச் செலாவணி கிடைப்பதிலே தென்னை மரம், முந்திரி இவைகள் மிக மிக்கியமானவை. அவைகளை தண்ணீர் பற்றுக்குறையால் பட்டுப்போய் விட விட்டுவிடுவோமானால், நெடிய பொருளாதாரப் பாதிப்புகள் ஏற்பட்டு விடும். இப்போதே அரசு வேளாண்மைத் துறையின் மூலம் தக்க புள்ளி விவரங்களைச் சேகரித்து, அந்த மாதிரி பெரிய அளவில் அயல் நாட்டு செலாவணியைக் கொடுக்கின்றவைகளையெல்லாம் பாதிக்கா மல் பாதுகாக்க வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.



1975 பிப்ரவரி 26] [தவத்திரு குன்றக்குடி அடிகளார்]

கிராமங்களில் எல்லாம், திரு. அப்துல் வகாப் அவர்கள் கூறியது போல, தானியங்கள் வழங்குகின்றார்கள். அவர்களுடைய மெய்காட்டுக்கு, உடல் உழைப்புக்குத் தகுந்த தானியங்கள் வழங்க முடியாமல் இருக் கின்றது. நகரங்களிலே கொஞ்சம் கூட வழங்குகின்றார்கள் என்று சொல்லுகின்றார்கள் நமக்கு என்ன நினைப்பு இருக்கிறது என்றால், கிராமங்களில் தான் தானியம் உற்பத்தியாகிறது என்று. அங்கே இப்போது நகரங்களிலே இல்லை என்று நினைக்கின்றார்கள். நகரங்களிலே பணப்புழக்கம் இருக்கிறது. ஒரு ரூபாய்கூட இருந்தாலும், கொடுத்து வாங்கிவிடுவார்கள்.

கிராமங்களிலே பணப் புழக்கமும் இல்லாமல் தானியப் புழக்கமும் இல்லாமல் இருப்பதினாலே, கிராம மக்கள் மிகுந்த பாதிப்புக்கு ஆளாகி யிருக்கின்றார்கள். நகரங்களிலே பொருளாதார பாதிப்பு ஏற்படுகின்ற நேரத்தில், அதிகக் கூலியை வேலைக்காரர்கள் கேட்டு வாங்கி விடுவார்கள். ரூ. 2 என்பதை ரூ. 4 என்று வாங்கிவிடுகிறார்கள். ஆனால் கிராமங் களில் இன்னும் வேலை வாங்குகிறவர்களிடம் வேலை செய்பவர்கள் பணம் கேட்டு வாங்கும் பழக்கம் வரவில்லை. கிராமங்களில் தானியங்கள் வழங்கு வதில் கொஞ்சம் அதிகச் சலுகை காட்ட வேண்டும். கம்பு, சோளம், போன்ற தானியங்களை கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாவது, மார்க்கெட்டிங் சொசைட்டிகள் மூலம் மற்ற மாநிலங்களிலிருந்தாவது வரவழைத்து ரேஷன் கட்டுப்பாடு இல்லாமல் கிராம மக்களுக்குக் கொடுக்க வேண்டும். அதற்கு வசதியாக அங்கங்கே கூட்டுறவுச் சங்கங்கள் வைத்து தானியங்களை வினியோகிக்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத இடங்களில் மக்கள் கமிட்டி போட்டு விநியோகம் பண்ண வேண்டுமென்று ஒரு புது விதி வைத்திருக்கின்றார்கள். இந்த முறை அரசுக்கு மிகுந்த சிக்கல் உண்டாக்கும். தேவையற்ற அரசியலை உண்டாக்கும். கூட்டுறவுச் சங்கங் கள் மூலம் தானியங்கள் வினியோகிப்பதற்கு கூட்டுறவு இலாக்காவை உடனடியாகக் கேட்டுக் கொள்ள வேண்டும். அதற்கான கூட்டுறவுச் சங்கங்களை உடனடியாக அங்கங்கே தோற்றுவிக்க வேண்டும். நான்குபேர்கள் கொண்ட கமிட்டியைப் போட்டால், யார் முதலீடு செய்வது, யார் எடுத்துக் கொண்டு வருவது, அதிலே ஏற்படுகிற குறைகளுக்கெல்லாம் யார் பொறுப் பேற்பது என்ற சிக்கல்கள் எல்லாம் ஏற்பட்டு விடும். இராமநாதபுரத்தில் பல கிராமங்களில் இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாவது வழங்குகின்ற முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன். அடுத்து, சில இடங்களில் செய்யப்படுகின்ற போக்குவாத்துச் சேவைகள் போன்றவற்றிற்கு என்ன செய்வது என்பது பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. அரசு முடிந்தால் விதியிலேயே ஏதாவது மாற்றம் செய்ய பரிந்துரை செய்யலாம் என்று கேட்டுக்கொள்கின்றேன். அவர்களுக்கு நெல் இன்றி யமையாத தேவை. காரணம் திருக்கோயில்களிலே பணி செய்கின்றவர் கள் நாள் ஒன்றுக்கு ரூ. 2 அல்லது 2 சாதம் என்று பெறுகின்ற பல பேர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் இப்போது வெளியே போயும் வேலை செய்ய முடியவில்லை. அங்கே நெல்லும் இல்லை என்று சொன்னால் மிகுந்த பாதிப்புக்கு ஆளாவார்கள். எனவே திருக்கோயில்கள் போன்ற வற்றிற்குத் தேவையான நெல்லுக்குக் கூடுமானவரையில் அவசியம் ஏற் பட்டால் விதியிலிருந்து விலக்கு கொடுப்பது ரொம்பச் சிறந்தது. திருக் கோயில்களுக்கு விதியிலிருந்து விலக்கு கொடுப்பது என்பதற்கு அரசு

யோசிக்குமானால், வெளியிலே ஒரு புறம் கொள்முதல் செய்துகொண்டு இன்னொரு புறம்நியாயமான விலைக்கு அந்தக்கோயில்களுக்குகொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அரசுக்குத்தேவைப்படுகின்றபோதுநாங்கள் தியாகம் செய்ய வேண்டும். அப்படிச் செய்யும் போது, கோயில் சிப்பந்திகள் பாதிக்கப்படாமல் செய்ய வேண்டும். பெரும்பாலும் எல்லோருக்கும் தெரிந்த செய்தி. நாம் சொல்வது கோயிலிலே இருக்கின்ற சாமிக்குக் காட்டி எடுத்துக்கொண்டு வருவதை அங்கே வேலை செய்கின்ற ஊழியர்கள் சாப்பிடுதவற்குத்தான். அவர்கள் பாதிப்புக்கு ஆளாகக்கூடாது என்பதினாலே இதை எடுத்துச் சொல்லுகின்றேன். லெவியைப் பொறுத்த வரையிலே, அரசுக்கு நெருக்கடி ஏற்படுகிறபோது, நாம் ஒவ்வொருவரும் பாதிக்கப்படத்தான் செய்வோம். அதிலே நாம் அனைவரும் சகிப்புத் தன்மையுடன்தான் நடந்துகொள்ள வேண்டும். முயற்சி எடுத்தாலும் இரண்டு மூன்று திங்கள் காலத்திற்கு அதிக பாதிப்பு ஏற்படும் என்று தெரிகிறது. இன்னும் நடுவண் அரசிலிருந்து நமக்கு எவ்வளவு தானியங்கள் வருகின்றன என்று தெரிந்துகொள்ள முடியவில்லை. இந்த மாதிரியான கால கட்டங்களில் அரிசிக் கொள்முதல் முதலியவற்றில் கட்டுப்பாடாக இருந்து கொள்முதல் செய்து பத்திரப்படுத்துவது தவிர்க்க முடியாதது. அது அரசின் அவசியமான கடமை என்று கூட நான் கருதுகிறேன். இருந்தாலும் கோயில்களில் இருக்கின்ற ஊழியர்களும் மக்களாகக் கருதப்பட வேண்டியவர்கள் என்று கருதி அவர்களுக்கும் வழங்க வேண்டுமென்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, ஒரு முக்கியமான செய்தி. முன்னர்கூட அற நிலைய அமைச்சர் அவர்கள் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கின்றேன் என்று நினைக்கின்றேன். நம்முடைய நாட்டில் கால் நடைகள் மிகக் கடுமையாகக் கேரளவுக்கு கடத்தப்படுகின்றன என்று சொல்லுகின்றார்கள். இந்தப் பணி தொடர்ந்து நடந்துகொண்டு வருகின்றது. சாரி சாரியாக நம்முடைய கால் நடைச் செல்வம் வற்ற அடிக்கப்படுகிறது. அதுவும் இன்றைக்கு நம்முடைய வறட்சி பாதிப்பின் காரணமாக. . . . .

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : இப்போது கர்நாடகத்துக்கும் போய்க்கொண்டிருக்கின்றது என்று சொல்லுகின்றார்கள்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவரவர்களே, இப்போது கர்நாடகத்துக்கும் கடத்தப்படுகின்றது என்று சொல்லுகின்றார்கள். அதிலும் வறட்சிக் காலத்தில் ஏழை ஜனங்கள் தங்களுடைய உடைமையாக இருக்கின்ற கால்நடைகளை மிகக் குறைந்த விலைக்கு விற்கிற பரிதாப நிலைக்கு ஆளாகி வருகின்றார்கள். ஆகையால் மற்ற பொருள்கள் கடத்தல் செய்வதைத் தவிர்க்க எப்படி பாதுகாப்புகளை எல்லைப் புறத்தில் வைத்திருக்கின்றோமோ, அதே போல நம்முடைய கால்நடைகளைக் கடத்தாத வண்ணம் இருப்பதற்கு வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று விரும்பி வேண்டிக்கேட்டுக்கொள்கின்றேன். இப்படித் தொடர்ந்து செய்து கொண்டிருந்தால், நிச்சயமாக நான் சொல்லுகிறேன், இன்னும் 5 ஆண்டுக் காலத்தில் நம்முடைய கால்நடைச் செல்வம் இல்லாமலே வற்றிப் போய்விடுமோ என்ற பயங்கரமான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.





இதையும் நம்முடைய அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு ஆவன செய்ய வேண்டும். அதுவும் இந்த வறட்சி கால கட்டம் ஏற்பட்டவுடன் வட்டிக் கடைக்காரர்கள் உடனடியாகக் கடைகள் விரித்து விட்டார்கள். ஆதலாலே பாத்திரம், பண்டங்கள், கால்நடைகள் எல்லாவற்றையும் அவர்கள் குறைந்த விலைக்கு விற்றுவிடுவார்கள். அதனால் அவர்களுடைய அடுத்த தலைமுறையினர் நிராதரவாக விடப்பட்டு விடுகின்ற பயங்கரமான நிலை ஏற்பட்டிருக்கின்றது. இந்த மாதிரிச் சூழ்நிலையில் மத்திய காலக் கடனை கூட்டுறவு வங்கிகள் வாயிலாக சிறப்புக் கடன்களை வழங்கி, அவர்கள் தங்களுடைய உடைமைகளை விற்காமலும், ஈடு வைக்காமலும், ஒத்தி வைக்காமலும் அவர்களைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய வசதிகளை உண்டாக்க வேண்டும். அங்கங்கே உஷார் கமிட்டிகள் அமைத்துக் கூட, அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள அவர்கள் ஒத்தி வைத்து ஏமாந்து போய் தங்கள் உடைமைகளை இழந்துவிடாமல் பாதுகாக்கப்பட வேண்டும். இனிமேல் இந்தக் குறிப்பிட்ட கால கட்டத்தில், இந்த ஆறு மாதக் காலத்திற்கு அவர்கள் தங்களைத் தற்காத்து கொள்வதற்காக, வட்டிக் கடைகளை நடத்தாமல் செய்ய நம்முடைய கூட்டுறவு வங்கிகள் மூலம் ஏதாவது சிறப்புக் கடன்கள் போல வழங்கவேண்டும். அவர்களைப் பேணிக் காக்க வேண்டும், அந்த வசதிகள் அவர்களுக்கு ஏற்படவேண்டும். அதை உடனடியாகச் செய்யவேண்டும். நாம் கொஞ்சம் காலம் தாழ்த்தினாலும்கூட, பலர் தங்களுடைய நிலத்தை விற்றுவிடுவார்கள், அல்லது ஒத்தி வைத்து விடுவார்கள். பாத்திரம் பண்டங்களை எல்லாம் இழந்து விடுவார்கள். இது ஒரு பெரிய சூறையாடியதைப் போல, பன்னர் கிராமங்கள் ஆகிவிடும் என்று அரசின் கவனத்துக்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

அது போலவே, கவர்னர் அவர்கள் அவரது உரையில் வேளாண்மைக்கு உரிய விதைகளைக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது என்று சொல்லுகின்றார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் நாம் அதை இப்போதே தயாராக வைத்திருப்பது அல்லாமல் அதை எப்படி வினியோகிப்பது என்பதை நாம் தெரிந்துகொள்ள வெண்டும். நிச்சயமாக வாங்க அவர்களுக்கு கையிலே காசு இருக்காது. அவர்களுக்கு எந்தவிதமாக விநியோகிப்பது என்பது பற்றி ஒருகொள்கை கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இப்படி மூன்றுவிதமான செய்திகளை நான் அரசினுடையகவனத்திற்குக் கொண்டுவருகின்றேன்.

இப்போது அரசு எடுத்திருக்கின்ற பொறுப்புள்ள கடமைகளையும் பணிகளையும் பொறுத்து எனது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வேண்டிய குடிநீர்ப் பிரச்சினையைக் கவனிப்பதற்கு உடனடியாக ஆழ் கிணறுகளைத் தோண்டவேண்டு மென்பதும், அதற்கு நடுவண் அரசின் மூலம் துளை போடும் கருவிகளையெல்லாம் வாங்கி விரைவாகச் செயல்பட வேண்டும் என்பதும் என்னுடைய பணிவான வேண்டுகோள். கிராமங்களில் உள்ளவர்கள் நகரங்களில் இருப்பவர்கள் போல கையிலே பணம் இல்லாதவர்களாக இருக்கின்றார்கள். அவர்களுக்குத் தானியங்களைத் தாராளமாக வழங்குகின்ற முயற்சியில் ஈடுபட வேண்டும். லெவி போடுகின்ற இடங்களில் அரசு அரிசி வழங்க முடியாது என்று இருந்தா

னும், இப்போது நடுவண் அரசு ஒவ்வொரு மாநிலத்திற்கும் இடையில் உள்ள தடையை நீக்கியிருக்கிறது, கம்பு, சோளம், கேப்பை போன்ற தானியங்களை வாங்குவதற்கு. எனவே மற்ற மாநிலங்களிலிருந்து அந்த மாதிரியான தானியங்களை நிறைய வாங்கிக்கொண்டு வந்து நியாயமான விலைக்கு, கட்டுப்பாடான விலைக்கு, ஜனங்கள் வாங்கிக்கொள்கின்ற மாதிரி யான ஏற்பாடுகளைச் செய்யலாம்.

அடுத்து, தரை மிகக் கெட்டியாக இருப்பதன் காரணமாக தொழி லாளர்கள் வெட்ட முடியாமல் சங்கடப்படுகிறார்கள். எனவே அதனு டைய மதிப்பீட்டின் மீது குறைந்தபட்சம் சில வேலைகளுக்கு 50 விழுக்காடு கொடுப்பதுபோல, இந்த வறட்சி நிவாரண காலத்திற்கு ஏதாவது அரசு சலுகைகளை அளித்து, விதிவிலக்கு அளித்துக் கொடுக்க வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் மீண்டும் இந்த வறட்சிப்பணிகளை கண்ட் ராக்டர்கள் மூலம் நிறைவேற்றுவது என்பதை அரசு தவிர்க்கவேண்டும். கண்ட்ராக்டர்கள் என்று வந்துவிட்டால், அவர்கள் லாபம் வேண்டும் என்ற நிலையில்தான் எடுத்துச் செய்வார்கள். அந்த மாதிரி நிலைதான் வரும். உள்ளூர்க்காரர்களுக்கு வேலை கொடுப்போம், நியாயமான கூலியை அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்ற நல்லெண்ணத்தை, நல்ல நோக் கத்தை காண்ட்ராக்ட் முறை முறியடித்துவிடும். அரசு நல்ல பெயரோடு காரியங்கள் செய்தும் கூட, கெட்ட பெயர் வாங்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடும். எனவே கூடுமானவரையில் கண்ட்ராக்டர்களைத் தவிர்ப்பது அரசுக்குச் சாதகமாக இருக்கும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். கால்நடைகளை, பாத்திரம் பண்டங்களை கிராம மக்கள் விற்றுவிடாமலிருக்க அதைத்த டைசெய்ய உடனடியாகக் கடன் வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். அவர்களுக்குக் கடனுக மத்திய காலக் கடன்கள் போல், 3 ஆண்டுக் கடன்கள் கொடுத்து இந்த ஏழை மக்களை அவர்கள் தங்களுடைய உடைமைகளை, நிலங்களை ஒத்தி வைக்காமல் காப்பாற்றவேண்டும். நம்முடைய அரசு இப்படிப்பட்ட வேலைகளையெல்லாம் எடுத்துச் செய்வதைப் பாராட்டி, நடுவண் அரசும் இது போன்ற காரியங் களில் வெகு விரைவாக மாநில அரசுக்குக் கைகொடுத்து உதவ வேண்டும். இதிலே காலத்தைத் தாழ்த்துவது, அரசியலைப் பார்ப்பது என்பது நாட்டிற்கு நல்லதல்ல, வருங்காலத் தலைமுறையினருக்கு நல்லது அல்ல என்று கூறி, இந்த வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி விடை பெற ஆசைப்படுகிறேன்.

(பிற்பகல் 5-50)

*புலவர் ஓ. அறிவுடை நம்பி:. மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது என்னுடைய கெழுதகை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னரசு அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை வழி மொழிந்து நானும் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகின்றேன். சோதனையான நேரம் இது. வேதனையை வளர்க்காது சாதனையைப் புரிந்து கொண்டிருக்கிற சரித்திரம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது கலைஞர் ஆட்சியில்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வார்த்தைகளை சொந்தமாகச் சொல்லுங்கள். எழுதி வைத்துக்கொண்டு வார்த்தைகளைப் படிக்காதீர்கள்.





புலவர் ஓ. அறிவுடை நம்பி: தலைவர் அவர்களே, "வட கிழக்குப் பருவமழை அறவே பொய்த்துவிட்டது" பொய்யா? தென்மேற்குப் பருவமழை காலம் தாழ்த்தியது போதிய அளவு பெய்யவில்லை— மறுப்பாருண்டா? இப்பருவத்தில் பெய்யவேண்டிய இயல்பான மழை 35 விழுக்காடே பெய்துள்ளது. இல்லை, இல்லை என்பாருண்டோ? "கன்னல் எனும் சிறு குருவி கன மழைக்கு ஆற்றுமல் மின்னல் எனும் புழுவெடுத்து விளக்கேற்றும் கார் காலம்" பொய்த்து விட்டது. இருப்பினும் இது செய்வதற்கு அருமையானது என்று சோர் வுறுமல் இருக்கவேண்டும். அதைச் செய்வதற்குத் தக்க பெருமையை முயற்சி உண்டாக்கும் என்கின்ற திருவள்ளுவருடைய திருக்குறளின்படி "அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும் பெருமை முயற்சி தரும்" என்கின்ற குறளினுடையதொகுப்பாக இன்றைய தினம் ஆளுநர் அவர்களுடைய உரை இருக்கிறது. ஆளுநர் அவர்கள் உரையை நன்றாக நோக்குகிறபோது, நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும் குறைந்த நிலமுடைய உழவர்களுக்கும் பரவலான வேலை வாய்ப்புக்கள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. இதனால் வேலை வாய்ப்புப் பெறுவோர் 61 லட்சம் பேர் ஆவர். தாகுப்பாக, தொகை 55 கோடி என்று சொன்னால், அதிலே 65 விழுக்காடு ஊதியமாக வழங்கப்படுகிறது. உணவு தானியங்கள் கிடைப்பதற்கான வசதியை அரசு ஏற்படுத்தியிருக்கிறது. நியாய விலைக் கடைகளிலே சில்லறை விற்பனைக் கடைகளின் மூலமாக 55,000 டன் அரிசி விநியோகிக்கப் படுகின்றது. சிற்றூர்—பேரூர்—நகரம் ஆகிய எல்லா இடங்களிலும் குடிநீர் வசதி செய்யப்பட்டிருக்கிறது. இதற்குப் பிறகும் வறட்சிக் குரிய காரணத்தை ஆராய்கிறபோது நம்முடைய நண்பர் திரு பலராமன் போன்றவர்கள் திறமையற்ற செயலால் இந்த ஆட்சி ஏற்படுத்திய ஒரு செயல் என்று சொல்வது வருந்தத்தக்கது. நேற்றைக்கு முதல் நாள் பெருமதிப்பிற்குரிய பெரியவர் திரு. காமராஜ் அவர்கள் திருவில்லி புத்தூர் பகுதியில் ஒரு கூட்டத்திலே பேசுகிறபோது, ஒரு கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக இந்த அவைக்கு நான் அதைச் சொல்லிக்கொள்வேன் "தான் உட்பட முன் ஆட்சிப் பொறுப்பிலிருந்தவர்கள் தவறுகளைச் செய்திருக்கலாம், காந்தியப்பாதையை மறந்தது மிகப் பெரிய தவறு என்பதைத் தாம் உணர்ந்து விட்டதாகவும்" அவர்சொல்லியிருக்கிறார். தவறை ஒப்புக்கொள்வதற்கு பதில் தவறு எதுவுமே இல்லை யென்று பாசாங்கு செய்வது நல்லதல்ல என்று திரு காமராஜ்அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் நல்ல பேச்சாளர். அவர்கள் எப்படிப் படிக்கிறார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

புலவர் ஓ. அறிவுடை நம்பி: தலைவர் அவர்களே, "தினமணி" பத்திரிகையில் வந்திருக்கிற செய்தியிலுள்ள கருத்தைப் படித்துக் காட்டினேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இல்லை, தனியாய்ப் பேசினால் ஏதாவது விட்டுவிடக்கூடும் என்று குறித்து வைத்திருக்கிறார் போலிருக்கிறது.

புலவர் ஓ. அறிவுடை நம்பி : தலைவர் அவர்களே, நம் பேச்சில் நம்பிக்கையில்லாத காரணத்தினால்தான் பெரியவர் திரு காமராஜ் அவர்களுடைய பேச்சை இங்கே படித்துக் காட்டினேன். எனவே திரு காமராஜ் அவர்களுடைய பேச்சைப் பார்க்கிறபோது, பெருமதிப்பிற்குரிய திரு. பலராமன் போன்றவர்கள் வெறும் இந்த அரசையே குறை சொல்லிக் கொண்டிருப்பது நல்லதல்ல. மேலும் நடுவண் அரசை நோக்கி நம் உரிமைக் குரலை எழுப்பிக் கொண்டுதான் இருக்கிறோம். இந்த ஆளுநர் உரையில் 10 திங்களுக்கு 10 லட்சம் டன் உணவு தானியம் வேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளது. வறட்சி நிவாரணத்துக்காக, வறட்சி நிவாரணப் பணிக்காக 30 கோடி ரூபாய் வழங்கியாக வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டுள்ளது. 30 ஆயிரம் பம்பு செட்டுக்குப் பதில் 60 ஆயிரம் விசை நீர் பம்புகள் மின் இணைப்புக்குத் தேவை என்றும், அதைச் சிறப்பு உதவியாகத் தரவேண்டுமென்றும் கேட்கப்பட்டுள்ளது. மதுவிலக்குக் காரணத்தால் ஏற்பட்டிருக்கிற இழப்புத்தொகைக்கு ஈடுகட்ட நஷ்டஈடு வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டுள்ளது. மாநிலத் திட்டங்களுக்காக கடந்த 3 ஆண்டுகளாக இருக்கக்கூடிய ஒரே நிலை இல்லாமல் கூடுதல் நிதி உதவி வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டுள்ளது. கல்கத்தா-பம்பாய் போன்றநகரங்களுக்கு வளர்ச்சிப் பெருநகரங்களுக்கான வளர்ச்சி நிதியிலேயிருந்து சென்னைக்கும் பங்கு வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டுள்ளது. இப்படியெல்லாம் உரிமைக்குரல் எழுப்புகிறோம். இந்த உரிமைக் குரலிலேயும் பெருமதிப்பிற்குரிய எதிர்க்கட்சி நண்பர்களும் இன்றைய தினம் பங்குகொள்ள வந்திருக்கிறார்கள். அது மகிழ்ச்சிக்குரிய செய்தி. திரு. சுந்தரேசத்தேவர் அவர்கள் மிக அருமையாகப் பேசினார்கள். அது மகிழ்ச்சியான ஒன்று. ஆனால் 1969-ல் 17 கோடி ரூபாய் வறட்சிக்குத் தரப்பட்டது. இப்பொழுது 7·5 கோடி ரூபாய் தரப்படுகிறது என்று சொல்கிறபோது அன்றையதினம் 17½ கோடி ரூபாய் ஏன் என்று கேட்டவர்கள் இன்றையதினம் குறைந்திருக்கிறது என்று கேட்கக்கூடிய நிலை வளர்ந்திருப்பது குறித்து நாம் மகிழ்ச்சியடையவேண்டும். எதற்காக ? ஏன் ? என்றது இன்றையதினம் எங்கே என்கிற அளவுக்கு வினா வடிவிலே வந்திருப்பது பாராட்டத்தக்கது. மொத்தத்திலே பொறுப்பிலிருந்து விலகிக்கொள்ள இந்த அரசு தயாராக இருக்கிறதா என்றால் இல்லை. 23-வது பத்தியில் ஆளுநர் அவர்கள், சொல்லுகிறார்கள் "மத்திய அரசினுடைய ஒத்துழைப்பும் உதவியும் தேவைப்படுகின்ற முறைகள் பற்றி விரிவாகக் குறிப்பிட்டுள்ளேன் என்பதாலேயே, வளர்ச்சிப் பணிக்காகவும்—வறட்சித் துயர் தணிப்புப் பணிக்காகவும் நமது சொந்த வருவாய் வாயில்களைக் கவனமாகச் சேகரித்துப் பல வழிகளிலும் பெருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை எந்த வகையிலேனும் குறைக்க விரும்புகிறேன் என்பது பொருளல்ல" என்று குறிப்பிட்டிருக்கிறார். இன்னொன்றையும் நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன். நம்முடைய தேவையை நாமே பெற நமக்கு உரிமை இருக்க வேண்டும். நேற்றைய





